# அற்புதத்தில் அற்புதம்

ஆசிரியர்

**வித்வான் ல. சண்முகசுந்தரம்**

*வெளியீடு :*

**சண்முகம் பதிப்பகம்**

13, மூன்றாவது தெரு,
பாரதி நகர், மேலகரம்,
(வழி) தென்காசி - 627 818.

முதல் பதிப்பு

நவம்பர் - 2005

பதிப்புரிமை - ஆசிரியருக்கே

*விலை :* **ரூ. 80/-**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | – | அற்புதத்தில் அற்புதம் |
| ஆசிரியர் | – | வித்வான் ல. சண்முகசுந்தரம் |
| பதிப்பகம் | – | சண்முகம் பதிப்பகம்<br>13, மூன்றாவது தெரு,<br>பாரதி நகர், மேலகரம்,<br>(வழி) தென்காசி - 627 818. |
| பதிப்பாண்டு | - | நவம்பர், 2005 |
| மொழி | - | தமிழ் |
| பொருள் | - | கவி இன்பம், கலைநயம் |
| பக்கம் | - | 20 + 236 = 256 |
| விலை | - | ரூ. 80/- (எண்பது ரூபாய்) |
| தாள் | - | மைசூர் கிரீம் வோவ் |
| நூல் அளவு | - | 1/8 டெம்மி |
| அச்சு | - | 11 பாயிண்ட் |
| கட்டுமானம் | - | செக்ஷன் |
| அட்டை | - | லாமினேசன் |
| ஒளி அச்சு | - | சாவித்திரி லேசர் பிரிண்டர்ஸ், செ-28. |
| அச்சகம் | - | **சக்தி பிரிண்டர்ஸ் அண்டு எண்டர்பிரைசஸ்**<br>தண்டையார்பேட்டை, சென்னை - 21. |

நீதிபதி
**எஸ். மகாராஜன்**

புதுக்கோட்டை
25-2-1955

## மதிப்புரை

அருமை நண்பர் ஷண்முக சுந்தரத்துக்கு தங்கள் அழைப்பு கிடைத்தது. பாடல்கள் எங்களை எல்லாம் அப்படியே உருக்கி விட்டன. எனக்கே கூடக் கண்ணீர் ததும்பி விட்டது. இப்படியும் நமது நன்றி உணர்ச்சியையெல்லாம் உண்மையாகத் தெரிவிக்கும் சக்தி வாய்ந்த ஒருவர் இருக்கிறாரே என்று. அக்காள் சொன்னது போல் இந்தப் பாடல்களைப் படித்து உணர்த்துவதற்கு டி.கே.சி இல்லையே என்றுதான் ஏங்க வேண்டியிருக்கிறது.

சரஸ்வதி தேவியே உங்கள் உள்ளத்திலிருந்து பாடல்களைப் பாடி விட்டாள் என்று தோன்றுகிறது.

அழைப்பைப் பார்த்ததும் நானும் அம்பாசமுத்திரம் வருவதாகத் தீர்மானித்து விட்டேன். வராவிட்டால் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடனைச் செய்யத் தவறியவனாவேன்.

26ம் தேதி முதல் 28ம் தேதிவரை லீவுக்கு எழுதிவிட்டேன். நேரே தென்காசி வரலாமா அல்லது அம்பா சமுத்திரம் வரவா என்று யோசனை.

26ம் தேதி இரவு தான் வ்ந்துசேர முடியும். நீங்கள் எப்பொழுது அம்பா சமுத்திரம் போகிறீர்கள்.

கூட்டம் ஒத்திப்போடாமல் 27ம் தேதியன்று கட்டாயம் நடக்கும் என்று எதிர்பார்க்கிறேன். ஏதாவது மாறுதல் இருந்தால் தந்தி கொடுக்கவும்.

*இப்படிக்கு,*
*அன்புள்ள*

**எஸ். மகாராஜன்**

# பொருளடக்கம்


| | *தலைப்பு* | | *பக்கம்* |
|---|---|---|---|
| | **காரைக்காலம்மையார்** | | |
| 1. | இரட்டை மணிமாலை | .... | 1 |
| 2. | அற்புதத்திருவந்தாதி | .... | 12 |
| | **சேரமான் பெருமான்** | | |
| 3. | பொன் வண்ணத்தந்தாதி | .... | 83 |
| 4. | திருவாரூர் நான்மணிகோவை | .... | 101 |
| 5. | திருக்கயிலாய ஞான உலா | .... | 107 |
| | **நக்கீர தேவர்** | | |
| 6. | கைலை பாதிகாளத்திபாதி | .... | 121 |
| 7. | திருவலஞ்சுழி மும்மணிக்கோவை | .... | 175 |
| 8. | காரெட்டு | .... | 183 |
| 9. | கண்ணப்பர் திருமறம் | .... | 185 |
| 10. | அதிராஅடிகள் மூத்தபிள்ளையார் இரட்டை மணிமாலை | .... | 186 |
| | **பட்டிணத்துப் பிள்ளையார்** | | |
| 11. | கோயில் நான்மணிமாலை | .... | 187 |
| 12. | திருக்கழுமலமும் மணிக்கோவை | .... | 210 |
| 13. | திருவிடை மருதூர் மும்மணிக்கோவை | .... | 218 |
| 14. | ஏவகம்பமுடையார் திருவந்தாதி | .... | 226 |
| 15. | திருவுற்றியூர் ஒரு பா ஒருபது | .... | 232 |
| | **நம்பியாண்டார் நம்பி** | | |
| 16. | கோயில்த் திருப்பண்ணியர் விருத்தம் | .... | 234 |

# அற்புதத்தில் அற்புதம்

சேறும் சகதியும் என்று சொல்லும்படியானதுதான் உடம்பு. நம் தேகதத்துவம். ஊனும் உதிரமுமாய் இருக்கிற உடம்பில் உயிர் வந்து தொற்றிக் கொண்டது. எப்படி வந்தது உயிர். எங்கிருந்து வந்தது அந்த உயிர். யோசித்தால் அதிசயந்தான்.

ஆண்டு பலவாகவும் சலிப்பே இல்லாமல் உடம்போடு சேர்ந்தே வாழ்கிறது உயிர். உடம்பின் ஒவ்வொரு அணுவும் உயிர்தான் என்று சொல்லும்படி சேர்ந்தே வாழ்கிறது உயிர்.

நாயகன் நாயகி போல, இனிக்க இனிக்க உறவாடும் காதலர் போல உடம்பும் உயிரும் கைகோர்த்து நிற்கின்றன. ஒன்றை ஒன்று பிரிவதில்லை. விலகுவதில்லை. ஒதுங்குவதும் இல்லை. அப்படிச் சேர்ந்தே இருக்கின்றன இரண்டும்.

இரண்டல்ல ஒன்றுதான் என்று சொல்லும் அளவுக்கு இணைந்தும் பிணைந்தும் இருக்கின்றன.

அற்புதம் அல்லவா இது.

இனி, இருள்மயமான இந்த எண்சாண் உடம்பில் ஒளிமயமான உணர்வு, அதாவது மனம், அறிவுமயமான மனம் முளைத்து விட்டது. அது எப்படி முளைத்தது? எண்ணங்களாய், உணர்ச்சிகளாய், வார்த்தைகளாய்ப் பூத்துக் குலுங்கிறதே மனம், கண்ணுக்குத் தெரியாத மனம். அது எப்படி

யோசிக்க யோசிக்க அற்புதந்தான்.

ஒரு செடியையோ, கொடியையோ, ஏன், மரத்தையே எடுத்துக் கொண்டாலும் நம் உடம்பு மாதிரித்தான் எல்லாம். நம் முதுகெலும்பு போல மேல் நோக்கிச் செல்லும் தண்டு. விலா எலும்பு போலக் கிளை விடும். நிணம், கொழுப்பு, உதிரம், நரம்பு என்று பொதிந்து வைத்தது போலத்தான் இலையும், தளிரும் குழையும்.

அத்தனையும் வெறும் ஊமைதான் செடியில். பேச்சில்லை. சொல் இல்லை, பொருள் இல்லை. ஜடம் மாதிரிதான் பூண்டுகள் எல்லாம். ஆனாலும் கல்லுக்குள்ளிருந்து தேன் வடிந்தால் எப்படி

இருக்கும். அப்படி வருகின்றன மலர்கள். கரடுமுரடான கோணல் மாணலான தண்டையே செடியையே ஊடுருவி வந்து விடுகின்றன மலர்கள்.

செடிக்குள்ளிருந்து புஷ்பம் பூத்துச் சொரிவது போலவே நம் உடம்புக்குள்ளிருந்து வார்த்தைகள், பொருளோடு கூடிய சொல் வருகின்றன. வந்து கொண்டே இருக்கின்றன. வெறும் எலும்புக்குள்ளிருந்து நரம்புக்குள்ளிருந்து உதிரம், ஊன் இவைகளுக்குள்ளிருந்தே எப்படிப் பூத்துச் சொரிகின்றன சொற்கள். கமகம என்று மணக்கும் தேமதுரச் சொற்கள்!

எப்படி உதிக்கின்றன உடம்பில், எப்படி வருகின்றன உடம்புள்ளிருந்து, யோசித்தால் ஒரே அற்புதந்தான்.

அந்த வார்த்தைகள்தானே மொழி ஆகிறது. பேச்சாகிறது. எழுத்தாகிறது. கதை, கட்டுரை எல்லாம் மொழிதான். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் லட்சோப லட்சம் மக்களுக்குள் உறவை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது சொல். அதாவது மொழி.

மலை என்கிற சொல் மலையையே கொண்டு வந்து விடுகிறது. தீ என்கிற சொல்லும் அப்படித்தான். நீர் என்கிற சொல்லும் அப்படித்தான். காஞ்சிபுரத்திலும் அதே பொருளைத் தான் காட்டும், கன்னியாகுமரியிலும் அதே பொருளைத் தான் காட்டும்.

சேர, சோழ, பாண்டியர் காலத்திலும் அப்படித்தான். இன்றும் அப்படித்தான்.

சமுதாயத்தையே பூண் போட்டுக் கட்டிச் சிதறவிடாமல் சேர்த்து வைத்திருக்கிறது மொழி. அதாவது சொல்.

இந்தச் சொற்கள் நமக்குள்ளிருந்து தானே வருகின்றன. அவை எப்படி வருகின்றன. நம்முள் எங்கிருந்து வருகின்றன. இரவு பகல் எப்பொழுது வேண்டுமானாலும் டாண், டாண் என்று வருகின்றனவே, எப்படி அது.

யோசிக்க யோசிக்க அதிசயமாக இருக்கிறது. ஒரே அற்புதந்தான்.

★★★★★★★

உடம்பு, உயிர், மனம், சொல் எல்லாம் தெய்வகடாட்சம். ஒன்றிலும் நம் செயல் இல்லை. அணுவளவு கூட நம் செயல் இல்லை. இறைவனுடைய அருள்தான், திருவருள்தான் எல்லாம்.

இரும்போ, தங்கமோ, பூனையோ, ஆனையோ, பூமியோ, வானமோ எதில் நம் செயல் என்று ஒன்று இருக்கிறது. ஒரு பிடி மண்ணை உண்டாக்க முடியுமா நம்மால். எல்லாம் கடவுளின் காரியந்தான். கடவுளின் திருவிளையாடல்தான்.

கடவுள்த் தத்துவத்தை சிருஷ்டி என்கிறோம். சிருஷ்டிக்கு அதிதேவதை பிரமன் என்கிறோம். அதனால் பிரம்மசிருஷ்டி என்கிறோம். நம்முடைய சௌகர்யத்தை முன்னிட்டே அப்படி எல்லாம் சொல்கிறோம்.

கணக்கு, மருத்துவம், சோதிடம், பொறி இயல், உழவு, வணிகம், தொழில், நீதி, நிர்வாகம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் என்றெல்லாம் அறிவுத் தத்துவம் பலபடியாக அவதாரம் எடுக்கிறது. அப்படி எடுக்கும் அவதாரங்களை சமுதாயத்தில் பிரதிஷ்டை செய்கிறது மொழி. சமுதாயம் என்கிற வீட்டுத் தோட்டத்தில் அவற்றைப் பயிரிடுவதால் தான் நிலைத்து வாழ முடிகிறது அறிவுத்தத்துவம்.

கலைகளாக போர்க்கலையிலிருந்து சமையல் கலை வரை, கணக்கிலிருந்து இசை, நடனம் வரை, சட்டிபானை வளைகிறதிலிருந்து கோபுரம் கட்டுவது வரை எல்லாம் கலைதான். அறிவின் அவதாரந்தான். அவ்வளவையும் வாழ வைக்கிறது மொழி.

மனிதன் உண்டானது அற்புதம். மனிதனிடம் மனம் என்று உண்டானதும் அற்புதம். மனமானது சிந்தனை, சொல், செயல் என்று அவதரிப்பதும் அற்புதம்.

அவ்வளவும் பிரம்மசிருஷ்டிதான். பிரம்மிருஷ்டிக்கு முன் நம்முடைய செயல் தூசி மாத்திரம். சாதாரணம், மிக மிகச் சாதாரணம் நம் செயல்.

இது சம்பந்தமாக எல்லையற்ற ஞானக் கடலாகத் திகழ்ந்த ரசிகமணி, டி.கே.சிதம்பர நாத முதலியார் (டி.கே.சி) அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்க்கலாம்.

''மனிதன் எத்தனையோ அற்புதமான பொருள்களைச் செய்திருக்கிறான். கோவில்களையும் கோபுரங்களையும் வெகு அருமையான வேலைப்பாடுகளோடு இந்தத் தமிழ்நாட்டில் நிறுவி இருக்கிறார்கள்.

''ஆனாலும் ஒரு தாமரை மலரையும் அதன் அமைப்பையும் கூர்ந்து பார்த்து விட்டால் நம்முடைய எந்தப் புராதனமான சிற்பமும் தாமரை மலரில் காணுகிற எண்ணிறந்த அற்புத அம்சங்களின் பக்கத்தில் வர முடியாது.

''பிரம்ம சிருஷ்டியில் காணும் சிற்பத்தொழிலே சிற்பத் தொழில். நம்மவர்கள் இந்த உண்மையை உணர்ந்து சிற்பக் கலைக்கு பிரமனை அதிதேவதையாகக் கொண்டார்கள். பிரமனுக்கு வழிபாடான கிரியைகளையும் பக்தியுடன் செய்து வந்தார்கள்''.

கம்பர் தரும் ராமாயணத்தில் யுத்த காண்டத்தில் மந்திரப் படலத்தில் சிற்பதேவதைக்குப் பூஜை என்ற தலைப்பில் இந்த அற்புத விளக்கம் (டி.கே.சியின் விளக்கம்) வருகிறது.

சீதையைத் தேடி வந்தான் இலங்கைக்கு அனுமன். பிராட்டியை ஒரு சோலையில் சிறை வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். அவன் உள்ளம் கொதித்தது.

ராமபிரான் சொல்லி அனுப்பிய சமாச்சாரங்களை எல்லாம் சீதாதேவியிடம் சொன்னாள் அனுமன்.

தாயே! இப்பொழுதே நான் ராமனிடம் போகிறேன். விஷயத்தைச் சொல்கிறேன். உடனே போர் தொடங்கும். ராவணன் தலைகள் பத்தும் இலங்கையில் உருளும். உன் துயரம் விலகும். விடை அருள வேண்டும்'' என்று பணிந்தாள் அனுமன்.

விடை பெற்றுச் செல்கிறான் அனுமன். போகும்போது இப்படியும் ஒரு அயோக்கியன் உலகில் உண்டா என்று கோபம் வருகிறது அனுமனுக்கு. அடங்காத கோபத்தில் இலங்கை நகரையே மாட மாளிகை, கூட கோபுரம், நந்தவனம், அரண்மனை, கோட்டை, கொத்தளம் என்று எல்லாவற்றையும் நிர்மூலம் ஆக்கி விடுகிறான். தீயை வைத்தே எரித்து விடுகிறான் அனுமன் இலங்கையை.

இதற்கெல்லாம் அசந்தவனா ராவணன். முன்னைக் காட்டிலும் அழகான புது நகரையே புத்தம் புது இலங்கா நகரையே நிர்மாணித்து விடுகிறாள் ராவணன்.

பிரம்மதேவனே மயன் என்னும் தெய்வத் தச்சனை இலங்கைக்கு அழைத்து வருகிறான். அழிந்து போன இலங்கையைக் காட்டுகிறான். அழிவை அகற்றி விட்டு இன்னின்ன மாதிரி நிர்மாணம் செய் நகரை என்று கட்டளை இடுகிறான் மயனிடம் பிரமன்.

அப்படியே செய்கிறான் மயன் கண்ணை மூடி விழிப்பதற்குள் ஜெகஜ்ஜோதியாய் புத்தம் பதிய நகர், வந்து விட்டது.

இப்படித்தான் சொல்லத் தோன்றுகிறது. அப்படியே எழுந்து வந்து விட்டது இலங்கை.

தெய்வத்தச்சனைக் கொண்டு பிரமனே, சிருஷ்டிக்கு அதிதேவதையாகிய பிரம்ம தேவனே செய்த காரியம் அல்லவா.

இப்படி நாடக இயலில் வைத்துக் காட்டுகிறார் கம்பர்.

*பூவரு அயனொடு*
*புகுந்து, பொன் நகர்*
*மூவகை உலகினும்*
*அழகு முற்றுற*
*ஏவின இயற்றினன்*
*கணத்தின் என்பரால்*
*தேவரும் மருள்கொள*
*தெய்வத் தச்சனே*

தேவர்களே பார்த்துத் திகைக்கிறார்கள். எப்படியடா எழுந்து வந்தது. இந்த இலங்கை? இப்படி ஒரு அற்புத அமைப்பில் என்று! அப்படி நிர்மாணித்து விட்டாள் இலங்கையை. தக தக என்று ஜொலிக்கும் பொன் நகரமாகவே நிர்மாணித்து விட்டான் இலங்கையை.

சாதாரண மண்ணுலகத்தைச் சேர்ந்த தச்சனா நிர்மாணித்தவள். வானுலகத்தைச் சேர்ந்தவன். தெய்வத்தச்சன்.

---

பொன் நகர் - அழகிய நகராக, அற்புத நகரையே. ஏவின - பிரமன், சொன்னபடி. கணத்தின் இயற்றினன் - கூணப்பொழுதில் உண்டாக்கினான்.

அதுவும் பிரம்மன் வகுத்த விதிப்படி நடந்தது. பிரம்மசிருஷ்டிதான்.

இந்த உலகத்தில் மட்டுமா மேலுலகம், கீழ் உலகம் என்பவற்றோடு மூவேழ் உலகினும் இப்படி ஒரு அற்புசிருஷ்டி இருக்க முடியாது என்று தான் பார்க்கிறவர் எல்லோரும் அதிசயப்படுகிறார்கள்.

பார்க்கிறவர்களின் அதிசயத்தை, ஆனந்தத்தை அப்படியே கவியாகச் சிருஷ்டித்து விடுகிறது தமிழ்.

பாடலைப் பார்த்தால் அதன் அமைப்பையும் அற்புதத்தையும் பார்த்தால் பிரம்ம சிருஷ்டிதான் பாடல் என்று சொல்லத் தோன்றும். கம்பர் பாடவில்லை. கம்பருடைய உள்ளத்துள் இருந்து கடவுள்தான் பாடுகிறார் என்றே சொல்லத் தோன்றும். உண்மைதான், கவிஞருடைய அனுபவத்தை வாங்கி உணர்ச்சிக்கு உருவம் கொடுப்பது தமிழ்தான். அதற்கு இடம் கொடுக்கிறார் கவிஞர். கருவியாக இருக்கிறார் கவிஞர்.

கவியாக விளைவது தமிழ்தான். கவிஞரின் அனுபவத்துக்கும் ஆனந்தத்துக்கும் உருவம் கொடுப்பது, கவியாக எழுந்தருளச் செய்வது தமிழ்தான்.

பிரம்ம சிருஷ்டியின் அந்தரங்கம் அப்படி. இந்த அரிய பெரிய உண்மையை, சிருஷ்டி தத்துவத்தின் அந்தரங்கத்தையே ரசிகமணி', டி.கே.சியின் விளக்கம் அப்படியே எடுத்துக் காட்டுகிறது. கையால் தொட்டு பார்க்கும் அளவுக்குக் கிட்டக் கொண்டு வந்து காட்டுகிறது பிரம்ம சிருஷ்டியின் அற்புதத்தை டி.கே.சியின் விளக்கம்.

★★★★★★★

கவியை, தமிழ்க் கவி ஒன்றைப் பார்த்தால், பாடிப் பார்த்தால், பாடப்பாடத் தான், நிறுத்தி நிதானமாகப் பாடிப் பாடிப் பார்த்தால் தான் கவியின் அமைப்பு இன்னதென்று தெரியும். அழகுத் தத்துவத்தின் எண்ணிறந்த அம்சங்கள் அதில் ஒளிர்வது தெரியும். தெரியத் தெரிய என்ன நேரும்? பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். வேறொன்றையும் பார்க்கத் தோன்றாது. கவியையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். பார்க்கப் பார்க்க கவியைவிட முடியாது

விட்டுவிலக முடியாது. அப்படி ஒரு அமைப்பு, அப்படி ஒரு அற்புதம், அப்படி ஒரு தெய்வ கடாட்சம் கவியில்.

அரிய பெரிய நுட்பமான, ஆழமான, புலமை மிக்க விஷயம் எத்தனையோ இருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து உண்மையைக் காண்கிறார்கள் அறிஞர்கள். கண்ட உண்மையை எழுதுகிறார்கள். அனுபவத்தோடும், ஆனந்த பரவசத்தோடுமே எழுதுகிறார்கள். கதை, கட்டுரை, வரலாறு, தத்துவம், சாஷ்திரம் என்றெல்லாம் எழுதுகிறார்கள்.

என்னத்தை எழுதி என்ன பலன். வசனம் வசனந்தான். அது கவியாக முடியாது. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி ஊர்க்குருவிதான். அது பருந்தாக முடியுமா? கருடனாக முடியுமா? வானத்தை வட்டமிடும் கருடன் எங்கே, ஊர்க்குருவி எங்கே.

காரணம் வசனத்தில் விஷயம் இருக்கும் நுட்பம் இருக்கலாம், ஆழம் இருக்கலாம். நுண்மாண் நுழை புலம் மிக்க புலமையே இருக்கலாம். ஆனால் சிருஷ்டி இருக்குமா அதில். உண்மைக்கும் உணர்ச்சிக்கும் உருவம் கொடுக்கிற, அழியாத் தன்மை இருக்குமா அதில்.

அறிஞர்தான் அதில் (உரைநடையில்) இருப்பார். அவர் காரியந்தான் அதில் இருக்கும். அவருடைய ஆர்வம், ஆத்திரம், வேகம், நயம் எல்லாம் இருக்கும். ஆனால் சிருஷ்டியின் அற்புதமோ, வேகமோ அதில் இருக்காது. மொழியின் நயம், துடிப்பு, நெளிவு, குழைவு அதில் இருக்காது.

இனி, கவியை எடுத்துக் கொண்டால் விஷயம் இருக்கும், உணர்ச்சி இருக்கும். புலமை இருக்கும். ஆனால் கவிஞர் அங்கு இருக்க மாட்டார். மொழியின் சிருஷ்டி, பிரம்ம சிருஷ்டியே அங்கிருக்கும். கவிஞருக்குப் பதிலாகத்தான்.

கவியின் அற்புதம் இது.

★★★★★★★

ஒரு பெண் அழகான பெண். வசதியான குடும்பம். செல்வ வளமும் கல்வி வளமும் நிறைந்த குடும்பத்துப் பெண். பண்பாடு மிக்க இளம் பெண்.

அவளுக்குக் கிடைத்த நாயகனும் அப்படியே. அழகானவன், அன்புமிக்கவன், வளமானவன். தாராள மனம் படைத்த அருங்குணவான் தான் நாயகன். உறுதி தளராத கட்டிளங்காளைதான் அவன்.

இரண்டு நாள்க் காய்ச்சலில் படுத்தான். என்னத்தைச் சொல்ல. அவ்வளவுதான் துள்ளத் துடிக்கப் போய் விட்டான்.

என்ன செய்வாள் அப்பாவிப் பெண்.

எப்படி எல்லாம் மனிதர்களை வைத்து விளையாடுகிறது விதி. ஒருவரையும் நிமிர்ந்து நிற்க விட மாட்டேன் என்கிறது. நிம்மதியாக இருக்க இடம் கொடுக்கிறதில்லை விதி. யாராக இருந்தாலும் அவரை ஒரு தட்டுத் தட்டி விடுகிறது விதி. உலகம் முழுவதும் அதன் ஆட்டந்தான். தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது இந்த ஆட்டம். விதியின் விளையாட்டு.

விஷயம் இதுதான். உணர்ந்து பார்க்க வேண்டிய உண்மைதான். ஆனாலும் அதற்கு ஒரு உருவம் இல்லை. அதனால் மனசில் நிற்கிறதில்லை அது. நழுவி ஓடி விடுகிறது மனசை விட்டு உண்மை. அரிய பெரிய உண்மையே.

உண்மைக்கு உருவம் வேண்டும் என்றால் கையையும் காலையும் வீசியபடியே நம் நெஞ்சில் அது உலா வர வேண்டும் என்றால் இசையும் கூத்தும் தமிழோடு சேரவேண்டும். சேர்ந்து உணர்ச்சியை ஊஞ்சலாட்ட வேண்டும்.

எப்படி

*ஆழ அமுக்கி*
*முகக்கினும் ஆழ்கடல் நீர்*
*நாழி முகவாது*
*நால் நாழி - தோழி!*
*நிதியும் கணவனும்*
*நேர்படினும் தம்தம்*
*விதியின் பயனே*
*பயன்*

இப்படி ஒரு பாடலாக விளைந்து விட்டால் நெஞ்சை விட்டு இறங்குமா உண்மை. உணர்ச்சிமயமான உண்மை. வாழ்நாள்

முழுவதும் கூடவே இருக்கும். அதுதான் துணை. உற்ற துணை என்றால் அதுதான். கவிதான்.

கவியில் ஒன்றுதான் உண்டு. அது தான் சிருஷ்டி உணர்ச்சியின் உருவம். கவிஞர் கூட ஒதுங்கிக்கொள்வார். சிருஷ்டி என்றால் அப்படித்தான். பிரம்ம சிருஷ்டி என்றால் அப்படித்தான்.

கவி என்பது அநாதியான ஒரு தத்துவம். கடவுளைப் போலத்தான் அதுவும். அநாதியான தத்துவந்தான். உண்மைக்கு, உணர்ச்சிக்கு உருவம் கொடுக்கிறது போலவே இசைக்கும் உருவம் கொடுக்கிறது கவி. தாளத்துக்கும் உருவம் கொடுக்கிறது கவி. வார்த்தை (சொல்)களுக்கும் உருவம் கொடுக்கிறது கவி.

உருவம் கொடுக்கிறது என்றால் பொருள் என்ன, உண்மை, உணர்ச்சி ஆகியவற்றுக்கு புதிய அவதாரமே, புத்தம்புதிய பிறப்பே கொடுக்கிறது என்பதுதான்.

அப்படியே இசை, தாளம், சொல், நடனம் எல்லாம் புதிது புதிதாகப் பிறக்கின்றன கவியின் மூலம்.

அதுதானே சிருஷ்டி. பிரம்ம சிருஷ்டி என்றால் அதுதான்.

★★★★★★★

சரஷ்வதி கடாட்சம் என்னும்படியான கவிகள். தமிழில் விளைந்த கவிகள் ஆயிரம் ஆயிரம். ஒரு கவிபோதும். ஆயுள் நாள்முழுவதும் அனுபவிக்க. அனுபவிக்க அனுபவிக்கத் திகட்டாது. அப்படி ஆயிரக்கணக்கில் கவிகள் தமிழில்.

கம்பர், மாணிக்க வாசகர், பெருந்தேவனார், திருமூலர், பெரியாழ்வார், ஆண்டாள், காரைக் காலம்மையார், முத்தொள்ளாயிரம், நந்திக்கலம்பகம், குறளாசிரியர், நாலடியார், நான்மணிக்கடிகை, ஔவையார், பட்டிணத்தார், நக்கீரதேவர், சேரமான் பெருமான், தாயுமானவர், திரிகூட ராஜப்பக்கவிராயர், என்று எத்தனை எத்தனை கவிகள்.

பாரதியார், தேசிகவிநாயகம் பிள்ளை என்று பார்க்கப்பார்க்க எண்ணமுடியுமா கவிகளை.

தமிழே கவியாக இருக்கிறது என்று தான் தெரியும். கவியாகவே விளைந்து கொண்டிருக்கிறது தமிழ். அதுகாரணமாகவே கவியையே தமிழ் என்று சொல்கிறோம்.

"மூலன் உரைசெய்த
மூவா யிரம்தமிழ்" என்றால்

திருமூலர் பாடிய மூவாயிரம் பாடல் என்றுதான் பொருள் மூவாயிரம் தமிழ் என்று பொருள்படாது.

தமிழ்ப்பாடல் என்றால் அது இசைமயம். இசையின் உருவம் என்றே சொல்லலாம் தமிழ்ப் பாடலை. அப்படியே நாடகமயம் தமிழ்ப்பாடல். பாடல் ஒவ்வொன்றும் இசையும் கூத்துமாக இருப்பதால் முத்தமிழ் என்றே பெயர்.

பாடலைப் பாடிப் பார்த்தால் தெரியும்; முத்தமிழ் என்பதின் பொருள்.

★★★★★★★

பல்லாயிரக் கணக்கில் பாடல்கள் தமிழில். இவற்றைப் பலபடியாகத்தொகுத்து வைத்திருக்கிறார்கள். வீரத்தைப் பற்றிய பாடல்கள், காதல் பற்றிய பாடல்கள், பக்தி பற்றிய பாடல்கள், அரசியல், பொருளாதாரம், குடும்பம், சமுதாயம், நீதி என்கிற பழக்கம் வழக்கம் பற்றிய பாடல்கள் இப்படிப் பலவழிகளில் தொகுத்திருக்கிறார்கள்.

சமய வழிபாடு பற்றிய பாடல்களின் தொகுப்பு பல. நாலாயிர திவ்யப்பிரபந்தம், தேவாரம், ஒன்பதாம் திருமுறை, பதினோராம் திருமுறை என்று பல தொகுப்புகள்.

இனி, காரைக்காலம்மையார், சேரமான் பெருமான், நக்கீரதேவர், அதிரா அடிகள், பட்டிணத்தார், நம்பியாண்டார் நம்பி ஆகிய அருளாளர்களும், மேலும் ஆறு அடியார்களும் பாடிய பாடல்களின் தொகுப்பே பதினோராம் திருமுறை.

பன்னிரண்டு பேர் பாடிய பாடல்களின் தொகுப்பு பதினோரம் திருமுறை.

இத்திருமுறையில் மொத்தம் உள்ள பாடல்கள் 1388.

இங்கே நூற்று முப்பது பாடல்களை மட்டும் எடுத்து அவற்றுக்கு சிறு விளக்கம் கொடுத்து வெளியிட்டிருக்கிறோம்.

அற்புதத்திலும் அற்புதம் என்னும் பெயரில் நூலாக வெளியிட்டிருக்கிறோம்.

காரைக்காலம்மையார் பாடல்களில் 43ம், சேரமான் பெருமான் பாடல்களில் 13ம், நக்கீர தேவர் பாடல்களில் 39ம் அதிரா அடிகள் பாடல்களில் 1ம், பட்டிணத்தார் பாடல்களில் 33ம், நம்பியாண்டார் நம்பி பாடலில் 1ம் ஆக (130) பாடல்கள் இந்த 130, பாடல்களுக்கே விளக்கம் கொடுத்து வெளியிட்டிருக்கிறது. பாடலைப் பார்க்க வேண்டும். படிக்க வேண்டும். படிக்கத் தூண்டுவதோடு சரி விளக்கம்.

★★★★★★★

ஒவ்வொரு பாடலும் அற்புதம். அற்புதத்தில் அற்புதம் என்றே சொல்லாம்.

பாடலைப் பாடப்பாட மனம் தூய்மை பெறும். வாக்கில் அருள் பிறக்கும். வாய்க்கு ருசி. மனதுக்கு அமைதி, நிம்மதி. இவ்வளவு போதாதா.

கல்க்கண்டாய் கரையும் உள்ளம். பாடலும் அப்படியே கரையும். அதனால் பாரம் குறைந்துவிடும். உடல்ப்பாரம், மனப்பாரம் எல்லாம் குறைந்து விடும். பறவையின் சிறகுபோலவே லகுவாகிவிடும். அதனால் மேலே மேலே உயரும் உள்ளம்.

வாழ்க்கையே தித்திக்கும். திகட்டவே திகட்டாது வாழ்க்கை.

★★★★★★★

எங்கிருந்து வந்தது பாடல். எப்படி வந்தது பாடல். இப்படி வர எப்படி முடிந்தது என்று வியப்பை ஊட்டும் பாடல். ஒவ்வொரு பாடலும் அப்படியே வியப்பூட்டும்.

★★★★★★★

கடவுள்த் தத்துவத்தோடு சதா ஒன்றித் திளைக்கிறார் காரைக்காலம்மையார். அப்படி இறைவனோடு ஒன்ற ஒன்ற காரைக்காலம்மையாரிடமிருந்து ஒவ்வொன்றாக எல்லாம் கழன்றோடிவிட்டன. அவ்வளவையும் அர்ப்பணித்துவிட்டார் அம்மையார் இறைவனிடம். நான் என்பதே, என் செயல் என்பதே கழன்றோடிப்போய்விட்டது அம்மையாரிடமிருந்து.

ஆனாலும் ஒன்று மட்டும் போகவில்லை அம்மையாரிடமிருந்து. அது தான் இரக்கம். பெண்ணுக்கே உரிய பரிவு.

இரக்கமே உருவானவள் பெண். பெண்ணோடு உறுவாடி உறவாடித்தான் இரக்கத்துக்கே உருக்கம் வந்தது.

இனி சிவபெருமானின் வாமபாகத்தில் உமையாள் இருக்கிறாள். இளமங்கை அவள். பெருமானோ நட்ட நடுச்சாமத்தில் பிணம் எரியும் சுடுகாட்டுக்குப் போய் பேய்களுடன் திம், திம் என்று ஆடுகிற பழக்கம் உள்ளவர்.

ஆடப்போகட்டும் அவர். வேண்டாம் என்று தடுக்கவில்லை அவரை. ஆனால் உமையாளை வீட்டில் விட்டுவிட்டுப் போவதுதானே முறை. அவளையும் அங்கு கூட்டிக்கொண்டு போனால் பதறமாட்டாளா இளநங்கை. விபரம் தெரியாத விடலையாக இருக்கிறாரே பெருமான் என்று பதறுகிறார் அம்மையார். அது தான் இரக்கத்தின் நேர் சாயல்.

பதற்றம் ஒரு பக்கம். அதிகார தோரணையோடு கூடிய கண்டிப்பு ஒரு பக்கம். இரண்டும் சேர்ந்தபடியே பெருமானிடம் வேண்டுகிறார் அம்மையார்.

*குழலார் திருப்புறத்துக்*
*கோல்வளையைப் பாகத்(து)*
*எழிலாக வைத்தேக*
*வேண்டாம்; - கழலார்ப்பப்*
*பேரிருளில், ஈமப்*
*பெருங்காட்டில், பேயோடு*
*ஆரழலாய் நீ ஆடும்*
*அங்கு.*

காரைக்காலம்மையாரிடம் மட்டுமா இரக்கம்? பெண்ணாய்ப் பிறந்த அத்தனை பேருடனும் பழகிப் பழகிப் பண்பட்டது கருணை. காலம் காலமாக வளர்ந்துவந்திருக்கிறது அந்தக்

குழலார் திருப்புயத்துக் கோல்வளை - உமை. பின்னி விட்ட கூந்தல் முதுகில் கிடந்து புரளும் உமை. வட்ட வட்ட வளையல் அனிந்த உமை. திருப்புறம் - அழகியமுதுகு. கோல்வளை - வட்டமான வளையல்.

கருணை. உயிர்க்குலம் முழுவதையும் பாதுகாப்பதே அந்தக் கருணை தான். அந்தக் கருணையே கவி உருவம் எடுத்து வருகிறது. நம் கண்முன்பே வந்து நிற்கிறது.

விண்ணுக்கும் மண்ணுக்குமாய் நிறைந்து நிற்கிறது கருணை. அப்படி ஒரு அழியாத் தன்மையைக் கொடுப்பதுதான் சிருஷ்டி. பிரம்ம சிருஷ்டி.

★★★★★★★

இனி நக்கீர தேவர் பாடலில் ஒன்று. திருவலஞ்சுழி நாதர்மேல் காதல் கொண்டுவிட்டாள் ஒரு பெண். அவர் நினைப்பிலேயே கட்டிலில் படுத்திருக்கிறாள் பெண்.

கதவைத் தாழ்ப்பாள் போட்டு மூட மறந்துவிட்டாள் பெண்.

இது தான் நேரம் என்று பட்டது பெருமானுக்கு

கதவைத் திறந்து கொண்டு 'யார் உள்ளே' என்று கேட்டபடியே நுழைகிறார் வலஞ்சுழி நாதர். பதறிப் போனாள் பெண்.

ஆளைப் பார்த்தால் ஜமீன்தார்போல இருக்கிறார். கையில் ஏன் திருவோடு. ஒரு மாதிரிப் பட்ட கிறுக்கோ என்று நினைத்தாள் பெண். அப்படியே கேட்கவும் செய்தாள். ''யாரையா நீர். எங்கிருந்து வருகிறீர், என்ன வேண்டும் உமக்கு'' என்றபடி சூடாக வேவந்தது கேள்வி.

அதற்கெல்லாம் அசருகிற ஆளா அவர்.

நமக்கு ஊர் ஞான மயமான பாசுரங்கள் தான் என்றார் பெருமான். என்ன இது முழுக்கிறுகாக இருக்கிறதே என்று மருண்டாள் பெண்.

சுதாரித்துக் கொண்ட பெருமாள், திருவலஞ் சுழியில் என்னைப் பார்த்ததில்லையா? இது தான் எமது குடிஇருப்பு என்றார்! அப்படியா? நம். ஆளல்லவா இவர் என்று மயங்கினாள் பெண். அப்படியே ஆனந்தத்தில் கண்களை இமைதழுவின. இரண்டு விநாடி கூட ஆகி இருக்காது. கண்ணைத் திறந்து பார்த்தாள்.

வலஞ்சுழி நாதரும் இல்லை. கையில் போட்டிருந்த வளையலையும் காணோம்.

*அப்படி வருகிறது பகல்க்கனவு, காதலில் அப்படி எல்லாம் வரும் கனவு.*

*பொருள்த்தக்கீர்! சில்பலிக்கென்(று)*
*இல்புகுந்தீ ரேனும்,*
*மருள்த்தக்கீர்! யாதும்ஊர்*
*என்றேன் - மருள்த்தக்க*
*மாமறையம் என்றார்,*
*வலம்சுழிநம் வாழ்வென்றார்,*
*தாம்மறைந்தார், காணேன்கைச்*
*சங்கு.*

*அருமையான நாடக இயல் பாட்டில் பரிமளிக்கிறது.*

*கண்ணாடி (பளிங்கு) தோற்றுப் போகும் பாடலுக்கு. அவ்வளவு சுத்தம். அவ்வளவு துப்புரவு பாடலில்.*

*புல்லின்மேல் அமர்ந்திருக்கும் ஒரு நீர்த்துளிக்குள்ளே பிர்மாண்டமான மரம் தெரியும். மலை தெரியும். அப்படி ஒரு தூய்மை, அப்படி ஒரு எளிமை அதில்.*

*கவியும், தமிழ்க்கவியும் அப்படியே. ஆன்மதத்துவம், கடவுள்த் தத்துவம், உணர்ச்சி தத்துவம் அவ்வளவையும் பார்க்கலாம் கவியின் மூலம். ஒரு பாடல் போதும். அணுவுக்குள் அண்டம் என்பதுபோல் எல்லாம் அதனுள்.*

*உரைநடையில் அப்படி ஒன்றும் இல்லை தான்.*

*உரைநடை மனிதன் காரியம். கவியோ திருவருள்ப் பிரசாதம்.*

*கவியை அனுபவிக்கிறவர்கள் புண்ணியம் செய்தவர்கள். ஞானியர் என்றே, - கடவுளைக் காணும் ஞானியர் என்றே சொல்லலாம் அவர்களை.*

இப்படிக்கு,

**ல. சண்முகசுந்தரம்**

---

*பொருள் தக்கீர் - வளம் நிறைந்தவராகத் தெரிகிறீரே. சில்பலிக்கு என்று இல்புகுந்தீர் - பிச்சை கேட்டு வருகிறவர் போல் வீட்டுக்குள் வந்து நிற்கிறீரே. மருள்தக்கீர்-பைத்தியமாநீர். மருள்தக்க மாமறையம் என்றார் - போதை வெளியூட்டும் பாடல்தான் ஊர் என்றார். மறை-பாசுரம், தெய்வப் பாடல். சங்கு வளையல்.*

*குறிப்பு : 1955ம் வருடம் ரசிகமணி, டி.கே.சியின் முதலாம் ஆண்டு நினைவு விழா அம்பாசமுத்திரத்தில் நடந்தது. விழாவில் பங்கேற்க நீதிபதி மகாராஜனை வேண்டினேன். சில அவசர வேலைகாரணமாக இயலாமையைக் குறிப்பிட்டு முதலில் கடிதம் எழுதினார்கள். பிறகு அழைப்பிதழ் அனுப்பினோம். அழைப்பிதழோடு டி.கே.சி பற்றிய என் பாடல்களும் சேர்ந்து போயின. பாடல்களைப் பார்த்தவுடன் புறப்பட்டு வந்துவிட்டார் நீதிபதி. அது சம்பந்தமாக நீதிபதி எழுதிய கடிதமே மதிப்புரையாக அமைந்திருக்கிறது நூலுக்கு.*

*இனி, டாக்டர் N.K. சர்மா அவர்கள் கேரளத்தைச் சேர்ந்த ரசிகர். மலையாழ மொழியே அவர் தாய் மொழி. தமிழில் பேசமுடியும். ஓரளவு தான் படிக்க முடியும். எழுத முடியாது. டாக்டர், சர்மா அவர்களால்.*

*என்னுடைய தங்கக் கோபுரம் என்னும் நூலை ரசித்துப் படித்தார்கள். படித்துவிட்டு மலையாழத்தில் எழுதினார்கள். அனுபவமும் ஆனந்தமும் கும்மாளிப் போட்டுக் கொண்டிருக்கிறன டாக்டர் கடிதத்தில். மலையாழ மொழியில் எழுதிய அக்கடிதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு அணிந்துரை போலவே இருக்கிறது.*

*பாட்டுக்கு இருக்கிற சக்தி ஒன்று. உரைநடைக்கு இருக்கிற சக்தி ஒன்று. இரண்டும் வேறு வேறுதான். அதைத் தெளிவாகவே பார்க்கிறோம் கடிதங்கள் மூலம்.*

*இப்படிக்கு,*

**ல. சண்முகசுந்தரம்**

**டாக்டர் N.K. சர்மா**
தன்வந்திரி ஹால்
மேலகரம், (வழி) தென்காசி

தாங்கள் அன்புடன் அளித்த ''தங்கக் கோபுரம்'' எனும் நூலைப் படித்தேன். மீண்டும் படிக்க வேண்டும் என்ற ஆவல் பெருகியது. படித்தேன். படிக்கப் படிக்க ஆவல் கூடுகிறது. மேலும் மேலும் படிக்காமலிருக்க முடியவில்லை.

இருபத்து ஐந்து அடுக்குகள் கொண்ட ஒரு ராஜகோபுரந்தான் இந்நூல். கோபுரத்தின் உச்சிக்கு என்னை நீங்கள் அழைத்துச் செல்கிறீர்கள். என் கையை இறுகப்பிடித்தபடியே அழைத்துச் செல்கிறீர்கள். அங்கிருந்து பார்க்கும் போது இந்த உலகம் எவ்வளவு அழகாக இருக்கிறது. மக்கள், வாழ்க்கை, கலை, பண்பாடு, ஒவ்வொன்றும் பரவசப்படுத்துகின்றன.

நம்மை நமக்கே காட்டுகிறது தங்கக் கோபுரம். ஒரு முத்து மாலையை உருவாக்கி அதை இந்தத் தங்கக் கோபுரத்துக்குச் சூட்ட வேண்டும். சாதாரண முத்து மாலை அல்ல. சந்தனம் மணக்கும் முத்துமாலை.

இப்படி ஒரு நினைப்பு வருகிறது படிக்கப் படிக்க எனக்கு. ஆனால் நடக்கக் கூடிய காரியமா அது.

மிகச்சிறந்த கருத்துக்களையும், தத்துவச் சிந்தனைகளையும் உள்ளடக்கிய தங்கக் கோபுரத்தின் முன் நூலில் விளக்கம் பெறுகிற கரும்பு, வெற்றிலை, பாக்கு என்னும் மங்கலப் பொருள்களையே படைத்து மனம் குளிர வணங்குகின்றேன்.

பத்தாவது அதிகாரத்தில் வருகிற மானிட இயலைப் படிக்கப் படிக்க பேருண்மையே தெரிகிறது. 'அஹம் பிரம்மாஸ்மி' எனும் உபநிஷத வாக்கியம் தகதக என்று ஒளிர்கிறது.

இசையும் பாட்டும் என்னும் பகுதியைப் படிக்கிற பொழுது ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது. முக்தி என்கிற பேரின்ப நிலைக்கு நேர்வழி சங்கீதந்தான், சாஹித்யந்தான் என்று.

உண்மையான இசை நம்மை வேறொரு வஷ்துவாக்கி விடுகிறது என்று தெளிவுபடுத்தி இருக்கிறீர்கள்.

மந்திரச் சொல் என்றால் தங்கள் வாக்குத்தான்.

*இப்படிக்கு,*

**N.K. சர்மா**

# காரைக்கால் அம்மையார் இரட்டை மணி மாலை

'நான்', நான்' என்னும் முனைப்புத்தான் உலகம் முழுவதையும் கட்டி ஆள்கிறது. உயிர்க் குலத்தின் மணி முடியாகத் திகழும் மனிதர்களின் குடுமியைப் பிடித்து ஆட்டு ஆட்டென்று ஆட்டுவது இந்த 'நான்' என்னும் முனைப்புதான்.

'நான்' என்பதாக ஒன்று இல்லை. நான் என்பது வெறும் மயக்கம். அதாவது பொய். பொருளற்ற வெறும் கனவு, பகல்க் கனவு என்றுதான் சொல்ல வேண்டும் அதை. விதி வரைகிற விளையாட்டு (கேலி)ச் சித்திரந்தான் 'நான்' என்னும் தோற்றம்.

'நான்' என்பதாகவோ, எனது என்பதாகவோ ஒன்றும் இல்லை. இருப்பதாகத் தோன்றுவது வெறும் பொம்மலாட்டம் என்பது தெரிய வேண்டும். தெரிவது அப்படி ஒன்றும் எளிதான காரியம் இல்லைதான்.

தெரிந்தால் போதும். அதுதான் உண்மை என்பது விளங்கி விடும். கடவுள் ஒருவர். அவர் ஒருவரே. அவரைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்பது விளங்க விளங்க அதன் அற்புத ஒளி நம்மை உருக்கி விடும். கல்லை விட, இரும்பை விடக் கடினமான நம்முடைய பேதைமை, மயக்கம், அறியாமை, இருட்டு எல்லாம் இளகி விடும். நீராய் உருகிக் கரைந்து போய் விடும் அறியாமை என்னும் அழுக்கு.

ஆனந்தத்தான். ஒரே ஆனந்தமயந்தான். இதுவரை இந்த உண்மை தெரியாமல் தானே இருந்தது. நமக்கு என்கிற எண்ணம் அப்பொழுது வரும். அது வந்ததும் கூடவே வெட்கம் - ஒரு மாதிரி கூச்சமும் வரும். ஆனந்தமும் கூச்சமும் சேர்ந்து எடுக்கிற பக்தியின் உருவத்தைப் பாடலில் பார்க்கலாம்.

*ஈசன் அவன்அல்லா(து)*
*இல்லை எனநினைந்து*
*கூசி மனத்தகத்துக்*
*கொண்டிருந்து - பேசி*

*மறவாது வாழ்வாரை*
*மண்ணுலகத்(து) என்றும்*
*பிறவா மல்க் காப்பான்*
*பிரான்.* (1)

2) பொய்யைப் பொய் என்று தெரிந்தால் போதும். தெரிந்த மாத்திரத்திலேயே உண்மை கண்முன் வந்து நிற்கும். அவ்வளவுதான். உண்மையினிடத்து அன்பு உண்டாகும். அது ஆர்வமாகப் பெருகும். அதாவது காதலாகவே பொங்கும். உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் அதற்கு அர்ப்பணிக்கச் செய்யும். தன்னையே ஒப்படைத்து விடும் அந்தக் காதல்.

அதுதான் பக்தி. அதுதான் ஞானம்.

தன்னையே இன்னொன்றிடம் கொடுக்கக் கொடுக்க, ஒப்படைக்க ஒப்படைக்க இன்பம் பெருகும். காதல் பொங்கும். அப்படியானால் இந்த ஞானத்தை அற்புத ஒளி வீசும் அரிய ரத்தினம் என்றுதானே சொல்ல வேண்டும்.

---

ஈசன் - இறைவன் அதாவது கடவுள்த் தத்துவம். நினைந்து - உணர்ந்து, மனத்துஅகத்துக் கொண்டிருந்து - எல்லாம் அவனே, அவனுடைய செயலே என்னும் உண்மையை அனுபவித்தும், ஆனந்தித்தும். மறவாது வாழ்வாரை - அதே நினைப்பில் இருப்பவர்களை. பிறவாமல் காப்பான் பிரான் - நாம் பிறந்தோம் என்றும் மயக்கத்திலிருந்து விடுவிப்பான் இறைவன்.

குறிப்பு : நாம் என்பதாக ஒன்று இல்லை என்பதுதான் உண்மை. எங்கும் நிறைந்ததுதான் அந்த உண்மை. அப்படியானால் இயல்பாகவே அறியக் கூடியதுதான் அது. எவ்வளவோ காலம் புலப்படாமலே போய் விட்டது. கடைசியில் எப்படியோ அங்கொரு சாயல் இங்கொரு சாயல் என்று தெரிந்தது. அப்படியே முழுதும் தெரியவே செய்தது. தெரியத் தெரிய ஆனந்த பரவசந்தான். அதோடு கூச்சமுந்தான்.

கூச்சத்தை விட முடிகிறதா என்றால் முடியவில்லைதான். சரி, வெளியே காட்ட முடிகிறதா அதை? அதுவும் முடியவில்லை. உள்ளுக்குள்ளேயே வைத்திருக்க வேண்டியதுதான். ஆனாலும் ஒன்று. பக்திப் பரவசத்தில் மனம் கரையக் கரைய கூச்சமும் கரைந்து விடும். ஆணவம் கரைவதோடு சேர்ந்து கூச்சமும் கரைந்து விடும்.

பிறகு - நான் பிறந்தேன். நான் வளர்ந்தேன். நான் இறந்து போவேன் என்கிற கலக்கத்துக்கு ஏது இடம், பயத்துக்குத்தான் ஏது இடம்.

*நன்றிது தேர்ந்திடல்*
*வேண்டும் - இந்த*
*ஞானம்வந் தால்பின்*
*நமக்கென்ன வேண்டும்?*

அரிய ரத்தினம் ஒன்று கிடைத்தால் என்ன செய்வோம். உள்ளங்கையில் வைத்துப் பார்ப்போம். இரண்டு விரல்களால் பற்றி தூக்கி வைத்துப் பார்ப்போம். அப்படியும் இப்படியுமாக மாறி மாறிப் பார்ப்போம்.

வீட்டின் உள்ளிருந்து பார்ப்போம். முற்றத்துக்குக் கொண்டு வந்து பார்ப்போம். இந்த மூலை, அந்த மூலை என்று ஒவ்வொரு இடமாகக் கொண்டு போய் வளைத்து வளைத்து மாறி மாறிப் பார்ப்போம். அப்படி எல்லாம் பார்க்க பார்க்க அதன் ஒளி அதிசயம் அதிசயமாகவே தெரியும். தெய்வ ஒளியாகவே பிரகாசிக்கும் ரத்தினம்.

ரத்தினத்தின் மேலுள்ள - அதன் ஒளியினிடத்து உண்டான ஆசைதான் அப்படி எல்லாம் ஓடி ஆடிப் பார்க்க வைக்கிறது.

உண்மையின் மேல் - பரம் பொருளிடத்து ஆசை உண்டானால் அப்படியே பார்க்கச் சொல்லும். அழகிய உருவம் கொடுத்தே பார்க்கச் சொல்லும். நவ நவமான மூர்த்தங்களை ஓவியமாக வரைந்து பார்க்கச் சொல்லும். சாந்த சொரூபியாகவும் பார்க்கச் சொல்லும். படுபயங்கரமான உக்கிர மூர்த்தியாகவும் பார்க்கச் சொல்லும். தவக்கோலத்திலும் பார்க்கச் சொல்லும். மனைவி மக்களோடு குடும்ப சகிதமாகவும் பார்க்கச் சொல்லும். ஒன்றும் இல்லை என்கிற ஆண்டிப் பண்டாரமாகவும், நவரத்ன கசிதமான கிரீடம், மாலை, காப்பு, மோதிரம் முதலிய பொன்னாபரணம் பூண்ட மகாராஜாவாகவும் பார்க்கச் சொல்லும்.

ஆசைக்கு ஏற்றபடி எல்லாம் புதிது புதிதாக ஓவியங்களை, மூர்த்தங்களை உண்டாக்கி உண்டாக்கிப் பார்க்கும் பக்தி, அதில் எவ்வளவு நிம்மதி.

கோவில் மூர்த்தி, வழிபாடு இவற்றின் வரலாறு இப்படி.

*******

பேரண்டமே பெருமானின் திருமேனி. எட்டுத் திசையும், அதில் தொங்கும் மேகங்களுமே பெருமானின் தாழ் (தொங்கு) சடை, வானத்துக்கும் பூமிக்குமாய் தென்வடலாகத் தொங்கும் பெரிய நட்சத்திர வட்டமே (பொங்காவம் - பாம்பு) பெருமானின் சடையில் சொருகி வைத்த பூங்கண்ணி.

இப்படிப் பார்க்கிறார் பெருமாளான அம்மையார். எல்லாம் அவன் செயலே என்று பாரத்தை அவன் தலையில் போட்டால் போதும். குய்யோ, முறையோ என்று கதற விட மாட்டான். கூடவே இருப்பான் பெருமான்.

*சங்கரனைத் தாழ்ந்த*
*சடையானை அச்சடைமேல்*
*பொங்கரவம் வைத்துகந்த*
*புண்ணியனை - இங்கிரங்கி*
*ஆஆ என்று ஆழாமைக்*
*காப்பானை எப்பொழுதும்*
*ஓவாது நெஞ்சே*
*உரை* (2)

*3)* கோயில், கோபுரம், தேர், திருவிழா, மூர்த்தி, வழிபாடு, தொண்டர், திருப்பணி எல்லாம் பக்தியின் வடிவந்தான். பக்தியின் திருமேனியே தான். பக்தியின் திருமேனி மட்டும் அல்ல. இறைவனின் திருமேனியும் கூடந்தான்.

இனி, இசை, நடனம், கவி முதலிய கலைகளும் அப்படியே. பக்தியின் உருவந்தான். இறைவனின் திருமேனியேதான். ஏன், இறைவனே கவி தான் கலைதான்.

★★★★★★★

---

*சங்கரன் - சிவபெருமான். இங்கு இரங்கி - வாழ்க்கையில் தடுமாறி விழுந்து துன்புற்று, ஆஆ என்று ஆழாமைக் காப்பான் - ஐயோ ஐயோ என்று அலறி மேலும் மேலும் துன்புற்று அழுந்தாதபடி கை தூக்கி விடுவான். பாதுகாப்பான். யார்? அறியாமை, அச்சம், துன்பம் எல்லாவற்றையும் சம்ஹாரம் பண்ணி சுட்டெரிக்கும் சங்கரன்தான். ஓவாது - மறக்காமல், எல்லாம் உன் செயலே என்பதை மறக்காமல் பாரத்தை இறக்கி அவன் காலடியில் வைத்துக் கொண்டே இருப்பாயாக. மனனே / அது ஒன்றே வழி.*

அன்னிய நாட்டில் உள்ள ஒரு பெரிய நகரத்துக்குப் போகிறோம். அதன் அழகைப் பார்த்து அனுபவிக்கத்தான் போகிறோம். அந்த நகரத்தைப் பற்றி பத்திரிகை மூலமாகவும் புத்தகங்கள் மூலமாகவும் எவ்வளவோ படித்தும் வைத்திருக் கிறோம். ஆனாலும் அந்த நகரத்தில் போய் இறங்கியதும் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரிதான் இருக்கும்.

கையில் எவ்வளவு பணம் இருந்தாலம் பிரயோசனப் படாது. விபரம் இல்லாமல் பணம் தான் கரைந்து கொண்டே போகும்.

நண்பரோ, உறவினரோ அந்நகரத்தில் இருக்கிறார். நம்மை வரவேற்று உபசரித்து வசதியாகத் தங்குவதற்கு ஜாகை பண்ணிக் கொடுத்திருக்கிறார். எங்கெங்கு எப்படி எப்படிப் போக வேண்டும் என்று வழியும் சொல்லிக் கொடுக்கிறார். துணைக்கு ஆளும் அனுப்புகிறார். சிலசமயம் அவரே உடன் வந்து உதவுகிறார். அப்படி என்றால் பட்டணம் பூராவுமே நம் கைவசம் மாதிரித்தானே.

ஆனந்தமாய், பூரணமாய் அவ்வளவையும் பார்த்து அனுபவித்து விடுவோம். ஆனந்தத்தில் திளைக்கவும் செய்வோம்.

ஜாகை வசதியும் பட்டணமும் எப்படியோ, அப்படித்தான் கலையும் கடவுளும். கலைகளை உணர்ந்தால் கடவுளைக் காணலாம். கடவுளைக் கண்டால் கலைகளை உணரலாம். பட்டிணத்தின் அருமையையும் பெருமையையும் பார்க்கப் பார்க்க ஜாகை வசதியின் சிறப்புத் தெரியும். ஜாகை வசதியின் சிறப்பு விளங்க விளங்க பட்டிணத்தின் அற்புதம் நன்றாகப் புரியும்.

★★★★★★★

கோவில், மூர்த்தி, வழிபாடு, சிவத்தொண்டு என்று ஈடுபட ஈடுபட தெய்வ தரிசனம் கிடைக்கும். ஆனால் கொஞ்சம் எட்ட நின்று தான் காட்சி கொடுப்பார் கடவுள். அவர்கிட்ட வர வேண்டும். கடவுளும் நாமும் ஒட்டி உறவாட வேண்டும் என்றால் தேவாரம், திருவாசகம், கம்பர் என்றெல்லாம் பாடல்கள் வேண்டும். கலை உணர்வு பெருகப் பெருகத்தான் கிட்ட வந்து கட்டிப் பிடிப்பார் கடவுள் நம்மை.

இந்த உண்மை எப்படிப் பாடலாய் எழுந்து வருகிறது பாருங்கள்.

*தலையாய ஐந்தெழுத்தைச்*
*சாதித்துத் தாழ்ந்து*
*கலையா யினஉணர்ந்தோர்*
*காண்பர் - நிலையாய*
*அண்டத்தான் ஆதிரையான்*
*ஆலாலம் உண்டிருண்ட*
*கண்டத்தான் செம்பொற்*
*கழல்.* (3)

4) ஆரோக்கியம் (உடல் நலம்) என்பது ஒரு உண்மை. அது நம்முடன் சேர்ந்தே இருக்கிறது. அதுபோன்றே நோய் என்பதும் சேர்ந்தே இருக்கிறது நம்முடன்.

ரத்தம், நரம்பு, எலும்பு, மூளை என்று அவ்வளவையும் துளைத்து ஊடுருவி அவற்றில் குடி கொண்டிருக்கிறது நோய்.

ஆரோக்கியம் செழிப்பாக இருக்கும் வரை நோய் பம்மியே இருக்கும். புதருக்குள் புலி பதுங்கி இருப்பது போல் இருக்கும். ஆரோக்கியம் எப்பொழுது மங்குகிறது என்று பார்த்துக் கொண்டிருக்கும் நோய். அது மங்கிய உடனேயே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தேகம் முழுவதையும் உழப்பிச் சின்னாபின்னம் ஆக்கி விடும்.

---

தலை ஆய ஐந்து எழுத்து - நமசிவாய என்னும் மந்திரம். 'நாமாவது நம் செயலாவது' எல்லாம் சிவமயம் என்னும் உண்மைக்கு ஒளி கொடுக்கும் தெய்வமந்திரம். சாதித்து தாழ்ந்து - உருவேற்றி அதை மனதில் நிற்கச் செய்கிறார்கள். பக்தர்கள். அப்படி மந்திரத்தை நிற்கச் செய்தாலும் கலை உணர்வு வேண்டும். கலை உணர்வைக் கண்ணாடியாகப் போட்டுப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால்தால் இறைவன் தரிசனம் கிடைக்கும். நிலை ஆய - நிலை பெற்ற. ஆதிரையான் - திருவாதிரை நட்சத்திரத்துக்கு உரியவன். சிவபெருமான். ஆலாலம் - நஞ்சு, கண்டம் - கழுத்து, கழல் - திருவடி. அதாவது இறைவனின் திருவருள். நியதி தத்துவம்.

குறிப்பு : முகத்தில் அமர்ந்து அது, இது, என்று ஒவ்வொன்றையும் பார்க்கும் கண் தான் பக்தி. என்னதான் கண் வாய்ப்பாக இருந்தாலும் அது இது என்று பார்க்க வைக்கும் ஒளி முக்கியம், அறிவுத்தத்துவத்தின் ஞானஒளி கண்ணை வந்து அணையாவிட்டால் என்ன செய்ய முடியும்? ஒன்றையும் பார்க்க முடியாது. கண்ணுக்கு ஒளி கொடுக்கும் ஞானமே கலை உணர்வு தான்.

கடவுளைக் காணக் கண்ணும் வேண்டும். கண்ணுக்கு ஒளியும் வேண்டும். அப்படியே பக்தியும், கலை உணர்வும் கைகோர்த்து நிற்க வேண்டும்.

இனி கலை உணர்வு நிரம்பி இருக்கிறது. ஆனால் பக்தி இல்லை. அதுவும் வீணான காரியமே. ஒளி இருக்கிறது. அதை வாங்கிப் பார்ப்பதற்கு கண் இல்லை. என்றால் என்ன தெரியும். அதுவும் குருடுதான்.

உண்மை உணர்ச்சி என்னும் பக்தி இல்லாவிட்டால் கலை உணர்வு எவ்வளவிருந்தும் பலனில்லை.

இது சம்பந்தமாகக் குறளாசிரியர் ஒரு அற்புதத் தீர்ப்பே வழங்குகிறார். எப்படி,

*"ஐயுணர்(வு) எய்தியக்*
*கண்ணும் பயன்இன்றே*
*மெய்யுணர்(வு) எய்தாக்*
*கடை"*

ஐ உணர்வு - கலை ஞானம், பயன் - பிரயோசனம், மெய்யுணர்வு - பக்தி, எய்தாக்கடை - இல்லாத இடத்தில்

புதரின் பக்கம் மான் வரும் வரை பம்மியே கிடக்கும். புலி, பாய்ந்து பிடிப்பதற்கு ஏற்றபடி வசமாக மான் புதரை ஒட்டி வந்ததும் ஒரே பாய்ச்சலில் பாயும் புலி, மானின் கழுத்தைக் கவ்வி தூக்கிக் கொண்டு ஓடியே விடும் புலி.

நோயும் அப்படியே பாயும். கண் மூடிக் கண் திறப்பதற்குள் பாய்ந்து சீரழித்து விடும் தேகத்தை.

தேகம் உலைந்து போனால் மூளை எப்படி வேலை செய்யும். ஞாபகம் போய் விடும். ஒன்றுமே தெரியாது.

கடவுளிடம் தம்மை ஒப்படைத்து விடத் திட்டம் போட்டிருந்தார் ஒருவர். அடுத்த வருஷம் அடுத்த வருஷம் என்று வாய்தாப் போட்டுக் கொண்டே இருந்தார். திடமாகவும் காத்திரமாகவும் இருக்கத்தானே செய்கிறோம். ஏன் அவசரப்பட வேண்டும் என்று அலட்சியமாக இருந்தார்.

இவரைப் பற்றி ஏன் லட்சியம் பண்ணப் போகிறது நோய். இவர் உத்திரவை எதிர்பார்த்தா அது காத்திருக்கிறது. நேரமும் காலமும் அதற்கு ஒத்தமைந்தன. அவ்வளவுதான் ஒரே தட்டு, ஒரே ஒரு அறை. அடி வசமாக விழுந்ததால் நைந்து பிய்ந்து போய் விட்டது தேகம். புத்தியும் அப்படியே. மனைவி, மக்கள், உற்றார், உறவினர், வீடு, வாசல் ஒன்றும் ஞாபகத்தில் இல்லை. நோய் வந்து தாக்கியது கூடத் தெரியாது. படுத்த படுக்கையாய்க் கிடக்கிறோம் என்பது கூடத் தெரியாது. எதுவும் தெரியாத ஒரு இருள் நிலை.

ஏதோ, கண்ணை மூடுகிறார். திறக்கிறார். அவ்வளவுதான். அடையாளம் ஒன்றும் தெரியவில்லை. உதடு அசைகிறது. ஆனால் பேச்சில்லை. காது அடைத்து விட்டது. இவ்வளவுக்கும் மேலே கடவுளாவது, கடவுளிடம் தன்னை ஒப்படைப்பதாவது.

போட்ட திட்டம் நிறைவேறவே இல்லை. உலகம் முழுவதும் இதே கதைதான். யாரை விட்டது விதி. பொல்லாத விதி.

செய்ய வேண்டியதை உடனுக்குடன் செய்தால் தப்ப வழி உண்டு. இல்லை என்றால் இல்லைதான்.

இப்படி ஒரு பரிதாப நிலைக்கு ஆளாகி விடக் கூடாதே என்று ஞானியர் உஜாராகி விடுகிறார்கள் காரைக்கால் அம்மையாரும்.

*மனமே! கொஞ்சம் இரக்கம் காட்டு எனக்கு என்று கெஞ்சுகிறார்.*

*தொல்லை வினைவந்து*
*சூழாமுன், தாழாமே*
*ஒல்லை வணங்கி*
*உமைஎன்னும் - மெல்லியல்தன்*
*கூற்றாரைக் கூற்றுருவம்*
*காய்ந்தானை வாய்ந்திலங்கும்*
*நீற்றானை நெஞ்சே*
*நினை.* (4)

---

தொல்லை வினைவந்து சூழாமுன் - பழ வினைப்பயன் வந்து தாக்குவதற்குள். நாம் செய்து வந்த கேடுகள், தவறுகள் ஒன்று விடாமல் அவ்வளவும் நோயாய், துன்பமாய், எரிச்சலாய் நமக்குள் பதுங்கி இருக்கும். நேரம் வாய்த்ததும் எழுந்து வந்து தாக்கும். தாழாமே - அப்படி அது வந்து தாக்கும் வரை காலம் தாழ்த்தாமல், ஒல்லை வணங்கி - முதல் காரியமாக அவனை வழிப்பட்டு, நெஞ்சமே அவனை நினைந்து ஈடுபடுவாயாக. அவன் யார்? உமை என்னும் மெல்லியல் தன் கூற்றான் - உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவன். கூற்றுருவம் காய்ந்தாள் - எம பயத்தை விரட்டி அடித்தவன். கூற்று - எமன். வாய்ந்து இலங்கும் நீற்றான் - அழகாகப் பிரகாசிக்கும் நீறணிந்த திருமேனி உடையான் சிவபெருமான்.

குறிப்பு : ஒரு பெண், மங்கைப் பருவத்துப் பேதைப் பெண்ணே ஆனாலும் மானம், மரியாதை, கற்பு இவற்றில் உஷாராகவே இருப்பாள். மிக்க ஜாக்கிரதையுடனேயே பழகுவாள். உல்லாசமும் மகிழ்ச்சியும் எவ்வளவிருந்தாலும், வெகுளித்தனமாக இருந்தாலும், நெருங்கிப் பழகினாலும், மானம், மரியாதை இவற்றிலேயே நிற்பாள். அக்கம் பக்கம் நகர மாட்டாள் அவற்றை விட்டு.

ஞானியரும் அப்படித்தான். வாழ்க்கையில் என்னென்ன பிரச்சனைகள் எதிர்ப்பட்டாலும் சரி, நெருக்கினாலும் சரி. உண்மையை விட்டு ஒதுங்க மாட்டார்கள். அதே நினைப்பில் இருப்பார்கள். ''எல்லாம் கடவுளின் செயல், நாமோ, நம் செயலோ என்று எதுவும் இல்லை'' என்னும் உண்மையிலிருந்து நழுவ மாட்டார்கள்.

முதலில் இறைவளிடம் தங்களை அர்ப்பணித்து விடுவார்கள். பிறகுதான் செயல்படுவார்கள். அவன் செயலாகவே செயல்படுவார்கள்.

ஞானியர்களுக்கெல்லாம் வழி காட்டும் ஒளி விளக்கல்லவா காரைக்கால் அம்மையார்.

அம்மையார் கவியாகவே அவதாரம் எடுக்கிறார். காட்சி தருகிறார்.

5) கடவுளைப் பற்றிய நினைப்பு யாருக்கு வந்தாலும் சரி ''எல்லாம் கடவுள் மயம். கடவுளைத் தவிர ஒன்றும் இல்லை'' என்னும் எண்ணமே அவர்களிடம் உதிக்கும். அதையே சொல்வார்கள். அணுவுக்குள் அணுவிலிருந்து அண்டம், பேரண்டம் எல்லாம் கடவுள்தான். புல் பூண்டிலிருந்து வானத்து விண்மீன் வரை, புழுப்பூச்சியிலிருந்து யானை வரை, காண்டாமிருகம், திமிங்கலம், பூமி, சூரியன், கடல், மலை எல்லாம் கடவுள்தான் என்றே சொல்வார்கள். மனிதர், தேவர், வானம், பூமி அவ்வளவும் கடவுள் அருள் என்றே சொல்வார்கள். கொஞ்சங்கூடச் கூச்சப்படாமல் வாய் திறந்து ஒரே முழுக்கமாகவே சொல்வார்கள். கடவுளைத் தவிர வேறு என்னய்யா இருக்கிறது என்று அடித்தே கேட்பார்கள்.

அப்படிக் கேட்கிற நாம் ஒவ்வொருவரும் என்ன முடிவோடு, தீர்மானத்தோடு கேட்கிறோம்? 'என்னைத் தவிர, என் ஒருவனைத் தவிர மற்றவை எல்லாம் கடவுள்' என்கிற முடிவில்தான் கேட்கிறோம்.

நான் தனி, நான் ஒருவன் மட்டும் தனி என்னும் பேதைமை நம்மை விட்டு - நம்மில் ஒவ்வொருவரையும் விட்டு விலகுவதே இல்லை.

பிறகு எப்படி உருப்படும் காரியம். மரண பயம், நான் என்னும் பிறவி நோய் இரண்டுக்கும் மூலஷ்தாளமே மேலே சொன்ன பேதைமைதான்.

ஆனாலும் இப்படி ஒரு பேதைமை நம்மிடம் இருப்பது நமக்கே தெரிவதில்லை. இதைவிட வேடிக்கை வேறு என்ன இருக்கிறது.

காரைக்கால் அம்மையாருக்கு எப்படியோ தெரிந்து விட்டது உண்மை. ''இப்படியும் ஒன்று நம்முடன் இருக்கவல்லவா செய்கிறது'' என்று. ஏதோ மின்வெட்டு போல, ஒளிக்கீற்று மாதிரி பளிச்சென்று பட்டு விட்டது அம்மையாருக்கு. அவ்வளவுதான் முதலில் சிறிது திகைப்பு. பிறகு வியப்பு. ஒரே வியப்பு. கடகடவென்று சிரித்தே விட்டார் வியப்பில்.

அதையும் விடப் பெரும் வியப்பு அம்மையாருக்கு. 'எல்லாம் ஆகிய ஈசனும் சில சமயம் இந்தத் தடுமாற்றத்துக்கு ஆளாகத்தானே செய்கிறான்'' என்று.

தடுமாற்றம் இல்லை என்றால் ராவணனை அன்னியன் என்று நினைப்பானா பெருமான்? கைலை மலையைப் பெயர்த்து ஒரு ஆட்டு ஆட்டுவேன் என்று முயன்ற ராவணன் யார்? அவனும் பெருமானுடைய அம்சந்தானே? நீரும் இறைவன், நெருப்பும் இறைவன், நெருப்பில் வெந்து நீறுகிற சகலமும் இறைவன், சாம்பலும் இறைவன். பசுவின் மடியில் பால், தயிர், நெய் நிறைந்திருப்பது போல் பேரண்டம் முழுவதும் நிறைந்திருக்கிறான். அவளே பேரண்டம். அவள் தவிர வேறு இல்லை என்று ஆனபின் ராவணனை அன்னியன் என்று எப்படிப் பார்க்க முடிந்தது பெருமானுக்கு''.

இப்படி எல்லாம் விளையாட்டும் கும்மாளியுமாய் உருவெடுக்கிறது. அம்மையாரிடம் வியப்பு.

அதை அவளிடமே கேலியும் கிண்டலுமாய் கொட்டுகிறார் அம்மையார். கவியில் தான், தமிழ்க் கவியில் தான், இதோ பாடல்.

*அடித்தலத்தின் அன்றரக்கன்*
*ஐந்நான்கு தோளும்,*
*முடித்தலையும் தான்முரித்த*
*ஆறென்? - முடித்தலத்தில்*
*ஆறாடி, ஆறா*
*அனவாடி, அவ்வனலின்*
*நீறாடி, நெய்யாடி*
*நீ!* (5)

---

அடித்தலத்தின் - கைலை மலையின் கீழே, அடியில் சிக்கிய, அரக்கன் - ராவணன். ஐந்நான்கு தோள் - இருபது தோள்கள். முடித்தலம் - தலைபத்து. தான் முரித்த ஆறு என் இத்தளையும் நெறுநெறுவென்று முரியும்படி செய்தாயே அதுஏன்? முடித்தலத்தில் ஆறு ஆடி - தலையில் வைத்திருக்கும் கங்கை (நீர்) முழுவதும் நீதான். ஆறா அனல் - அணையா நெருப்பும் நீயே தான். நீறு - பொடி.

குறிப்பு : எங்கும் நிறைந்தவன் இறைவன். எல்லாம் அவனே. அப்படி இருந்தும் தான் வேறு, என்னும் நினைப்புக்கு அவனும் இடம் கொடுத்த மாதிரிதானே இருக்கிறது காரியம். பேஷ், பேஷ் எல்லாம் நல்ல காரியந்தான்!

# காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி

*1) உண்மையில் பிறப்பது கடவுள்தான். வளர்வதும் அவர்தான். மறைவதும் அவரே தான். நாம் பிறந்தது போலவும், ஏதோ திட்டம் போட்டு நாமே பிறந்தது போலவும் தெரிகிறது. அப்படித் தெரிவது வெறும் தோற்றந்தான்.*

*கடலில் உள்ள நீர்தான் ஆவியாக மேலே போகிறது. மேகமாகத் திரள்கிறது. மழையாகக் கொட்டுகிறது. எல்லாம் கடல் நீர்தான். அதுவே அருவியாக விழுகிறது. ஆறாக ஓடுகிறது. ஏன் இத்தனை அவசரம், ஓட்டம் என்றால் கடலில்ப் போய் கலந்து விடத்தான்.*

*பிரிந்தது ஏன் என்றால் பழையபடி சேர்வதற்குத்தான். சரி, கடல் நீர்தான் இத்தனை வேஷம் போட்டு, ஓடுகிறது. ஆனாலும் மழையையோ, அருவியையோ ஏதாவது ஒன்றை நீ யார் என்று கேட்டால் நான் கடல் நீர் தான் என்று சொல்லுமா? நான் மேகம், நான் மழை, என்றே சொல்லும் அருவி என்றால் நான்தான். உலகிலேயே பெரிய நதி நான்தான்'' இப்படித்தான் நெஞ்சில் கை வைத்து வீறாப்போடு பேசும் ஒவ்வொன்றும்.*

*அப்படித்தான் சிருஷ்டி ஒவ்வொன்றும் இரும்பும் சரி, கரும்பும் சரி, எறும்பும் சரி, துரும்பும் சரி எல்லாம் கடவுள்தான்.*

*எதைக் கேட்டாலும் நான் கடவுள் என்று சொல்லாது. நான் இது, நான் அது என்றே சொல்லும்.*

*அப்படியானால் கடவுளுக்கு ஒரே ஏமாற்றந்தானே. என்னடா செய்வதென்று யோசனை பண்ணினார் கடவுள். மனிதனாக உருவெடுத்துப் பார்க்கலாம் என்று முடிவு பண்ணினார். அப்படியே நடந்தது காரியம்.*

*லட்சத்தில் ஒருவர், கோடியில் ஒருவராவது உண்மையைக் காண்கிறார்கள். கடவுள்தான், கடவுளின் காரியந்தான் நாம் என்று தெரிகிறார்கள். அப்படியே தங்களை இறைவனிடம் ஒப்படைத்து விடுகிறார்கள்.*

காரைக்கால் அம்மையார் கோடியில் ஒருவர். பல கோடிப் பேரில் ஒருவர். உண்மை தெரிந்து விட்டது அவருக்கு. ஒரே உத்சாகம். கும்மாளி, இறைவனிடமே சொல்கிறார். ''பெருமானே! நீர்தான் நான்' ஆனாலும் நீர் அங்கே, நான் இங்கே என்று இடையில் ஒரு திரை, பிறப்பு என்கிற திரை, ஏன் இந்தத் திரை? உம்முடைய லீலா விநோதத்தைக் கண்டுகளித்து உம்மோடு கலப்பதற்குத்தான். அதற்காகவே பிறந்தேன், வளர்ந்தேன், படித்தேன், பேசப் பழகினேன், பாடவும் பழகினேன். இவ்வளவையும் திருத்தமாகவே செய்து முடித்தேன். பிறகு அவ்வளவையும் உதறி எறிந்து விட்டேன். அத்தனை ஆவலோடு, வேகத்தோடு உம்மை அடைந்து விட்டேன். ஆனாலும் உம்முடைய அங்கீகாரம் இன்னும் கிடைக்கவில்லையே? ஏன் காலதாமதம்?

இப்படி வருகிறது உண்மையின் உல்லாசம். அம்மையாரின் ஆனந்த பரவசத்துக்கு தமிழ் உருவம் கொடுக்கிறது. கவி உருவம் கொடுக்கிறது. எப்படி என்று பார்க்கலாம்.

*பிறந்து மொழிபயின்ற*
*பின்னெல்லாம் காதல்*
*சிறந்துநின் சேவடியே*
*சேர்ந்தேன்; - நிறந்திகழும்*
*மைஞ்ஞான்ற கண்டத்து*
*வானோர் பெருமானே*
*எஞ்ஞான்று தீர்ப்ப(து)*
*இடர்?* (6)

---

*நிறம் திகழும் மைஞ்ஞான்ற கண்டம் - நீலமணி போல ஒளிரும் நஞ்சுண்ட கண்டம். இறைவனுடைய மேனி செவ்வானம் போன்றது. அதில் ஆலகால விஷம் தங்கிய கண்டம் (கழுத்து) கருமேகம் போல இருக்கிறது. ஆனாலும் மேனியின் செவ்வொளி பட்டு நீலமணி போல் பளபள என்று ஜொலிக்கிறது. மை - கருமை இருட்டுப் போன்ற கருப்பு. எஞ்ஞான்று - எப்பொழுது.*

குறிப்பு : ஒரு காரியம் நினைத்தபடி நடந்தால் நல்லதுதான். நடக்காவிட்டாலும் நல்லதுதான். நடந்ததை விட நடக்காதது அதிக நன்மை தருவதும் உண்டு. ஆனால் நடக்கிற அதாவது நடக்க அடி எடுத்து வைத்த காரியம் நடக்கத் தடைபடுமானால், அவசியம் இல்லாமல் தாமதம். ஆனால் அது கஷ்டந்தான்.

குடிதண்ணீருக்குப் பெரிய தொட்டி கட்டி முடிந்தது. அதில் நீரும் கொண்டு வந்து நிரப்பி விட்டார்கள். வீடுகள் தோறும் தெரு வழியே குழாயும் பதித்திருக்கிறது. திறந்து விட வேண்டியதுதான். தண்ணீர் வந்து விடும். ஆனாலும் திறக்கவில்லை.

திறப்பு விழாவுக்கு அமைச்சர் வருவதாக இருந்தது. அவரால் வர முடியவில்லை. விழாவை ஒத்தி வைக்கிறார்கள். தண்ணீர் வரவில்லை. மேலும் மேலும் தாமதம் ஆகிறது காரியம்.

**இது** சம்பந்தமாக எத்தனையோ பேருக்குக் கஷ்டந்தானே.

**இனி**, குழாய்த் தண்ணீரின் தாமதத்துக்கே இப்படி ஒரு கஷ்டம் என்றால் கருணை மழையாகிய கடவுளின் அங்கீகாரம் தடைபடும் பொழுது - தாமதிக்கத் தாமதிக்கத் மனசை எப்படி அழுத்தும் துயரம்.

துயரம் அழுத்துகிற அழுத்தத்தை அப்படியே கையில் எடுத்துக் காட்டுகிறது.

*எஞ்ஞான்று தீர்வ(து)*
*இடர்*
*என்னும் கடைசி அடி.*

2) செல்வத்தைத் தேடி ஒருவன் குவிக்கிறான் என்றால் அதற்கு ஒரு காரணம் இருக்கவே செய்யும். அப்படியே அதிகாரத்தை நாடுகிறான், புகழை விரும்புகிறான். ஆடம்பர வெறியோடு அட்டகாசமே பண்ணுகிறாள். ஏன், ஆமை போல அடங்கி ஒடுங்கி பணிவாகவே நடந்து கொள்கிறான் என்று என்னென்ன காரியம் ஆனாலும் சரி, அது அதற்குக் காரணம் இருக்கும்.

கொடுப்பதற்கும் காரணம் இருக்கும், தட்டிப் பறித்துப் பிடுங்குவது போல் வழிப்பறி செய்வதற்கும் காரணம் இருக்கும்.

காரணம் இல்லாமல் எப்படிக் காரியம் இருக்கும்? ஆனால் ஒன்றே ஒன்று இருக்கிறது. அது ஒன்றுதான் காரணம் இல்லாத காரியம். அதற்குத்தான் அன்பு என்று பெயர்.

அன்புக்கு அன்புதான் காரணம். அது தவிர வேறு காரணம் ஒன்றும் இல்லை அன்புக்கு.

உடம்பில் ரத்தம் ஊறுவது போல் உள்ளத்தில் ஊறும் அன்பு, ஊறிக் கொண்டே இருக்கும். அன்பு. அது ஊற ஊற ஆர்வம் பெருகும். மற்றதை ஆசையோடு பார்க்கும். பரிவு காட்டும். அருமை பாராட்டும், உபசரிக்கும். ஆதரவு கொடுக்கும். தன்னிடம் உள்ளதை அதனிடம் கொடுக்கும். மேலும் மேலும் கொடுக்கும். கொடுக்கக் கொடுக்க இன்பம் பொங்கும்.

ஏன் கொடுக்க வேண்டும். கொடுப்பதால் என்ன பிரயோசனம் என்று யோசிக்க இடமில்லை அங்கு. தன்னையே கொடுக்க முன் வரும். கொடுத்து விடும். அதுதான் அன்பு, அந்த அன்புக்கு காரணம் என்ன வேண்டும்.

*******

குழந்தையைக் குளிப்பாட்டுகிறாள் தாய். துவட்டி விடுகிறாள். வாசனைப் பொடியைக் குழந்தையின் மேனியில் போட்டு தடவி விடுகிறாள். குழந்தையின் கண்ணின் மையிட்டும் தீட்டுகிறாள்.

குழந்தை சில சமயம் சிரிக்கும். சிரிக்காமலும் இருக்கும். ஆனாலும் குழந்தையை வாரி எடுத்து முத்தம் கொடுப்பாள் தாய். முத்தம் கொடுத்ததுக்கு நன்றி சொல்வதில்லை குழந்தை. சில சமயம் முத்திய தாயின் முகத்தில் அடிக்கவும் செய்யும் குழந்தை. அதற்காக நிறுத்த மாட்டாள் தாய். ஆசைப் பெருக்கில் வெறி கொண்டவளாய் மாறி மாறி முத்துவாள் தாய்.

காரணத்தை வைத்து, பலனைக் கணக்கிட்டுச் செய்கிற காரியம் இல்லை தாயின் காரியம். அது அன்பின் ரகஸியம். அதுதான் உண்மை.

அன்பின் அவதாரம் காரைக்கால் அம்மையார். உண்மையை உணர்ந்து அனுபவித்து இறைவனிடம் தன்னை ஒப்படைத்து விடுகிறார் அம்மையார். அதுதான் அவருக்குத் தெரியும். அதைத்தான் அவர் செய்கிறார். மற்றப்படி இறைவன் அது செய்யவில்லையே, இது செய்யவில்லையே என்று கணக்குப் போட ஒன்றும் இல்லை அவரிடம். தோழியை முன்நிறுத்தி தோழியிடமே சொல்வதாக பாவனை. தன்னுடைய நிலை இதுதான். வேறு இல்லை என்று தீர்மானமாகவே சொல்வதாக ஒரு கனவு; ஒரு பகல்க் கனவு.

இனிப்பாடல்

*இடர்களையா ரேனும்,*
*எமக்கிரங்கா ரேனும்,*
*படரும் நெறிபணியார்*
*ஏனும் - சுடர் உருவில்*
*என்பறாக் கோலத்(து)*
*எரியாடும் எம்மானார்க்(கு)*
*அன்பறா என்நெஞ்(சு)*
*அறி.* (7)

---

இடர் - துன்பம். எமக்கு இரங்காரேனும் - என் மேல் அவருக்கு அன்பு உண்டா இல்லையா என்பது பற்றி யோசிக்க இடம் இல்லை. இரக்கம் அதாவது பரிவு அவரிடம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. படரும் நெறி பணியாரேனும் - செய்ய வேண்டியது இது, செய்யத் தகாதது இது என்று எனக்கு அவர் வழி காட்டினாலும் சரி, காட்டாவிட்டாலும் சரி. அவர் என்ன செய்கிறார் என்பது பற்றிக் கவலையில்லை. அவரிடம் என்னை அர்ப்பணித்து விட்டேன். அதை மாற்ற முடியுமா என்ன? சுடர் உருவில் - அக்னி சொரூபியாய். என்புஅறாக்கோலத்து - எலும்பு மாலையைத் தொங்க விட்டபடியே. எரியாடும் எம்மானார்க்கு - தீயில் குதித்தாடும் பெருமானுக்கு. அன்பு அறா என் நெஞ்சு - உருகிக் கரைந்து கொண்டே இருக்கும் உள்ளம். அறி - இதை நீ நன்றாக மனதில் குறித்துக் கொள்.

குறிப்பு : ஆணவத்தைச் சுட்டுப் பொசுக்கும் தீ. ஆணவம் அற்ற ஆனந்தத்தின் தெய்வ ஒளி அது. அதில் குதித்துக் குதித்து ஆடுகிறாள் பெருமான்.

*3) இரும்பைக் காந்தம் இழுப்பது போல் அல்லவா தூய உள்ளத்தை தன்பால் ஈர்த்துக் கொள்கிறது இறையருள்.*

*'நான்' என்பதைக் கழற்றி எறிந்து விட வேண்டும். எனது என்பதையும் அப்படியே செய்ய வேண்டும். அதுதான் உண்மை. அதுதான் ஞானம். இறைவனிடம் நம்மை ஒப்புவிப்பது என்பது அதுதான்.*

*இறைவனிடம் நம்மை ஒப்படைத்து விட்டால் பிறகு நம் கதி என்ன, நம் பிழைப்பென்ன என்ற பயம் வருகிறது. நம் கதி அதோ கதியாய்ப் போய் விடுமே என்கிற கலக்கமே வந்து விடுகிறது.*

*பயப்படுவது அறியாமைதான். இறைவனிடம் நம்மை ஒப்படைத்த உடனேயே இறைவனாகவல்லவா நாம் ஆகிறோம். கடலை ஒட்டி இருந்த சிறு குட்டம் கடலோடு சேர்ந்ததும் கடலே ஆகி விடுகிறது. குட்டம் இல்லை. சின்னஞ்சிறு குட்டம் விரிந்து பரந்த மாகடல் ஆகிறது. அப்படித்தான் நாமும். நாம் ஒழிந்து சிவமாகி விடுகிறோம். இதற்கு ஏன் பயப்பட வேண்டும்.*

*அருவியில் குளிக்கப் போகிறவர் முதலில் கொஞ்சம் யோசிப்பார். குளிருமே, வாடை அடிக்குமே என்றெல்லாம் பயப்படுவார்.*

*அருவிக்குள் போய் நின்றவுடன் பயம் போய் விடும். ஆனந்தந்தான். அருவியை விட்டு வெளியே வரத் தோன்றாது. அதிலேயே ஆடி ஆடித் திளைக்க வைக்கும்.*

*இறையருளும் அப்படியே. நான் என்பதை உதறி எறிந்து விட்டு அதனுள் போகிறவரை ஒரு மாதிரிக் கலக்கமாகத் தான் இருக்கும். அவனருளோடு தோய்ந்து கலந்து விட்டால் பிறகு கலக்கத்துக்கு இடம் ஏது? ''கண்டு கொண்டேன், நானே கண்டு கொண்டேன், நானே இறைவன், இறைவனே நான்'' என்னும் பெருமிதமே பொங்கித் ததும்பும்.*

*காரைக்கால் அம்மையார் உண்மையை 'நான்' என்பது பொய் என்பதை அனுபவபூர்வமாக அறிந்தவர். கடவுள் தத்துவத்தோடேயே ஒன்றித் திளைக்கிறார். எப்பொழுதும் அம்மையாருடன் இருக்கிறார் கடவுள். அம்மையாரின் உள்ளம், உணர்ச்சிதான் இறைவனின் சந்நிதானம்.*

*இது மற்றவர்களுக்குத் தெரிகிறதோ இல்லையோ. அம்மையாருக்கு நன்றாகத் தெரிகிறது.*

அடடா! நம்முடன்தானே இருக்கிறான் பெருமான். விபரம் தெரியாமல் அவனை எங்கெங்கோ போய் தேடுகிறார்களே. பெரிய பெரிய சாஷ்திர விற்பன்னர்களே அங்கே இங்கே என்று தேடி அலைகிறார்களே.

நல்ல வேடிக்கைதான் என்று சிரிப்பே வந்து விடுகிறது அம்மையாருக்கு.

அது தமிழில் வருகிற தோரணையைப் பாருங்கள்.

*வானத்தான் என்பாரும்*
*என்கமற்(று) உம்பர்கோன்*
*தாளத்தான் என்பாரும்*
*தாம்என்க - ஞானத்தான்*
*முன்நஞ்சத் தால் இருண்ட*
*மொய்யொளிசேர் கண்டத்தான்*
*என்நெஞ்சத் தான்என்பன்*
*யான்.* (8)

---

முன் நஞ்சத்தால் இருண்ட மொய் ஒளி சேர் கண்டத்தான் - ஆணவத்துக்கு நஞ்சு என்று பெயர். உண்மையைக் கண்ட ஞானியர் 'நான்' என்னும் ஆணவத்தை இறைவனின் திருவடியில் காணிக்கையாக வைத்து விடுகிறார்கள். இறைவன் அதை எடுத்துக் கொள்கிறான். ஆணவம் ஒரு உருப்படியாக இருந்தால் அதைச் சிதைத்தெறிந்து விடலாம். அப்படி இல்லையே அது. அதனால் அதை தன்னுள்ளேயே வைத்துக் கொள்கிறான். சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியால் தொண்டைக் குழிக்குள் வைத்து ஆணவத்தை அடக்குகிறான் என்று தான் சொல்ல வேண்டும். அப்படியானால் நஞ்சுண்ட கண்டம் நீல நிறத்தோடு இருண்டு பிரகாசிக்கிறது என்று சொல்வது இயல்புதான். அப்படியே சொல்லி வருகிறார்கள். 'நஞ்சத்தால் ஒளி சேர்கண்டம்'' நீலகண்டம் என்றே சொல்லி வருகிறார்கள்.

நஞ்சென்று தெரிந்துதான் ஆணவத்தை ஏற்றுக் கொண்டாள். வேறு வழி இல்லை, பக்தர்களிடம் அவ்வளவு கருணை பெருமானுக்கு. அதுதானே ஞானம். அதாவது மெய்ஞ்ஞானம்.

*ஞானத்தான்*
*முன்நஞ்சத் தாலிருண்ட*
*மொய்ஒளிசேர் கண்டத்தான்*

தூணிலும் இருக்கிறான். துரும்பிலும் இருக்கிறான் இறைவன் என்று பார்க்கிறவர்கள். என்னிலும் இருக்கிறான் என்று பார்க்க ஏன் யோசிக்க வேண்டும்.

4) வானம், பூமி, அண்டம், பிண்டம் என்று சராசரம் அவ்வளவும் இறைவன்தான். அவனுள் பேரண்டமே அடக்கம். அப்படி எங்கும் நிறைந்திருக்கிற கடவுள் தன்னுள் இருக்கிறான் எனறால், அதுவும் அடக்கஒடுக்கமாய் அமர்ந்திருக்கிறாள் என்றால் எப்படி இருக்கும் ஆனந்தம். பௌர்ணமியில் கடல் பொங்குவது போலல்லவா எவ்வி எவ்விப் பொங்கும் ஆனந்தம்.

பால் பொங்குவது போலப் பொங்குகிறது அம்மையாரின் உள்ளம். அந்த உள்ளத்தின் பெருமிதம், உணர்ச்சி எப்படி இயல்பான இசையிலும் தாளத்திலும் குதித்துக் குதித்து ஆடுகிறது என்று பாருங்கள்.

நான் என்ன செய்தேன். ஒன்றும் செய்யவில்லையே, 'நீயே தஞ்சம்' என்று அவன் காலடியை என் இரண்டு கைகளாலும் இறுகப் பற்றினேன். இதற்கா இத்தனை பரிசு. அடடா! நம்ப முடியவில்லையே. கனவா, இல்லை நனவா!

*யானே தவம் உடையேன்*
*என்நெஞ்சே நல்நெஞ்சம்*
*யானே பிறப்பறுப்பான்*
*எண்ணினேன் - யானேஅக்*
*கைம்மா உரிபோர்த்த*
*கண்ணுதலான் வெண்ணீற்ற*
*அம்மானுக்(கு) ஆளாயி*
*னேன்.* (9)

---

யானே என்றால் - நாள் என்பது தான் பொருள். நானே என்று 'ஏ' போட்டுப் பொருள் காண வேண்டியதில்லைதான். பிறப்பு அறுப்பான் எண்ணினேன் - பிறவி நோயை, நான் பிறந்தேன் என்னும் அறியாமையை, நான் துன்பப் படுகிறேன், சிக்கலில் அகப்பட்டு உழல்கிறேன் என்னும் மயக்கத்தை ஒழித்துக் கட்டத் துணிந்தேன். அதுகருதியே அம்மானுக்கு ஆளானேன். அம்மான் - இறைவன். அம்மாவின் அன்பும் கருணையும் போலத்தான் அவனுடைய பரிவும் பாசமும். அம்மாவின் தன்மையன் அம்மான்.

கைம்மா - யானை கண்ணுதலான் - நெற்றிக் கண் உடைய பிரான்.

5) தாய், தந்தை, மனைவி, மக்கள், பேரன், பேத்தி என்று பலபேர் வீட்டில். எல்லோரும் சேர்ந்தே இருக்கிறார்கள். மனத்தால், உணர்ச்சியால் ஒன்றுபட்டிருக்கிறார்கள். யாரும் யாரையும் விட்டு விடுவதில்லை.

அப்படி அவர்களைச் சேர்த்து வைத்திருப்பது எது. அன்புதான். அன்பென்னும் அற்புதந்தான்.

ஒரு பூவை எடுத்துக் கொண்டால் அதில் ஐந்து இதழ். காம்பு, இலை, வாசனை, தேன், தூய்மை, எளிமை எல்லாம் சேர்ந்திருக்கிறது. அப்படிச் சேர்த்து வைத்திருக்கிறது அன்பு.

உடம்பையும் உயிரையும் அதுதானே சேர்த்து வைத்திருக்கிறது. இந்த எண்சாண் உடம்பில் தான் எத்தனை தத்துவங்கள். மூக்கு, முகம், கண், கால், கை, தோல், எலும்பு, பல், நாக்கு, ரத்தம், சதை, மூளை, குடல், நகம், ரோமம், விரல், நீட்டல், மடக்கல், தூக்கம், விழிப்பு, நடத்தல், அமர்தல் என்று எத்தனை அம்சங்கள். அத்தனையும் ஒரு தன்மைத்தாய் சேர்ந்துதான் செயல்படுகின்றன.

அன்பின் அற்புதம் அது.

இனி, பூமி, சந்திரன், செவ்வாய், வெள்ளி, சூரியன், நட்சத்திரம் என்று எத்தனை எத்தனை? கோடான கோடி என்று தான் சொல்ல வேண்டும். அத்தனையும் ஒன்றை விட்டு ஒன்று விலகாமல் சேர்ந்தே இயங்குகின்றன. ஒன்றுக்கொன்று ஆதரவாகவும், துணையாகவம், உற்ற உறவாகவும் இருக்கின்றன. ஒத்துப் பேசி நடப்பது போல் அத்தனையும் ஒரு தன்மைத்தாய் ஒன்றை ஒன்று நாடி சுற்றிச் சுற்றி வருகின்றன.

அப்படி எல்லாம் வானம், பூமி, வீடு, மக்கள் என்று பிரபஞ்சம் முழுவதையும் ஒரு குடும்பமாய், ஒன்றாய், ஒரே தன்மைத்தாய் வைத்திருக்கிறது அன்பு. அந்த அன்புதான் அருள். அதையே திருவருள், நியதி தத்துவம், இறையருள் என்றெல்லாம் சொல்கிறோம். சொல்வதுபோல் நம்பினால் போதும். நாம் அவனாகி விடுவோம்.

அன்பின் அற்புதத்தை - திருவருளையே பார்த்துப் பார்த்துப் பரவசப்படுகிறார். காரைக்கால் அம்மையார். வியப்பும், பெருமிதமும் அற்புதரசமாய் ஓடி விளையாடுகிறது பாடலில்.

எப்படி என்று பார்க்கலாம்.

அருளே உலகெலாம்
ஆள்விப்ப(து), ஈசன்
அருளே பிறப்பறுப்ப -
தாகும் - அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும்
விதியுடையேன்; - அவ்அருளே
அப்பொருளும் ஆவ(து)
எனக்கு (10)

6) ஒரு ரயில் நிலையம். அதில் ஏற்கனவே ஒரு ரயில் வந்து நிற்கிறது. நாம் பயணித்த ரயிலும் அங்கு போய் நின்றது.

பக்கத்தில் இருந்தவர் ஏதோ கேட்டார். பதில் சொன்னோம். இரண்டு விநாடி நேரம்தான். அதற்குள் நாம் வந்த ரயில் புறப்பட்டுப் போவதாக இருந்தது. ஏற்கனவே நின்ற ரயிலை பார்க்கிறோம். அது நிற்கிறதாகவே தெரிகிறது.

மறுபடியும் நண்பர் ஏதோ கேட்கிறார். பதில் சொல்கிறோம். இரண்டு மூன்று விநாடிதான் பார்த்தால் புறப்பட்டுப் போனது அந்த ரயில்தான் என்று தெரிகிறது. நாம் வந்த ரயில் கல்லுளி மங்களாய் அப்படியே நிற்கிறது.

---

ஈசன் அருளே உலகு எலாம் ஆள்விப்பது - பேரண்டம் முழுவதையும் நியதிப்படி நடத்துகிறது திருவருள். எங்கும் ஒரு தன்மைத்தாய் நிறைந்த இறையருள். அந்த அருள்தான், பிறப்பு அறுப்பது ஆகும் - மயக்கத்தைக் கொடுக்கிற பிறவிப்பணியிலிருந்து விடுவிக்கிறது. அதுதான் - மெய்ப்பொருளை நோக்கும் விதி உடையேன் - உண்மையைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. பார்க்க வைக்கிறது. அப்பொருளும் ஆவது எனக்கு - அணுவிலிருந்து ஏன் அணுவுக்குள் அணுவான பரமாணுவிலிருந்து அண்டம் பேரண்டம் எல்லாமே **ஒன்றுதான், ஒ**ரே நியதி தத்துவந்தான், கடவுள் தத்துவம் ஒன்றேதான் என்று தெளிய வைக்கிறது.

விஸ்வ ரூப தரிசனம் என்றால் அதுதானே.

குறிப்பு : எல்லாம் ஈசன் திருவருள் என்கிற உண்மை தெரிந்தபின் விஷ்வ ரூப தரிசனம் கிடைத்ததா, இல்லை விஷ்வரூப தரிசனம் கிடைத்த பின்தான் உண்மை தெரிந்ததா என்று விளங்க மாட்டேன் என்கிறது நமக்கு.

இனி, நாம் உட்கார்ந்திருக்கிறாயிலே அப்படித் தடுமாற வைக்கிறது. நம்மை இனி எங்கும் ஒரே படியாய் நிறைந்திருக்கிறது. கடவள்த் தத்துவம். பொதுவாக எல்லோரும் தெரிந்ததுதான் இது. ஆனால் இதுதான் உண்மை. இத ஒன்றுதான் நமக்கு உற்ற துணை என்று அதையே நம்பி அனுபவிக்க முடியவில்லை நம்மால்.

எத்தனையோ பிரச்சனைகள் நமக்கு. ஒவ்வொன்றும் அடித்து தள்ளி உருட்டிக் கொண்டு போகின்றன நம்மை. காரைக்கால் அம்மையாருக்கோ அப்படி ஒன்றும் இல்லை. சுதந்திரமாக இருக்கிறார். விடுதலை பெற்றவர் அவர். அதனால் உண்மையை ஆற அமரப் பார்க்கிறார். அதிலேயே ஊன்றி நிற்கிறார். அதிலேயே ஒன்றித் திளைக்கிறார்.

''ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்'' உண்மையிலேயே ஒன்றி இருப்பதால் எப்பொழுதும் விஷ்வரூப தரிசனந்தான். அருளும் ஆனந்தமும் கை கோர்த்து ஆடும் திருநடனந்தான்.

''ஒன்றே என் உள்ளத்தின் உள் அடைத்தேன்.'' அந்த ஒன்று எது ''பொங்கழல் சேர் அங்கையாற்(கு) ஆளாம் அது''.

★★★★★★★

எத்தனை முயற்சி, எத்தனை சோதனை, எத்தனை திருத்தம், திருந்தித் திருந்தி வந்திருக்கிறது மனிதப்பிறவி.

ஏதோ வானத்திலிருந்து திடுதிப்பென்று வந்து குதித்த வேடிக்கை இல்லை மனிதப்பிறவி.

அதற்காக அதுபட்ட கஷ்டம் அதற்குத் தெரியும். நன்றாகவே தெரியும். சரி, அதோடு விட்டதா? எத்தனை தடவை மாறி மாறி மனிதனாகப் பிறந்தாலும் விட மாட்டேன் என்கிறது கஷ்டம். எதை எடுத்தாலும் பிரச்சனை. தொல்லைக்கு மேல் தொல்லை. ஒரே பயம். அச்சமே எடுத்த அவதாரம் என்றுதான் சொல்ல வேண்டும் மனிதப் பிறப்பை.

என்னமோ ஒன்று மனிதனைப் பிடித்து ஆட்டுகிறது. ஒவ்வொரு ஆணையும், ஒவ்வொரு பெண்ணையும் ஆட்டுகிறது. குடுமியைப் பிடித்து ஆட்டு ஆட்டென்றே ஆட்டுகிறது.

தோசை மாவை அரைக்கிற குழவிக்கல்லின் கதைதான் மனித வாழ்வு.

*இந்த அசுரப்பிடியிலிருந்து எப்படியோ விடுபடுகிறார்கள் ஞானியர். பிறவிப் பிணியை உதறி எறிந்து விடுகிறார்கள். வீர சுதந்திரம் பெற்ற பின் அச்சத்துக்கு இடம் ஏது அங்கு.*

*கவலை இல்லாமல் உண்மையைப் பார்க்கிறார்கள். அது ஒன்றையே பார்க்கிறார்கள். அதையே கொஞ்சிக் குலாவு கிறார்கள். கட்டிப் பிடித்து உருண்டு புரண்டு விளையாடு கிறார்கள். உண்மைக்கும் அவர்களுக்கும் அப்படி ஒரு உறவு. பிரிக்க முடியாத உறவு. உண்மை உறவு என்றால் அதுதான்.*

*பிறவிப் பிணியை, அதனால் வரும் அச்சத்தையே வெட்டி வீழ்த்தியவர் காரைக்காலம்மையார். விடுதலை பெற்ற ஆன்ம வீரம் கொட்டு முழக்கத்தோடு தமிழில் தாண்டவம் ஆடுகிற அற்புதத்தைப் பார்க்கலாம்.*

*ஒன்றே நினைந்திருந்தேன்*
*ஒன்றே துணிந்தொழிந்தேன்*
*ஒன்றேஎன் உள்ளத்தின்*
*உள்ளடைத்தேன் - ஒன்றே காண்*
*கங்கையான் திங்கள்*
*கதிர்முடியான் பொங்கழல் சேர்*
*அங்கையாற்(கு) ஆளாம்*
*அது.* (11)

*7) உண்மையைப் பார்த்தால் போதும். ஒரு தடவை பார்த்தாலே போதும். ஒளியை, தெய்வ ஒளியையே நம்மீது பாய்ச்சிக் கொண்டே இருக்கும் உண்மை.*

*அந்த ஒளியில் உள்ளம் தூய்மை பெறும். தெளிவு பிறக்கும். உறுதியே வந்து விடும். எந்த ஒரு சக்தியாலும் அந்த உறுதியை அசைக்க முடியாது.*

★★★★★★★

---

*ஒன்றே - எங்கும் நிறைந்திருக்கிறது - கடவுள் தத்துவம். அதுதான் உண்மை. அந்த உண்மை ஒன்றையே. துணிந்தொழிந்தேன் - இதுதான் கடவுள் என்று துணிந்து விட்டேன். திங்கள் - சந்திரன், பிறைச்சந்திரன். பொங்கு அழல் - 'ஜம்'பண்ணி மேலே மேலே குதித்தாடும் தீ. அழல் - தீ.*

*சுதந்திரத்தின் தொனி, அதன் துடிப்பு, நாடித்துடிப்பே பாடலில் கேட்கிறது. டாண், டாண் என்று காதில் விழுகிறது விடுதலை முழக்கம்.*

சிருஷ்டிக்கு என்று ஒரு அதிகாரி. அந்த அதிகாரிக்கு நான்முகன் (பிரமன்) என்று பெயர். நான்முகன் படைத்துக் கொண்டே இருக்கிறான். உற்பத்தியாகிற அவ்வளவையும் காக்க வேண்டாமா? காப்பதற்கென்றே ஒரு அதிகாரி, அவருக்கு திருமால் என்று பெயர்.

திருமாலும் பிரம்மாவும் மேலானவர்கள்தான். தெய்வாம்சம் நிறைந்த கர்த்தர்கள்தான். ஆனால் அவர்களையும் நான் என்னும் மயக்கம் விட்டு வைக்கவில்லை.

நான் படைக்காவிட்டால் உமக்கு வேலை ஏது என்று திருமாலை ஏளனமாகப் பார்ப்பார் பிரமா. அப்படியா சங்கதி நீ படைத்து விடுகிற ஒவ்வொன்றையும் கண்ணும் கருத்துமாக நானல்லவா காக்கிறேன். அதை நான் செய்யவில்லை என்றால் உடனுக்குடன் உன் படைப்பு அத்தனையும் தீய்ந்து போகும். அதன்பின் உனக்கு ஏது வேலை. மூட்டையைக் கட்டி இறைப்பில் தொங்க விட வேண்டியதுதான் உன் வித்தையை' இப்படிச் சுடச்சுடப் பேசி விடுவார் திருமால்.

ஒருவர் மேல் ஒருவர் எரிச்சல் புகைந்து கொண்டே இருந்தது. கடைசியாக ஒரு நாள் விவகாரம் சிவபெருமானிடமே வந்தது.

இரண்டு பேரையும் பார்த்துச்சிரித்தே விட்டார். சிவபெருமான் ''சரி சரி, நான் ஜோதி வடிவமாக நிற்கிறேன், என் முடியையோ அடியையோ கண்டு முதலில் வந்து சொல்கிறவர் யாரோ அவர்தான் உங்கள் இருவரில் உயர்ந்தவர்'' என்றார்.

இருவரும் சம்மதம் என்றார்கள். பெருமானும் ஒளிப்பிழம் பாக ஓங்கி உயர்ந்து நின்றார். கோடி சூரியப் பிரகாசமாய் தகதக என்று ஜொலித்தது தரிசனம். ஆனாலும் ஒன்றும் தெரியாத குருடர்களாய் மேலும் கீழும் தேடினார்கள். ஆண்டுக்கணக்கில் தேடிப் பார்த்தார்கள். ஒன்றும் புலப்படவில்லை.

''எல்லாம் இறைவன் மயம். நாமோ, நம்முடையதோ ஒன்றும் இல்லை'' என்று புத்தி வந்து திருந்தினால் அன்றி ஒன்றும் தெரியாது என்று தெரிந்து கொண்டார்கள்.

படைப்பு, காப்பு என்னும் பிரபஞ்சரகஸ்யத்தையே கண்ணைப் பொத்தி விளையாட்டுக் காட்டுகிறது பேருண்மை. கடவுள்த் தத்துவம். அதாவது சிவபரம்பொருள்.

அந்த அரிய பெரிய உண்மை நம்மோடல்லவா இருக்கிறது. எவ்வளவு எளிமையாய் அடக்க ஒடுக்கமாய் நம்முடன் சேர்ந்து குடி இருக்கிறது என்று அதிசயப்படுகிறார் அம்மையார்.

*"இன்று நமக்கெளிதே*
*மாலுக்கும் நான்முகற்கும்*
*அன்றங்(கு) அளப்பரியன்*
*ஆளானை - என்றுமே*
*மூவா மதியானை*
*மூவேழ் உலகங்கள்*
*ஆவானைக் காணும்*
*அறிவு"* (12)

8) பேரண்டமே அவனுள்தான். அவனோ என்னுள். எவ்வளவு எளிமையாய் எவ்வளவு இனிமையாய் இருக்கிறான் இறைவன் என்னும் அற்புதரசம் அருமையாய்க் கவி உருவம் பெற்று விட்டது. அதுதான் தமிழ் செய்கிற காரியம். அண்டபிண்ட சராசரம் எல்லாம் கடவுள்தான் என்று மொத்தமாகச் சொல்கிற பொழுது தெளிவு அவ்வளவாக ஏற்படுவதில்லை. வேகமும் அப்படி அப்படித்தான்.

ஒரே மொங்காள் போடாய் போட்டு விட்டால் பாய்ச்சலோ, பம்மலோ, துள்ளலோ அதில் எப்படி வரும். அப்படி இப்படி என்று உதறிக் காட்டுகிற பொழுது தான் பிரித்துக் காட்டுகிற பொழுது தான் அது அதற்குத் தனித்தனிச் சாயல்கள் வரும். நெளிவு, சுழிவு ஏற்படும். ஒன்றுக்கொன்று வேகமும் வரும்.

கடவுளின் சர்வ வியாபகத்தை அது, இது என்று பிரித்துக் காட்டுகிறார் அம்மையார். அதையே பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறார். அனுபவித்ததையே கையில் எடுத்துக் காட்டுவது போல் கவியில் வைத்துக் காட்டுகிறார் அம்மையார் எப்படி

---

மூவாமதி - இளநிலா, பிள்ளை நிலா. மூவேழ் உலகங்கள் - மேலுலகம் ஏழு, கீழுலகம் ஏழு, இடைப்பட்ட உலகம் ஏழு ஆக இருபத்தோரு உலகங்கள் என்று ஒரு ஐதீகம். எத்தனை இருந்தால் என்ன? அத்தனையும் இறைவன் ஒருவனே.

*அறிவானும் தானே*
*அறிவிப்பான் தானே*
*அறிவாய் அறிகின்றான்*
*தானே - அறிகின்ற*
*மெய்ப்பொருளும் தானே*
*விரிசுடர்பார் ஆகாச*
*அப்பொருளும் தானே*
*அவன்* (13)

9) விரிந்த பரந்த பூமி முழுவதும் கடவுள்தான். மலை, கடல், மேகம், வயல், காடு, அருவி, வயல், தோப்பு, புஷ்பம் எல்லாம் கடவுள்தான். போகப் போகப் போய் கொண்டே இருக்கும்.

அப்படியானால் கடவுள் எவ்வளவு கம்பீரமாக இருப்பார். எத்தனை ஒய்யாரமாக, எடுப்பாக, தோரணையோடு இருப்பார். கற்பனைக்கு எட்டவா செய்யும் கடவுள்த் தத்துவம்.

ஆனாலும் கண் கொண்டு பார்க்கும்படியான கைக்கு எட்டுபடியான ஒரு உருவத்தில் வைத்துப் பார்க்கிறது மனம்.

விண்ணுக்கும் மண்ணுக்குமாய் ஓங்கி நிற்கும் உயரத்தை மேகங்களைச் சடையாக வைத்தும், சந்திரனை அச்சடையில் சொருகி வைத்தும் காட்டுகிறது. நட்சத்திரங்களைக் கொன்றை மலர்களாக வைத்துக் காட்டுகிறது மனம். அதாவது கற்பனை.

நெருப்பே அவன் திருமேனி (உருவம்) என்றும், சகல தத்துவங்களுக்கும் ஆதாரமான நீரே அவன் தலையில் - சடையில் தேங்கி நிற்கும் கங்கை என்றும் காட்டுகிறது.

அத்தனையும் அடையாளந்தான். சின்னந்தான்.

★★★★★★★

---

*அறிவான் - மாணவன். அறிவிப்பான் - ஆசிரியன். அறிகின்றான் அறிவாய் (இருப்பவன்) ஞானம், அறிகின்ற மெய்ப்பொருள் - நாம் முயன்று அறியும் வஷ்து, பூரணவஷ்து. மாணவன், ஆசிரியன், ஞானம், பேருண்மை எல்லாம் ஒன்று தான். அறிவுத் தத்துவம் மட்டுமல்ல. ஆகாயம், பூமி, நெருப்பு முதலிய ஜட தத்துவமும் அந்த ஒன்று தான். அத்தனையும் இறைவனுடைய மனோசிருஷ்டிதான்.*

*குறிப்பு : பெருந்தேவனார் பாரதத்தில் துதிப்பாடல்*

குழந்தையைப் பார்க்கப் பார்க்கப் பரவசப்படுவாள் தாய். குழந்தையினிடத்து ஒரு வெறியே உண்டாகி விடும் தாய்க்கு.

அந்த வெறிதான் குழந்தையை அவள் உள்ளத்தில் பிரதிஷ்டை பண்ணி வைக்கிறது.

பரம்பொருளைக் காரைக்காலம்மையார் பார்க்கிறதும் அப்படித்தான். அணு அணுவாக இறைவனைப் பார்த்துப் பார்த்து வியக்கிறார். இழை இழையாகப் பிரித்தெடுத்துப் பார்க்கிறார். பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறார்.

இறைவனுடைய திருமேனி செக்கச் செவெலெனச் சிவந்தது. பவளம் போலவும் மிளிரும். செவ்வானம் போலவும் ஒளிரும்.

அவன் மார்பில் வெண்புரி நூல் (பூணூல்) வெள்ளை வெளேர் என்று கிடக்கிறது.

---

*எந்தையாய்த் தாயாய்*
*இருநிலனாய் எவ்வுயிர்க்கும்*
*முந்தி மடூஉதவும்*
*மூலமாய் - அந்தம்இலாப்*
*பூதமாய் வேதமாய்*
*நின்ற புராதனை*
*ஓதவா நெஞ்சே*
*உவந்து*

காரைக்காலம்மையார் பாடலையும் பெருந்தேவனார் பாடலையும் மாறி மாறிப் பார்க்க வேண்டும். இரண்டு பாடல்களும் முகம் பார்க்கும் கண்ணாடி போலத் தெளிந்து நிற்கும்.

மேலும் அருச்சுனனுக்கு போர்க்களத்தில் விஷ்வரூப தரிசனம் கொடுக்கிற கண்ணன்

*பிறப்பு நிலைகேடு*
*இவையாவள், பாவம்*
*அறத்தினோ(டு) ஐம்பூதம்*
*ஆவாள் - உறற்கரிய*
*வாளாவாள் மண்ணாவாள்*
*மன்னுயிர்கள் அத்தனையும்*
*தானாவாள் காட்டினான்*
*தான்*

இதையும் சேர்த்து வைத்தே படிக்கலாம். படிக்கப் படிக்க பளிங்கு போலத் துப்புரவாகும் உள்ளம்.

செம்மேனியில் கிடக்கும் வெண்நூலை எப்படிப் பார்க்கிறார் அம்மையார். சடையில் சொருகி வைத்த கீற்றுப்பிறை இருக்கிறதே அதன் கதிரொன்று இறங்கி வந்து மார்பில் பதிந்தது போலவே தெரிகிறது அம்மையாருக்கு.

என்ன அதிசயம் இது. பிள்ளை மதி போடும் ஒளிக் கோலத்தின் அழகே அழகு என்று வியக்கிறார்.

*பெருகொளிய செஞ்சடைமேல்*
*பிள்ளைப் பிறையின்*
*ஒரு கதிரே போந்தொழுகிற்(று)*
*ஒக்கும் - தெரியின்*
*முதற்கண்ணான், முப்புரங்கள்*
*அள்றெரித்தான், மூலா*
*நுதற்கண்ணணாள் தன்மார்பின்*
*நூல்.* (14)

10) விண்ணுக்கும் மண்ணுக்குமாய் ஓங்கி உயர்ந்தவர் இறைவர். சிவபெருமான். அந்த உயர்ச்சியை எப்படிக் காட்டுவது, ஏதாவது ஒரு அடையாளத்துக் கொண்டு தான் காட்ட முடியும். பிரம்மாண்டமான மலையை, அதன் உயரத்தை அதிலிருந்து விழும் அருவி காட்டுகிறது. இனி ஒரு பெண்ணின் நெற்றியின் வனப்பையும் காம்பீர்யத்தையும் சின்னஞ்சிறிய பொட்டு (திலகம்) காட்டுகிறது. அப்படியே பரம்பொருளின் சர்வ வியாபகத்தை அவன் அணிந்திருக்கும் அரவாபரணம் காட்டுகிறது. ''படங்கொள் அணி மிடற்ற பேழ்வாய் அரவசைத்தான்''. புற்றில் பதுங்கும் அரவா அது? வானம் முழுதும் பூத்துக் குலுங்கும் நட்சத்திரக் கூட்டமே அவ்அரவு!

பரம்பொருளின், சிவபெருமானின் நிறம், தீவண்ணம், மாணிக்க ஒளி வீசும் பொன்மேனி, அவர் முடிச்சடையிலோ வெண்மதி. வெள்ளியை உருக்கி விட்டது போலும் பிறைநிலா. அப்படிச் சிவப்பும் வெண்மையும் கலந்த ஒரு மயக்க கோலம்.

---

பெருகுஒளிய - மிக்க பிரகாசம் கொண்ட. ஒரு கதிரே போந்து ஒழுகிற்று ஒக்கும். ஒரே ஒரு ஒளிக்கதிர் மட்டும் இறங்கி வருவது போலத் தோன்றும். முதற்கணணான் - ஆதியாய் உள்ளவன். மூவாநுதல் கண்ணான் - இளமைத்துடிப்போடு கூடிய நெற்றிக் கண்ணன். சிவபெருமான் - நூல் - பூணூல்.

அதற்கும் மேலே இன்னொன்று பெருமானின் கழுத்தில் நஞ்சு தங்கியதால் ஒரு கருப்பு மச்சம்.

சிவப்பு, வெள்ளை, கருப்பு என்று ஒரே விநோதம். ஏதோ இருளுக்கும் வெளிச்சத்துக்கும் நடக்கும் போர்க்களம் போல் தான் பெருமானின் திரு உருவம்.

இப்படிப் பார்த்து அனுபவிக்கிறார் அம்மையார்.

சந்திரன் நம்மை விட்டு வைக்க மாட்டானே என்று பயந்து பெருமானின் கழுத்தோரம் வந்து பம்மிக் கொண்டதாம் இருட்டு. இப்படித் தெரிகிறது அம்மையார் கண்ணுக்கு நஞ்சுண்ட கண்டம்.

இனிப்பாடல்

"அடும் கண்டாய் வெண்மதி என்(று)
அஞ்சி இருள் போ நீ(து)
இடம்கொண் டிருக்கின்ற(து)
ஒக்கும் - படங்கொள்
அணிமிடற்ற பேழ்வாய்
அரவசைத்தான் கோல
மணிமிடற்றின் உள்ள
மறு". (15)

*11)* செக்கச் சிவந்தது பெருமானின் திருமேனி. மார்பில் கிடக்கும் வெண்ணுலோ தலையிலிருக்கும் இளநிலா இறங்கி வந்து ஊர்வது போல் இருக்கிறது. இனி அந்நிலவொளிக்குப் பயந்த இருளோ பெருமானின் கழுத்தே தஞ்சம் என்று ஒளிந்து கிடப்பது போல் தெரிகிறது. நஞ்சை அடக்கிய கழுத்தின் மறு தான் அந்த இருள்.

---

அடும் கண்டாய் வெண்மதி என்று இருள். அஞ்சி - தொலைத்துக் கட்டிவிடும் சந்திரன் என்று பயந்த இருட்டு. போந்து - ஓடிப் போய் இடம் கொண்டு இருந்தது ஒக்கும். இடம் தேடிப் பிடித்து அங்கே ஒளிந்திருப்பது போல் இருக்கிறது. எது? பெருமானின் கழுத்தில் கிடக்கும்மறு. படம் கொள் - படம் எடுத்து ஆடும், அணிமிடற்ற - அழகிய கழுத்தும், பேழ்வாய் - பெரிதாகப் பிளந்து காட்டும் வாயையும் உடைய. அரவு - பாம்பு, ஆதிசேஷ வட்டம் என்னும் நட்சத்திரக்கூட்டம். அது பெருமானின் அரவாபரணம்

இப்படி எல்லாம் பார்ப்பதற்கு எவ்வளவு உத்சாகம் இருக்க வேண்டும் உள்ளத்தில்.

ஆனந்தமும் எக்களிப்பும் சேர்ந்தெடுத்த அவதாரம் அம்மையார். இனி பெருமாளின் திருமேனி அழகு எப்படி எல்லாம் விளையாட்டுக் காட்டுகிறது என்று பார்க்கலாம்.

திருநீறு அணிவதற்கு முன் பெருமாளின் பவளமேனி பசும்பொன் மலை போல் ஒளிர்கிறது. வெண்ணீறு பூசிய பின்னோ அதே மேனி வெள்ளிப் பனி வரையே போல் ஜொலிக்கிறது. என்ன மாய விளையாட்டு இது என்று அதிசயிக்கிறார் அம்மையார்.

இனிப் பாடல்

*கொம்பினை ஓர் பாகத்துக்*
*கொண்ட குழகன்தன்*
*அம்பவள மேனி*
*அதுமுன்னம் - செம்பொன்*
*அணிவரையே போலும்;*
*பொடி அணிந்தால் வெள்ளை*
*மணிவரையே போலும்*
*மறித்து.* (16)

**12)** சாம்பலை அள்ளிப் பூசுவதற்கு முன் தங்கமலை, பூசிய உடனோ வெள்ளி மலை. இப்படி நேரத்துக்கு நேரம் மாறுகிறது பெருமாளின் மேனி.

அப்படியானால் நிலைபேறு (நிலைத்த தன்மை) என்கிற ஒன்று பெருமாள் (திருமேனி) இடத்து இல்லையோ என்றுதான் சந்தேகப்பட வைக்கிறது.

அதை உறுதிப்படுத்துகிறது இன்னொரு காட்சி.

பெருமாளிடமே கேட்கிறார் அம்மையார். 'உம்முடைய மேனியில் ஒரு பாதி திருமால், மறு பாதி உமையம்மை.

---

கொம்பு - பூக்கொம்பு போன்ற **அன்னை** உமையாள். குழகன் - உணர்ச்சியைக் குழைத்துப் பிசையும் அழகன். வரை - மலை, பொடி - சாம்பல்.

பார்க்கிறவர்களுக்கு உமையாளும் திருமாலுமாகத் தான் தெரிகிறது. அப்படியானால் உமக்கென்று தனி உருவம் (திருமேனி) இல்லையா? ''தோன்றி மறையும் மின்னல் போல்த் தானா உம்முடைய காரியமும்.

''உருப்படியாக எதுவும் இல்லையே உம்மிடம் இதோ பாடல்

*ஒருபால் உலகளந்த*
*மாலவளாம்; மற்றை*
*ஒரு பால் உமையவளாம்*
*என்றால் - இருபாலும்*
*நின்னுருவம் இன்றாய்*
*நிறம் தெரிய மாட்டோமால்*
*நின்னுருவம் மின்உருவே*
*நேர்* (17)

*13)* ஒரு ஏழைக் குடியானவன், வயலிலும் தோப்பிலும் நன்கு பாடுபட்டான். அதற்கேற்பப் பலனும் கிடைத்தது. குடும்பச் செலவுக்குப் போக மிஞ்சிய தொகையில் புஞ்சை வாங்கினான். புன்செயைத் திருத்தினான். கிணறு தோண்டினான். பருத்தி, மிளகாய் என்று பயிரிட்டான். வருமானம் பெருகியது. மேலும் மேலும் நிலபுலம் வாங்கினான். பருவமழை, விளைச்சல், விளைபொருளுக்கு அதிக விலை இப்படிப் பல ஆண்டுகள் அவனுக்கு யோகம் அடித்தது.

நிலச்சுவான் ஆகி விட்டான். வங்கியில் இருப்புத்தொகை. வீடுகள் பல, தங்கம், வெள்ளி என்று செல்வம் பெருகி விட்டது.

அவனுக்கு நான்கு பையன்கள். நான்கு பேரும் உருப்படாத பிறவிகள்தான். தேடி வைத்த சொத்தை அழிக்கிறார்கள். பொறுப்புணர்வோ, அறஉணர்வோ இல்லை சுவர்களிடம், பழக்க வழக்கமும் படுமோசம் அவர்களிடம். சோம்பேறிகள் மட்டுமல்ல, துஷ்டர்களாகவும் வளர்கிறார்கள்.

---

குறிப்பு : அற்புதமான பாடல், பாடப்பாட நிலைத்த நிலை பேறு கிடைக்கும்.

அப்படியானால் தூக்கம் வருமா குடியானவனுக்கு, நிம்மதி உண்டா, அமைதி உண்டா அவளிடம்.

கடவுளும் அப்படித்தான். குடியானவன் கதைதான் அவர் கதையும்.

கடவுளின் குழந்தைகள் தானே மனிதர்கள். தன்னுடைய பிள்ளைகளின் மிகப் பெரும்பாலோர் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று அலைந்தால் கடவுளுக்கு நிம்மதி ஏது, தூக்கம் ஏது? கிறுக்குப் பிடிக்கத் தானே செய்யும் அவருக்கு.

கிறுக்கு முற்றி திருவோடே ஏந்துகிறார். பிச்சை கேட்டு ஊர் ஊராய் அலையவும் செய்கிறார். பற்றற்ற பெருமான். நம்மால் என்ன செய்ய முடியும். நாம் திருந்தினால்தான் உண்டு.

*திங்கள் இதுசூடிச்*
*சில்பலிக்கென்(று) ஊர்திரியேல்*
*எங்கள் பெருமானே*
*என்றிரந்து - பொங்கொளிய*
*வானோர் விலக்காரேல்*
*யாம்விலக்க வல்லமோ*
*தானே அறிவான்*
*தனை* (18)

---

திங்கள் - சந்திரன், கோமாளித்தனமாக சந்திரனையும் தலைமேல் சூடிக் கொண்டு, பொங்கு ஒளிய - ஞான ஒளி - ஞான ஒளி ஜொலிக்கிற, வானோர் - ஞானியர், மெய்யடியார். அவர்களல்லவா எம்பெருமானே, உமக்கு இது தகுமா என்று தடுக்க வேண்டும். அவர்களே தடுக்கவில்லை என்றால், அவர்கள் தடுத்தும் கேட்கவில்லை பெருமான் என்றால். யாம் விலக்கவல்லமோ - எம்போவியரால் என்ன செய்யமுடியும். தானே அறிவாள் தனை - தன்னுடைய தகுதி இன்னதென்று அவனுக் (பெருமானுக்) கல்லவா தெரிய வேண்டும்.

குறிப்பு : அழகுத் தத்துவம் என்பதாக ஒன்று. அதைப் பார்த்தால் போதும். காதல் வந்து விடும். அழகில் ஈடுபட்ட பின் வேறு எது பற்றி யோசனை வரும்? வேறொன்றையும் பார்க்கத் தோன்றாது. அது ஒன்றையே பார்க்க வேண்டியதுதான். இழை இழையாக உதறி எடுத்துப் பார்க்க வேண்டியதுதான். அனுபவிக்க வேண்டியதுதான். அப்படிப் பார்த்து அனுபவிக்கிறது தமிழ். திருவோடு, பிச்சை இவற்றையும் அனுபவிக்கிறது தமிழ்.

*14) இறைவனின் அழகைக் கண்டு அனுபவிக்கிறார். காரைக்காலம்மையார், பிள்ளை நிலா, பெரும் பாம்பு, பூணூல், நீலகண்டம், உமையொரு பாகம், ஏன், அவனுடைய பிச்சாண்டிக் கோலம் என்று ஒவ்வொன்றையும் கண்டு கண்டு, அனுபவிக்கிறார். அதுதானே காதல். பக்தியும் அதுதான்.*

*கிரகணம் என்று ஒன்று சூரிய கிரகணம், சந்திரகிரகணம் என்று மாறி மாறி வருகிறது. உலகம் தோன்றியது முதல் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது கிரகணம்.*

*அரைமணி நேரம், ஒரு மணி நேரந்தான் கிரகணம். அதற்காக அண்டத்தில் உள்ள எத்தனை கிரகங்கள் குறுக்கும் நெடுக்குமாய் ஓடி ஆட வேண்டி இருக்கிறது. யோசித்துப் பார்த்தால் கண்ணை மூடிக் கொள்ளும் புத்தி.*

*சூரியனைச் சுற்றி பூமி ஓடுகிறது. பூமியை ஒட்டி சந்திரனும் ஓடுகிறது. இந்த ஓட்டத்தில் பூமி சூரியன், சந்திரன், மூன்றும் ஒரே நேர்கோட்டுக்கு வருகிற பொழுது வெளிச்சம் பூமியில் விழுவது தடைப்படுகிறது. பகலிலேயே இருள், நிலவொளியிலேயே காரிருள். கிரகணம் என்று பெயர் அதற்கு.*

*பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம், சூரியனைப் பூமி சுற்றி வரும் வட்டப்பாதை, சந்திரனுக்கும் பூமிக்கும் உள்ள இடைவெளி, அதன் பாதை, வேகம், சந்திப்பு, மறைப்பு, நேர அளவு என்றெல்லாம் கணக்குப் போட்டுச் சொன்னால் கேட்கிறவர்களுக்கே கிரகணம் பிடித்து விடும்.*

*உண்மையை அநுபவிக்க வேண்டும் கேட்கிறவர். அப்படியானால் சொல்கிறவர் உண்மையை நன்றாக அனுபவித்திருக்க வேண்டும். அநுபவத்தோடு சேர்ந்து வந்தால் உண்மை ஆனந்தமாகவே இருக்கும்.*

*இதைத் தெளிவாகக் கண்டவர்கள் நம் முன்னோர். அரிய பெரிய நுட்பமான விஷயத்தையும் உருவகம் பண்ணி, கற்பனையில் ஊறப்பட்டு கதை கதையாகவே சொல்வார்கள்.*

*அப்படிச் சொல்லச் சொல்ல அதிலிருந்து கவியே பிறந்து விடும்.*

பிரமாண்டமான பாம்புகள் இரண்டு. ஒன்று சூரியனை விழுங்குகிறது. பிறகு கக்கி விடுகிறது. அதுதான் சூரியகிரகணம். இன்னொரு பாம்பு சந்திரனை விழுங்கிக் கொஞ்ச நேரம் வைத்திருந்து பிறகு அதுவும் உமிழ்ந்து விடுகிறது அதுவே சந்திரகிரகணம்.

இப்படி அதிசய பாவத்தில் சொல்லச் சொல்ல விஷயத்துக்கு ரசம் ஏறுகிறது. கேட்கிறவர் ஆவலைத் தூண்டுகிறது. கதையை வைத்து கிரகணத்துக்கு விழாவே எடுக்கிறார்கள். சமுதாயத்தின் பொது விழாவாகி விடுகிறது.

இனி, சிவபெருமான் தலையில் - உச்சியில் சந்திரன், உண்மையான சந்திரன். மிக்க பிரகாசமாகத்தான் இருக்கிறது நிலா. இனி அவருடைய மார்பிலோ பன்றியின் தந்தம். பன்றி என்றால் சாதாரணப் பன்றி அல்ல. பூமியையே, அமிழ்ந்து போன உலகு முழுவதையுமே கொம்பால் குத்தி எடுத்து மேலே கொண்டு வந்த பன்றி. சாட்சாத் திருமால் எடுத்த அவதாரந்தான் பன்றி. அதன் தந்தம் அதுவும் மிக்க பிரகாசம். அந்தத் தந்தத்தோடு சந்திரனைச் சேர்த்து வைத்தால் எப்படி இருக்கும் பிரகாசம். அப்படி ஒரு ஒளி வீச்சு. ஆகவே தலையிலே ஒரு சந்திரன், மார்பிலே அதை விடக் காத்திரமான சந்திரன்.

சிவபெருமான் தலை, கழுத்து, மார்பு அங்கே இங்கே என்று ஏறி இறங்கித் திரிந்து கொண்டிருக்கிறது ஒரு பாம்பு. மிகப் பெரிய பாம்பு. பெரிய பெரிய நட்சத்திரங்களையே அதன் உச்சியில் (படத்தில்) வைத்து அழுத்தி கோடாக, வயிரமணிக் கோடாக இழுத்திருக்கிறது என்றால் அதன் பெருமையைச் சொல்ல வேண்டுமா என்ன.

எப்படியாவது சந்திரனைப் பிடித்து விழுங்க வேண்டும் என்று ஒரே ஆசைபாம்புக்கு. ஆனால் உண்மையான சந்திரன்? பெருமாளின் மார்பில் இருப்பதா, இல்லை தலையில் இருப்பதா என்று தெரியவில்லை பாம்புக்கு.

பன்றியின் தந்தமும் உருக்கி விட்ட நிலா போலத் தானே இருக்கிறது. அதையும் சந்திரன் என்று மயங்கியதால் வந்த வினை.

எப்படியோ புத்தி மடித்துப் போய் விட்டது பாம்புக்கு. யார் புத்தி புகட்ட அதற்கு

*"திருமார்பின் ஏனச்*
*செழுமருப்பைப் பார்க்கும்*
*பெருமான் பிறைக்கொழுந்தை*
*நோக்கும் - ஒருவாது*
*இதுமதிஎன்(று) ஒன்றாக*
*இன்றளவும் தேரா(து)*
*எதும் மதிஒன் றில்லா*
*அரா.* (19)

*15)* பேரண்டம் முழுவதும் கடவுள்தான். ஆனாலும் அவருக்கென்று அவரிடம் ஏதாவது உண்டா என்றால் ஒன்றும் இல்லைதான்.

உடம்பு (திருமேனி) கூட அவருக்கென்று இல்லை அவரிடம். ஒரு பகுதி உமையாள். மறுபகுதி திருமால். அப்படி யானால் என்ன இருக்கிறது பெருமானிடம்.

---

ஏனச்செழு மருப்பைப் பார்க்கும் - பன்றியின் கொம்பை இதுதான் சந்திரன் என்று முதலில் பார்த்தது பாம்பு. ஏனம் - பன்றி. பிறைக்கொழுந்தைப் பார்க்கும் - பிறகு, அடடா, பெருமான் தலைமேலிருக்கும் இதுவல்லவா.

உண்மையான சந்திரன் என்று யோசித்தது. இப்படியே மாறி மாறியோ சித்துபார்த்ததால். ஒருவாது - இரண்டில் ஒன்றை இதுதான் சந்திரன் என்று தேர்ந்தெடுக்க முடியவில்லை பாம்பால். ஊழி ஊழி காலமாக யோசித்துப்பார்த்தும் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை சர்ப்பத்தால்.

எதும் மதிவுன்(று) இல்லா அரா - எள்ளளவு கூட புத்தி இல்லை பாம்புக்கு. அரா - பாம்பு.

குறிப்பு : பெரிய பெரிய நட்சத்திரமண்டலங்களே இறைவனின் மார்புக்கு மாலை, விரலுக்கு மோதிரம், தோளுக்கு வளையம், காதுக்குக் கடுக்கன் என்றால் பிரபஞ்சம் முழுவதும் அவன்தான். எல்லாமே அவள் தான். அது தான் சர்வவியாபகம். பன்றியின் கொம்புக்கும், வெண்ணிலவுக்கும் வெளிப்படையாகப் பார்க்கிறபொழுது எவ்வளவு வேற்றுமை. ஆனால் உள்நோக்கிப் பார்க்கிறபொழுது அதுவும் இறைவன்தான். அப்படி ஏகசக்தியாய் இருக்கிறான் பெருமாள்.

சர்வவியாபகமும் ஏக சக்தியும் ஒன்றாயிருந்து பரிமளிக்கிறது கடவுள்த் தத்துவம்.

ஆனாலும் அவர்தான் எல்லாம். அவரைத் தவிரவேறு எதுவும் இல்லை. சர்வவியாபகி அவர்.

சிவபெருமான் வாம (இடப்) பாகத்தில் உமையம்மை. தன் கருநெடுங்கூந்தலை சீவி, சிங்காரித்து, பின்னி தொங்க விட்டிருக்கிறாள். தொங்கவிட்ட குழங், பின்னிமுடித்த கூந்தல் (உமையாளின்) முதுகில் விழுந்து கிடக்கிறது. பெருமானின் வலப்பக்கத்து உச்சியில் நெற்றியை ஒட்டி சந்திரன். அது தகதக என்று ஜொலிக்கிறது., மேலும் நடசத்திரங்களை - அதாவது கொன்றை மலர்களை ஒரு சிறு மாலையாகக் கண்ணியாகக் கட்டி அதையும் சடையில் சொருகி இருக்கிறார் பெருமாள். சடையில் சொருகிய கொன்றை மலர்கண்ணி சடையை விட்டு நழுவி முதுகுப்புறமாக இறங்கியது போலவே தெரிகிறது உமையம்மையின் கருநெடுங்கூந்தல்.

*சடைமேல்அக் கொன்றை*
*தரு கணிதான் போந்து*
*புடைமேவித் தாழ்ந்ததுவே*
*போலும் - முடிமேல்*
*வலப்பால் அக் கோல*
*மதிவைத்தாள் பங்கின்*
*குலப்பாவை நீலக் -*
*- குழல்.* (20)

---

கொன்றைதருக(ண்)ணி - கொன்றைமலர்களால் தொடுக்கப்பட்ட சிறு மாலை. தலையில் கட்டும் மாலை. நட்சத்திரத்தின் அடையாளம் கொன்றை மலர். போந்து - நழுவி. புடைமேவி - பின் பக்கமாகத் தவழந்து. தாழ்ந்தது போல் - முதுகில் இறங்கிவந்தது போலத் தான், கோலமதி - அழகிய சந்திரனை. பங்கின் - இடப்பாகத்தில். குலப்பாவை - அன்னை உமையாள். குழல் - பின்னிவிட்ட கூந்தல். ஒற்றைச் சடை.

குறிப்பு : காதல் வந்தால் போதும். மனம் கனவு காணும். கண்டு கொண்டே இருக்கும் கனவு. பக்திக்கும் அப்படியே. காதலைவிட அதிகம் பக்திக்கு. காரைக்காலம்மையாரின் பக்தி கனவில்த் திளைக்கிறது. எட்டாதபரம்பொருளே கிட்டவந்து விடுகிறது. பார்த்துப் பார்த்துப் பரவசப்படுகிறார் அம்மையார்.

16) யானை என்னும் ஈரெழுத்தொருமொழியை வாய்திறந்து சொன்னால்ப் போதும். பிர்மாண்டமான யானையே வந்துவிடும். எடுப்பான மத்தகம் என்ன, மலைபோன்ற மேனி என்ன, உரல் போன்ற காலென்ன, கொம்பென்ன, கை என்ன, புயல்போல் ஆவேசமாக வருகிற நடை என்ன இத்தனயோடும் யானையே வந்து விடும்.

இத்தனையும் யானை என்னும் சின்னஞ்சிறு சொல்லில் எப்படிச் சப்பணம் போட்டு இருந்தன. அதிசயந்தான். அற்புதமேதான்.

இனி பெண் என்பதும் சின்னஞ்சிறு சொல்தான். அந்தச் சொல்லுக்குள் அளவிட முடியாத கருணையே இருக்கிறது.

வானத்துக்கும் பூமிக்குமாக ஒரு தராசு. அதில் ஒரு தட்டில் லட்சம், பத்துலட்சம், கோடி என்று யானைகளை ஏற்றுகிறோம். எதிர்த்தட்டில் கருணை ஒன்றையே வைக்கிறோம். தராசைத் தூக்கி நிற்கிறோம். அப்பொழுது எந்தத் தட்டு வாடும். வாடி மேலே போகிற தட்டு எது. யானைகளை ஏற்றிவைத்த தட்டுத்தான். கருணை இருந்த தட்டோ பாரம் பொறுக்க மாட்டாது தரையை அழுத்தும். அத்தனை சிறப்பும் பெருமையும் உடையது கருணை.

*கருணைக்கு அதிதேவதை பெண்.*
*இதுசம்பந்தி ரசிகமணி, டி.கே.சி. சொல்வார்கள்.*

''கரும்பும், நாணலும் ஒரு இனந்தான். கரும்பை அரைத்தால் அரைக்கால்படி, மூன்று வீசம் படி சாறு, அமிர்தமயமான சாறுவரும். நாணலைக் கட்டுக்கட்டாகப் போட்டு அரைத்தாலும் வருமா அமிர்தம்''.

''பெண்களும் ஆண்களும் ஒரே மாதிரிதான். ஆனால் பெண்கள் கருணை மயமானவர்கள். ஆண்கள் அப்படி இல்லை. அமிர்தப் பால் மட்டுமல்ல கருணைப்பாலே இரக்கம், அடக்கம், பணிவு, மரியாதை, பொறுமை, தியாகம் என்று வெளிப்படுகிறது பெண்ணின் பரிவிலிருந்து'' என்று ரசிக மணி சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை.

ஆனந்தத்தாள் பெண்ணின் உள்ளம், அந்த ஆனந்தம் உல்லாசமாக வெளிப்படும். விளையாட்டும் கும்மாளியுமாக

வெளிப்படும். ஆனாலும் அதில் ஒரு அடக்கம் இருக்கும். பணிவுடமையே இருக்கும்.

★★★★★★★

இனி, விபரம் தெரியாத விடலையாகவே தெரிகிறார் சிவபெருமான் காரைக்காலம்மையாருக்கு.

நடுச்சாமவேளையில் பேய்களோடு சேர்ந்து சுடுகாட்டில் போய் திம்திம் என்று குதித்து ஆடுகிறான் பெருமான். அந்தக் கொடுங்காட்டுக்கு சின்னஞ்சிறு பேதையாரிய உமையை அழைத்துக் கொண்டு போகலாமா?

இளம் வயது நங்கை உமை இந்தப் பேயாட்டத்தைப் பார்த்தால் பதறமாட்டாளா? சரிபாதியாய் இருக்கிற குழந்தையை (உமையை) இறக்கிவைத்துவிட்டுப் போக வேண்டியது தானே? அப்படிச் செய்யாமல் அந்தப் பெண்ணையும் கம்பீரமாக அங்கு அழைத்துப்போகிறாரே பெருமாள்? இது கொடுமை இல்லையா?

இப்படித் துடிக்கிறார் காரைக்காலம்மையார். துடிப்பையும் வேதனையையும் பெருமாளிடமே கொட்டுகிறார். நயந்து, கெஞ்சி, வேண்டுகோளாக, ஆனால் கண்டிப்பாகவே வேண்டுகிறார் அம்மையார்.

எப்படி என்று பார்க்கலாம்.

குழலார் திருப்புறத்துக்
    கோல்வளையைப் பாகத்(து)
எழிலாக வைத்தேக
    வேண்டா - கழலார்ப்ப
பேர்இரவில் ஈமப்
    பெருங்காட்டில் பேயோடும்
ஆரழலாய் நீயாடும்
    அங்கு. (21)

---

குழலார்திருப்புறம் - கூந்தல் கிடந்து புரளும் முதுகு. கோல்வளை - உமை. வட்டவட்டவளையலணிந்த உமை. பாகத்து - இடதுபக்கம் சேர்த்துவைத்துக் கொண்டு. எழிலாக - ஆடம்பரமாக. கழல் ஆர்ப்ப - சதங்கை ஆரவாரிக்க. ஈமப்பெருங்காடு - பிணம் எரியும் சுடுகாடு. அழலாய் - அக்கினி சொரூபியாய் ஒளிரும் பெருமானே!

*17) தூங்கும்போது கனவு காண்கிறோம். இந்திரலோகம், சந்திரலோகம், குபேரலோகம், நாகலோகம் என்று வருகிறது. தேவர் வருகிறார்கள் அசுரர் வருகிறார்கள். நண்பர், பகைவர், தெரிந்தவர் தெரியாதவர் எல்லோரும் வருகிறார்கள். சிங்கம், புலி, கழுதை, நாய், பன்றி, பசு, முயல், குருவி, கழுகு என்று அத்தனையும் வருகின்றன. வந்தபடியே மறைந்தும் போகின்றன.*

*நம்மைப்போலவே கடவுளும் கனவு காண்கிறார். நம் கனவில் வந்துபோவது போலத்தான் அவர் கனவில் அண்டம், அகண்டம், பேரண்டம் எல்லாம் வருகின்றன. மறைகின்றன. அணுமுதல் பேரண்டம் வரை அத்தனையும் விநாடி தோறும் தோன்றி மறைகின்றன.*

*அப்படி என்றால் பிரம்மாவும் கணந்தோறும் தோன்றி மறையத்தானே வேண்டும்.*

*ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு பிரம்மா தோன்றி மறைகிறார். எல்லாம் இறைவனிடந்தான். அவனுடைய திருமேனியில்தான்.*

*தோன்றி மறையும் ஒவ்வொரு பிரமாவுக்கும் அடையாளமாக ஒவ்வொரு பிரமாவின் தலையும் பரம் பொருளின் சிரசில் அமர்கின்றன. மாலை கட்டிவிட்டதுபோல் தெரிகிறது பிரம்மசிரசுகள்.*

*ஏற்கனவே சொருகிவைத்த பிறைமதியின் ஒளிபட்டு முழுமதியாகப் பிரகாசிக்கிறது சிரமாலை.*

*அடடா / பிறைமதி இல்லை. முழுமதி அல்லவா பெருமாளின் முடியை அலங்கரிக்கிறது என்றுபடுகிறது அம்மையாருக்கு.*

---

*குறிப்பு : பெண்ணுள்ளதை எப்படி எல்லாம் குழைத்துப் பிசையும் கருணை என்பதைப் பாடலில்ப் பார்க்கலாம்.*

*அங்கண் முழுமதியம்*
*செக்கர் அகல்வானத்(து)*
*எங்கி இனிதெழுந்தால்*
*போலுமே; - அங்கண் அத்*
*திருமாலைப் பங்குடையாள்*
*செஞ்சடைமேல் வைத்த*
*சிரமாலை தோன்றுவதோர்*
*சீர்.* (22)

18) சிவபெருமானுக்குச் சொந்தம், உடைமை என்று சொல் வதற்கு அவரிடம் உடம்புகூட இல்லை. உடம்பு என்று ஒன்று இருந்தால் தானே தோற்றம், மறைவு என உண்டு, அதை ஒட்டி குலம், கோத்திரம், சாதி, மதம் என்று ஒவ்வொன்றாய் வரும்.

உடம்பே இல்லை என்றால் வேறு என்ன உண்டு? ஒன்றும் இல்லாதவர் பெருமான்.

திருமேனி (சிருஷ்டிதத்துவம்) என்று ஒன்று உண்டுதான் அவரிடம். அதில் பாதி சக்தியின் (உமையம்மையின்) வசம் ஆகிவிட்டது. (சக்தி இல்லை என்றால் சிருஷ்டி ஏது) மற்றொரு பாதி வளர்த்தல், காத்தல் என்பதின் (திருமாலின்) வசம் போய் விட்டது. பாதுகாப்பில்லை என்றால் சிருஷ்டி (திருமேனி) ஏது.

(திருமேனி என்பது சிருஷ்டிக்கு அடையாளம்) இப்படியாக உமையாளும் திருமாலும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள் இறைவனுடைய திருமேனியை.

ஆனால் ஒன்று, இறைவனின் திருமேனியின் இடப்பாகத்தில் உமையம்மை இருப்பது தெரிகிறது. ஆனால் இறைவனின் வலப்பக்கத்தில் திருமால் இருப்பது தெரியவில்லை. ஒருவேளை நீராலாகிய நீர் உருவம் ஆயிற்றே அவருக்கு. ஆவியாய்ப் போகிற நீர் உருவம் கண்ணில் படமாட்டேன் என்கிறதோ.

---

அங்கண் - அழகிய. எங்கி - எவ்வி, உயர்ந்து. திருமாலை ஒருபாகத்தில் வைத்திருக்கிறான் சிவபெருமான். சடை ஒரே சிவப்பு. சிரமாலை வெள்ளை. அது செவ்வாளத்தில் வெண்ணிலா (முழுமதி) ஏறிச் செல்வதுபோல் தெரிகிறது.

*என்னமோமாயமாக இருக்கிறது இது.*

*கார்உருவக் கண்டத்தாய்!*
*கண்ணுதலே! எங்கொழித்தாய்*
*ஓர்உருவாய் நின்னோ(டு)*
*உழிதருவான் - நீர்உருவே*
*மேகத்தால்ச் செய்தனைய*
*மேனியான் நின்னுடைய*
*பாகத்தான் காணாமே*
*பண்டு.* (23)

*19)* ஒளியும் இருளும் ஒன்றுசேர்ந்து ஒரே இடத்தில் இருக்காது. அதுவும் ஒன்றை ஒன்று கட்டி அணைத்து ஆடிப்பாடி உல்லாசமாய் இருக்கமுடியாது.

ஆனாலும் இறைவனுடைய சந்நிதானத்தில் இரண்டும் சேர்ந்திருக்கும். ஒன்றை ஒன்று தழுவும். ஊடாடித் திளைக்கும்.

---

*கூர் உருவக்கண்டத்தாய் - நஞ்சுண்டதால் ஏற்பட்ட கரியதழும்புடையநீலகண்டனே. எங்கு ஒழித்தாய் - எங்கே ஒழித்துவைத்திருக்கிறாய் திருமாலை. நீர் உருவே - நீரால் உருவாகிய திருமாலை காணாமே - பார்க்க முடியவில்லையே. பண்டு - அன்று முதல் இன்றுவரை*

*குறிப்பு : நுட்பத்துக்கும் நுட்பமாக இருக்கலாம். கருத்தில் அரிய பெரிய ஆழமான உண்மையே இருக்கலாம் அதில். அப்படி இருப்பதால் மட்டும் பலன் என்ன?*

*சமுதாயத்தோடு ஒட்டவேண்டும் உண்மை. சமுதாய உணர்ச்சியோடு கலக்கவேண்டும் உண்மை.*

*கதைகளாக, புராணக்கதைகளாகவே உருவெடுக்க வேண்டும் தத்துவ உண்மை. கதைகள் உருவாக உருவாகக் கவிதைகள் அவதரிக்கும். காரைக்காலம்மையார் போல் கவியாக அவதாரம் எடுப்பது அப்போதுதான்.*

*"காதைகள் சொரிவன*
*செவிநுகர் கவிகள்."*

*சமுதாயப் பண்பையும் கவிப்பண்பையும் எப்படிப் பார்க்கிறார். எப்படி அனுபவிக்கிறார் கம்பர். அதற்கு நேர் விளக்கம் அம்மையார் பாடல்.*

அக்கினி சொரூபமாய் இருக்கிறான் சிவபெருமான். திம், திம் என்று ஆடுகிறான், குதிக்கிறான். பிர்மாண்டமான தீப்பிழம்பு சுழன்று சுழன்று ஆடுகிற மாதிரி இருக்கிறது அவன் ஆடுகிற ஆட்டம். சிவபெருமான் ஆடுகிறான் என்றால் அந்த ஆட்டத்தில் உமையம்மைக்கும் பங்கு உண்டு. பாகம் பிரியாளாகிய உமையும் சேர்ந்து ஆடுகிறாள்.

தீப்பிழம்பாகப் பெருமான் ஆடுகிறார். அவருடைய நீண்ட சடைகளும் சேர்ந்து ஆடுகின்றன. மேலும் கீழுமாய் விழுந்து எழுந்து குதித்தாடுகின்றன. அக்கினியின் செந்நாக்குப்போல, தீச்சுவாலையாய் இருக்கிறது சடை. அம்மையின் கருநெடுஞ் கூந்தலின் குழலோ கன்னங்கரேல் என்று இருள்மயமாக இருக்கிறது.

சடையும் கூந்தலும் இணைந்து நின்றாடும் பொழுது ஒளிப் பிழம்புகளுடன் ஊடாடி இருட்பிழம்புகள் ஆடுதல் போலவே இருக்கிறது.

*மிக்க முழங்கெரியும்,*
*வீங்கிய பொங்கிருளும்*
*ஒக்க உடன் இருந்தால்*
*ஒவ்வாதோ - செக்கர்போல்*
*ஆகத்தான் செஞ்சடையும்,*
*ஆங்கவன்தன் பொன்உருவில்*
*பாகத்தாள் பூங்குழலும்*
*பண்பு.* (24)

20) வானம், பூமி, அத்தனையும் கண் கூசும்படி அடிக்கிறது மின்னல். விநாடிப் பொழுதுதான். வானமே கிடுகிடு வென்று நடுங்கும்படி வெளிப்பட்ட மின்னல் அப்படியே மறைந்து ஒளிந்து கொள்கிறது.

எங்கும் நிறைந்து கிடக்கிறது ஒரு சக்தி. அது தண்ணீராகிறது. மழையாகிறது. பயிர்பச்சை ஆகிறது. நீரும் மேகமும் ஆக ஆக ஒளிந்து கொள்கிறது அந்த சக்தி.

---

மிக்கமுழங்கு எரி - பயங்கரமான சத்தத்தோடும் வேகத்தோடும் பற்றி எரியும் தீ. தீயின் ஒளி. வீங்குஇருள் - தடித்த இருட்டு. செக்கர்போல் ஆகத்தான் - அந்திவானம் போலும் செம்மேனியள். பாகத்தாள் - உமை. பண்பு - சடையும் குழலும் பின்னிப் பிணைந்தாடும் நயம்.

உயிரும் அப்படித்தான். உடம்பை உருவாக்குகிறது. அந்த உடம்புக்குள்ளேயே ஒளிந்துகொள்கிறது.

உயிருக்குயிராய் இருக்கிற பரம்பொருளும் அப்படியே. கல், பொன், நீர், நெருப்பு, புழு, பூச்சி, மனிதர், தேவர் என்றெல்லாம் விளைந்தார். கடவுள் அவ்வளவிலும் ஒளிந்து மறைந்தும் கொண்டார்.

கடவுள்தான் அத்தனையாக உருவெடுத்தார். விளைந்தார். ஆனால் ஒன்றுக்குக் கூட நாம் கடவுள் என்கிற நினைப்பில்லை. நான் புலி, நான் கவிஞன், நான் பனை, நான் வைணவன், நான் கத்தோலிக்கன், நான் சாது, நான் கோபக்காரன் என்கிற நினைப்பே பிடித்து ஆட்டுகிறது. உலகம் முழுவதும் இந்த ஆணவந்தான். கொழுப்புத்தான் திமிரே தான்.

ஆணவம் அளவுக்கு மீறி அட்டகாசம் பண்ணப்பண்ண சில சமயம். சில இடங்களில், பொறுக்க முடியாது கடவுளால். ஆணவத்தை நசுக்கி காலடியில் போட்டு துவைக்க வெளிப்படுவார். வானத்தைப் பிளந்து மின்னல் வெளிப்படுவது போல் வெளிப்படுவார். அப்படியே ஆணவத்தின் குரல் வளையை நெரிப்பார். உடலை வகிர்ந்து கீறுவார். அதன் தோலையே உரித்துவிடுவார்.

ஆணவத்தின் கொடுமையை நினைக்க நினைக்க அது மனதை அழுத்தும், மதம்பிடித்த வெறியானை போலவே அது (ஆணவம்) தெரியும்.

சிவபெருமான் ஆணவத்தை அழித்தொழிக்கிறார் என்றால் பழிபாவத்துக்கு அஞ்சாத வெறியானையை - மதயானையை ஒடுக்குகிறார், அதன் உடலையே கீறிப்பிளக்கிறார். அதன் தோலையே உரிக்கிறார் என்று தானே தோன்றும் மனதுக்கு.

சிவபெருமான் திருமேனியோ தீக்கொழுந்து போன்று செக்கச் சிவந்தது. கருமேகம் போன்ற யானையைக் கீறி அதிலிருந்து உரித்தெடுத்த காரிருள் போன்ற தோலையே தம்செம்மேனியை மூடிமறைக்கப் போர்த்தினார் பெருமான்.

---

குறிப்பு : பாடலை சாவதானமாக - அவசரப்படாமல் பாட வேண்டும். அங்கங்கே நிறுத்தி நிதானமாகப் பாடவேண்டும். பாடப்பாட பாட்டில் நடனம் தெரியும். ஒளியும் இருளும் பின்னிப் பிணைந்தாடும் ஆனந்த நடனமே தெரியும்.

ஒளியையே இருள் போர்த்திய அதிசயம் அல்லவா அது. அதை எப்படிப் பார்க்கிறார் காரைக்கால் அம்மையார். பொன்மயமான தங்க மலையை கருமேகங்கள் சூழ்ந்து மூடுவதுபோல் தோன்றுகிறது அம்மையாருக்கு. இந்த அரிய காட்சி மனசைவிட்டு அகலுமா? பார்த்துக்கொண்டே இருக்கிறார் அம்மையார்.

*மேலாய மேகங்கள்*
*கூடி. ஓர் பொன்விலங்கல்*
*போலாம் ஒளிமறைத்தால்*
*ஒவ்வாதோ - மாலாய*
*கைம்மா மதகளிற்றுக்*
*கார்உரிவை போர்ந்தபோ(து)*
*அம்மாள் திருமேனி*
*அன்று.* (25)

*21)* குழந்தைக்குத் தாய் ஒருபெண்ணாகவா தெரிவாள். அன்பாகவே தெரிவாள். அப்படியே தாய்க்கும் அன்புமயமாகவே தெரியும் குழந்தை.

நாயகனுடைய செல்வம், புகழ், கல்வி, பதவி ஒவ்வொன்றும் நாயகனாக அவன் காதல் மயமாகத்தான் தெரியும். ரூபாய், அணா, பைசாவாகவோ, அதிகாரமாகவோ தெரியாதுபெண்ணுக்கு.

காதலனுடையபழக்க வழக்கம் நடை உடை பாவனை, போக்கு, நோக்கம் ஒவ்வொன்றிலும் காதலையே பார்க்கிறாள் பெண். மற்றப்படி வேறு ஒன்றும் கண்ணில்படாது பெண்ணுக்கு.

---

மேலாய - மிகஉயரத்தில் ஓடும். விலங்கல் - மலை. ஒளி - ஒளியை. மாலாய - மயக்கம் கொண்ட, ஆணவமயக்கம் பிடித்த. கைம்மா - கையை உடைய விலங்கு. மதகளிறு - மதம் பிடித்த யானை. ஆணவத்தின் உருவகம் யானை. அன்று - அப்பொழுது. கரும்போர்வையால் செம்மேனியைப் போர்த்திய அப்பொழுது.

குறிப்பு : பரத்வத்தை (மெய்ப்பொருளை) மூடிமறைக்கிறது ஜடம் (ஆணவம்) வேண்டுமென்றே ஜடத்துள் ஒளிந்துகொள்கிறதோ பரம்பொருள் என்று நினைக்கத் தோன்றுகிறது.

ஆணுக்கும் அப்படித்தான். எத்தனை ஆண்டுகள் ஆனாலும் நாயகனுக்கு நாயகி புது (மணப்) பெண்தான். நாயகிக்கு நாயகனும் புது மாப்பிள்ளைதான். ஆண்டு பல ஆனாலும் வெட்கம், நாணம், கூச்சம் அப்படியே இருவரிடமும் இருக்கத்தானே செய்கிறது.

இனி, நட்பை எடுத்துக்கொண்டாலும் அப்படித் தான். பத்து வருடம், இருபது வருடம் உயிருக்கு உயிராய் உறவாடித் திளைக்கிற இரண்டு நண்பர்கள். ஒருத்தர் மேல் ஒருத்தர் வைத்திருக்கிற அன்பு தான் இருவருக்கும் தெரிகிறது. அது ஒன்றையே பார்க்கிறார்கள் இருவரும், மற்றப்படி சொத்து விபரம், கடன் விபரம், உறவினர் விபரம், முயற்சி, வெற்றி, தோல்வி பற்றி அலட்டிக் கொள்வதில்லை இரண்டுபேரும்.

ஏதாவது ஒரு விபரத்தை அவரைப் பற்றி இவரிடமோ, இவரைப் பற்றி அவரிடமோ கேட்டால் ஒன்றும் விசேசமாகத் தெரியாது இவர்களுக்கு. சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த விபரந்தான் இவர்களுக்கும் தெரியும். அதனால் பரக்கப் பரக்க விழிப்பார்கள்.

★★★★★★★

சிவபெருமானிடத்து ஒரே பக்தி காரைக் கால் அம்மையாருக்கு. இன்று நேற்று உண்டானதல்ல அந்த பக்தி, பல ஆண்டுகளாய் யுகங்களாய் தொடர்ந்து வளர்ந்து வருகிற பக்தி.

குழந்தைப் பருவத்திலிருந்தே, ஏன் கருவுற்றகாலமுதலே வருகிற பக்தி அது. எத்தனையோ பிறவிகளாய்த் தொடர்ந்து வருகிற பக்தி அது.

பக்திகாரணமாக அம்மையாருக்கு பெருமானிடம் நெருங்கிய உறவுதான். வளமான பழக்கந்தான், தளராத ஈடுபாடுதான். இத்தனை இருந்தாலும் பெருமானைப் பற்றி ஒன்றும் தெரியாது அம்மையாருக்கு.

அவருடைய ஊரோ, பேரோ, உற்றார் உறவினரோ, பதவியோ, அந்தஷ்தோ, ஒன்றும் தெரியாது. கருப்பா, சீவப்பா அவர் என்பது கூடத் தெரியாது அம்மையாருக்கு.

அவருக்குத் தெரிந்ததெல்லாம் பக்தி தான் பரவசந்தான். தெரியாததுபற்றி அவர் கவலைப்படுவதில்லை. ஆனாலும் அக்கம் பக்கம் உள்ளவர்கள்'' அவர் எப்படி என்று

கேட்கிறார்கள். அல்லும் பகலும் அவரையே நினைந்து வழிபடுகிறாயே எப்படி இருப்பார் அவர். என்று கேட்கிறார்கள். அப்பொழுதெல்லாம் திகைக்கிறார் அம்மையார். என்ன பதில் சொல்ல என்று புரியாமல்தான்.

இந்த இக்கட்டான நிலையை எப்படிப் பொறுப்போடு சொல்கிறார் பெருமானிடம் அம்மையார் என்று பாருங்கள்.

*அன்றும் திருஉருவம்*
*காணாதே ஆள்ப்பட்டேன்*
*இன்றும் திருஉருவம்*
*காண்கிலேன் - என்றுந்தான்*
*எவ் உருவோன் நும்பிரான்*
*என்பார்கட்(கு) என் உரைக்கேன்*
*எவ் உருவோ நின் உருவந்*
*தான்.* (26)

22) விசயன், பார்த்திபன், தனஞ்சயன், காண்டியன் என்றெல்லாம் புகழப்படும் அருச்சனன் உயர்ந்த சிவ பக்தன். சிவபெருமானை நோக்கி கடுந்தவம் செய்தவன். அவன் தவத்தை மெச்சி சிவபெருமானே அணுகுண்டு போன்ற அக்கினி மயமான அம்பை, பாசுபதம் என்னும் பாணத்தை அவனுக்கு வழங்கி இருக்கிறார்.

உண்மை இப்படி இருக்க, அந்த அருச்சுனனோடு ஏன் சிவபெருமானே நேருக்கு நேர் நின்று சண்டை போடவேண்டும். அதுவும் முரட்டுக் கிராதகனாகிய வேடன் உருவெடுத்துச் சண்டை போட வேண்டும். சண்டையில் அருச்சுனன் கையால் ஏன் அடிபடவேண்டும் பெருமான்.

---

என்றுந்தான் - அடிக்கடி. எவ் உருவோன் நும்பிரான் என் பார்கட்கு - எப்படி இருப்பான் நீ வழிபடும் பெருமான் என்று கேட்பவர்களுக்கு. என் உனரக்கேள் - பதில் என்ன சொல்ல நான்.

குறிப்பு : பக்தியின் நுட்பமான அரிய சாயலை கையில் எடுத்துக்காட்டுகிறது கவி. தெய்வகடாட்சந்தான் கவி என்பது பாடலிலேயே கிடக்கிறது, பாடப்பாட அது தெரியும்.

ஒன்றுமே விளங்கமாட்டேன் என்கிறது அவர் காரியம். அடிப்பவனும் நான்தான், அடிபடுவனும் நான் தான் என்னும் ஏகதத்துவத்தைக் காட்டவா? இல்லை, என்னைத் தவிர வேறு எதுவும் இல்லை என்கிற சர்வ வியாபகத்தை அதன் மூலம் வெளிப்படுத்தவா?

என்னவென்று சொல்ல அவர்காரியத்தை. பரம் பொருளே வேடன் வடிவெடுத்தால் அது எப்படி இருக்கும் என்று சொல்லவா. அதைப் போலிருக்கும் என்று சொல்லவா, இல்லைஇல்லை, அது இதுபோலத்தான் இருக்கும் என்று சொல்லவா?

பெருமானுடைய கோமாளித்தனம் போன்று இன்னொன்று இருந்தால் அல்லவா அப்படி இப்படி, என்று ஒப்பிட்டுச் சொல்லமுடியும்?

அவனைத் தவிர்த்து இன்னொன்று இல்லை என்றான பின்.

*ஏதொக்கும் ஏதொவ்வா(து)*
*ஏதாகும் ஏதாகா(து)*
*யாதொக்கும் என்பதனை*
*யாரறிவார் - பூதப்பால்*
*வில்வேடன் ஆகி*
*விசயனோ(டு) ஏற்ற நாள்*
*வல்வேடன் ஆன*
*வடிவு.* (27)

---

எல்லாம் ஒரே கடவுள்த் தத்துவம் என்றால் நாம்மாத்திரம் அல்ல சிங்கம், குதிரை, மீன், ஆமை, பன்றி, வேடன், அரசன், பசு, காளை, கருடன், பாம்பு, அன்னம், தாமனா அவ்வளவுந்தாள். இந்த உண்மை இந்தியர்களிடம் இயல்பாய் அமைந்தது. கோவில், வழிபாடு, சடங்கு எல்லாவற்றிலும் இந்த அனுபவத்தை பக்தி பரவசத்தோடு மெய்ப்பிக்கிறவர்கள் நம்மவர்கள். அதனால் தான் உலகில் உள்ள வேறு சமயத்தார் எல்லோரும் ஆரம்பக் கல்வி மாணவர்கள். இந்தியர்கள் மட்டும் சமய உண்மையை இயல்பாகவே அறிந்த பேராசான்கள் என்று ஆராய்ந்து தெளிந்த அறிஞர் சொல்கிறார்கள். காரைக்காலம்மையார் பாடல் அதற்கு நேர்சாட்சி. பூதப்பால் - பூர்வத்தில்.

23) உள்ளத்துள்ளிருந்து உணர்ச்சியானது புதிது புதிதாக உதித்துக்கொண்டே இருக்கிறது. அத்தனை உணர்ச்சிகளையும் சொல்லுக்குள் ஏற்றி விடுகிறோம். 'கடிஉலவு சொல்' கடி என்றால் உணர்ச்சி என்று பொருள்.

உணர்ச்சிமயமான சொற்கள் எத்தனையோ? சொல்லச் சொல்லவந்து கொண்டே இருக்கின்றன அச்சொற்கள்.

அந்த உணர்ச்சிமயமான சொற்கள் அத்தனையையும் வலையாக வீசிப்பிடிக்க முயன்றாலும் பிடிபடுவானா இறைவன்? ஒளிமயமாய் எங்கும் நிறைந்த பரம்பொருள் இறைவன். நாமும் அதனில் தான். நம் சொல்லும் அதனில்தான். அவனைத் தவிர்த்து ஒன்றும் இல்லை.

அப்படியானால் சொற்களால் எப்படி எடுத்துக் காட்டமுடியும் பரம்பொருளை.

''கடி உலவு

சொல்முடிவொன்(று) இல்லாத சோதியாய்''

★★★★★★★

பகல்போன்றது தான் இரவும். பகலில் வெயில் சுட்டெரிக்கும். இரவு குளுகுளு என்றிருக்கும்.

இனி காதல் வசப்பட்டவர்களுக்கு நேர்மாறாக அமையும் அது. பகல்பொழுதை எப்படியோ, அந்தவேலை இந்த வேலை என்றும் பேச்சு, வெட்டிப் பேச்சு என்றும் கழித்து விடுவார்கள். காதல் வெறிக்கு இடம் கொடுக்காமல் ஒதுங்கமுடியும். ஆனால் இரவுவந்துவிட்டால் காதலர் உள்ளத்தில் வேறு எதுவும் புக முடியாது. காதல் ஒன்றுதான் ஆக்ரமித்து ஆதிக்கம் செய்யும், விரகதாபம் உள்ள காதலர் அவஷ்தைப் படுவார்கள். நகராமல் சண்டித்தனம் பண்ணித் தொந்தரவு கொடுக்கிறதே என்று இரவைச் சபிப்பார்கள்.

அதிலும் நிலவோடு வருகிற இரவு கோடையின் உச்சி வெயிலைவிட அதிகமாகச் சுட்டெரிக்கும் காதலரை,

வெண்மதி சூடிவந்த இரவு தகதகவென்று ஜொலிக்கிறது. சிவ பெருமானாகவே தெரிகிறது அம்மையாருக்கு. ஆனாலும் கிட்டவந்து ஒட்டி உறவாடவில்லையே நிலவு. அதாவது

பெருமான். அதனால் கொஞ்சம் கோபம். வருத்தமுந்தான். ஊடலாகவே வருகிறது கோபமும் வருத்தமும்.

*வடிவுடைய செங்கதிர்க்கு*
*மாறாய் இரவே*
*நெடிதுலவி நின்றெரிக்கும்*
*கொல்லோ - கடி உலவு*
*சொல் முடிவொன் றில்லாத*
*சோதியாய்! சொல்லாயால்*
*நின்முடிமேல்த் திங்கள்*
*நிலா.* (28)

*24)* கவி என்பது தெய்வ ஒளி வீசும் அற்புதமணி. கிருஷ்டியின் ரகஸ்யம் அது.

ஒரு செடி; தும்பைச் செடியோ, மல்லிகைச் செடியோ ஒன்று. அது புஷ்பங்களாய்ப் பூக்கிறது. அது அதிசயம் அல்லவா. அப்படி ஒரு அதிசயம் கவி. ஒரு மொழியில் கவி உண்டாகிறது என்றால் செடியில் பூ பூக்கிற மாதிரிதான். ஏன் தடாகத்தில் தாமரைப் புஷ்பம் மலர்வதுபோலத்தான். சிருஷ்டிதத்துவத்தின் கருவறை அது.

மொழி என்றால் அதற்கென்று ஒரு பண்புண்டு, தனித்த ஒரு ஒழுங்கு, பழக்க வழக்கம், நடை உடை பாவனை, பொருள் வளம், அதை எடுத்துச் சொல்லும் பாங்கு எல்லாம் இருக்கும், ஓசை நலம், இசைப்பண்டி, வண்ணம், வனப்பு, உத்தி, தோரணை ஒய்யாரம் என்றெல்லாம் ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொருவிதத்தில் உண்டு.

---

வடிவுடைய செங்கதிர்க்கு - சூரியனுக்கு. மாறாய் - மாறுபட்டு. நெடிது உலவி - நீண்ட நேரம் நின்று. சோதியாய் - ஒளிமயமான பெருமானே. உன் முடிமேலுள்ள நிலா ஏன் சுட்டெரிக்கிறது. விபரம் சொல்லமாட்டாயா?

குறிப்பு : பக்தியானது காதலாகப் பொங்கி எழும். அது இதயத்தை ஒரு கலக்குக்கலக்கும். உணர்ச்சியைக் குழைத்துப் பிசையும். அப்பொழுது உருவாகும் அரிய மனஇயலை அழகாய்க் காட்டுகிறது செய்யுள்.

மொழியின் பண்பாடு என்றால் இது தான். இந்தப் பண்பாட்டை அப்படியே முழுக்க முழுக்கப் பார்க்க வேண்டுமானால் அந்த மொழியிலுள்ள கவியைப் பார்க்க வேண்டும். வசனத்தில் அப்படி ஒன்றும் வளமாக இருக்காது, நயமாகவும் இருக்காது.

இனி கவியில் மொழியின் பண்பாடு மட்டும் அல்ல. அந்த மொழிக்குரிய மக்களே இருப்பார்கள். அவர்களுடைய வாழ்க்கை இருக்கும். அதில் அவர்கள் சாதித்தவை, சாதிக்காதவை, அனுபவம், ஆனந்தம், ஏக்கம், தவிப்பு, வெற்றி, தோல்வி, சிரிப்பு, கண்ணீர், இவ்வளவுக்கும் மேலே அவர்கள் அடிமேல் அடி எடுத்துவைக்கும் நடை, காதம், பக்தி, எல்லாவற்றையும் கவியில் பார்க்கலாம்.

அப்படிக் கண்ணாடியாய்க் காட்டுகிற பாடல்.

*காலையே போன்றிலங்கும்*
*மேனி கடும்பகலின்*
*வேலையே போன்றிலங்கும்*
*வெண்ணீறு - மாலையில் மின்*
*தாங்குருவே போலும்*
*சடைக்கற்றை மற்றவற்கு*
*வீங்கிருளே போலும்*
*மிடறு".* (29)

25) ஒளி என்றால், பிரகாசம் என்றால் போதும். அதைப் பார்த்துக் கொண்டே இருப்பார் காரைக் காலம் மையார். கண்ணின் ஒளி, மேனியின் ஒளி, புஷ்பத்தின் தூயஒளி, ஆகாயத்தின் நீல ஒளி, முகத்தின் பிரகாசம், மயிலின் தோகை ஒளி, பாம்பின் படத்தில் கிடக்கிற கோட்டின் வெண்மை ஒளி,

---

வேலை - வேளை. மின்தாங்கு உரு - ஒளி பொருந்திய (மஞ்சள்) வெயில். வீங்கிருள் - அடர்ந்தியான இருட்டு. மிடறு கழுத்து.

காலை, நண்பகல், மாலை என்று ஒளியை ஒவ்வொன்றாக உதறிக் காட்டிவிட்டு, இருளைக் கொண்டுவந்து அதனோடு நிறுத்துகிறது. என்ன எளிமை, என்ன அருமை பாட்டில். கவி உருவம் என்பது அதுதான்.

கன்னத்தில் குழிவிழும்படி உதட்டில் நெளியும் புன்முறுவலின் ஒளி, உள்ளத்தை ஊடுருவிப்பார்க்கும் கண்ணின் ஒளி அத்தனையிலும் ஒரே ஈடுபாடு அம்மையாருக்கு.

சூரியோதயம், சந்திரோதயம், செவ்வானம், மின்னல், மேகம், எல்லாவற்றிலும் அப்படியே. காற்றில் அசைந்து அசைந்து ஆடிச் சுடர்விட்டெரியும் தீபஒளியிலும் அப்படியே.

குப்பை கூளம், மக்கு, மடி என்று வேண்டாதனவற்றைச் சுட்டுப் பொசுக்கும் தீயின் ஒளியிலும் அப்படியே. ஒரேகாதல்தான், காதல் வெறியே தான் அம்மையாருக்கு.

ஒளியில் எப்படி பக்தியும், காதலும் அம்மையாருக்கு உண்டோ அப்படியே இருட்டிடத்தும், இருட்டின் ஒளியிடத்தும் அம்மையாருக்கு ஒரே பிரியம்.

பூமாதேவியின் மடியிலமர்ந்து அண்ணாந்து மேலே பார்க்கிறார் அம்மையார். ஆகாயம் முழுவதையும் எட்டுத் திசைகளையும் அணைத்து மூடி இரவைக் கொண்டு போர்த்தி இருக்கிறது இருட்டு. என்ன அழகு, என்ன அமைதி, என்ன நிம்மதி அதில். அதைப் பார்க்க ஐம்புலன்களும் உள்நோக்கி இறங்குகின்றன. சப்த நாடிகளும் ஒடுங்கிவிடுகின்றன.

பார்த்துக் கொண்டே இருக்கிறார் அம்மையார் இருளை, காரிருளை. இருட்டு விலகுகிறது. இரவுக்குள்ளே ஒரு பெரிய பாம்பு, சிவபெருமானின் மார்பையும் தோளையும் அலங்கரிக்கும் சர்ப்பாபரணம், நாகபூஷணமாய் விரிந்து பரந்து கிடக்கும் பிர்மாண்டமான கருநாகம் அது.

சிவபெருமானையே அது பார்க்கிற மாதிரி இருக்கிறது.

ஒன்று, இரண்டு, மூன்று என்று நூற்றுக்கணக்கில், ஆயிரம், லட்சம் என்கிற கணக்கில் வானில் பூக்கின்றன நட்சத்திரங்கள். இருட்டின் அழகை ஒன்றுக்குப்பத்தாய், பத்துக்கு நூறாய் பெருக்கிக் காட்டுகின்றது நட்சத்திர ஒளி.

பெருமானின் கருநாகத்தின் தலை, படம், அதில் ஒரு கோடு. வெள்ளைக்கோடு. நட்சத்திரமணிகளையே வைத்து அழுத்திய கோடு.

படம் எடுத்தாடும் கருநாகமாக, பெருமானின் அரவாபரணமாகத் தரிசனம் கொடுக்கிறது இருட்டும், நட்சத்திரஒளியும். காரைக்காலம்மையாரின் கண்களுக்கு.

பிரகாசமான நட்சத்திரங்களையே படத்தில் வைத்திருக்கிற பாம்பின் உடல் இப்படி இருட்டாய் கண்ணுக்கிடு மை போல ஒரே கருப்பாய் இருப்பது ஏன் என்று யோசனை வருகிறது அம்மையாருக்கு.

சரிசரி, பெருமானின் கண்டத்தில் விஷம் இருக்கத்தானே செய்கிறது, அதை இந்தப் பாம்பு நக்கிச் சுவைக்கச் சுவைக்க உடம்பு நீலம் பாய்ந்து கருப்பாகிவிட்டது என்று படுகிறது. பெருமானிடமே இதுகுறித்துச் சொல்கிறார். பக்தி இருந்தால் அப்படி எல்லாம் எட்டிப் பார்க்கும் மனம்.

*"மிடற்றில் விடம் உடையீர்!*
*தும்மிடற்றை நக்கி*
*மிடற்றின் விடம்கொண்ட*
*ஆறோ - மிடற்றகத்து*
*மைத்தாம் இருள்போலும்*
*வண்ணம் கரிதாலோ,*
*பைத்தாடும் நும்மார்பில்*
*பாம்பு".* (30)

26) எல்லாம் பரம்பொருள்தான். எல்லாவற்றிலும் பரம்பொருள் தான் என்று சொல்கிறோம். சொல்லிக்கொண்டே இருக்கிறோம். அதையே படிக்கிறோம். அதையே எழுதுகிறோம். ஆனால் ஒன்றிலும் கடவுளைக் கண்டதில்லை. ஒன்றும் கடவுளாகத் தெரியவில்லை. நமக்கு மட்டுமா, எல்லோருக்குமேதான்.

---

மிடறு - கழுத்து. நும்மிடற்றை - உமது கழுத்தை, அதிலுள்ள நஞ்சை மைத்தாம் இருள் - கண்மைபோன்று கருகரு என்று இருட்டு மாதிரி கருப்புத்தான். பைத்தாடும் பாம்பு - படம் விரித்தாடும் பாம்பு

இரவின் இருள் நட்சத்திரங்களின் பிரகாசத்தை எடுத்துக்காட்டுகிறது. அதுவும் உமது பாம்பு மாதிரித்தானோ? என்கிற பாவம், அதிசய பாவமே செய்யுளின் உருவம்.

அதுமட்டுமா? நான் எவ்வளவு படித்திருக்கிறேன். எவ்வளவு அரிய பெரிய நுட்பங்களை எடுத்து எழுதுகிறேன். எத்தனை உபந்யாசம் பண்ணுகிறேன். அறப்பணிகளும் திருப்பணிகளுமாக எத்தனை எத்தனை செய்கிறேன். ஆனாலும் என் முன்வரவில்லையே கடவுள். கூப்பிட்டாலும் வரமாட்டேன் என்கிறாரே கடவுள் என்று அலுத்துக் கொள்கிறோம்.

எதிலும் கடவுள் இல்லை என்கிற நினைப்புத்தான் உள்ளே. வெளிவேஷத்துக்குத்தான் தூணிலும் இருக்கிறார் துரும்பிலும் இருக்கிறார் கடவுள் என்று பிரச்சாரம்.

மனுச காரியம் இப்படி இருக்கிறது. கல்லோ தங்கமோ எதுவானாலும் சரி, வேண்டியவரோ வேண்டாதவரோ யாராக இருந்தாலும் சரி எல்லாவற்றையும் ரூபாய் அணா பைசாவாகத் தான் பார்க்கிறோம். கடவுளை யார் பார்க்கிறார்கள்.

ஓங்கி உயர்ந்து வருவோர் போவோர்க்கெல்லாம் குளிர்தரு நிழல் கொடுக்கிற மரத்தையே, பச்சைப் பசேல் என்ற கற்பகவிருட்சத்தையே கரன்சிநோட்டாகச் சட்டைப் பையில் திணித்துவைக்கிறவன் மனிதன். அவனுக்குக் கடவுளைப் பற்றியா கவலை.

கடவுள் உண்மையில் இருக்கிறார். உண்மையான உணர்ச்சியில் இருக்கிறார். உண்மையான பக்தியில் இருக்கிறார். பக்தி இருந்தால் எங்கும் கடவுளைப் பார்க்கலாம். எல்லாவற்றிலும் பார்க்கலாம் அவரை. கல்லும் மண்ணுங் கூடக் கடவுளாகவே · தெரியும். கல்லாகவோ மண்ணாகவோ தெரியாது.

எல்லோரிடமும் இயல்பாகவே இருக்கிறது பக்தி. பசி, தாகம், கோபம், காதல் எல்லாம் பிறவியோடு ஒட்டி வந்தது போல பக்தியும் ஒட்டிப் பிறந்தது தான். வயதாக வயதாக வளர வளர பக்தி தேய்கிறது. படிப்பு, உத்யோகம், சம்பளம் என்று பெருகப் பெருக பக்திக்கு இடம் இல்லாது போகிறது.

இன்றும் பார்க்கலாம் சாதாரண மக்களிடம் உண்மையான பக்தி இருக்கிறதை. அவர்கள் மலையைக் கண்டாலும், கடலைக் கண்டாலும், தேரைக் கண்டாலும் தீபஒளியைக் கண்டாலும் ஒவ்வொன்றிலும் கடவுளையே காண்கிறார்கள். உள்ளம் உருகி இளகியே வழிபடுகிறார்கள்.

ஒரு பூவைக் கொடுத்தாலும் கண்ணில் ஒற்றிக் கும்பிடத் தானே செய்கிறார்கள். ஒரு தாளை மிதித்தாலும் அதைத் தொட்டுக் கும்பிடத்தானே செய்கிறார்கள். நழுக்கு மிதியாய் ஆணிகட்டிய செருப்போடு மிதித்துவிட்டு 'ஐ ஏம் சாரி' என்று மாடு மாதிரி திரும்பிப் பாராமல் போகவா செய்கிறார்கள்.

மனவீதி உண்டானால் இடவீதி உண்டு. மனம் சுத்தமாக இருக்கவேண்டும். கண்ணாடி போலத் துப்புரவாக இருக்கவேண்டும். பக்தி ஊறும் அங்கு.

எங்கும் கடவுள்தான். எதிலும் கடவுள் தான்.

★★★★★★★

சதா கடவுள்த்தத்துவத்தோடு ஒன்றித் திளைக்கிறவர் காரைக்கால் அம்மையார். எங்கும் எதிலும் அவர் கடவுளையே (சிவபெருமானை)க் காண்கிறார்.

கடுகைப் பார்த்தாலும் கடவுள்தான். மலையைப் பார்த்தாலும் கடவுள் தான். கல்லிலும் கடவுள் தான், பொன்னிலும் கடவுள் தான்.

கடவுளைத் தவிர வேறு என்ன இருக்கிறது பக்தர்கள் பார்ப்பதற்கு.

காரைக்காலம்மையாருக்கு மலையே கல்லும், மண்ணும், பாறையும், காடும், செடியுமான மலையே சிவபெருமானாகவே இருக்கிறது.

சிவபெருமான் உச்சியில் சந்திரன், மார்பில் பாம்பு, மடமான் ஒரு பக்கம், புலி(த்தோல்) இன்னொரு பக்கம். கங்கை (அருவி) தலையில் அதாவது சடையில்.

மலையும் இப்படித்தான்.

சிகரத்தில் சந்திரன் தவழந்து வரும். காட்டில் பாம்பு நடமாடும். மானுக்கும் புலிக்கும் பஞ்சமில்லை, அருவி அங்கங்கே விழுந்துகொண்டிருக்கும் மலையில்.

அப்படியானால் மலைதான் சிவபெருமான். சிவபெருமான் தான் மலை. வேறுபாடு ஏது அங்கு.

இதோ பாடல்.

*பாம்பும் மதியும்*
*மடமானும் பாய்புலியும்*
*தாம்பயின்று தாழ்அருவி*
*தாங்குதலால் - ஆம்பொன்*
*உருவடிவில் ஓங்கொளிசேர்*
*கண்ணுதவான் கோல*
*திருவடிவின் மேய*
*சிலம்பு.* (31)

27) இரண்டுபேர் ஒரு இடத்தில் தொடர்ந்து இருக்கிறார்கள் என்றால், சேர்ந்து வாழ்கிறார்கள் என்றால் அவர்களிடம் அன்பு, பிரியம் இருக்கும். ஆனால் அந்த அன்பில் வேகம் இருக்காது. ஆவேசம் இருக்காது. உப்பு உறைப்பில்லாமல் சப்பென்று போகும் உணர்ச்சி.

உணர்ச்சியில் எழுச்சி இல்லை, கலகலப்பு இல்லை என்றால் பராமுகம் வரும், கவனியாமை வரும். பொறுப்பற்ற அலட்சியப் போக்குக் கூடவரும். சண்டை சச்சரவு இல்லை என்றாலும் பேச்சுக் குறையும். ஒருவனா ஒருவர் ஆசையோடு பார்க்கிறது குறையும். முகத்தை அவர்கள் திருப்பிக் கொள்வதிலேயே அது தெரியும். அவர்களுக்குள் சடவு என்று.

கணவன், மனைவி என்று சேர்ந்திருக்கிறவர்களுக்குள் சடவு என்றால், திருப்தி குறைவு என்றால் அடிபிடிபோட முடியுமா? உண்ணாவிரதம், சத்யாகிருகம் என்று ஒருவர் இருப்பார். நேரம் ஆக ஆக மற்றவருக்கு வயிற்றைக் கலக்கி விடும். பதறிப் போவார். எப்படியாவது சமாதானம் ஆகிவிட வேண்டும் என்று துடிப்பார்.

---

தாம்பயின்று - தாராளமாக நடமாடி. தாழ்ருவி தாங்குதலால் - கீழ்நோக்கி அருவி விழுவதால். பொன் உருவடிவில் - தங்கமயமாக. கண்ணுதலாள் - சிவபெருமான். கோல திருவடிவில் - அழகிய திருஉருவமாகவே. சிலம்பு ஆம் - மலை இருக்கிறது. சிவன்தான் மலை. மலையே சிவன் தான்.

குறிப்பு : தாமரை ஒருமலர்தான். ஆனால் அதில் திருமகளை பார்த்தார்கள், கலைமகளைப் பார்த்தார்கள். சிருஷ்டிதத்துவத்தையே பிரம்மாவையே பார்த்தார்கள். வேறு என்ன இருக்கிறது தாமரையில், பரம்பொருளைத் தவிர. இப்படிக் கேட்பார்கள் ரசிகமணி, டி.கே.சி.

அவ்வளவு தான் ஆசையோடு பார்ப்பார். பணிந்து பேசுவார். ''பொறுத்துக்கொள், மன்னித்துக்கொள் என்பார். செய்தது தப்புத்தான் என்பார். கையைப் பிடிப்பார், காலைப் பிடிப்பார்., கெஞ்சுவார், கூத்தாடுவார். கல்லையும் கரைத்துவிடும் அவர்காரியும்.

அப்பொழுது அன்பும் பிரியமும் பத்து மடங்கு, ஆயிரம் மடங்கு என்று பெருகிவிடும். காதல் வளரும் கதை இப்படி.

---

மலையும் அப்படித்தான். திருவண்ணாமலையை வெறும் பாறையாகவா பார்க்கிறார் பக்தர்.

*ஆதிநடம் ஆடும்மலை,*
*அன்றிருவர் தேடும் மலை,*
*சோதிமதி வாள்அரவம்*
*சூடும்மலை - நீதி*
*தழைக்கும்மலை, ஞானத்*
*தபோதனரை வாஎன்(று)*
*அழைக்கும்,மலை அண்ணா*
*மலை.*

என்று சிவபெருமானாக வல்லவா பார்க்கிறார் பக்தர். திருவேங்கட மலையைத் தரிசிக்கிறார் பொய்கையாழ்வார்.

*எழுவார் விடைகொள்வார்*
*ஈன்துழா யானை*
*வழுவா வகைநினைந்து*
*வைகல் - தொழுவார்*
*வினைச்சுடரை நற்துவிக்கும்*
*வேங்கடமே வானோர்*
*மனச்சுடரைத் தூண்டும்*
*மலை.*

திரு மாலையே பார்க்கிறார். இரண்டு பாடல்களையும் வைத்துக் கொண்டு சாவதானமாகக் காரைக்காலம்மையார் பாடலைப் பாடவேண்டும். பாடினால் பாடலில் சிவபெருமானின் ஆனந்த நடனமே தரிசனம் கொடுக்கும்.

ஊடல் என்றும், கூடல் என்றும் பெயர் சூட்டி விழா நடத்துகிறார்கள் புலவர் பெருமக்கள் இதை, அப்பா அம்மை, குழந்தை இவர்களிடமும் இது உண்டு. அடியார் இறைவன் என்று இவர்களிடமும் உண்டு இது. அன்பு, பக்தி எல்லாமே காதல் போலத்தான். காதலேதான்.

★★★★★★★

காலம் காலமாக சக்தியும் சிவனும் சேர்ந்தே இருக்கிறார்கள். இருவரும். அதுவும் ஒரே இடத்தில். அப்படி என்றால் புழுக்கம் ஏற்படத்தானே செய்யும்? காரணமே இல்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டார் உமையாள். எப்படி எல்லாமோ பேச்சுக் கொடுத்துப்பார்த்தார் பெருமான் ஒன்றும் எடுபடவில்லை அன்னையிடம். பதறிப்போனார் பெருமான்.

அவரும் கொஞ்சம் 'உம்' என்று இருந்து பார்த்தார். அசையவில்லை உமையாள். சிரித்தார், நடித்தார் கெஞ்சிக் கூடப்பார்த்தார் பெருமான். பிரயோசனப் படவில்லை. கடைசியில் அம்மையின் கையைப் பிடித்தார், காலைப் பிடித்தார். ஏன் கோபமாய் இருக்கிறாய், என்ன செய்தேன் நான் என்றெல்லாம் வேண்டினார். ஊடல் ஏறுகிறதே தவிர இறங்குவதாக இல்லை. கடைசியில் என்ன செய்தார் பெருமான். உமையன்னையின் காலை எடுத்து தன் தலையில் உச்சியில் வைத்தார். வைத்ததுமட்டுமா செம்பஞ்சுக்குழம்பு பூசிய அன்னையின் பாதத்தைக் கொண்டு தன் தலையை அழுத்தி அழுத்தித் தேய்த்தார்.

அடாத காரியமல்லவா இது. இளகிவிட்டது அன்னை உமையாளின் உள்ளம்.

காரைக்கால் அம்மையார் கண்ணில் இத்தனையும் தத்ரூபமாகப்படுகிறது. மனக்கண்ணில்தான்.

பெருமானின் சடையோ பொன்னிறம். மாலை வெயிலின் அந்தி வானம் போல் சிவந்தது சடை. அந்தச் சிவப்பையே தூக்கி அடித்துவிட்டது தலையிலும் சடையிலும் பதிந்த அன்னையின் திருப்பாதச் சிவப்பு. செம்பஞ்சுக்குழம்பின் சிவப்பு.

இதையும் பார்க்கிறார் காரைக்காலம்மையார்

*சிலம்படியாள் ஊடலைத்*
*தான்தவிர்ப்பான் வேண்டி*
*சிவம்படியின் செவ்வரக்கம்*
*சேர்த்தி - நலம்பெற்று*
*எதிராய செக்கரினும்*
*செங்கோலம் செய்தான்*
*முதிரா மதியான்*
*முடிக்கு.* (32)

*28)* கவி ஒன்றால் தான் உண்மையை இப்படி எடுத்துக் காட்ட முடியும். அடுக்களையிலிருந்து படுக்கை அறைவரை உண்மையை எடுத்து அதற்கு உணர்ச்சி உருவம் கொடுத்துக் காட்ட முடியும். கவி ஒன்றுக்குத் தான் அந்த உரிமை. அதற்குரிய ஊக்கமும் நளினமும் கவியிடந்தான் உண்டு.

★★★★★★★

கணவன் மனைவி சண்டையிலிருந்து நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் போடுகிற சண்டை வரை எதைக் கேட்டாலும் ஒரே பதில்தான், உண்மையைக் கண்டுபிடிக்கத்தான் இது என்று.

விஞ்ஞானிகளிடம் கேட்டாலும் அவர்களும் இதையே சொல்கிறார்கள். உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும். எப்பாடுபட்டேனும் கண்டுபிடித்துவிடவேண்டும். அதற்குத் தான் இப்படிப் போராடுகிறோம். ஊணுறக்கம் இல்லாது போராடுகிறோம் என்று.

விஞ்ஞானிகள் இருக்கட்டும், மெய்ஞ்ஞானிகளும் நாங்கள் என்ன பாடுபடுகிறோம். நீரில் நிற்கிறோம், நெருப்பில் நிற்கிறோம், தலைகீழாய்த் தொங்குகிறோம். காற்றையும், மழையையும், வெயிலையும் தாங்குகிறோம். பட்டிணி

---

*சிலம்படியான் ஊடலை தவிர்ப்பான் வேண்டி - உமையின் ஊடலை நீக்க எண்ணி. சிலம்பு - சல் சல் என்று ஒலிக்கும் சலங்கை. சலங்கை அணிந்த காலை உடைய உமை. செவ்வரக்கம் சேர்ந்தி - காய்ச்சிவிட்ட அரக்கின் குழம்பு போல் சிவந்த பாதத்தை தலைமேல் வைத்து. செக்கர் - செவ்வானம். செங்கோலம் செய்தான் - சிவக்கக் காட்டினான். முதிராமதி - இளநிலா, பிறைமதி. முடி - தலை.*

கிடக்கிறோம். மூச்சைப் பிடிக்கிறோம், பேச்சை நிறுத்துகிறோம், கடுந்தவம் பண்ணுகிறோம். எல்லாம் உண்மையைக் கண்டுகொள்ளத்தான் அதை உலகம் பார்த்து மகிழ வேண்டும் என்று தான்'' என்கிறார்கள்.

இப்படியே எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு போராடிப் போராடித் தேடுகிறார்கள். தேடத்தேடப் பொய்யாய் வருகிறதே தவிர உண்மையைக் காண முடியவில்லை.

அதாவது மிச்சம் ஆணவம் ஒன்றுதான்.

பொய்யை ஒழித்துக்கட்டினால் உண்மை தெரியும். பொய்யை வைத்தே உண்மையைத் தேடுகிறது உலகம். உரிக்க உரிக்கப் பொய்யே வருகிறது. உண்மையோ உள்ளே உள்ளே, உள்ளே போகிறது.

பொய்யைக் களைந்தெறிய வேண்டும். வேரோடும் வேரடி மண்ணோடுமே பிடுங்கி எறிந்து விடவேண்டும். தானே வெளிப்படும் உண்மை. பொய்யை விரட்டி அடிப்பதுவே உண்மை.

*பொய்யாத உள்ளமே*
*மெய்யாதல் வேண்டுமே''*

பொய்யை அகற்றித்துப்புரவான உள்ளந்தான் மெய்யுள்ளம். கடவுளும் மனிதனும் ஒன்றாவது என்பது அதுதான்.

நெய்யும் திரியும் சேர்ந்து சுடர்விட்டுப் பிரகாசிக்கும் விளக்கு. கடவுளும் மனிதனும் சேர்ந்தால் அப்படிப் பிரகாசம் சேரும். சேர்ந்து வாழும் சந்நிதானம் மனந்தாள். அழுக்கு (பொய்) இல்லாத உள்ளம் ஒன்றே தான்.

*நெய்யொடு திரிவுக்க*
*செய்யாளைச் - சேர்வார்க்கு*
*பொய்யாத உள்ளமே*
*மெய்யாதல் வேண்டுமே.*

பொய்யிலெல்லாம் பெரிய பொய், பகாசுரப் பொய் 'நான்' என்னும் ஆணவந்தான். அது எனது, இது எனதே என்னும் பேதைமைதான்.

ஆணவமும் பேதைமையும் ஒழியவேண்டும். ஒரே ஜோதிமயந்தான். ஜடதத்துவம் எல்லாம் இல்லாது போய், வெறும் பரதத்துவமாய் நிற்கும் நிலை அது தான். மனசில் அந்த நிலைதோன்றினால் போதும். அதன்மேல் ஆவல் ஏற்படும். பக்தி உண்டாகும். காதலே, காதல் வெறியே ஏற்படும் அதன்மேல்.

காதல் வெறியில் அம்மையார்தவிக்கிறதவிப்பைப் பாருங்கள்.

*எமக்கிதுவே பேராசை*
*என்றும் தவிரா(து)*
*எமக்கொருநாள் காட்டுதியோ*
*எந்தாய் - அமைக்கவே*
*போந்தெரிபாய்ந் தன்ன*
*புரிசடையாய்! பொங்கிரவில்*
*ஏந்தெரிநின்(று) ஆடும்*
*இடம்.* (33)

29) உண்மையைப் பார்த்துவிட்டால் போதும். பிறகு அதைவிடாது மனம். அதையே பார்த்துக் கொண்டிருக்கும். பார்க்கப்பார்க்க ஆசையைத் தூண்டும் உண்மை. காதலே உண்டாகிவிடும் உண்மையிடத்து.

உண்மையைப் பார்ப்பது எளிது. பார்க்க வேண்டும் என்னும் ஆவல் இருந்தால் போதும். அப்படியே முன்வந்து நிற்கும் உண்மை.

---

எமக்கு இதுவே பேராசை - உண்மையைக் காண்பது ஒன்றேகுற். அதற்காக பொய்யை உதறி எறிவதே நோக்கம். என்றும் தவிராது - இந்த ஆசையை விடமுடியாது. ஒரு நாள் காட்டுதியோ - ஒரு முறை காட்டினால் போதும் உண்மையை. காட்டமாட்டாயா அதை. எரிபாய்ந்தன்ன சடை-துள்ளிக்குதிக்கும் தீக்கொழுந்து போன்ற செஞ்சடை. இரவில் எரிபாய்ந்து ஆடும் இடம் - ஆணவத்தை (ஜடத்தை) எரித்து உண்மையை (பரதத்துவத்தை) காட்டும் ஆனந்த நிலையம். அதுதான். அக்கினி சொரூபியாய் ஆடும் இடம்.

குறிப்பு : காமதகனம், திரிபுரதகனம் என்றெல்லாம் விழாவெடுத்து வழிபடுகிறோம். ஜடத்தத்துவத்தில் பரதத்ததுவத்தைக் காணத்தான்.

பொய்யைக் காண்பது தான், பொய்யைப் பொய் என்று காண்பது தான் கஷ்டம். காரணம் பொய்யானது தன்னை மறைத்துக் கொள்கிறது! நான் உண்மை. நான் தான் உண்மை என்று வேஷம் போட்டு நிற்கிறது. பொய் ஒவ்வொரு அம்சத்திலும் உண்மையை மறைத்து அதை மூடியபடியே உண்மைபோல முன்வந்து நிற்கிறது பொய். அதனால் தான் பொய்யை ஒழித்துக் கட்டாதவனா உண்மை புலப்படாது என்கிறார்கள்.

'நான்' என்னும் ஆணவமே பொய். அது தொலைவதே மெய்.

★★★★★★★

மகாத்மாகாந்தி சென்னைக்கு வந்தால், எழுபது எண்பது வருடங்களுக்கு முன் சென்னை வந்தால் ஜி. ஏ. நடேசன் என்னும் பெரியவர் வீட்டில் தங்குவார்.

திரு. ஜி. ஏ. நடேசன் அவர்களின் மகன் சிறுபையன் அவன்மேல் காந்திக்குப் பிரியம். காந்தி அடிக்கடி ஏதாவது எழுதிக்கொண்டிருப்பார். அதைப் பார்த்த பையன் ஒரு சிறு துண்டுப்பென்சிலை "தாத்தா இதை வைத்து எழுதுங்கள். இது என் பென்சில்" என்று பிரியமாகக் கொடுத்தான். காந்திக்கு ஒரே ஆனந்தம். பென்சிலை மனமுவந்து பெற்றுக்கொண்டார். பத்திரமாகவைத் திருந்தார் பென்சிலை. அடிக்கடி அந்தப் பென்சிலை எடுத்துப்பார்ப்பார். மகிழ்ச்சியாக இருக்கும் அவருக்கு.

ஒரு நாள் பென்சிலைக் காணவில்லை. அங்கே இங்கே என்று தேடுகிறார் அகப்படவில்லை பென்சில்.

என்ன தேடுகிறீர்கள் என்று நண்பர் ஒருவர் காந்தியிடம் கேட்கிறார். பென்சிலை என்கிறார் காந்தி. அதுபோனால் போகட்டும் இதை வைத்துக்கொள்ளுங்கள் என்று ஒரு முழுப் பென்சிலையே கொடுக்கிறார் நண்பர்.

இதையா நான் தேடுகிறேன்? நான் தேடுவது வேறு, அதுதான் வேண்டும் என்று சொல்லிவிட்டார் காந்தி.

அந்தச் சின்னஞ்சிறு பென்சிலில் எழுதுகருவியையா பார்த்தார் காந்தி? அன்பும் ஆவலும் பொங்கிக்குலவும் பையனை யல்லவா பார்த்தார். ஆன்ம தத்துவத்தையே அதில் பார்த்தார். ஏன், கடவுள்த் தத்துவுமே அதில் தகதக வென்று பிரகாசித்தது காந்திக்கு.

பிறகு அந்தப் பென்சில் மனசை விட்டு எப்படி அகலும் அதுதானே காதல், அது தானே பக்தி.

கோவில், மூர்த்தி, வழிபாடு, கோபுரம், திருவிழா, பாடல், பக்தர், திருப்பணி எல்லாவற்றிலும் பரம்பொருளையே பார்க்கிறார் காரைக்கால் அம்மையார். முடியில் வெண்மதி சூடும் பெருமானையே - மூவேழ் உலகங்களையும் ஆட்டுவிக்கும் ஆனந்த நடராஜமூர்த்தியையே பார்க்கிறார் வழிபாட்டில் அம்மையார்.

வழிபாடும் ஞானமுந்தான் அம்மையாருக்கு உயிர். ஞானமும் வழிபாடும் அத்தனை இன்பம் தருகின்றன அம்மையாருக்கு.

வழிபாடு ஒன்றுபோதும். தேவலோக பதவி தேவை இல்லை என்கிறார் அம்மையார்.

இதோ பாடல்

*கண்டெந்தை என்றிறைஞ்சிக்*
*கைப்பணியான் செய்யேனேல்*
*அண்டம் பெறினும்*
*அதுவேண்டேன் - துண்டம்சேர்*
*விண்ணாளும் திங்களாய்*
*மிக்குலகம் ஏழினுக்கும்*
*கண்ணாளா ஈதென்*
*கருத்து.* (34)

30) இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் வட இந்தியா முழுவதும் யாகசாலைகள்தான். ஆடுகளும், மாடுகளும் மந்தை மந்தையாய் நிற்கும் யாகசாலைமுன். பரிதாபமாக அவைபார்க்கும். கதறக்கதற அவற்றை வெட்டுவார்கள். யாகத்தீயில் போட்டு அவிப்பார்கள்.

---

கண்டு - எல்லாம் ஈசனே என்பதைக் கண்டு தெளிந்து. கைப்பணி - வழிபாடு, செய்யேனேல் - செய்யவாய்ப்பில்லை என்றால். துண்டம் சேர்திங்கள் - பிறைச்சந்திரன். விண்ஆளும் திங்கள் - வானை அழகுபடுத்தும் திங்கள் நிலா. மிக்க உலகம் ஏழினுக்கும் - கண்ணாளா - அடுக்கி வைக்கப்பட்ட ஏழு உலகங்களுக்கும் நாயகனே.

பொது மக்களுக்கு இது அறவே பிடிக்கவில்லை. ஆனால் அவர்களால் இதைத் தடுத்து நிறுத்தமுடியவில்லை.

பஞ்சாபிலிருந்து ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், பீகார், உத்தர்ப்பிரதேசம் என்று கொடிகட்டிப்பறந்தது யாகசாலை.

அரசகுமாரனாகிய சித்ததார்த்தர் துணிந்து இதை எதிர்த்தார். யாகம் நடத்தும் குருமார்களிடம் இது கொடுமை இல்லையா என்று வாதாடினார்.

அரசகுமாரனாயிற்றே என்று குருமார்களுக்குப் பயம். ஆனாலும் விட்டுக்கொடுக்காமல் ''குழந்தாய், நீ சிறுவன். உனக்கு இது பற்றித் தெரியாது'' என்றனர். ''உங்களைப் போல் எனக்கு சாஷ்திரம் தெரியாது தான். ஆனால் ஆடு மாடுகளின் கலக்கம் எனக்குத் தெரிகிறது என்றார் புத்தர். வேறுவழி இல்லை குருமார்களுக்கு அரசிளங்குமாரா/இது தெய்வ சங்கல்பம், தெய்வ ஆகுதி என்றார்கள். உடனே புத்தர் கேட்டார், உங்களையும் என்னையும் வைத்தா தெய்வம் இருக்கிறது. தெய்வத்தைப் பற்றி நீங்கள் ஒன்றும் கவலைப் படவேண்டாம். அவரை அவர் பார்த்துக் கொள்வார். முதலிய ஆடுமாடுகளை அவிழ்த்து விடுங்கள்'' என்றார் புத்தர்.

புத்தர் புண்ணியத்தால் தான் நாம் இன்று வாழ்கிறோம். ஆடு மாடுகள் இருக்கின்றன. விவசாயம் நடக்கிறது. அதை வைத்து கலை, பண்பாடு, கோவில் குளம், ஆடல், பாடல், குடும்பம், வாழ்க்கை எல்லாம் இருக்கிறது. விவசாயம் (உணவும் உடையும்) இல்லை என்றால் வேறு என்ன இருக்கும் உலகில்.

★★★★★★★

ஆச்சார்யா கிருபாளினியிடம் இளைஞர் கேட்டார். சத்தியம் அகிம்சை இரண்டையும் தேடித் தேடிப் பார்க்கிறேன். கிடைக்கவில்லையே என்று.

உடனே சொன்னார் கிருபாளினி ''அதை ஏன் நீ தேடிப் பார்க்கிறாய்? நீ செய்யவேண்டியது குடிக்கக் கூடாது, சாதி வேற்றுமை பார்க்கக் கூடாது. மதவேற்றுமையை வெறியை விடவேண்டும். அரிஜனங்களிடம் அன்பாக இருக்கவேண்டும். சோம்பலைவிட வேண்டும். நூல் நூற்க வேண்டும். அதையே உடையாக்கிக் கட்ட வேண்டும். மனைவியை மதிக்க வேண்டும்.

மக்களை நேசிக்க வேண்டும். பொய் சொல்லக் கூடாது. ஏமாற்றக் கூடாது. அடக்கமாக மரியாதையாக இருக்க வேண்டும். பொறுமையோடு இருக்க வேண்டும். இதை ஒழுங்காச் செய். சத்தியமும் அகிம்சையும் உன்னைத் தேடிவரும், அப்படி அவை வரவில்லை என்றாலும் கவலைப் படாதே. சத்தியமும் அஹிம்சையும் அதுதான்'' என்றார்.

என்ன ஆனானோ இளைஞன். நமக்குத் தெரியாது.

★★★★★★★

ஐம்பது வருஷங்களுக்கு முன் பாண்டுங் மகாநாடு நடந்தது. உலகுக்கு அமைதி வழிகாட்டும் மகாநாடு பாண்டுங் நகரில் நடந்தது. மகாநாட்டின் மூலகர்த்தாவே பண்டித ஜவஹர்லால் நேருதான்.

நாட்டுக்கு நாடு மன வேறுபாடு. பிரச்சனைகள் பல. இந்தப் பிரச்சனைகளைத் பேசித் தீர்த்தல், ஒரு நாட்டின் உள் விவகாரத்தில் இன்னொரு நாடு தலையிடாமை முதலிய ஐந்து நெறிகள், ஐந்து அறநெறிகள் பாண்டுங் மகாநாட்டில் பிறந்தன.

உலகமே இதைக் கண்டு அதிசயித்தது. அடிமைப்பட்ட ஆசிய நாட்டுக்காரர் ஒருவரிடமிருந்து உலகம் முழுவதும் அமைதியாக வாழ்வதற்குரிய மூலமந்திரம் பிறந்துவிட்டதே என்று ஐரோப்பா அமெரிக்கா இரண்டுமே அதிசயித்தன.

இனி, உண்மையான தேசபக்தர் காமராஜர். தேசத்தின் அருந்தவப் புதல்வர்களில் அவர் ஒருவர். தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தார். எல்லா வழியிலும் தமிழகத்தைப் பெருமைப்படுத்தினார். முன்னேற்றம் மக்களுக்குத்தான் என்று செயல்பட்டார். அன்பின் இருப்பிடமாகவும் உண்மையின் உரைகல்லாகவும் திகழ்ந்தவர் அவர். உற்ற நண்பர்களிடம் அவர் (காமராஜர்) அடிக்கடி சொல்வது இதுதான்'' எல்லோருக்கும் வயிறாராச் சாப்பாடு, கட்டுவதற்கு உடை, குழந்தைகள் படிக்கக் கல்வி, நோய் வந்தால் குணப்படுத்த மருத்துவம், குடி இருக்கவீடு இந்த ஐந்துந்தான் நமக்கு முதல் பஞ்ச சீலம். இந்தப் பஞ்சசீலம் வந்தால் அந்தப் பஞ்சசீவம் தானாக வருமே.'' என்று.

எது உண்மையோ அது தான் ஞானம். அதுதான் மனதில் நிற்கும் கடவுள். காதலும் அதில்தான். பக்தியும் அதில் தான்.

காரைக்கால் அம்மையாரின் அனுபவம் அதுதான். அதுவே அம்மையாரின் பாடல்.

உண்மை வேண்டும். உண்மையிடத்து நம்பிகை வேண்டும். வேறு என்ன வேண்டும்? எது வேண்டுமானாலும் வரும். அது இல்லையே இது இல்லையே என்று கவலைப் படவேண்டாம். எது எப்பொழுது தேவையோ, எவ்வளவு தேவையோ அது அப்பொழுதே அந்த அளவு வந்துவிடும்.

அது எப்படி வரும். நம்பிக்கை இருந்தால் எல்லாம் வந்து விடுமா? உண்மைக்கும் நமது தேவைக்கும் என்ன சம்பந்தம் என்று யோசிக்க வேண்டாம்.

ஐந்நூறு ரூபாய் நோட்டோ, ஆயிரம் ரூபாய் நோட்டோ இருக்கிறது கையில். அது என்ன வெறும் தாள்தானே. ரூபாயா இருக்கிறது அதில். ஆனால் அதைக்கொடுத்தால் தேவையான தெல்லாம் கிடைக்கத்தானே செய்கின்றன.

சாப்பாடு வேண்டுமா, துணிமணிவேண்டுமா, சினிமாவுக்குப் போகவேண்டுமா, கோவிலுக்குப் போக வேண்டுமா? ரயிலில் போக வேண்டுமா? மோட்டாரில் போக வேண்டுமா? அவ்வளவும் கிடைக்கிறதல்லவா அந்தத் தாள் மூலம் வெறும் தாள் மூலம்.

சமுதாய உள்ளம், உணர்ச்சி அதன் மேல்வைத்திருக்கிற நம்பிக்கை தானே அந்தத்தாள் மூலம் கிடைக்கிறது.

அதுபோல உண்மை மேல் வைக்கிற நம்பிக்கையில் எல்லாம் உண்டு. வேண்டியவை அவ்வளவும் உண்டு. உண்மையும் நம்பிக்கையும் சுத்தமாக இருக்க வேண்டும் கலப்படம் இருக்கக் கூடாது அதில். உறுதியும் தெளிவும் இருந்தால் போதும். உண்மையும் நம்பிக்கையும் எல்லாம் தரும். அம்மையார் சொல்கிறார். மனதைப் பார்த்தே சொல்கிறார்.

பேரலைகளாய்ப் புரண்டு வரும் கடலையே, மேக நீர்மண்டலத்தையே தலையில்த் தரித்துள்ளவன் பெருமான், சிவபெருமான்.

*"பருத்தரங்க*
*வெள்ளநீர் ஏற்றாள்"*

எங்கும் நிறைந்த பரம்பொருள் அவன். சிவபெருமான். அவனுடைய திருவருளை - நியதி தத்துவத்தை உணர்ந்து பார். ஊனையே உருக்கும் அந்த அற்புதம். அதில் தோய்ந்து தோய்ந்து மருவு. விடாதே. பற்றிக்கொள்.

*பருத்தரங்க*
*வெள்ளநீர் ஏற்றாள்*
*அடிக்கமலம் நீவிரும்பி*
*உள்ளமே எப்போதும்*
*ஓது.*

நம்பிக்கை உண்மையாக வேண்டும். உணர்ச்சியும் உண்மையாக இருக்க வேண்டும் நினைத்தது நினைத்தபடி நடக்கும். திருத்தமாகவே நடக்கும்.

இனிப்பாடலின் முழுஉருவம்

*கருத்தினால் நீகருதிற்(று)*
*எல்லாம் உடனே*
*திருத்தலாம் சிக்கெனநான்*
*சொன்னேன் - பருத்தரங்க*
*வெள்ளநீர் ஏற்றான்*
*அடிக்கமலம் நீவிரும்பி*
*உள்ளமே எப்போதும்*
*ஓது.* (35)

*31)* காரைக்கால் அம்மையாருக்கு ஒரேவியப்பு. அவரை விடத் தமிழுக்கு ஒரே வியப்பு. தமிழிலுள்ள இசைப்பண்பு, தாளப் பண்பு, தமிழுக்கே உரிய தனிப்பண்பு அத்தனைக்கும் ஒரே வியப்பு. ஆனந்தம்.

---

கருத்தினால் - கருத்தோடு. உண்மை யுணர்ச்சியோடு, திருத்தலாம் - வேண்டியது வேண்டியபடி கிடைக்கும். கோணல் மாணவர்க் இருக்கிறதும் திருத்தமாகக் கிடைக்கும். சிக்கென நான் சொன்னேன் - உறுதியாகச் சொல்கிறேன் நான். தரங்கம் - அவை. அடிக்கமலம் - திருப்பாதம். அதாவது அருள். நியதி தத்துவம்.

''என்ன அதிசயம் இது. பெருமானுடைய சடையில்தான் கங்கை உண்டு. அந்தக் கங்கை மேகமாய் விசும்பிலும் இருக்கிறதே எப்படி? அதுமட்டுமா! பெருமானின் முடியை அலங்கரிக்கும் பிறைநிலா. அதுவும் விசும்பிலிருந்து அலங்கரிக்கிறது. பெருமானின் சடையில் புரளும் பாம்பு, ஆதிசேஷ வட்டம் விசும்பிலும் நட்சத்திரத்தொகுதியாய்க் கிடந்து பிரகாசிக்கிறது! நம்பமுடியவில்லையே வேடிக்கையை. நனவா, இல்லை கனவா இது'' இப்படி அதிசயப்படுகிறார் அம்மையார். அந்த அதிசயத்தை வாங்கி அதற்குக் கவி உருவம் கொடுக்கிறது தமிழ். எப்படி,

*கலங்கு புனல்க் கங்கை*
*ஊடாட லாலும்,*
*இலங்கு மதி இயங்க*
*லாலும், - நலங்கொள்*
*பரிசுடையாய்! நீள் முடிமேல்ப்*
*பாம்பியங்க லாலும்*
*விரிசடையாம் காணில்*
*விசும்பு.* (36)

32) மனிதில் எதுதோன்றினாலும் அதைப் பெருமாளிடமே சொல்கிறார் காரைக்கால் அம்மையார். அவர்தானே, அவர் ஒருவர் தானே இருக்கிறார். வேறு யார் இருக்கிறார்கள் காது கொடுத்துக் கேட்க.

இதோ சொல்கிறார் அம்மையார்.

''பெருமானே! எப்படி ஆடுகிறீர் இந்த ஆட்டத்தை. அணு விலும் நின்றாடுகிறீர். அண்டத்திலும் ஆடுகிறீர். எட்டுத்திக் கிலும் உமது ஆட்டந்தான். மேலும், கீழும், முன்னும் பின்னும் எங்கும் உம் ஆட்டந்தான். உம் நடனம் இல்லாத இடம் ஏது?

---

கலங்குபுனல் - மேலும் கீழும் புரண்டு நெளியும் நீர். இலங்கு - பிரகாசமான. நலங்கொள் பரிசுடையாய் - பழகப்பழக இனிக்கும், திகட்டாது தித்திக்கும் பண்பாளனே! விரிசடையாம்காணில் விசும்புமேலே எட்டிப் பார்த்தால் வானத்தையே காணோம். பரந்து விரிந்த உன்சடைதான் தெரிகிறது. எங்கே போயிற்று வானம்!

குறிப்பு : அதிசயம் அப்படியே செய்யுளின் உருவத்தில் கிடக்கிறது.

அந்தரந்தில் தொங்கும் குன்றி மணியில் நின்று ஆனை ஆடியதுபோல ஆடுகிறீரே எப்படித்தாங்குகின்றன அவை உம்மை.

அணுவளவு பிசகினால் போதும் பாதாள மேதவிடு பொடி. ரோமக்கணை அளவு ஒரு பக்கம் முடிசரிந்தாலும் சரி, வான்முகடே சுக்கல் சுக்கலாய் நொறுங்கும். கை வீச்சு பிறழ்ந்தாலோ

அடிபேரின் பாதளம்
பேரும்; அடிகாள்
முடிபேரில் வான்முகடு
பேரும் - தொடிகள்
மறிந்தாடும் கைபேரில்
வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆறென்
அரங்கு. (37)

33) மனிதன் என்றால் ஒரே அச்சந்தான். அச்சத்தைத் தவிர்த்து வேறு எதுவும் இல்லை மனிதனிடம்.

---

அடி - திருவடி. அடிகாள் - பெருமானே. முடி - தலை முடி. தொடி - வாகுவளையம் மறிந்தாடும்கை - முன்னும் பின்னும் மாறி ஆடும்கை. வான் திசை - எல்லையற்றதிசை. அறிந்து ஆடும் அரங்கு என் - என்ன நிச்சயம், என்ன கணக்கு, என்னதுள்ளிபம். ஆட்டத்துக்கு ஏற்றபடி அல்லவா அரங்கும் அமைந்திருக்கிறது உமக்கு!

எல்லாம் ஒரே வேகத்தில் சுழள்கின்றன ஆனாலும் மோதல் இல்லை.

குறிப்பு - உண்மையை எப்படிக் கண் குரைப்பார்க்கிறார் அம்மையார். நேருக்கு நேராகப் பார்க்கிறார். இடையில் திரை ஒன்றும் இல்லை.

''கள்வரும்' இல்லம்
உடையாரும் கைகூடின்
வெள்ள வெளியாம் என்(று)
உந்தீ பறி
வீடும் எளிதாம் என்(று)
உந்தீ பற'' (திருஉந்தியார்)

''யாராவது வந்து ''அப்பா எங்கே என்று கேட்டால். வெளியில்ப் போயிருக்கிறார்கள் அப்பா என்று சொல்'' இப்படிச் சொல்கிறாள் தகப்பன் குழந்தையிடம். குழந்தையும் அப்பன் சொன்னதையே தப்பாமல்ச் சொல்கிறது. உண்மையைச் சொல்லப் பயம் குழந்தைக்கு.

சொன்னால் என்னாவது முதுகுத் தொலி. பையனுக்கு இனி! மனைவிக்குக் கணவனிடம் பயம். கணவனுக்கு மனைவியிடம் பயம், மாணவன், ஆசிரியன், வேலைக்காரன், முதலாளி, பணியாள், அதிகாரி, எல்லோரையும் பயம்பிடித்து ஆட்டுகிறது. உண்மையைச் சொல்லத்தான்.

உறுப்பினர்கள் அமைச்சர்களைப் பார்த்துப் பயப்படுகிறார்கள். அமைச்சர்கள் பிரதமரைப் பார்த்துப் பயப் படுகிறார்கள். பிரதமர் ஜனாதிபதியை நினைத்துப் பயப் படுகிறார். ஜனாதிபதியையும் பயம்விட்டபாடில்லை.

கடன்வாங்கினவனும் பயப்படுகிறான். கடன் கொடுத்தவனும் பயப்படுகிறான்.

அணுகுண்டையே உருவாக்குகிற விஞ்ஞானியும் பயந்து பயந்து தான் சாகிறார். கண்ணை மூடிக்கொண்டு அரசு என்ன உத்தரவு போட்டாலும் அதன்படி நடக்கவேண்டும், நேர்மை, வாய்மை, மனச்சாட்சி எல்லாவற்றையும் மூட்டைகட்டி முகட்டில் தொங்கவிட்டுவிடவேண்டும். அதை அவிழ்க்கவோ பார்க்கவோ அதிகாரம் இல்லை விஞ்ஞானிக்கு.

விஞ்ஞானி கதை இப்படி என்றால் மெய்ஞ்ஞானி கதையும் அப்படித்தான். அரசை அனுசரித்தே நடக்கணும். நீதியோ, அநீதியோ எது சொன்னாலும் அதன்படி நடக்கவேண்டும். மாட்டேன் என்றால் மடம் இருக்கும், செங்கோல் இருக்கும். ஆனால் வெறும் பண்டாரம் ஆகிவிடுவார் மடாதிபதி. வேறொரு பண்டாரம் மடாதிபதியாய் வந்து அங்கு அமர்ந்துவிடுவார்.

என்ன செய்ய, உலகமே பயத்தில் தான் உருண்டு, புரண்டு ஓடுகிறது.

''ராஜ்யத்தில் நீதி (உண்மை) இல்லை என்றால் அரசைக் கண்டு மக்கள் பயப்படுவார்கள். மக்களைக் கண்டு அரசுபயப்படும்'' இப்படிச் சொன்னார் பிளாட்டோ. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இப்படித்தான் உலகம். இன்றும் அப்படியே. அச்சமே பிழைப்பாகி இப்படி அலையும் மனிதன் எப்படி உருப்படுவான். பயந்து பயந்து சாகிறவனைப்

போய் எமபயத்தைவிடு என்றால் விடமுடியுமா அவனால். நான் என்று பிறப்பெடுத்ததால் வரும் தொல்லைகள் எத்தனை? அத்தனையையும் உதறி எறி என்றால் உதறி எறியமுடியுமா அவனால். நேரம் பார்த்து, இடம் பார்த்து வினைப்பயன் வந்து பிடித்தாட்டத்தான் செய்யும். அதுபற்றி எல்லாம் பயப்படாதே என்றால் அப்படிச் சொல்வது எப்படி எடுபடும்?

சாதாரண பயத்தையே விட்டொழிக்கமுடியவில்லையே, இந்த நிலையில் எமனை ஒருகை பார்ப்பேன், பிறவிப் பிணியை அறுத்தெறுவேன், இரு வினைப்பயன்களையும் ஒண்டவிட மாட்டேன் என்றெல்லாம் கும்மி அடிப்பது ஜம்பம் தான்.

மரணபயம், பிறவிப்பிணி, இருவினைப் பலன் இவற்றை எல்லாம் விடவேண்டும், அச்சத்தைத் தவிர்க்க வேண்டும் என்றால் ஆணவத்தை (பொய்யை) ஒழித்துக்கட்ட வேண்டும்.

எல்லாம் ஈசன் செயலே என்று தெரிந்து அவனிடம் ஒப்படைப்பதுதான் ஆணவம் அற்ற நிலை.

பிறந்தது நான் இல்லை. இறப்பதும் நான் இல்லை என்பது விளங்கினால்ப் போதும் ஆணவம் கழன்று போய்விடும்.

காரைக்காலம்மையார் நான் என்னும் அறியாமையை விட்டவர். அதிலிருந்து விடுதலை பெற்றவர். அதனால் உண்மையைக் காண முடிந்தது. அதில் திளைத்து ஊடாடமுடிந்தது. பயப்படவில்லை எதற்கும் அவர்.

இதோ பாடல்.

*காலனையும் வென்றோம்,*
*கடுநரகம் கைகழன்றோம்,*
*மேலை இருவினையை*
*வேரறுத்தோம் - கோல*
*அரணார் அவிந்தழிய*
*அந்தீ அம்(பு) எய்தான்*
*சரணார விந்தங்கள்*
*சார்ந்து.* (38)

---

காலன் - மரணம். மரணபயம். கடுநரகம் - பிறவியால் வருகிறதுன்பம். கோல அரண் - அழகிய கோட்டை. முப்புரம். அதாவது ஆணவம், கன்மம் மாயை. சரணாரவிந்தம் - அருள், நியதிதத்துவம்.

*34) கொலை, களவு முதலிய கொடுமைகளுக்கு மூலமே பொய்தான். மிக்க தந்திரமானது பொய். மிக்க உறுதியானதும் பொய்தான். எளிதில் பிடிபடாது. பிடிபடுவது போல இருக்கும் நழுவிவிடும். அதனால்தான் ஆகாயத்தில் தொங்கும் கோட்டை என்று பொய்யைச் சொல்லி இருக்கிறது. ஆணவம், கன்மம், மாயை என்றெல்லாம் வேஷம்போடுகிறது பொய். அதனால் ஆகாயத்தில் தொங்கும் கோட்டை மூன்று (முப்புரம்) என்று சொல்லி இருக்கிறது.*

*பொய்யின் பித்தலாட்டத்தையும் போக்கிரித்தனத்தையும் விளக்குவதற்குத்தான் அப்படிச் சொல்லி இருக்கிறது.*

*இத்தனை தகடு தந்தத் தோடுடிகூடிய பொய்யை எப்படி அடித்து விரட்டுவது? அழித்து ஒழிப்பது? அது நமக்குள்ளேயே இருக்கிறது. நம் தேகம் முழுவதும், எண்ணம், பேச்சு, செயல் எல்லாவற்றிலும் ஊடுருவிக்கிடக்கிறது. (மனம் என்னும் அந்தரத்துள் கிடப்பதளால் தானே அதற்கு ஆகாயக் கோட்டை என்று பெயர்) அதைப் போரிட்டு ஒழிக்க முடியாது. அதன் பம்மாத்தை ஒன்றுவிடாமல் பார்க்கவேண்டும் அதன் பாவாலாவை அனுபவித்து "பேஷ், பேஷ் ரொம்பச்சமர்த்து" என்று அதைப்பாராட்ட வேண்டும் "என்னடா இது, பிழைப்புக்கு வழி இல்லையே இங்கு" என்று ஒதுங்கி ஓடிவிடும் ஆணவம். ஆணவத்தைச் சுட்டுச் சாம்பலாக்குவது என்பது அது தான்.*

★★★★★★★

*யுத்த சன்னத்தனாய் படை எடுத்துத்தான் போனார் ஆணவத்தின் மேல் பெருமான். ஆணால் சண்டை போடவில்லை அதனோடு.*

*எப்படி அநாயசமாய் தொங்குகிறது இந்த கோட்டைகள்.*

*என்று ஆச்சர்யப்பட்டார் பெருமான். சிரிப்பு வந்துவிட்டது அவருக்கு. அந்தச் சிரிப்பிலேயே இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது கோட்டை (ஆணவம், கன்மம், மாயை மூன்றுமே).*

---

*குறிப்பு : ரசிகமணி டி.கே.சி. சொல்வார்கள். ஆன்மதத்துவம், கடவுள் தத்துவம் எல்லாம் நம்வாழ்க்கையிலேயே இருக்கிறது. வாழ்கையில் அமைதி. மரணத்தில் நிம்மதி என்று கண்டவர்கள் நம்மவர்கள். என்று. இதை விளக்க* Indian philosophy is my consalation in life and shall be my solace in death - (Sctooperheus) *சொல்வதை எடுத்துக் காட்டுவார்கள்.*

அக்கினி அஷ்திரத்தைவிட தெளிவுக்கும் (ஞானத்துக்கும்) உறுதிக்கும் (அனுபவத்துக்கும்) ஆற்றல் அதிகம்.

பொறுமையும் தியாகமுந்தானேதவம். தவத்துக்கு இருக்கிற பலம் வேறு எதற்கு இழுக்கிறது.

★★★★★★★

ஆணவத்தை அகற்ற எவ்வளவோ பக்குவம் வேண்டும். பண்பாடு வேண்டும். ஆணவம் (பொய்) ஒழிந்தால்தான் ஆனந்தம். பக்தி என்பதும் பரவசம் என்பதும் அதுதான்.

ஆனந்தம் பெருகப் பெருக, பக்தியில் பேரின்பம் சுரக்கச் சுரக்க அதை அனுபவிக்க அனுபவிக்க கூச்சம் உண்டாகிறது. நாணம் வருகிறது. வெட்கமாகவே இருக்கிறது.

இன்பத்துக்கு லட்சியமாய் இருக்கிறது உண்மை. அதாவது சிவநேசம். அதனால் அதை வழிபடுவதற்கும் உபசரிப்பதற்கும் இடை இடையே கூச்சம் ஏற்படுகிறது. நாணமே வந்து விடுகிறது.

இதோ அம்மையாரின் அருள்வாக்கு விண்ணுக்கும் மண்ணுக்குமாய் ஒரே அக்னி சொரூபமாக ஆடும் பெருமானை அப்படியே நேருக்கு நேராக வைத்து.

*கண்ணாரக் கண்டும் என்*
*கையாரக் கூப்பியும்,*
*எண்ணார எண்ணத்தால்*
*எண்ணியும், - விண்ணார*
*எரியாடி என்றென்றும்*
*இன்புறுவன் கொல்லோ*
*பெரியானைக் காணப்*
*பெறின்.* (39)

*35)* சிவபெருமானின் ஒருபாகம் உமை. மறுபாகம் திருமால். இடது பாகத்தில் உமை இருக்கிறது தெரியும். ஏனென்றால் அவரை விட்டு விநாடி கூடப் பிரியமாட்டாள் உமை. திருமாலின் காரியம் வேறு. உலகம் முழுவதும் சுற்றிச் சுற்றி வரவேண்டும்.

---

பெரியான் - இறைவன். இன்புறுவல் கொல்லோ - ஆடிப்பாடி அனுபவிக்க முடியுமா என்னால். அதற்கு இடம் கொடுக்குமா பாழாய்ப்போன இந்த வெட்கமும் நாணமும் என்பது விஷயம்.

குறிப்பு : கணவன் வீட்டில் இல்லாத பொழுது அப்படியாக்கும் இப்படியாக்கும் என்று கணவனைக் குறித்துப் பேசுவாள் பெண். ஆரவாரமாகவே பேசுவாள். பக்கத்து வீட்டார் காது கேட்கவே பேசுவாள் பெண். கணவனைக் கண்டாலோ, நேருக்கு நேர் வந்து அவள் நின்று விட்டாலோ என்ன நடக்கும். பெண்ணே சொல்லட்டும்.

*மாணார்க் கடந்த*
*மறவெம்போர் மாறனைக்*
*காணக்கால் ஆயிரமும்*
*சொல்லுவேன் - கண்டக்கால்*
*பூணாகம் தா என்று*
*புல்லப் பெறுவேனோ*
*நாணோ (டு) உடன்பிறந்த*
*நான்.*

மாணார்க்கடந்த மறவெல்போர் மாறன் - எதிரிகளை போரிட்டு வென்ற பாண்டியன். மாறன் - பாண்டியன். பூணாகம் - மாலை அணிந்த மார்பம்.

ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு பெண்ணின் நிலையும் இதுதான். இதற்கு ஒரு உருவம் கொடுப்பதற்காக பாண்டியன் என்றும், ஊடல் என்றும் கூடல் என்றும் வகுத்து வைத்திருக்கிறது. அப்படி எல்லாம் நாடகத் துறையோடு கூடியது பாடல், தமிழ்ப்பாடல்.

என்ன செய்வாள் பெண், தனியாகவா பிறக்கிறாள் பெண். நாணமும் சேர்ந்தல்லவா எடுக்கிறது பெண் ஜென்மம்.

நாணோடுடன் பிறந்த நான்.

பசியோடிருப்பவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும். நோயில் கிடந்து உழல்பவர்களுக்கு மருத்துவ வசதி செய்ய வேண்டும். பயிர் பச்சைகளுக்கு மழை பொழிய வேண்டும். இப்படியாக உயிர்களை அங்கங்கே சென்று காக்கவேண்டும்.

இருந்த இடத்திலேயே தங்கை உமையாளைப் போல அமர்ந்திருக்க முடியுமா திருமாலால். சுற்றி அலைவது தான் அவர் தொழில்.

இனி கடவுள் தத்துவத்திலேயே ஒன்றித்திளைக்கிறவர் காரைக்கால் அம்மையார். எப்பொழுதும் இறைவன் சிவபெருமான் அம்மையாரின் கண்முன்னாடியே நிற்பான். அந்திவானம் போல் செக்கச் சிவந்த அவனது தீ நிற வண்ணத்தில் அம்மையாரின் இதயம் கரையும். அனலில்பட்ட பொன்போல இளகி உருகும். அப்பொழுது தோன்றும் இந்த மாணிக்கவண்ணனோடு நீலவண்ணனாகிய திருமால் சேர்ந்திருந்தால் எப்படி இருக்கும் என்பதாக ஒரு யோசனை.

யோசனையானது மனசிலேயே நிற்கிறது. அதனால் இது சம்பந்தமாக யாரோ கேள்வி கேட்பது போலத் தெரிகிறது. கேட்பவர்களுக்குப் பதில் சொல்வதாக ஒரு தோற்றம் பகல்க்கனவில் அப்படி எல்லாம் தோன்றும்.

இதோ அம்மையார் காணும் கனவு.

*மின்போலும் செஞ்சடையான்*
*மாலோடும் ஈண்டிசைந்தால்*
*என்போலும் காண்பார்கட்(கு)*
*என்பிரேல் - விண்போழும்*
*பொற்குன்றும் நீல*
*மணிக்குன்றும் தாம் உடனே*
*நிற்கின்ற போலும்*
*நெடிது.* (40)

---

மால் - திருமால். ஈண்டு இசைந்தால் - இங்கு உடனிருந்தால். என்போலும் என்பிரேல் - எப்படி இருக்கும் என்று தானே கேட்கிறீர்கள்! விண்போழும் பொன்குன்றும் - ஆகாயத்தை ஊடுருவி மேலே போகும் தங்கமலையும். நீல மணிக்குன்றும் - நீலமணி மலையும். நிற்கின்ற போலும் நெடிது. நீண்டுயர்ந்து சேர்ந்திருப்பது போன்றிருக்கும்.

மனுசனும் மனுசனும் சேர்ந்து நிற்பது போலவா தெரியும். மலையும் மலையும் சேர்ந்து ஒன்றை ஒன்று அணைத்து நிற்பது போலத்தான் தெரியும்.

குறிப்பு : ஏகமாய் நிற்றலும் காத்தலும் அப்படி ஒன்றி நிற்கின்றன. சர்வவியாபகம் என்றால் இரண்டும் ஒன்றாய் நிற்கிறதுதான். ஒரே மலை இரண்டு குன்றுகளாகச் சேர்ந்து நிற்கிறமாதிரியே.

குறிப்பு : ராமன், சீதை, லட்சுமணன் அடர்ந்த காட்டு வழியில் இரவில் நடந்து போகிறார்கள். நள்ளிருள். கும்மிருட்டு - அப்பொழுது சந்திரன் உதயமாகிறான். சந்திரன் உயர ஏற ஏற அவன் நிலவொளி மரங்களின் இலைகளின்ஊடே நுழைந்து பாதையில் திட்டுத்திட்டாய் விழுகிறது மெல்லிய பஞ்சிழையாகவே தெரிகிறது நிலவொளி.

நடந்து போகும் சீதையின் மெல்லடி வருந்தக்கூடாதே என்று பஞ்சைப் பரப்பித் தூவியது நிலா என்று தான் சொல்ல வேண்டும்.

பிராட்டிக்கு விரித்த பஞ்சில் அவள் புண்ணியத்தில் இவர்களும் நடந்து போனார்கள். ராம லட்சுமணர்களுக்கு அப்படி ஒரு குருட்டு யோகம்.

*"இந்து என்பான்*
*பஞ்சிடைத் தொடுத்தால் என்ன*
*வெண்ணிலாப் பரப்பப்போ னார்"*

ராமன் முதலில் போகிறாள், அவனை ஒட்டி வழி காட்டிய படி லட்சுமணன் போகிறான்.

ராமன் நீலம் கலந்த கருப்பு நிறம். லட்சுமணன் பொன்னிறம். இருவரும் அடுத்தடுத்துப் போவது எப்படி இருந்தது. நீல மலையில் பொன் முலாம் பூசியது போலவே இருந்தது.

*"அஞ்சனக் குன்றம் என்ன*
*அழகனும், அழகன்தன் மேல்*
*எஞ்சலில் பொன் போர்த்தன்ன*
*இளவலும், (இந்து என்பாள்*
*வெஞ்சிலைப் புருவத்தாள் தன்*
*மெல்லடிக் கேற்ப வெண்ணூல்*
*பஞ்சிடைத் தொடுத்தால் என்ன*
*வெண்ணிலாப் பரப்பப்) போனார்"*

கம்பருடைய பாடலை பாடப் பாட காரைக்காலம்மையாரின் மனோ வேகம் இன்னதென்று தெரியும். கம்பர் சஞ்சரிக்கிற கற்பனா உலகமும் தெரியும்.

36) எப்பொழுதும் இறைவனைப் பற்றிய சிந்தனையில் இருக்கிறவர் காரைக்கால் அம்மையார். அது காரணமாக இறைவனே தன்னோடுதான் இருக்கிறாள், தன்னிடந்தான் இருக்கிறாள் என்று ஒரு உறுதி, தன்னைத் தவிர வேறு எங்கும் இல்லை இறைவன் என்றே ஒரு முடிவு. துணிந்த முடிவுதான்.

அந்த நம்பிக்கையிலிருந்து ஒரு ஹாஸ்யம் பிறக்கிறது. ''விபரம் தெரியாமல் அங்கே இங்கே என்று தேடி அலைகிறார்களே இறைவனை? பைத்தியக்காரர்கள் தான் இவர்கள்! யாராலும் காணமுடியாது பெருமானை. அப்படிப் பத்திரமாய் பாதுகாப்பான இடத்திலேயே வைத்திருக்கிறேன் பெருமானை''.

இந்த எக்களிப்பும் சந்தோஷமும் சிரிப்பும் கும்மாளியுமாய் தமிழில் வந்து விழுகிறது. எதுகையிலும் மோனையிலும் விழுந்து புரண்டு உருள்கிறது.

*ஆர்வல்லார் காண*
*அரனவனை! அன்பென்னும்*
*போர்வை அதனாலே*
*போர்த்தமைத்துச் - சீர்வல்ல*
*தாயத்தால் நாமும்*
*தனிநெஞ்சின் உள்ளடைத்து*
*மாயத்தால் வைத்தோம்*
*மறைத்து.* (41)

37) உண்மை தான் அழகு. அழகுதான் உண்மை என்று ஒரு பொன் மொழி.

---

அரன் - சிவன். அன்பென்னும் போர்வை அதனால் போர்த்தமைத்து. ஆரா அன்பு தீராக்காதல் என்பார்களே அதனுள் பொதிந்து. சீர்வல்ல தாயத்தால் - வேறு யாருக்கும் பாத்தியதை இல்லை என்கிற தனி உரிமையால். தனிநெஞ்சின் உள்ளடைத்து - உணர்ச்சிமயமான உள்ளத்துள். மாயத்தால் வைத்தோம் மறைத்து - வெகு தந்திரமாய் உள்ளே, உள்ளே, உள்ளேயே வைத்திருக்கிறேன் பாதுகாப்பாக. பிறகு ஏன் வீணாக தேடி அலைகிறார்கள்.

குறிப்பு : நம்மிடம் ஷ்தூலமாகத் தானே இருக்கிறது. அது கூட பிறர் யாருக்கும் தெரியவில்லை தானே என்பது விஷயம். அது பாவரூபம் எடுக்கிறது கவியில்.

எது உண்மை என்று தெரியாமலே பொன் மொழியைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதனால் உண்மையும் ஒளிந்து கொள்கிறது, அழகும் மறைந்து கொள்கிறது.

உணர்ச்சி தான், உணர்ச்சியின் வேகந்தான் உண்மை. அதுதான் அழகுபடுத்துகிறது உண்மையை. அழகாய் இருக்கிறது உண்மை.

கலைக்கு கவிக்கு உருவம் கொடுக்கிறது அது. மக்களுக்கு, வாழ்க்கைக்கு வழிகாட்ட ஒளி கொடுப்பதும் அதுதான்.

இனி இறைவனைப் பற்றிய நினைப்பு ஒன்றே அம்மையாருக்கு. இறைவனையே பார்க்கிறார். எங்கும் அவனையே பார்க்கிறார். எதிலும் அவனையே பார்க்கிறார். வேறு ஒன்றும் தெரிய இல்லை அவர் பார்வைக்கு.

பார்க்கப் பார்க்க அழகு பொழிகிறது இறைவனிடம். கையும் அழகு, காலும் அழகு, மேனியும் அழகு. கண்ணும் அழகு, முகமும் அழகு, எல்லாம் தங்கமயமாய் ஜொலிக்கிறது. கொழுந்துவிட்டெரியும் தீச்சுடராய் ஜொலிக்கிறது அவன் அழகு. செக்கச் சிவந்த தீவண்ணம்.

காரைக்கால் அம்மையாருக்கு ஒரே வியப்பு. இப்படி ஒரு சிவப்பை அவர் பார்த்ததில்லை. தீபச்சுடரில் கூட இப்படி ஒரு பொன்னழகை அவர் பார்த்ததில்லை.

செக்கச் சிவந்த சிவபெருமான் கையில் உள்ளங்கையில் இருக்கிற சிவப்பிருக்கிறதே, அடடா, அதன் அற்புதத்தை என்னென்னு சொல்ல. அந்த அழகின் காலடித் தூசு பெறாது அந்திவானத்தின் செவ்வண்ணம். உருக்கிவிட்ட ஆயிரம் மாத்துத் தங்கம். ஏன், செம்பவளத்தின் ஒளி. எதுவும் ஈடுகொடுக்காது அப்படி ரத்தச் சிவப்பாய் இருக்கிறது அவனுடைய உள்ளங்கைப் பொன்னொளி.

அந்த அழகிய செந்தளிர்க்கையில் - உள்ளங்கையில் அக்கினி (அனல்) அதை ஏந்தியபடியே திம் திம் என்று ஆடுகிறான் பெருமான்.

''ஆணவத்தை இதில் போடு. பொசுங்கிப் பொடியாகட்டும் ஆணவம்'' என்று அனலேந்தி ஆடுகிறாள் பெருமான்.

இறைவனுடைய கையையும் பார்க்கிறார். கையில் நின்றெரியும் அனலையும் பார்க்கிறார். மாறி மாறிப் பார்க்கிறார். இரண்டும் சிவப்பு. ஒரே சிவப்பு. அந்த சிவப்பு எப்படி உணர்ச்சியைச் சிலிர்த்தெழச் செய்கிறது என்று பார்க்கலாம்.

பெருமானிடமே குழந்தை மாதிரி கேட்கிறார் அம்மையார்.

*அழலாட அங்கை*
*சிவந்ததோ? அங்கை*
*அழகால் அழல்சிவந்த*
*ஆறோ! - கழலாடப்*
*பேயாடு கானில்ப்*
*பிறங்கனல் ஏந்தியே*
*தீயாடு வாய் இதனைச்*
*செப்பு.* (42)

38) உலகப் புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரர் ஒருவர். அவரை வெல்ல ஆளே இல்லை என்று ஒரு பெயர் இருந்தது.

அந்த பைல்வான் காலத்தில் இன்னொரு பைல்வான். அவர் பெயர் காமா பைல்வான்.

காமா பைல்வானிடம் ஒரு நாள் வந்தார் உலக மகாவீரர். 'நாம் இருவரும் குஷ்தி போட்டுப்பார்க்கலாம் வா' என்று அழைத்தார் காமாபைல்வானை.

''முதலில் என் சிஷ்யனோடு மல்யுத்தம் பண்ணு, அதன் பிறகு என்னிடம் வா சண்டைக்கு'' என்று கறாராகச் சொல்லிவிட்டார் காமா பைல்வான்.

---

அழல் - தீ. கழல் - காலில் அணியும் வீரக் கழல். கான், சுடுகாடு, அனல் - நெருப்பு.

குறிப்பு : ஆணவத்தை நிர்மூலம் பண்ணி எல்லாம் ஒரே கடவுள் மயம் என்றல்லவா ஆக்குகிறது தீ. அதனால் அத்தனை மோகம் அக்கினியினிடத்து அம்மையாருக்கு தீயோ நீரோ. எதுவானால் என்ன? உணர்ச்சி இருந்தால் போதும். அதில் வேகம் இருந்தால் போதும். இரண்டும் உண்மையாக இருந்தால் அது எதுவானாலும் அழகுதான். அழகு மயந்தான் அது.

காமா பைல்வான் மாணவனுக்கும் உலக மகாவீரருக்கும் ஆக்ரோஷமாக நடந்தது மற்போர். புதுசு புதுசாக இருந்தது அவர்கள் காட்டிய வித்தைகள். மல்யுத்தத்தை விட்டு ஒருவராலும் வரமுடியவில்லை. அப்படி ஒரு கிறுக்கே பிடித்துவிட்டது குத்துச் சண்டைக் குஷ்தியில் ஜனங்களுக்கு.

ஒரு நாளில் முடியவில்லை குஷ்தி. இரண்டு நாள், மூன்று நாள் என்று இழுத்துக் கொண்டேபோய் ஒரு வாரம் கழித்து எட்டாம் நாள் தான் முடிந்தது சண்டை. அதுவும் உலகமகா வீரன் மண்ணைக் கவ்வினான். சிஷ்யன் புரட்டி எடுத்துவிட்டான் உலகமகாவீரனை என்னும் ஜெய கோஷத்தில் முடிந்தது.

சிஷ்யனே இப்படி என்றால் குருவைப் பற்றிக் கேட்கவா வேண்டும்.

பொதுவாக சங்கீத சாம்ராட்டுகள், டான்ஷ் மாஷ்டர்கள், தாதாக்கள், ஆச்சார்ய புருஷர்கள் இவர்களெல்லாம் முதலில் சிஷ்யகோடிகளைத் தான் களத்தில் இறக்குவார்கள். சிஷ்யகோடிகளை வைத்துத் தான் ஒரு முடிவுக்கு வருவார்கள்.

வட இந்தியாவில் தான்சேன் என்று ஒரு மகா பெரிய சங்கீத மேதை. அவருடைய இசையில் சொக்கி மயங்கினார் அக்பர் சக்கரவர்த்தி. ஒரு நாள் சக்கரவர்த்தியிடம் தான்சேன் சொன்னார். மகாராஜா! என் குருநாதர் ஒருவர் இருக்கிறார். சங்கீதம் என்றால் அவருடைய சங்கீதந்தான்.'' என்று.

அப்படியா, இப்பொழுதே அவரை அழைத்து வாரும் என்றார் அக்பர்.

அவரையா, அவர் எப்படி வருவார் இங்கு, அவரைத் தேடி நாம் தான் போக வேண்டும் என்றார் தான்சேன்.

எங்கே இருக்கிறார் அவர் என்றார் அக்பர். இங்கு தான் என்று குறிப்பிட்டுச் சொல்லமுடியாது, காட்டில் சுற்றிக் கொண்டே திரிவார் அவர் என்றார் தான்சேன்.

இருவரும் எங்கெங்கோ சுற்றி அலைந்தார்கள். பல நாட்கள் தேடித் திரிந்தார்கள். கடைசியாக ஒரு நாள் ஒரு இருண்ட கானகத்துள்ளிருந்து ஒரு தெய்வ கானம் மிதந்து வந்தது. அதோ, அதோ, அது தான் என் குருநாதர் இசை என்று சத்தம் போட்டார் தான்சேன்.

அக்பர் காதில் தான்சேன் போட்ட கூப்பாடு விழவே இல்லை. அப்படி தன்னை மறந்து, தன்னையே பறிகொடுத்து இசையோடு இசையாய் உருகிக் கரைந்தார் அக்பர். பாட்டு நின்றது. அக்பருக்கு உயிரே அப்பொழுதுதான் வந்தது. அப்பொழுது தான்சேனைப் பார்த்து அக்பர் சொன்னார். ''உம்முடைய பாட்டுக்கும், உம் குருநாதர் பாட்டுக்கும் தூரம் இவ்வளவென்றால். குருநாதர்களுக்கெல்லாம் குருநாதனாகிய அல்லாவின் சங்கீதம் எவ்வளவு எட்டாத தூரத்தில் இருக்கும்? அதைக் கிட்ட நின்று கேட்டால் அல்லவா அவன் மகிமை தெரியும்'' என்று.

உண்மைதான் கடவுளை - கடவுள்த் தத்துவத்தை அறிவது என்பது முடியாத காரியந்தான். ஏதோ அவன் மாலை இப்படி, மோதிரம் இப்படி, காப்பு (வளையம்) இப்படி, வேட்டி இப்படி, துண்டு இப்படி, சடை இப்படி, ரோமம் இப்படி என்று சொல்லி அதன் மூலம் ஒருவாறு ஊகம் பண்ணிக்கொள்ள வேண்டியதுதான்.

*******

சிவபெருமானுடைய ஊர்தி (வாகனம்) காளை. காளை என்றால் பேரண்டமேதான். அண்டம் அகண்டம் எல்லாம். அவன் ஏறிச் சவாரி செய்யும் ஊர்தி என்றால் அதன் நடை எப்படி இருக்கும். எட்டெடுத்து வைத்தால் பூமியே குலுங்காதா என்ன? ''நடக்கில் படிநடுங்கும்'' முறைத்து அது ஒரு பார்வை பார்த்தால் எட்டுத் திசையும் அதில் உள்ள சூரியன், சந்திரன் எல்லாம் பதறி நடுங்கத்தானே செய்யும் 'நோக்கில்த் திசைவேம்' இனி அது ஒரு உறுமு உறுமினால் மூவேழ் உலகங்களும் அம்மா, ஐயா என்று அலறத்தானே செய்யும்? ''இடிக்கில் உலகனைத்தும் ஏங்கும்''

இதை எப்படிக் காளை (மாடு) என்று சொல்ல.

பெருமானிடமே கேட்கிறார் அம்மையார் மலையில் பயங்கரமாக மோதிச் சண்டை போடும் மதயானையா உன் காளை. இல்லை. இடி, மின்னல் என்று உலகையே கிடுகிடுக்கவைக்கும் காளமேகந்தானா? ஒன்றும் விளங்கவில்லையே. உன் வாகனம் (ஊர்தி) எது? இது தான் என்று ஒன்றைச் சொல்.

எப்படி உரிமையோடு கேட்கிறார் அம்மையார்

இதோ பாடல்.

*நடக்கில் படி நடுங்கும்,*
*நோக்கில்த் திசைவேம்,*
*இடிக்கில் உலகங்கள்*
*ஏங்கும் - அடுக்கல்ப்*
*பொரும்ஏறோ, ஆனேறோ*
*பொன்ஒப்பாய் நின் ஏ(று)*
*உரும்ஏறோ ஒன்றா*
*உரை.* (43)

---

படி - பூமி. வேம் - பதறி வெதும்பும். இடிக்கில் - குரல் எழுப்பினால். ஏங்கும் - அஞ்சும். அடுக்கல் - மலையில். பொரும் ஏறோ - போரிடும் மதயானையா? நின்ஏறு - நீ ஏறிச்செல்லும் ஊர்தி. ஆன் ஏறோ. காளை தானா. உரும் ஏறோ - இடிமுழக்கத்தோடு கூடிய காளமேகமா. ஒன்றா உரை - இது தான் காளை என்றோ யானை என்றோ ஏதாவது ஒன்றைச் சொல். பொன் ஒப்பாய் - பொன்னுக்குப் பொன்னானே பெருமானே - ஒன்றைச் சொல்.

குறிப்பு : வாகனமே இப்படி என்றால் வாகனத்தில் ஏறிவரும் பெருமானை எப்படி என்று சொல்ல.

காளாக்காலம்மையாரின் பாடல்களை, இரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்னும் பாடல்களைப் பார்த்தோம். ஒவ்வொரு பாடலிலும் அம்மையாரையே பார்த்தோம். அம்மையாரின் எல்லை அற்ற கருணையும், தூய ஞானமும் அப்படியே கவி அவதாரம் எடுத்திருக்கிற அற்புதத்தையே பார்த்தோம்.

அம்மையார் தான் தமிழ். அம்மையார் தான் கவி. அன்பின் திருவுருவம் அவர். பண்பாட்டின் திருஅவதாரம் அவர்.

உண்மையோடு வாழ வேண்டும். நிம்மதியாக வாழவேண்டும் என்றால் அதற்கு வேண்டியது கவி தான். உண்மையான கவிதான். கலைமணம் கமழும் தெய்வப்பாசுரந்தான்.

காரைக்காலம்மையார் பாடல் ஒவ்வொன்றும் தெய்வப்பாசுரமே.

★★★★★★★

இனி, சேரமான் பெருமான் கவிகளும் அப்படியே. உண்மையைக் காண வழிகாட்டும் ஒளிகாட்டும் விளக்கு சேரமான் பெருமானின் பாடல்.

அரசபோகத்தையே தூக்கி எறிந்தவர் சேரமான். அவருடைய வீரத்தைம் தியாகத்தையும் இனிப்பார்க்கப் போகிறோம். சேரமான் பெருமான் கவிமூலமாகத்தான்.

★★★★★★★

# சேரமான் பெருமான் பொன்வண்ணத்தந்தாதி

1) கடவுள் எங்கிருக்கிறார் என்று கேட்டால் உடனே என்ன சொல்கிறோம். "தூணிலும் இருக்கிறார், துரும்பிலும் இருக்கிறார்" என்று சொல்கிறோம்.

என்னில் இருக்கிறார் கடவுள், என்னில் இருப்பது போலவே எல்லாவற்றிலும் இருகுகிறார் கடவுள் என்று சொல்லமுடியவில்லை நம்மால். அது ஏன்?

கடவுளைப் பற்றி உணர்ச்சி, உண்மை உணர்ச்சி இல்லை, வெறும்படிப்பு மட்டும் இருக்கிறது. புள்ளிவிபரம் மட்டும் இருக்கிறது.

உண்மை உணர்ச்சி உள்ளவர்களிடம், நம்பிக்கை உள்ளவர்களிடம் நான் என்னும் ஆணவம் இருக்காது. கடவுள்த்தத்துவம் ஒன்றே இருக்கும். ஒவ்வொரு அம்சத்திலும் கடவுளை அவர்கள் பார்ப்பார்கள். ஒவ்வொரு செயலிலும் கடவுளையே அவர்கள் பார்ப்பார்கள்.

அவர்களையே அவர்கள் பார்ப்பார்கள். அவர்களுக்குள்ளேயே கடவுளை அவர்கள் பார்ப்பார்ப்பார்கள்.

"அடடா, நானாக அல்லவா இருக்கிறான் கடவுள். என்னையே உரித்துவைத்த மாதிரி அல்லவா இருக்கிறான் கடவுள்" என்று அவர்கள் அதிசயிப்பார்கள்.

அவர்கள் தான் அடியார்கள். பக்தர் என்றால் அவர்கள் தான். ஞானியர், ஜீவன் முக்தர் என்றெல்லாம் சொல்வது அவர்களையே.

சோமான் பெருமான் பரமபக்தர். உண்மையோடு ஒன்றித்திளைக்கிறவர். ஞானக் கொழுந்து என்று தான் சொல்ல வேண்டும் சேரமான் பெருமாளை.

சேரமான் பெருமான் எப்படிப் பார்க்கிறார்.

*தன்னைக்கண்ட*
*என்வண்ணம் எவ்வண்ணம்*
*அவ்வண்ணம் ஆகியது*
*ஈசனுக் கே.*

எல்லாம் என் மயந்தான் அவனுக்கு. நான் தான் அவன். அவன் தான் நான். நானென்றும் இல்லை. அவனென்றும் இல்லை. எல்லாம் ஒன்றே.

*தன்னைக் கண்ட*
*என்வண்ணம் எவ்வண்ணம்*
*அவ்வண்ணம் ஆகியது*
*ஈசனுக் கே.*

இனி உருக்கிவிட்ட பொன்னாய் ஒளிர்கிறது அவன் மேனி. பக்கத்தில் படுத்திருக்கும் காளையோ மகாமேருமலைதான். விரிந்த பரந்த அவன் செஞ்சடைக்கு மின் வெட்டுத் தோற்றுப்போகும். கண்ணைப் பறிக்கிற ஒளி அப்படி

இனிப் பாடல்

*பொன்வண்ணம் எவ்வண்ணம்*
*அவ்வண்ணம் மேனி*
*பொலிந்திலங் கும்*
*மின்வண்ணம் எவ்வண்ணம்*
*அவ்வண்ணம் வீழ்சடை,*
*மேருவெற் பின்*
*தன்வண்ணம் எவ்வண்ணம்*
*அவ்வண்ணம் மால்விடை;*
*தன்னைக்கண் ட*
*என்வண்ணம் எவ்வண்ணம்*
*அவ்வண்ணம் ஆகிய(து)*
*ஈசனுக் கே.* (1)

---

மேனி, தோற்றத்தின் பொலிவு. பொலிந்து இலங்கும் மின்வண்ணம் - மேளதாளமுழக் கூத்தோடு கம்பீரமாய் திரையைக் கிழித்தபடியே முகத்தைக் காட்டும் மின்னல். வீழ்சடை - விரிந்து பரந்த சடை. ஆடும் சடை. மால்விடை - சகலசக்திகளுக்கும் ஆதாரமான காளை. அது படுத்திருப்பதே மகாமேரு மலை போலத்தான். வாலை முறுக்கியபடி அது எழுந்து நிற்கிறதோ, சிவனைச் சுமந்தபடி ஓடுகிறதோ அடடா. எப்படி இருக்கும் அது.

2) இனி, ஆணவ வெறிபிடித்தவன் ஒருவன். பழிபாவத்துக்கு அஞ்சாத திருட்டுத்தனங்களில் ஈடுபடுகிறான். முரடர்கள், தடியர்கள் என்று பலரைச் சேர்த்துக்கொள்கிறான். கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்று மேலும் மேலும் கொடுமை செய்கிறான். தட்டிக் கேட்க நாதி இல்லை. அதனால் தலைவனாகி விடுகிறான். வீராதி வீரன் என்றே போற்றுகிறார்கள் அவனை.

அவன் வைத்தது தான் சட்டம். சொன்னது தான் வேதம். ஏன் என்று கேட்கமுடியாது கேட்டால் கேட்டவர் தலை மரத்தில் தொங்கும், நாக்கு ஒரு பக்கம் மூக்கு ஒரு பக்கம் என்று அறுபட்டு வீசப்படும்.

என்ன செய்வார்கள் ஜனங்கள். விம்மி விம்மி அழுகிறார்கள். பொருமிப் பொருமி ஏங்குகிறார்கள்.

---

அந்தக் காளையை ஊர்தியாக உடைய இறைவன் நானாகவல்லவா இருக்கிறான்.

நான் தான் அவன். ஆம் அவனே தான் நான்.

குறிப்பு : எல்லாம் ஒரேநியதிதத்துவந்தான். அது ஒள்றுதான். அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. நான், அவன், அது, இது என்பதெல்லாம் வெறும் பெயரளவுக்குத்தான். உண்மையில் அப்படி எதுவும் இல்லை. இதை விளக்க ரசிக மணி, டி.கே.சி. காட்டுகிற மேற்கோள்.

> "The mind that wishes to behold
> God must itself become God" - Plotinus

நான் தனி என்ற மயக்கம் ஒழிந்தால் ஒழிய விமோசனம் இல்லை.

> "தன்னைக் கண்ட
> என் வண்ணம், எவ்வண்ணம்
> அவ்வண்ணம் ஆகியது
> ஈசனுக்கே."

ஊர், உலகம், காடு, மேடு என்று இவன் கொடுமை பெருகப் பெருக. எங்கோ ஒரு மூலையில் ஒரு குடிசையில் ஒருவன் பிறப்பான். எல்லோரையும் போலவே வளர்வான். வளர்ந்தவன் இவனிடம் கேட்பான் ''ஏன் இப்படி கொடுமை செய்கிறாய். என்று, நீ யாரடா என்னைக் கேட்க என்று அதட்டுவான் இவன். நான் உன்னைப் போல் ஒரு ஆள்தான் என்பான் அவன். என்னடா சொன்னாய்! உள்ளங்கையில் வைத்து கசக்கி ஊதி எறிவேன் உன்னை என்பான் முரடன். இதோ நிற்கத்தானே செய்கிறேன் நான், ஊதி எறி பார்க்கலாம் என்பான் சிறுவன். புலிபோல் பாய்ந்து தொம்சம் பண்ணுவான் முரடன், அவ்வளவையும் தாங்கியபடியே ஒரு குத்துவிடுவான் பையன். ஐயோ என்று விழுந்தவன் ஆவேசமாக எழுந்து போரிடுவான். பாய்ந்தும் பம்மியும், மிதித்தும், உதைத்தும், மோதியும், பின்வாங்கியும், அடித்தும், பிடித்தும் அவர்கள் போடுகிற சண்டையைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம். ஆனால் ஒரு கட்டத்தில் சுழற்றி அடித்துவிடுவான் பையன். கீழே விழுவான் முரடன். அவனை மிதி மிதி என்று மதிப்பான் பையன். மிதிக்கிற மிதியில் கண்விழி பிதுங்கும் முரடனுக்கு. கொஞ்சம் கொஞ்சமாக உயிரை விடுவான் முரடன்.

அப்படி உயிரை விடுகிற முரடன் கை எடுத்துக் கும்பிடுவான் பையனை. ''நான் ஒருபாவி, சண்டாளன், என்னிடமிருந்த பேயை, பிசாசை நீ விரட்டிவிட்டாய். என்றுடைய அரக்கத்தன்மையை ஒழித்துவிட்டாய். என்னை மனிதனாக்கிவிட்டாய். என்னை அடக்கி ஆண்ட ராட்சசன் செத்தான். அடங்கிக் கிடந்த எனக்கு வாழ்வளித்தாய். நீயே கண்கண்ட தெய்வம்'' என்று கும்பிடுவான்.

வென்றவனும் முழுமனிதன் ஆகிவிடுவான். ''பாவத்தை அழித்தேன், புண்ணியத்தை வளர்க்கிறேன் என்று திமிர் கொள்ளமாட்டாள். எதிர்த்தவனை ஒழித்தேன், வெற்றி எனதே'' என்று ஆணவம் பிடித்து அலையவும் மாட்டான்.

நான் என்கிற ஆணவத்தை அங்கேயே அப்பொழுதே அர்ப்பணித்துவிடுவான். அடிபட்டு உயிர்விடுகிறவனை ஏற்றுக்கொள்வான். தன்னவனாகவே ஏற்றுக் கொள்வான். தன்னில் தானே ஏற்றுக்கொள்வான்.

வென்றவர்களும் இல்லை. தோற்றவர்களும் இல்லை. எல்லோரும் மனிதர்களாவார்கள். மேலே மேலே உயர்ந்துபோகும் மனிதப் பண்பு.

இந்தப் பண்பு பாரத தேசத்து கடவுள் (அவதாரங்)கள், முனிவர்கள், அரசர்கள், வீரர்கள் எல்லோருக்கும் பொது. பல்லாயிரம் ஆண்டுகளாய் பாரத சமுதாயத்தின் வாழ்க்கையில், அனுபவத்தில், விளைந்த விளைச்சல் இது.

இப்படி ஒரு அதிசயத்தை உலகில் வேறு எங்காவது பார்க்கமுடியுமா? அப்படியே இன்னொரு அதிசயம். பாரத தேசத்து மன்னர்கள் பலர் வெற்றிமேல் வெற்றி பெற்றார்கள். மனைவி மக்களோடு ஆடம்பரமாய் வாழ்ந்தார்கள். என்றென்றும் இப்படி உல்லாசமாகவே வாழ்வார்கள் என்று நம்பும்படி அப்படி நிறைந்து வாழ்ந்தார்கள். என்ன அதிசயம் / இப்படி வாழ்கிறவர்கள் திடுதிப்பென்று எல்லாவற்றையும் உதறி எறிந்துவிடுகிறார்கள். கோயில் படியை நீர் விட்டு அலம்பி பெருக்கிச் சுத்தம் செய்யும் அடியார்களாகிவிடுகிறார்கள். அடியார்களுக்கு அடியராய் தொண்டு செய்கிறார்கள். கால் நடையாகவே காடும் மேடும் கடந்து கோவில் தோறும் சென்று சுவாமிதரிசனம் செய்கிறார்கள். உள்ளம் உருகி பண்ணோடு பாடுகிறார்கள். தானம் போட்டு ஆடுகிறார்கள். பண்டாரம், பரதேசிகள் போல தெருவிலும், திண்ணையிலும், கோவில் வாசலிலும் தரையில் தானே படுத்துறங்குகிறார்கள்.

சாம்ராஜ்ய தோரணையில் கிடைக்காத நிம்மதியையும் அமைதியையும் பெற்று மக்களோடு மக்களாய் ஆனந்தமாய் வாழ்கிறார்கள்.

இப்படி ஒரு அதிசயத்தை எங்கே காண்பது பாரத நாட்டை தவிர்த்து. உலக அதிசயம் என்றால் இதுவல்லவா அதிசயம். ஆனால் கல்லறையையும் சமாதியையும் காட்டி இதோ பார் உலக அதிசயம் என்கிறது பாழாய்ப்போன நாகரீகம்! அதுவும் ஒரு அதியந்தான்.

★★★★★★★

சேரமான் பெருமான் சக்கரவர்த்தி. வஞ்சிநாட்டு அரசர். பரம்பரை ராஜா. ஆனாலும் ராஜ்யமே வேண்டாம் சிவனடியார்கள் பழக்கமே போதும் என்று வந்துவிட்டார்.

தங்கக் கிரீடத்தையே மண் தரையில் வைத்துவிட்டு சாப்ளாக்கட்டையும் பாட்டுமாக வந்துவிட்டார். மூர்த்தி, அடியார், கோவில் மூன்றுமே அவர் வழிபாடு. அதுவே பாடலாய் வடிவெடுக்கிறது.

★★★★★★★

ஒரு பெண், கொஞ்சவயதுப் பெண்தான். தாயோடு கோயிலுக்குப் போவாள். மூர்த்தியைப்பார்ப்பாள். அபிஷேம், அலங்காரம் எல்லாம் அவளுக்குப் பிடித்துவிட்டன.

சாயங்காலம் ஆனவுடனே புறப்பட்டுவிடுவாள். அம்மா புறப்படத் தாமதமானாலும் இவள் புறப்படுவாள். காந்தம் இழுக்கிறமாதிரி இழுக்கிறார் பெருமான்.

பலசமயம் அப்படியே வயித்து மூர்த்தியின் அலங்காரத்தில் அமிழ்ந்துவிடுவாள். பெண்ணை வீட்டுக்குக் கூட்டி வருவதற்குள் போதும் போதும் என்று ஆகிவிடும் தாய்க்கு. பக்கத்தில் உள்ளவர்கள் எல்லோரும் 'என்ன இது, அதிசயமாக இருக்கிறதே குழந்தையின் காரியம்'' என்று திகைப்பார்கள். தாய்க்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும் அப்பொழுது. ''இந்தப் பேயாண்டி, பிச்சாண்டி இப்படியா மயக்குவான் என் பெண்ணை''. என்று நொந்து கரகரவென்று பெண்ணை இழுக்கிறாள் தாய். பெருமானுடைய நோக்கும் முறுவனுமோ, வா, வா என்று சுண்டி இழுக்கிறது பெண்ணை.

என்ன செய்வாள் அப்பாவி பேதைப் பெண்.

அந்தப் பெண்ணாகவே ஆகிவிட்டார் சேரமான் பெருமான். எப்படி.

ஈசனைக் காண
பலியொரு செல்ல எற்-
றே! இவள் ஓர்
பேயனைக் காமுறு
பித்திகொல் லாம்என்ற
பேதையர் முன்:-

---

பலி - பூசைப்பொருள், காணிக்கை, எற்றே - என்ன கொடுமை. பேயன் - சிவன். பித்திகொலாம் என்று - பைத்தியம் பிடித்த கிறுக்கு என்று என்னை. பேதையர் - மற்றைய பெண்களுக்கு முன்பு; அவர்கள் பார்க்க.

*தாய் எனை ஏர்ப்பத்,*
*தமியேன் தளரஅத்*
*தாழ்சடை யோன்*
*வாஎனைப் புல்லஎன்*
*நான்; இமை விண்டன*
*வாள்க்கண்களே* (2)

3) காதல் என்றால் ஏதோ தமாஷ் மாதிரி விளையாட்டாகத்தான் தெரியும். கையையோ காலையோ விட்டு இறங்கிப் பார்க்கிற பொழுதுதான், அடேயப்பா! இவ்வளவு ஆழமா காதல் என்று புரியும். எத்தனை பொல்லாதது காதல் என்பதும் விரியும்.

புத்தி கெட்டு எப்படி மயங்கச் செய்கிறது காதல். எத்தனை சோதனை, எத்தனை வேதனை காதலில். கண்ணீர் விட்டே கரையவைக்கிறது காதல். ஆனால் ஒன்று இத்தனை துயரங்களுக்கு மத்தியிலும் இன்பம் கிடைக்கிறது. அந்த இன்பமோ துன்பம் முழுவதையும் கரைத்து வடுகிறது. சந்தோசமாய்ச் சிரிக்கவைத்துவிடுகிறது. அந்த இன்பத்தை நினைத்தால் துன்பத்தைச் சந்திக்கிறதே இன்பந்தான். இப்படி ஒரு கண்கட்டிவித்தை (மேஜிக்) காதலில். அதுதான் காதல்.

சேரமான் பெருமானுக்கு ஒரே காதல் சிவ பெருமானிடத்து. இப்பொழுதே தன்னை அவனிடம் அர்ப்பணித்துவிட வேண்டும் என்று துடிக்கிறார்.

காதலுக்கு வேகம் அதிகம். ஒரே ஆத்திரந்தான் அதற்கு. ஆத்திரம் காரணமாகத் தவிப்பு ஏற்படுகிறது. ஏக்கம் வருகிறது, சோர்வே வந்துவிடுகிறது. மனசைக் கொஞ்சம் மயங்கவைக்கத்தானே செய்யும் அது.

மயக்கத்தில் எப்படி வருகிறது பெருமூச்சு? ''மனமே உனக்கு என்ன குறை? கொடுக்க வேண்டியதை அவன் கொடுத்துவிட்டான் அல்லவா? அவன் அணிந்திருக்கும்

---

இமை விண்டன - என்னை மறந்தே. இமை தாரைக மூடியது கண்ணை.

குறிப்பு : அன்பு அன்பு என்று கூப்பாடு போடுகிறது உலகம். ஆனால் எளிதில் கிடைக்கவா செய்கிறது அங்கீகாரம் அன்புக்கு.

மாலையை, கொன்றைமலர் மாலையையே தேமலாக உனக்குக் கொடுத்துவிட்டாள். தலையில் வைத்திருக்கும் கங்கையையே கண்ணீராகக் கொடுத்துவிட்டான் கண்ணுக்கு. மிச்சம் அவனிடம் உன் மத்தம் ஒன்று தான். அதையும் (உன் மத்தம் - பைத்தியம்) உனக்குக் கொடுத்துவிட்டான். வேறு என்ன இருக்கிறது உனக்கு வழங்க அவனிடம்.

இத்தனை பெற்றும் திருப்தி இல்லையே ஏன் என்று நெடுமூச்சுவிட்டு வருகிறது தவிப்பு.

இப்படி எல்லாம் சொல்ல வேண்டும் என்றால் பெண்ணாக மாற வேண்டுடாமா? அப்படியே மாறி, காதல் வயப்பட்ட பெண்ணாக மாறி ஆற்றாமையைக் கொட்டுகிறார் சேரமான் பெருமான்.

இதோ பாடல்.

*செப்பன கொங்கைக்குத்*
*தேமலர்க் கொன்றை*
*நிறம்பணித் தான்.*

*மைப்புரை கண்ணுக்கு*
*வார்புனல் கங்கைவைத்*
*தான்; மனத், துக்(கு)*

*ஒப்பன இல்லா*
*ஒளிகிளர் உன்மத்த-*
*மும்அமைத் தான்.*

*அப்பனை நெஞ்சமே!*
*என்பெறாது நீ நின்று*
*ஆர்க்கினற தே* (3)

---

செப்பு அ(ன்)ன கொங்கைக்கு - உருண்டு திரண்ட செப்பை ஒத்தமார்புக்கு. கொன்றை நிறம் - கொன்றை மலர் போன்ற பசலை நிறம், தேமல், மைப்புரை - மைதீட்டப் பெற்ற. ஒப்பன இல்லா - இணை இல்லாத. உன்மத்தம் - கிறுக்கு, காதல் வெறி - ஆர்க்கின்றது - ஆரவாரம் பண்ணுவது. ''அப்படியா, விட்டேனா பார். ஏமாற்றிவிட்டான் என்னை'' என்றெல்லாம் சத்தம் போட்டுக்கத்துவது.

*4) இரண்டு பொம்மை போதும் குழந்தைக்கு. மாப்பிள்ளை பெண் இருவரும் தயார். மணவறை, வாழை, தோரணம், சந்தனம், புஷ்பம், மேளதாளம். விருந்தினர் கூட்டம், வரவேற்பு, உபசரிப்பு, திருநாண்பூட்டு, வடைபாயச்தோடு கூடிய அறுசுவை உண்டி, நலுங்கு, ஊஞ்சல், பள்ளியறை, பாட்டு, நடனம் என்று ஜாம் ஜாம் என்று நடக்கும் திருமணம்.*

*புளியங்கொட்டை, வேப்பமுத்து, சிறு சிறுகற்கள் இவைகள் இருந்தால் போதும்.இருக்கவே இருக்கிறது பொம்மை. இரண்டு பொம்மை.*

*பட்டணப் பிரவேசத்தையே நடத்தும் குழந்தை.*

*இதற்குமேல் என்னவேண்டும் குழந்தைக்கு. இல்லறம், நல்லறம், கற்பு, களவு என்றெல்லாம் ஆராய்ந்தால் உருப்படுமா காரியம். அது ஒன்றும் தேவைஇல்லை குழந்தைக்கு.*

*குழந்தை வளர வளர கணவன், மனைவி, குழந்தை, குடும்பம், உற்றார் உறவினர், ஊர், தெரு, சமுதாயம், பழக்கவழக்கம், மானம், மரியாதை அவ்வளவும் சேர்ந்தே வளர்கின்றன.*

*மாப்பாச்சி, புளியங்கொட்டை, வேப்பமுத்து, பொடிக் கல் இவையே தோன்றாத் துணையாய் இருந்து உருவாக்கிவிடுகிறது வாழ்க்கையை.*

*இனி வாழ்க்கை இருக்கிறது. குடும்பம் இருக்கிறது. ஊர்உலகம் எல்லாம் இருக்கிறது. சமுதாயம் இருக்கிறது. இவ்வளவையும் வைத்துக் கொண்டு சந்தோஷமாக வாழவேண்டியது தானே மனிதன்.*

*ஒருவருக்கொருவர் ஆதரவாய், உற்றதுணையாய், அன்பாய், வாழவேண்டியதுதானே. அப்படி வாழ்வதற்கு வசதியாய்க் கோவில் இருக்கிறது. மூர்த்தி இருக்கிறார், நந்தவனம் இருக்கிறது, பசுமடம் இருக்கிறது. பக்தி இருககிறது. வழிபாடு இருக்கிறது. படித்தரம் கைங்கர்யம், தொண்டு,*

திருப்பணி எல்லாம் இருக்கின்றன. இவற்றுக்கு மேலே வேறு என்ன வேண்டும்.

பூக்களைத் தொடுத்து மாலை கட்டி இறைவனுக்குச் சாத்தினால் போதாதா, புல்லைப் பிடுங்கி ஒரு கைப்பிடி அளவு பசுவுக்குக் கொடுத்தால் போதாதா? அடியார்களை மதித்து உபசரித்தால் போதாதா? கோவிலைச் சுத்தம் செய்து, நீர்விட்டு, பெருக்கி, மெழுகினால் போதாதா.

பொறுமை தானாக வந்து விடும். எளிமை, அடக்கம், பணிவு, இன்சொல், அன்பு, தியாகம் எல்லாம் வந்து விடும். நமக்குத் தெரியாமலே நம்மிடம் வந்துவிடும். எல்லாம் அவள் செயலே என்னும் ஞானமே வந்து விடும்.

கடவுளே இந்தப் பண்பாடு தானே. இவைகளை விட்டு விட்டு ''எங்கே கடவுளை'' என்று தேடினால் உருப்படுமா காரியம்.

கண்ணை வைத்துக் கொண்டே கண்ணைக் காணவில்லையே என்கிற கணக்குத்தான் கடவுளைத் தேடுகிறேன் என்று அலைவது.

கடவுளைக் காணவேண்டும் என்றால் நிம்மதி வேண்டும். அமைதி வேண்டும். பேராசையும், வெறுப்பும், பயமும் ஒழிந்தால் தான் நிம்மதி. ஒருவருக்கொருவர் அன்பாய், ஆதரவாய், துணையாய் இருப்பதுதான் அதற்குரியவழி.

கோவில், மூர்த்தி, வழிபாடு, அடியார் உறவு, உத்சலம், தொண்டு எல்லாம் நம்மிடம் இருக்கத்தானே செய்கின்றன. இவற்றையல்லவா பார்க்கவேண்டும். இவற்றையல்லவா உபசரிக்கவேண்டும். வளர்க்க வேண்டும்.

பக்தி இருந்தால் போதும். எல்லாம் ஒழுங்காக நடக்கும்.

*கூறுமின் ஈசனைச்,*
*செய்ம்மின்குற் றேவல்,*
*குளிர்மின்கண் கள்,*
*தேறுமின் சித்தம்,*
*தெளிமின் அருளைச்,*
*செறுமின்செற் றம்,*
*ஆறுமின் வேட்கை,*
*அறுமின் அவலம்*
*இவைநெறி யா*
*ஏறுமின் வானத்(து)*
*இருமின் விருந்தா*
*இமையவர்க் கே.* (4)

*5) காதல் என்றால் அது உள்ளத்தை உருக்குகிறது. உணர்ச்சியையே கண்ணீராய்க் கரைத்துவிடுகிறது. அப்படி என்றால் பொருள் என்ன? ஆணவம் தேய்கிறது. அது மேலும் தேய்கிறது. மேலும் மேலும் தேய்ந்து இல்லாமலே போய்விடுகிறது ஆணவம்.*

*இல்லாமல்ப் போய்விடுகிறது என்றால் இரண்டு ஒன்றாகிவிடுவது தான். நான், அது என்கிறபேதம் நீங்கிவிடுவதுதான்.*

*அர்ப்பணிப்பு என்றால் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் ஒப்படைப்பதுதான். நாயகனும் நாயகியும் அப்படித்தானே ஒப்பாக ஒப்புவிக்கிறார்கள். ஒன்றாகிறார்கள்.*

---

*கூறுமின் ஈசனை - இறைவன் ஒருவன், அவன் ஒருவனே என்று நம்புங்கள். அதையே அனுபவியுங்கள். அனுபவித்ததை ஆனந்தமாகப் பாடி ஆடிச் சொல்லுங்கள். குளிர் மின்கண் - கோவிலை விட, மூர்த்தியை விட எது குளிர்ச்சி கண்ணுக்கு. செறு மின் செற்றம் - வெறுப்பை, பகையை விரட்டிவிடுங்கள். ஆறு மின் வேட்கை. நமக்குத்தான் அது என்று ஒன்றை ஆசைப்பட்டால், கிடைக்கும் வரை மனதை அது சுட்டெரிக்கும். எதற்கு அந்த ஆசை. சுய நலம். தள்ளுங்கள் குப்பையை. இவை நெறி - வாழும் நெறி இதுதான். இப்படிவாழ்ந்தால் ஞானிகள் போற்ற ஆனந்தமாக இருக்கலாம் அதுதான் வீடுபேறு.*

பக்தியும் அந்தக் காதல் தான். இறைவனிடம் பக்தன் தன்னை அர்ப்பணிக்கிறாள், கோட்டு, டர்பன், டானாக்கம்பு, கடிகாரம், பஞ்சகச்சம் இவ்வளவையும் கழற்றி வைத்துவிட்டா ஒப்படைப்பாள். அப்படியே அவனோடு சங்கமிப்பதுதான் அர்ப்பணிப்பு.

சிவபெருமானிடம் ஒரே காதல் சேரமான் பெருமானுக்கு. காதல் வளர வளர என்ன ஆயிற்று. நான் என்பதே போய்விட்டது. நமக்கும் அப்படியே. இன்னார் மகன் இன்னார் என்னும் விலாசம் போய்விடும். பி.எ.எம்.எ. என்று போடுகிற பட்டமும் போய்விடும், எம்.எல்.ஏ. எம்.பி. அமைச்சர், நீதிபதி, ஆணையாளர் என்கிற உத்யோகம் எல்லாம் போய்விடும்.

நீயே உண்மை என்று அவனை வழிபட வழிபட கிடைப்பது இதுதான்.

எக்களிப்பும் பெருமிதமும் அப்படிச் சிரிப்பாய், உல்லாசமாய், ஒரு வகை மிதப்பில் வருகிறது தமிழில், அதாவது கவியில்.

காதல் வெறியில் வளையல் நழுவுவது கூடத் தெரியாமல், ஆடைசரிவது கூட உணர்வில்லாமல் அப்படியே விழுங்குவது போலப்பார்க்கும் மடமங்கையின் நிலை தான் பக்தியின் நிலை.

''தேவனைச் தில்லைச்
சிவனைத் திருந்தடி
கைதொழு து
தீவினை யேன்இழந்-
தேன்கலை யோடு
செறிவளை யே''

சும்மா இருக்கக் கூடாதா நான். ''நீ தான் தஞ்சம் என்று பெருமானைக் கும்பிட்டுக் கூத்தாடினேன். அதற்குக் கிடைத்த பலன் இது.! கலை - சேலையைக் கட்டிவைத்திருகிற ஒட்டியாணம்.

சரிசரி, போகிறது போகத்தான் செய்யும். இழுத்துப்பிடித்தாலும் நிற்காது. நகம் வளர்வதைக் கூடத் தடுத்து நிறுத்த முடிகிறதா? அதுபோலத்தான். போவதையும் தடுத்து நிறுத்த முடியாது.

*ஆவன யாரே*
*அழிக்கவல் லார்; அமை*
*யாஉல கில்ப்*
*போவன யாரே*
*பொதியகிற்பார்; புரம்*
*மூன்றெரித் த*
*தேவனைத் தில்லைச்*
*சிவனைத் திருந்தடி*
*கைதொழு து*
*தீவினை யேன்இழந்*
*தேன்; கலை யோடு*
*செறிவளை யே!* (5)

6) கோவிலுக்குப் போய்ப் பார்த்தால், மூர்த்தியாய் எழுந்தருளி இருக்கிற இறைவனைப் பார்த்தால் ஆடாமல் அசையாமல் சும்மா இருக்கிறதாகவே தெரியும். அதுவும் அபிஷேகம் நடக்கிறபொழுதும், அலங்காரம் பண்ணுகிற பொழுதும் கையைக் காலைக் கூட அசைக்கமாட்டார். ஏதோ பிடித்தவைத்த பிள்ளையார் மாதிரியே தெரிவார். களிமண்ணைக் கொண்டு பிடித்துவைத்த பிள்ளையாராகவே தெரிவார்.

---

ஆவனயாரே அழிக்கவில்லார் - வருகிறது வந்து தான் தீரும். தடுக்க முடியாது ஒருவராலும். மழை வருகிறதென்றால் வராதே என்று சொல்லி நிறுத்தமுடியுமா. அமையா உலகில் - ஒன்றிலும் திருப்தி இல்லை. அதுபோதாது இதுபோதாது என்று தவிக்கிற இந்த உலகில். யாரே பொதிய கிற்பார் - பொதிந்து நிறுத்திவைக்கிறவர் ஒருவரும் இல்லை. புரம் மூன்று - ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று தத்துவங்கள். கலை - மேகலை. உடையை உடலோடு சேர்த்துக் கட்டி அவிழவிடாதபடி காக்கும் ஒட்டியாணம். செறிவளை - கைக்கு இறுக்கமாகத்தான் போட்டிருந்தது வளையவை. ஆனாலும் கழன்று விட்டது வளையல். நழுவிவிட்டது மேகலை. பூட்டற்று நழுவிவிட்டது.

குறிப்பு : தன்னை மறந்தால், தன்னையே இழந்தபின் என்ன இருக்கும் மிச்சம்.

பக்தி ரசம் நெளிந்து வளைந்து ஓடுகிறதைப் பாடலில் பார்க்கலாம். எதுகையிலும் மோனையிலும் துள்ளி விளையாடுகிறது பக்தி. இசையும் தாளமும் அப்படியே.

ஆனால் சும்மாவா இருக்கிறார் இறைவன். ஒரு நொடியில் பதினாயிரம் கோடி பங்கு வைத்தாலும் அந்த நொடியில், நொடியில் நொடியில்க் கூட சும்மா இருப்பதில்லை அவர்.

அவர் ஆடிக்கொண்டே இருக்கிறார். நடனம் ஆடிக்கொண்டே இருக்கிறார். ஆனந்தமாய் நடனம் ஆடிக்கொண்டே இருக்கிறார்.

அணுவுக்குள் அணுவிலிருந்து, பரமாணுவிலிருந்து அண்டம், பேரண்டம் பிரபஞ்சம் முழுவதும் நடனந்தான். ஆடாமல் சும்மா இருக்க முடியாது அவரால்.

தேகதத்துவத்தை எடுத்துக் கொண்டால் அதன் ஒவ்வொரு அணுவும் இறைவன் நடனம். ஆடும் நடன சபை தான் பொன்னம்பலம்தான். இதயத்துடிப்பு, நாடித்துடிப்பு, ரத்தஓட்டம். உச்சி முதல் உள்ளங்கால்வரை நடக்கிற ஏற்ற இறக்கம் எல்லாமே நடனந்தான். மூச்சை இழுத்து விடுகிற உயிரோட்டமும் நடனந்தான். உணர்ச்சியில் எழுகிற சுழல், குமிழ், அலை, வேகம், மோதல், பின்வாங்கல் எல்லாம் இறைவனின் ஆடல் அரங்கு தான்.

சமுத்திரம் துளித்துளியாய், ஆவியாய் மேலே போகிறது. அது என்ன? நடனம் இல்லையா? மேகம், இடி, மின்னல், மழை எல்லாம் நடனம் இல்லையா? ஒவ்வொர சொட்டுத் தண்ணீரிலும் எப்படி நடக்கிறது அந்த ஆனந்த நடனம். பூமிக்குள்ளிருக்கிற நீர் மரத்தைத் துளைத்துக் கொண்டு உச்சிவரை போகிறது. அத்தனை இலைகளுக்குள்ளும் ஓடியாடிவிளையாடுகிறது.

இதைவிட வேறு என்ன நடனம் வேண்டும். பூமி, சூரியன், நட்சத்திரம் எங்கும் நீக்கமற நிறைந்து நடக்கிறது நடனம். எங்கும் எப்பொழுதும் நடந்து கொண்டே இருக்கிறது நடனம்.

*அண்டம் எழுகோடி,*
*அகண்டம் எழுகோடி*
*தெண்திரை சூழ்ந்த*
*திரங்கம் எழுகோடி*
*எண்திசை சூழ்ந்த*
*இரங்கம் எழுகோடி*
*அண்டன் நடம்செயும்*
*ஆலயம் தானே.* (திருமந்திரம்)

என்று திருமூலர் சொல்வது சத்தியவாக்கு மட்டுமல்ல. சத்திய தரிசனம்.

இறைவன் ஆடிக்கொண்டே இருக்கிறான். எல்லாவற்றிலும் ஆடுகிறான். எப்பொழுதும் ஆடுகிறான்.

அப்படி எங்குமாய் ஆடுகிற பெருமானை ஏதோ சிதம்பரத்தில் ஆடுகிறான், மதுரையில் ஆடுகிறான், திருவாலங்காட்டில் ஆடுகிறான் என்று குறிப்பிட்டு ஏன் சொல்ல வேண்டும்.

பேரண்டம் முழுவதும் தொடர்ச்சியாய் ஆடுகிற ஆட்டத்தை நிறுத்தி விட்டு தனியாக அங்கே இங்கே என்று வந்து ஆடினால் பிரபஞ்சம் முழுவதின் கதி என்ன? சுக்கல் சுக்கலாய் நொறுங்கிச் சிதறிவிடாதா பேரண்டம் அத்தனையும்? மேலும் இன்னொன்று.

அண்டபிண்டசராசரம் அவ்வளவும் இறைவனுடைய திருநடனம் ஒன்றே. அந்த நடனத்தைத் தவிர்த்து ஒன்றும் இல்லை.

அப்படி என்றால் அவன் தனியிடத்தில் ஆடுகிறான் என்றால் அது யாருக்காக. யார் பார்ப்பதற்காக.

இது என்ன வேடிக்கை என்று வியக்கிறார் சேரமான் பெருமான்.

எப்படி.

*கலங்கின மால்கடல்;*
*வீழ்ந்தன கார்வரை;*
*ஆழ்ந்தது மண்;*
*மலங்கின நாகம்;*
*மருண்டன பல்கணம்;*
*வானம்கை போய்*
*இலங்கின; மின்னொடு*
*நீண்ட சடை; இமை*
*யோர்இரிந் தார்;*
*அலங்கனல் மாநடம்*
*ஆர்க்கினி ஆடுவ(து)*
*எம்கிறை யே?* (6)

கார்வரை - மேகம் சூழ்ந்த கருமலைகள். மண்-பூமி, உலகம். மலங்கின நாகம் - மயக்கத்துக்காளாகிவிட்டன திசையா? னைகள் எட்டும். பல்கணம் - பூதகணங்கள். கைபோய் - செயலற்று. இரிந்தார் - பதறிவிட்டார்கள். வானம், பூமி, மலை, கடல், மழை, இடி, மின்னல், யானை, தேவர், பூத கணம் எல்லாம் உம் நடனத்தை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. அப்படி இருக்க, அலங்கு அனல் மாநடம் - கொழுந்துவிட்டெரியும் அக்கினிமயமான ஒளிநடனம். இனி யாருக்காக ஆடப் போகிறீர்.

குறிப்பு : நடனத்தைத் தவிர்த்து வேறு ஒன்றும் இல்லையோ என்று வியக்கவைக்கிறது செய்யுளின் ஓசை. அதன் நடையிலேயே நடனத்தின் அதிகாரம், தோரணை, வேகம், வீச்சு எல்லாம் கிடக்கின்றன.

பேரண்டமே இறைவன் தான். அவன் கனவில் தோன்றிமறைவதுதான். ஆனாலும் ஆதினா நட்சத்திரத்துக்கு உரியவன் இறைவன் என்று சொல்கிறது உலகம்.

*"மன்னிய நாண்மீன்*
*மதிகளலி இன்றிவற்றை*
*முன்னம் படைத்த*
*முதல்வனை - பின்னரும்*
*ஆதிரையான் ஆதிரையான்*
*என்றே அயருமால்*
*மூதினாநீர் வேலி*
*உலகு.*

பைத்தியக்கார உலகந்தான். பிடித்த பைத்தியம் உலகத்தை விடமாட்டேன் என்கிறது. இல்லை என்றால் தில்லை நடராஜன், ஆதிரையான் என்று பெயர் சூட்டுமா உலகம்.

7) இடத்தால் எங்குமாய் காலத்தால் ஒரே. தொடர்ச்சியாய் நிறைந்திருக்கிறது கடவுள்த்தத்துவம் அருளென்றும் சொல்லலாம், சக்தி என்றும் சொல்லலாம். ஞானம் என்றும் சொல்லலாம் அதை.

ஏதோ ஒரு செளகர்யம் கருதி சிவன் என்கிறோம். ராமன் என்கிறோம். முருகன் என்கிறோம். கிருஷ்ணன் என்கிறோம். அந்த ஒரே வஷ்துவை.

நியதி என்றும், கடவுள் என்றும் பட்டுக்கொள்ளாமல் கழிவாகவும் சொல்கிறோம்.

உண்மை, நீதி, கருணை என்றெல்லாம் சொல்கிறோம்.

எப்படிச் சொன்னால் என்ன. அது ஒன்று. ஒன்றே ஒன்று. அந்த ஒன்றே நாமாக உருவெடுத்தது. நம் தாய் தந்தையாகவும், பாட்டன் பாட்டியாகவும் உருவெடுத்தது. நம் மகன், மகளாகவும், பேரன் பேத்திகளாகவும் உருவெடுக்கிறது.

உடம்பு, உயிர், உணர்ச்சி என்று மூன்று தத்துவங்களாகத் தெரிகிறோம் நாம். இந்த மூன்று தத்துவங்களும் அதுதான்.

உடம்பை எடுத்துக்கொண்டால் கை, கால், தலை, வாய், கண், மூக்கு என்று எத்தனையோ அங்கங்கள். அவ்வளவும் அந்த அரிய வஷ்து தான்.

அப்படியே மனம், புத்தி, அன்பு, தொண்டு எல்லாம் அது தான்.

அப்படியானால் நம்மிடம் உள்ளது, நமது என்று உள்ளது எது. அதுவா ''நான் என்கிற ஆணவம் ஒன்றுதான். ஆணவத்தை தவிர எல்லாம் அந்த அரிய வஷ்துதான். இனி ஒன்றும் இல்லாத நம்மை இப்படி உயிர், உணர்ச்சி, உடம்பு என்று பொருத்தி உருப்படியாக்கிய அந்த அரிய வஷ்துவுக்கு கடவுளுக்கு நாம் ஏதாவது கொடுக்க வேண்டாமா? வேண்டுந்தான். என்ன இருக்கிறது கொடுக்க நம்மிடம்?

ஆணவம் ஒன்று இருக்கத்தானே செய்கிறது. அதையே காணிக்கையாகக் கொடுத்துவிடலாம். அது தான் முறை.

அந்த ஆணவத்தை எப்படி அர்ப்பணிப்பது அவனிடம், ஆணவத்தை இறைவனுடைய திருவடியில் சமர்ப்பித்து ஆனந்தத்தில் திளைக்கிறவர் சேரமான்.

அதைத் தமிழிடம் சொல்லி தமிழை உத்சாகப்படுத்துகிறார்.

எப்படி.

*சிந்தனை செய்ய*
*மனம் அமைத் தேன்; செப்ப*
*நாஅமைத் தேன்;*

*வந்தனை செய்யத்*
*தலை அமைத் தேன்; கை*
*தொழ அமைத் தேன்;*

*பந்தனை செய்வதற்(கு)*
*அன்பமைத் தேன்; மெய்*
*அரும்பவைத் தேன்;*

*வெந்தவெண் ணீறணி*
*ஈசற்(கு) இவையான்*
*விதித்தன வே!* (7)

---

செப்ப - சொல்ல, பாடி வழிபட. வந்தனை செய்ய - வணங்கிவழிபட. பந்தனை செய்வதற்கு - பக்திக்காக. பக்தியில் உள்ளம் உருகவும், அதனால் அவனோடு ஒன்றுபடவும். மெய் அரும்பவைத்தேன் - உடம்பு விதிர்விதிர்த்துவேர்க்க பரவசத்தில் திளைத்தேன். வெந்த வெண்நீறு அணி ஈசன். சிவபெருமான். ஆணவம் வெந்து நீறிய வெண்பொடி. திருநீறு.

குறிப்பு : எல்லாம் ஈசன் செயல். என்று தன்னை அர்ப்பணிப்பது தான் ஆணவத்தைவிடுவது. காணிக்கையாகக் கொடுப்பது. அதற்கு நளினமான சொகுசான உருவம் கொடுக்கிறது தமிழ். செய்யுளில் அது தெளிவாய்க் கிடக்கிறது.

# சேரமான் பெருமான்

## திருவாரூர் மும்மணிக்கோவை

*1) கவி என்றால், கலை என்றால் அதில் கவிதான் இருக்கும். கலைதான் இருக்கும். கவியைத் தான் பார்க்க வேண்டும். கலையைத் தான் பார்க்க வேண்டும்.*

*கவிப் பண்பை, கலைப் பண்பைவிட்டு, பௌதீகத்தைக் காணவில்லையே, ரசாயனத்தைக் காணவில்லையே என்று தேடுவது அநாவசியம். காய்ச்சல், மண்டையடிபோன்றதேக தத்துவத்துக்கு உரிய மருத்துவத்தையோ, சோதிடத்தையோ, கவியில் தேடி அலைவது அதிகப் பிரசங்கித்தனம்.*

*விவசாயம், வியாபாரம் போன்ற சம்பாத்ய முறையைத் தேடுகிறேன் கவியில், என்பது போக்கிரித்தனம் அதைவிட அரசியலை, பொருளாதார இயலைக் கண்டு பிடிக்க ஆராய்கிறேன் கவியில் என்பது அயோக்யத்தனம்.*

*தன்னுணர்வு இல்லாமை என்பது இதுதான். கவியில் கவியைப் பார்க்காமல் வேறு எதை எதையோ தேடி அலைவது பைத்தியகாரத்தனந்தான். தேடி அலைவது மட்டுமல்ல, தேடியது அகப்பட்டது போலவும், அதைப் பார்த்ததுபோலவும், பார்த்ததைக் கையில் எடுத்துக்காட்டுவது போலவும் நடிக்கிற நடிப்பு இருக்கிறதே அதைப் பேய்த்தனம் என்றுதான் சொல்ல வேண்டும்.*

*சங்கீதத்தில் சங்கீதத்தையே பார்கவேண்டும். அதுதான் அதில் இருக்கும். மற்றப்படி டிராக்டரோ, ஏரோப்பிளானோ அதில் இருக்காது. நாட்டியத்திலும் அப்படித்தான்.*

*பக்குவமாகக் கிண்டி இறக்கிவைத்த அல்வாவைச் சாப்பிடக் கொடுத்தால் சாப்பிடவேண்டியதுதானே. சாப்பிடாமல், அதைமேலும் கிண்டிக் கிளறி அதில் பேங்க் டிபாசிட் கணக்கு இருக்கிறதா, வட்டித் தொகை என்ன போட்டிருக்கிறது, பேலன்ஷ் என்ன என்று தேடிப் பார்க்கலாமா? பார்த்தால் அது தலைக்கு ஏறிய பித்தந்தானே.*

கிறுக்கு விலகாவிட்டால் அல்வாபோய்விடும். வங்கியின் இருப்புத் தொகையும் கண்ணுக்குத் தெரியாது.

பாடகர், நடிகர் ஒருவரும் தேவை இல்லாததை தேடமாட்டார்கள், இருக்கிறதை அனுபவிப்பார்கள். கவியைப் பார்க்கிறவர்கள், அனுபவிக்கிறவர்களும் அப்படித்தான். ஆனால் போலிப் புலவர்கள், பண்டிதர்கள், வித்வத் சரோமணிகள் மட்டும் அது இது என்று தேடுகிறார்கள். எல்லாம் கவியில் தான்.

காரணம் இவர்களுக்கு அனுபவம் வேண்டியதில்லை, ஆனந்தம் தேவை இல்லை. ஆராய்ச்சி தான் வேண்டும். ஆராய்ச்சியில் ஒன்றைக் கண்டுபிடிக்கவேண்டும். அதுவும் இல்லாத ஒன்றையே கண்டுபிடிக்கவேண்டும். காணமலே கண்டு கொண்டேன் என்று கூப்பாடு போடவேண்டும்.

கவித் தெய்வத்தின் விளைப் பயன் தான் என்று சொல்லவேண்டும் இதை.

கவியில் கவியையே பார்க்கவேண்டும். பார்க்கப் பார்க்க மனிதர்கள் தெரிவார்கள் கவியில். அவர்களுடைய உணர்ச்சி தெரியும். அவர்களுடைய வாழ்க்கை தெரியும், அவர்களுடைய சிரிப்பு, கண்ணீர், எல்லாம் தெரியும் வாழ்க்கையின் மேடு பள்ளம், முண்டு முடிச்சு எல்லாம் தெரியும். தெரியத்தெரிய நாம் அவர்கள் ஆகிவிடுவோம். மனிதர்களாகவே ஆகிவிடுவோம் நாம். நம்மையே நாம் பார்க்கிறது அது தான்.

தத்துவக்கலையின் சிகரம் என்று சொல்கிறார்களே 'தன்னை அறிதல்' என்பது பற்றி. அந்த மெய்ஞ்ஞானமே இது தான். சத்திய தரிசனந்தான். சத்திய தரிசனத்தால் என்ன பலன்? இதோ திருமூலர் சொல்கிறார்.

*தன்னை அறிந்திடும்*
*தத்துவ ஞானியர்*
*முன்னை வினையின்*
*முடிச்சை அவிழ்ப்பார்கள்.*

பழவினைப் பயனை நெருங்கவிடாதபடி அவிழ்த்து உதறி எறிந்தாகிவிட்டது. அதன்பின்.

*பிள்ளை வினையைப்*
*பிடித்துப் பிளசவர்கள்.*

வேண்டாத செயலில் ஈடுபடத்துடிக்கும் வேகத்தின் கழுத்தை நெறித்து விடும்படியான வலுவே வந்துவிடும்.

நான் மனிதன். மனித சமுதாயத்தின அங்கம் என்பது விளங்கிவிட்டால் நானே சமுதாயம், சமுதாயமே நான் என்பது விலங்கிவிட்டால் பிறகு, கடவுள் தனி, நான் தனி என்கிற அறியாமைக்கு இடம் ஏது?

கடவுளையே கண்டுவிடலாம். கடவுளில் நான். என்னில் கடவுள் என்கிற ரகசியம் தெரிந்துவிடும்.

கவியைக் கவியாகப் பார்க்கவேண்டும். கவியை அனுபவிக்க வேண்டும். பாடி அனுபவிக்க வேண்டும். ஒரே ஆனந்தமயந்தான். அந்த ஆனந்தந்தான் கடவுள்.

எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும் அதற்கு. தெய்வ கடாட்சம் என்றால் அதுதானே. அது இருந்தால் எது இல்லை.

*தன்னை அறிந்திடும்*
*தத்துவ ஞானியர்*
*முன்னை வினையின்*
*முடிச்சை அவிழ்ப்பர்கள்,*
*பிள்ளை வினையைப்*
*பிடித்துப் பிசைவர்கள்*
*சென்னியின் வைத்த*
*சிவன்அரு ளாலே* (திருமூலர்)

சேரமான் பெருமான் ஆன்ம தத்துவம், கடவுள்த் தத்துவம் இரண்டிலும் தோய்ந்து ஒன்றித் திளைக்கும்பக்தர். அவரே கவியாக வருகிறார். அவர் பக்தியே கவியாக வருகிறது.

எப்படி என்று பார்க்கலாம். காதலர் சேர்ந்திருப்பதற்கு உகந்த காலம் மழைக் காலம் என்பது ஐதீகம். சேர்ந்திருக்கும் காதலர்களுக்கு இன்பமே மழையாகப் பொழியும்.

சிவந்த நிறத்தோடு கூடிய தோன்றிப்பூ, காந்தள் மலர் மழைக் காலத்தில் ஏகமாகப் பூக்கும். மழை இருட்டுக்கு வெளிச்சம் போல அவை பூக்கும். மழை மேகத்தைப் பார்த்தாலே போதும் தோகையை விரித்து மயில் ஆடும். என்ன இருந்து என்ன பலன். நாயகன் உடன் இருந்தால் தானே அத்தனையும் ஆனந்தமாக இருக்கும். அப்படி இல்லை என்றால், தனிமையில் என்ன பாடுபடும் மனம். சாரல், தூறல், வாடை இத்தனையும் ஒத்துப்பேசி சுட்டுப் பொசுக்கத்தானே செய்யும் பிரிவில் வாடும் இளம் தளிரை.

அப்படித் தவிக்கும் ஒரு பெண்ணின் பரிதாப நிலை.

*துயிலாநோய் யாம்தோன்ற,*
*தோன்றித்தீத் தோன்ற,*
*மயில்ஆல வந்ததால்*
*மாதோ - அயலாய*
*அண்டத்துக்(கு) அப்பாலான்*
*வெண்திங்கள்க் கண்ணியாள்*
*கண்டத்துக்(கு) ஒப்பாய்*
*கார்.* (8)

2) ஒழுங்காகவும் நாணயமாகவுமே இருந்தது காதல். தொடர்ந்து அப்படித்தான் இருந்தது. வயதாக வயதாக பித்தலாட்டம் வந்துவிட்டது காதலிடம்.

---

துயலா நோய் - தூக்கம் இல்லாமல்ப் படும் துன்பம். யாம் தோன்ற - என்னைப் பிடித்து ஆட்ட. தோன்றி தீ - தோள்றி மலர் என்னும் நெருப்பு. அயலாய அண்டத்துக்கு அப்பாலான் - எட்டாத தூரத்தில் உள்ள அண்டங்கள் எல்லாவற்றுக்கும் அப்பால் இருக்கிறவன். அப்பாலுக்கப்பாலாய் இருக்கிற பெருமான். கண்டத்துக்கு ஒப்பாய கார் - அவனுடைய கழுத்துப் போன்ற, நஞ்சுண்ட கழுத்தைப்போல் கறுத்த. கார் - மழைமேகம்.

குறிப்பு : எல்லாம் இருக்கிறது. வசதியாகத்தான் இருக்கிறது. சேர்ந்திருக்கவேண்டிய நாயகன் பிரிந்து போயிருக்கிறான். மழைக்காலம் வந்தும் திரும்பி வரவில்லை அவன். அப்படி என்றால் அத்தனையும் தொந்தரவாக, சுமையாக, நோயாகத்தானே இருக்கும். குளிர்ந்து தண்ணென்ற மலர் கூடத்தீச்சுவாலையாகவே இருக்கும்.

பிரிவாற்றாமைக்கு கவி உருவம் கொடுக்கிறது தமிழ். பாடினால் அது தெரியும். பாடப்பாடத்தான் தெரியும். அது ஒன்றையே பார்க்கவேண்டும்.

பொய் சொல்வது, ஏமாற்றுவது, பாவலாப் பண்ணுவது, கள்ளச் சத்தியம் பண்ணுகிற அளவுக்கே போய்விட்டது காதல்.

காதலில் மட்டும் என்ன, பக்தியில் கூட அப்படித்தான். மனுச காரியம் என்றால் ஒவ்வொன்றும் அப்படி அப்படித் தான்.

கண்ணுக்கு நிறைந்திருக்கிறாள் மனையாள். கருத்துக்கும் அவள் தான் நிறைவு. வீட்டுக்குத் தீபம் அவள் தான்.

அவள் அழகாக இருப்பது கணவனுக்காகத் தான். அறிவு பெருகி இருப்பதும் அவனுக்காகத் தான். கணவன், குழந்தை வீடு இவை தான் லட்சியம் பெண்ணுக்கு.

எல்லாவற்றுக்கும் மேலே ''நீ தான் தஞ்சம் என்று அடைக்கலமாய் வந்தவன் மனைவி.'' அப்படிப்பட்ட மனைவியையே ஏமாற்றுகிறான் கணவன். காதல்க்கிழத்தி, காமப்பெண்டிர் என்றெல்லாம் அலைந்து திரிகிறாள். மனையாளை ஏமாற்றுகிற காரியந்தான் எல்லாம்.

இந்தக் கொடுமைக்குக் காரணம் செல்வச் செழிப்பா, இல்லை வறுமையின் கொடுமையா? அறிவின் பெருக்கமா, இல்லை அறியாமையா? எதை என்று சொல்ல? மனிதர்கள் நிம்மதியாகவே இருந்துவிடக் கூடாதென்கிற ஆத்திரம் விதிக்கு. அதற்காக விதவிதமான அம்புகளை அது கையில் வைத்திருக்கிறது. சந்தர்ப்பம் பார்த்து ஒவ்வொரு பாணமாக எடுத்து எய்கிறது.

வேறு என்ன சொல்ல? விதியின் திருவிளையாடல் என்றுதான் சொல்லவேண்டும்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் மனையாளுக்கு வஞ்சகம் பண்ணுகிறவர்களில் சாதாரணமானவர்களிடம் வெட்கம் இருக்கும். லஜ்ஜை இருக்கும். வசதி படைத்தவன், அதிகாரம் மிக்கவன், பேரறிஞன், கலைஞன் என்றால் பெரும்பாலும் அவர்களிடம் அது இருக்காது.

காமக் கிழத்தி, காமப் பெண்டு இவர்களுடன் தாராளமாக உறவாடுவார்கள். பலர்காண அவர்களுடன் பவனி வருவதில் இவர்களுக்கு ஏகப்பட்ட ஜம்பம். அதுமட்டுமா? இது சம்பந்தமாக மனைவி எதாவது தடபுடல் பண்ணினால் மனைவியைச் சமாதானப்படுத்த தூது அனுப்புவார்கள் இவர்கள்.

காமம் கிழத்தியரைச் சரிக்கட்டவும் அதே தூதைப் பயன்படுத்துவார்கள் இவர்கள்.

தூது போய்க் காரியத்தை முடிக்கிற ஆசாமிக்கு 'மாமா' என்று பெயர். முன் காலத்தில் பாணர் என்று பெயர்.

தூது வந்து புளுகுகிறான், பாணன். அவனிடம் என்ன சொல்கிறாள் பெண். வீட்டுக்கு ஒளி விளக்காகிய மனையாள்.

*பாலாய சொல்லியர்க்கே*
*சொல்லுபோய் பாண்மகனே!*
*ஏலா இங்(கு) என்னுக்கு*
*இருக்கின்றாய்? - மேலாய*
*தேம்தண் கமழ்கொன்றை*
*செஞ்சடையான் தூள்சூடும்*
*பூந்தண் புனலூரான்*
*பொய்!* (9)

---

*பாலாய சொல்லியர்க்கே சொல்லுபோய் - தேன் சொட்டச் சொட்ட சிரித்துச் சிரித்து மயக்கிப் பேசுகிறவர் (காமப் பெண்டி) களிடம் போய்ச் சொல். ஏலா இங்கு என்னுக்கு இருக்கின்றாய் - ஏன் வெட்டிப் பேச்சுப் பேசி நேரத்தைக் கடத்துகிறாய். ஏலா விணாக - நீ என்ன சொன்னாலும் நான் நம்பமாட்டேன். தேம்தண்கமழ் கொன்றைச் செஞ்சடையான் - சிவபெருமான். தேன் சொட்டும் குளிர்ந்த கொன்றை மலர் மாலையணிந்த பெருமான். தேம் - தேன். தாள் சூடும்ட வேளாவேளைக்குக் கோவிலுக்குப் போய் சாமி கும்பிடும் அந்த (சிவ) பக்தனுடைய.* ***பூந்தண்புனல் ஊரன்பொய்*** *- வயலும் தோப்பும் சூழ்ந்தவனமான பண்ணையார் பொய்யை நம்பி ஏமாறுகிறவர்களிடம் போய்ச் சொல்.*

*குறிப்பு : தூது விட்டவன் கணவன் தான். இறைவனை ஒழுங்காக வழிபடுகிறவறும் கூடத்தான். ஆனால் அவன் காதலிலும் உண்மை இல்லை. பக்தியிலும் உண்மை இல்லை. அவன் பொய்க்கு வக்கலாத்து வாங்க ஒருவன். பேஷ் பேஷ் சரியான உலகமடா இது'' என்று தமிழ் சிரிக்கிறது. அது நம் காதில் விழுகிறது.*

# சேரமான் பெருமான்

## திருக்கைலாய ஞான உலா

*1) விஞ்ஞானம் ஒரு அநாதியான தத்துவம். மெய்ஞ்ஞானம் போன்றே அநாதியான தத்துவம் ஒருவகையில் மெய்ஞ் ஞானத்தின் குழந்தை என்றே சொல்லலாம் விஞ்ஞானத்தை.*

*இனி எங்கும் ஒரே அதிசயந்தான். அற்புதந்தான். நமக்கு உள்ளேயும் சரி, வெளியேயும் சரி அற்புதத்தைத் தவிர்த்து வேறு எதுவும் இல்லை.*

*பசி, தூக்கம், ஜீரணம், ரத்த ஓட்டம், பார்வை, கேள்வி, பேச்சு, இதயத்துடிப்பு, யோசனை, கனவு இப்படி எத்தனை அதிசயங்கள் எல்லாம் இந்த எண்சாண் உடம்புக்குள் தான். அப்படியே அண்ணாந்து மேலே பார்த்தால், சூரியன், சந்திரன், மேகம், செவ்வானம், நட்சத்திரம், காற்று, மின்னல், நெருப்பு இப்படி எத்தனை அதிசயங்கள்.*

*இந்த அதிசயங்களில் ஈடுபடுகிறோம். அப்படி ஈடுபடுவது மெய்ஞ்ஞானம். ஈடுபட்டதோடு நின்றுவிடாமல் அது என்ன, இது என்ன என்று கிண்டிக் கிளறிப் பார்க்கிறோம். அப்படிப் பார்ப்பது விஞ்ஞானம்.*

*விஞ்ஞானத்துக்குக் கணக்குத் தான் கண். மெய்ஞ்ஞானத்துக்குப் பக்தியே கண்.*

*வளமாகவும் செழிப்பாகவும் வாழ்க்கையை உருவாக்கி இருக்கிறது விஞ்ஞானம். நிலத்தில் உண்டான மாஞ்செடி கொடிகளைப் பார்த்து அதிசயத்த மனிதன் அதைக் கிண்டிக் கிளறிப் பார்த்ததனால் தான் உழவு (விவசாயம்) வந்தது. உழவுக்குத் தேவையான கருவிகளும் வந்துவிட்டன.*

*பாலைப்பருகி ருசிகண்டவன் அதைத் தயிராக உறையவைத்து விட்டான். மோராகக் கடைந்துவிட்டான். வெண்ணெய் எடுத்து நெய்யாக உருக்கியும் விட்டான். அத்தனைக்கும் சாதனங்கள் கிடைத்துவிட்டன.*

சாணத்தையும் கோமயத்தையும் பூமிக்கு உணவாக ஊட்டி விட்ட தல்லவா விஞ்ஞானம். தீயை, சூட்டை வைத்து என்னென்ன விந்தைகளை எல்லாம் உண்டாக்கிவிட்டது விஞ்ஞானம்.

மருத்துவம், பொறிஇயல், வணிகம், தொழில் எல்லாவற்றிலும் புதிய ரத்தத்தைப் பாய்ச்சி புதுப்புது வழிகளை உண்டாக்கிவிட்டது விஞ்ஞானம்.

மெய்ஞ்ஞானமும் அப்படியே சங்கீதம், பரதநாட்டியம், ஓவியம், சிற்பம், கோவில், உத்சவம், தேரோட்டம் கவி என்று கிளை கிளையாய்ப் படர்ந்து தெய்வமணம் பூத்திருக்கிறது.

ஒன்றுக்கு ஒன்று போட்டி போட்டுக் கொண்டு, சண்டை சச்சரவில்லாமல் இரண்டும் நல்லபடியாக வளர்ந்து வந்துள்ளன.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் முறைப்படி நிதானமாக வளர்ந்து வந்தன. ஆனாலும் ஐந்நூறு வருஷம் ஆயிரம் வருஷங்களுக்கு ஒரு முறை இரண்டிலும் மாறி மாறிப் புரட்சிகள் உண்டாயின. அதிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் விஞ்ஞானத்தில் ஏற்பட்ட புரட்சி மகத்தானது. அதைவிட மகத்தானது இருபதாம் நூற்றாண்டின்பிற்பகுதியில் அதாவது 1940லிருந்து ஏற்பட்ட மாபெரும் விங்ஞானப் புரட்சி.

உலகில் நாம் என்பதைக் குப்புறத்தள்ளிவிட்டு நம்மில் உலகம் என்று ஆக்கிவிட்டது இந்த யுகப்புரட்சி.

கண்ணுக்குத் தெரியாத சக்திக்கு எங்கும் நிறைந்த சக்திக்கு மூக்கும், முகமும், கண்ணும், வாயும் வைத்து அற்புத உருவம் கொடுத்துவிட்டது இந்த விஞ்ஞானப் புரட்சி.

காந்த சக்தி, ஈர்ப்பு சக்தி, மின்சக்தி என்று இழை இழையாகப் பிரித்தெடுத்து ஒலி உருவம், ஒளி உருவம் என்று கொடுத்துவிட்டது விஞ்ஞானம்.

இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளில் நடக்காத அதிசயம் எழுபது எண்பது ஆண்டுகளில் நடந்துவிட்டது.

ஒரே நேரத்தில் நாம் அமெரிக்காவிலும் இருக்கலாம், ஆஸ்திரேலியாவிலும் இருக்கலாம். வீட்டிலும் இருக்கலாம், காட்டிலும் இருக்கலாம். அப்படி எல்லாம் அதிசயச் சித்தர்

களாக்கிவிட்டது நம்மை. சாதாரண மனிதர்களாகிய நம்மை. விஞ்ஞானத்தின் பூதாகரமான விம்மிதம்.

*******

சித்தர்கள் என்றும், தேவர்கள் என்றும் நம்மை நாமே நினைக்கவைக்கலாம் விஞ்ஞானம். ஆனால் மனிதர்கள்தாம் நாம். அதுவும் ஆயிரம் இரண்டாயிரம் வருஷத்துக்கு முந்திய பழக்க வழக்கப்படி நடக்கிற மனுஷர்கள் தாம் நாம்.

அடிப்படையான உணர்ச்சி ஒன்றும் மாறவில்லை நம்மிடம். கோபம் போயிருக்கிறதா, பொறாமை போயிருக்கிறதா, அன்பு இல்லையா, ஆசை இல்லையா, எல்லாம் அப்படி அப்படியே இருக்கிறது நம்மிடம்.

இந்த உணர்ச்சிகள் தாம் நாம். இன்றைக்கும், இந்த இருபத்து ஒன்றாம் நூற்றாண்டிலும் ஒரு நடிகரோ, ஒரு அரசியல் தலைவரோ, சமுதாய சீர்திருத்தவாதியோ, பேச்சாளரோ, எழுத்தாளரோ வருகிறார் என்றால் மேளதாள முழக்கத்தோடு அவரை வரவேற்கத்தானே செய்கிறோம். பல்லக்கில் வைத்துப் பட்டிணப் பிரவேசம் நடத்துவது போல மாலை மரியாதையோடு ஊர்வலம் நடத்துகிறோம். வாழ்க, சிறக்க, ஓங்குக என்று முழங்குகிறோம். பலதரப்பட்ட மனிதர்களும் ஒரே நினைப்பில், ஒரே நோக்கில், ஒரே வெறியில் அவரை வாழ்த்துகிறோம். வழிபடுகிறோம்.

நம்மைப் போல அவரும் ஒரு மனிதர்தானே, சட்டத்தின் முன் அனைவரும் சமம் தானே என்று வீட்டினுள் முடங்கியா கிடக்கிறோம். தெருவுக்கே ஓடிவருகிறோம். மைல் கணக்கில் பின்னால்ப் போகிறோம்.

அப்படி ஒரு காதல், அப்படி ஒரு பக்தி இருக்கவே இருக்கிறது. எந்த ஒரு விஞ்ஞானப் புரட்சியாலும் மாற்ற முடியாது இதை. துண்டு துண்டாகச் சிதறிக்கிடக்கும் மனிதர்களை ஒன்று படவைக்கிறது இந்தப் பண்பு. ஏதோ கொஞ்ச நேரத்துக்காவது 'நான்' என்னும் ஆணவ வெறி இல்லாமல் ஒருவரை ஒருவர் மதிக்கவும், ஒருவரை ஒருவர் நேசிக்கவும் செய்கிறது இந்தப் பண்பு.

*******

இனி உத்சவ காலத்தில் தேரேறி வீதி உலா வருகிறார் சுவாமி. நூற்றுக் கணக்கான பேர், வேறு வேறு நிலையில் உள்ளவர்கள் தான். அத்தனை பேரும் ஒரு முகப்பட்டு எத்தனை ஆர்வத்தோடு வடம் பிடித்து இழுக்கிறார்கள் தேரை. யாரிடமாவது அவர் இப்படி, இவர் அப்படி என்கிற வேற்றுமை உண்டாகிறதா? இல்லையே, எல்லோருக்கும் ஒரே ஆனந்தம். ஆனந்த வெறியே தான். சமுதாய ஒற்றுமையை அப்படியே நேருக்கு நேராகப் பார்க்கிறோம் வடம் பிடிக்கும் கைகளின் மூலம்.

அப்படியே தேரில் அமர்ந்து காட்சி கொடுக்கும் மூர்த்தியை அத்தனை பேரும் எப்படி உள்ளம் உருகி வணங்குகிறார்கள். அத்தனை கூட்டத்திலும் யாரிடமாவது எள்ளளவாவது துர்க்குணம் இருக்கிறதா அப்பொழுது. எந்த வகையிலாவது இருக்கிறதா? அத்தனை பேர் முகத்திலும் ஒரு ஒளி. மகிழ்ச்சி, அத்தனை உள்ளங்களிலும் அன்பு, மரியாதை, பணிவு, அடக்கம், ஒழுங்கு, என்று பூத்து மணக்கிறது.

ஆணவத்துக்கே இடமில்லை அங்கு. தேரோட்டமும், உத்சவமும், திருமேனியும் சமுதாயத்தைப் புனிதப்படுத்துகிறது. அப்போதைகப்போது இப்படிச் சுத்தப் படுத்தாவிட்டால் என்ன கதிக்கு ஆளாகும் சமுதாயம்? துருப்பிடித்துவிடும், உளுத்துப்போகும், சமுதாய உணர்வு. மக்கள்ப்பண்பு.

எந்த விஞ்ஞானப் புரட்சியாலும் இதைச் செய்ய முடியுமா?

தேரேறி பவனி வருகிறார் பெருமான், ஆடவர், பெண்டிர், இளைஞர், முதியவர், ஏழை, பணக்காரன், படித்தவன், படியாதவன் எல்லோருமே உள்ளம் உருகுகிறார்கள். வைத்த கண்வாங்காமல் பார்க்கிறார்கள். தேவதேவா, தெய்வ நாயகா, அம்மையப்பா'' என்றெல்லாம் கூவி அழைக்கிறார்கள்.

பெருமானை எப்படிப் பார்க்கிறது அவர்கள் ஆர்வம்.

திருமால் என்ன, பிர்மா என்ன இருவராலும் தேடித் தேடிக் காணமுடியாத பரம்பொருளல்லவா நம்மைத் தேடிவந்து காட்சி கொடுக்கிறது என்றே பார்க்கிறது. ஆன்ம தத்துவம்.

அவர்கள் பார்க்கிறதை அப்படி அப்படியே எடுத்துச் சொல்கிறது தமிழ்.

*திருமாலும் நான்முகனும்*
*தேர்ந்துணரா(து) அன்றங்(கு)*
*அருமால் உற அழலாய்*
*நின்ற - பெருமான்*
*பிறவாதே தோன்றினான்;*
*காணாதே காண்பான்;*
*துறவாதே யாக்கை*
*துறந்தான்; முறைமையால்*
*ஆழாதே ஆழ்ந்தான்;*
*அகலா(து) அகலியாள்*
*ஊழால் உயராது*
*ஓங்கியான் - சூழ் ஒளி நூல்*
*ஓதா(து) உணர்ந்தான்.*
*நுணுகாது நுண்ணியான்;*
*யாதும் அணுகா(து)*
*அணுகியான் - ஆதி*
*அரியாகிக் காப்பான்*
*அயனாய்ப் படைப்பான்*
*அரனாய் அழிப்பவனும்*
*தானே.* (10)

2) பவனியை பார்த்து அனுபவிக்கிறவர்கள் மனம் இளகுகிறது. ஆனந்தத்தில் கரைகிறார்கள். ஞானியர்களிலிருந்து சாதாரண மக்கள் வரை எல்லோருமே உருகிக் கரைகிறார்கள். உடலோடு சேர்ந்திருக்கிறது திமிர். அதுவும் கரைகிறது.

---

அருமால் உற - ஒன்றும் புரியாது மயங்கி நிற்க. அழல் - சோதிமயமாய். பிறவாதே தோன்றினாள் - பிரபஞ்சமே அவன் தான். இறைவனுடைய திருமேனிதான் பிரபஞ்சம். அப்படி இருப்பவனை வயிற்றில் சுமந்து யார் பெற முடியும். காணாதே காண்பான் - எதையும் யோசித்துப் பார்க்கமாட்டாள். ஆனால் எல்லாம் தானாகவே தெரியும் அவனுக்கு.

துறவாதே யாக்கை துறந்தான் - எறும்பு முதல் யானை வரை எல்லாம் அவனே என்று ஆனபின் அவனுக்கென்னு ஒரு தனி உருவம் உண்டா என்ன?

ரத்தத்தோடு ரத்தமாய்க் கிடக்கிறது கொழுப்பு அதுவும் கரைகிறது. ஆணவமே உருகிக் கரைகிறது. நான் என்பதே போய்விட்டது.

மிச்சம் என்ன இருக்கும். வேட்டி, சட்டை, துண்டு இவைதான் இருக்கும். அவையும் பேருக்குத் தான் இருக்கும். பிடிப்பு இருக்காது அவற்றின்மேல். இனி மனதில் ஒன்று இல்லை, மனதோடு ஒன்று சேர்ந்து இல்லை என்றால் எது இருந்தும் இல்லாதது தான்.

பவனியை மனக்கண்ணால் அனுபவித்துப் பார்க்கிறார் சேரமான் பெருமான். ஆனந்தம் பெருகுகிறது. ஆனந்தப் பெருக்கில் அவருடைய நிலையும் அப்படித்தான். எல்லாம் (ஆனந்தக்) கண்ணீரோடு கண்ணீராய்க் கரைந்துபோனது. மிச்சம் ஆனந்தந்தான். பேரானந்தமேதான்.

தன் அனுபவத்தை ஒரு பெண்ணாக இருந்து பார்க்கிறார். பவனியைக் கண்டு ஆனந்த வெறிகொள்ளும் இளம் நங்கையாக வைத்தே பார்க்கிறார்.

---

இறைவனைத் தவிர ஒன்றும் இல்லை என்று ஆனபிறகு இடம் என்று ஒன்று தனியாக இருக்கவா செய்கிறது. ஓங்கி உயர்வதற்கோ, அகன்று விரிவதற்கோ, இறங்குவதற்கோ ஏது இடம்? ஆனாலும் அணுவுக்குள் அணுவான நுட்பம் அவன். அளவிட முடியாதபடி உயர்ந்தவன், அகன்று விரிந்தவன் பரம்பொருள். நுணுகாது நுண்ணியாள் - ஒரே சக்திமயம் இறைவன். கண்ணுக்குத் தெரியாதது தான் சக்தி. அதற்காக நுணுகினான், சுருங்கினான் என்று சொல்ல முடியுமா இறைவனை. சென்று சென்று அணுவாய் தேய்ந்து ஒன்றாய்விட்டால் நுணுகுவதேது. அணுகாது அணிகியான் - சூரிய ஒளி தண்ணீரில் விழும். ஒவ்வொரு துனியையும் ஊடுருவிச் செல்லும். ஆனாலும் நீரில் தோயாது சூரிய ஒளி. கடவுள்த் தத்துவமும் அப்படியே. எல்லாவற்றிலும் ஊடுருவி நிறைந்து நிற்பது கடவுள் தத்துவம் ஒன்றே. ஆனாலும் எதிலும் அது சிக்காது. அரி - திருமால், காக்கும் தெய்வம். அயன் - பிர்மா, படைக்கும் தெய்வம். அரன் - எடுத்த பிறப்பை மாற்ற அழிக்கும் தெய்வம்.

குறிப்பு : ''எல்லாவற்றையும் படைத்தது (பெற்றெடுத்தது) இறைவன். அவனே நமக்குத்தாயும் ஆவாள் தந்தையும் ஆவாள். ஆனால் யாரும் அவளை மகனாகப் பெற்றெடுக்க வில்லை.'' விஷயம் இது தான். ஆனால் விஷயத்தை மட்டும் அப்படியே சொன்னால் அதில் உயிர் ஏது? ஒளி ஏது? உணர்ச்சிக்கு எங்கே போவது. அதையே ''பிறவாதே தோன்றினாள்'' என்றால் உயிர்வந்துவிடுகிறது. மந்திரமே ஆகிவிடுகிறது சொல்.

*"ஒள்ளிய*
*தீந்தமிழின் தெய்வ*
*வடிவாள்"*

அடடா/எப்பேர்ப்பட்ட இளமங்கை. கவி மாதிரி யல்லவா இருக்கிறாள், தமிழ்க்கவி போலல்லவா இருக்கிறாள் பெண். அப்படி ஒரு அழகு. அழகுக்கே அதிதேவதை என்று தான் சொல்லவேண்டும்.

பவனியில் வரும் பெருமானைப் பார்த்தாள். கண்கொட்டாமல் பார்த்தாள். தன்னை மறந்தாள். அவன் ஆனாள். அவளாகவே ஆனாள். ஆனந்தவெறியில் உச்சிக்கு மேலே கையைத் தூக்கிக் கும்பிட்டாள். அதனால் பிழைத்தது வளையல். இல்லை என்றால் சேலையை இறுக்கிக்கட்டி இருந்த மேகலை (ஒட்டியாணம்) பூட்டற்று நழுவியது போல் கழன்று ஓடியிருக்கும் கைவளை.

அப்படிப் பறிகொடுத்துவிட்டாள் இளம் நங்கை. பாவம் பெண்தானே.

*"ஒள்ளிய*
*தீந்தமிழின் தெய்வ*
*வடிவாள்......*
...........
*அங்கை வளைதொழுது*
*காத்தாள்; கலை காவாள்*
*நங்கை இவளும்*
*நலம்தோற்றாள்.......*
............."

ஆடை, அணி, ஆபரணம் கழல்வது கூட உணர்வில்லாமல் பவனியைப் பார்க்கிறார்கள். அப்படி பெருமானிடம் ஒன்றி நிற்கிறவர்களிடம் மனம் எப்படி இருக்கும். அது (மனம்) பெருமானிடமே போய்விடும். அவன் வசம் ஆகிவிடும் ஆசையோடு பார்க்கிறவர்களின் மனம்.

3) மனம் போய்விட்டது என்றால் பெருமானுடன் கலந்துவிட்டது என்றால் கண்(பார்வை) செவி (கேள்வி) என்கிற ஐம்புலன்களும், பெருமானைப் பற்றித்தானே நிற்கும்.

ஆசையோடு பார்க்கிறவர்களின் வசம் புலன்கள் நிற்க வழிஇல்லை தான்.

கூட்டம் முழுவதுமே ஒன்றாய்த் திரண்டு ஒரு முகமாய் எப்படி அனுபவிக்கிறது பெருமானின் அழகை, பவனியை இதோ வருகிறது பாட்டு.

*கண் அவனை அல்லது*
*காணா, செவியவன்தன்*
*எண்ணரும்சீர் அல்ல(து)*
*இசைகொள்ளா - அண்ணல்*
*கழலடி அல்லது*
*கைதொழா - அ:.தால்*
*அழல்ங்கைக் கொண்டாள் மாட்(டு)*
*அன்பு.* (12)

4) பவனி வருகிற தெருமுழுவதும் பெருங்கூட்டம். ஒரே நெரிசல். ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் தள்ளியும், விலக்கியும், முன்னேறியும் ஓடுகிறார்கள். யாரும் நடக்கிற மாதிரி தெரியவில்லை. அப்படியே கூட்டம் தெருமுழுதும் நிறைந்து நிற்கிற மாதிரி தெரிகிறது. ஆனால் முண்டியடித்தபடியே ஓட்டமும் நடையுமாகத்தான் எல்லோரும் போகிறார்கள். தேரின் பக்கத்துக்கே போய் எதிரில் நின்று கண் குளிரப் பார்க்க வேண்டும், மனங்குளிரப் பார்க்க வேண்டும் என்று துடிக்கிறார்கள். ஆண்களும் துடிக்கிறார்கள். அதற்கு மேல் குழந்தைகளும் துடிக்கிறார்கள். வயதானவர்களின் ஆசைக்கு அளவே இல்லை. எல்லோருடைய ஆசையையும் தூக்கி அடிக்கிறது பெண்டுகளின் பேராசையும், ஆரவாரமும்.

---

இசை - புகழ். இணையற்ற பெரும் சிறப்பு. அண்ணல் - சிவ பெருமான். அழல் - நெருப்பு. ஆணவத்தைச் சுட்டுப் பொசுக்கும் தீ. அது எப்பொழுதும் அவன் கையில் தயாராகவே இருக்கிறது. அன்பு ஆர்வம். பக்தி என்றால், காதல் என்றால் அப்படித்தான். தன்னையே அர்ப்பணிப்பது தான்.

பவனியைக் கண்டு களிக்கிறவர்களின் கூட்டமும் நெரிசலும் எப்படி இருந்தால் என்ன. காதலாகிக் கசிந்துருகும் பக்த கோடிகளின் உல்லாசமும் சந்தோசமும் ஜேஜே, என்று முழங்குகிறது. அதையும் விட அதிகமாக ஒரே கம்பீரமாய் ஒய்யாரமாய் அசைந்து அசைந்து வருகிறது உலா. பவனி உலா. அதில் அவருடைய ஆனந்த நடனமே காட்சி கொடுக்கிறது.

சோமான் பெருமான் அப்படி அனுபவிக்கிறார் பவனியைப் பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறார் பவனியை எப்படி என்று பாருங்கள்.

*பண்ஆரும் இன்சொல்ப்*
*பணைப்பெருந்தோள்ச் செந்துவர்வாய்*
*பெண்ஆர வாரம்*
*பெரிதன்றே - விண் ஓங்கி,*
*மஞ்சடையும் நீன்குடுமி*
*வாள்நிலா வீற்றிருந்த*
*செஞ்சடையான் போந்த*
*தெரு.* (13)

5) மகாத்மா காந்தி ஒரு இடத்தில் வெட்டியாய் சும்மா இருக்கமாட்டார். பாரத தேசம் முழுவதையுமே சுற்றிச் சுற்றி வருவார். பட்டிதொட்டி எல்லாம் வருவார். நடந்தும் வருவார்.

காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரிவரை, குஜராத்திலிருந்து அசாம் வரை சுற்றிச் சுற்றி வருவார். நாட்டில் எத்தனை கோடி மக்கள். முப்பது நாற்பது கோடிக்கும் அதிகம் அவர்காலத்தில்.

மக்கள் தொகை மாதிரி தான் மக்களின் பிரச்சினைகளும். அதைவிட அதிகம் என்றுதான் சொல்லவேண்டும்

---

பண் - இசை. சுதியிறழாத சுத்தமான ராகம். பெண்களின் பேச்சில் உள்ள குழைவும் நெளிவும் தோடி, சங்கராபரண ராகம் போல் கொஞ்சிக் கொஞ்சி வரும். பணை - மூங்கில். பெண்களின் தோள் வனப்பு பச்சை மூங்கில் மாதிரி வழுவழு என்றிருக்கும். மஞ்சு-மேகம். குடுமி - சிகரம். மேகப்படலம் சூழ்ந்த மலையில் நிலர்ஒளி விழுந்ததும் குங்குமம் போலச் சிவந்து விடும் வானம், மலை, மேகம் எல்லாம். அப்படிச் சிவந்த செஞ்சடை, கங்கையும் பிறைமதியும் உள்ள பெருமான் செஞ்சடை.

பிரச்சினைகளை. ஒவ்வொருவருக்கும் ஒன்றா இரண்டா பிரச்சனை. ஒவ்வொரு பிரச்சனையும் ஒவ்வொரு விதமாக வாட்டிவதைக்கும் மக்களை.

உற்ற உடன் பிறப்புகள் வேதனைப்பட்டு புழுவாய்த் துடிக்கிறார்கள் என்றால், சப்பணம் போட்டு, சௌகர்யமாய் ஒரு இடத்தில் அமர்ந்து பொழுது போக்கமுடியுமா காந்தியால்.

குமுறி நடுங்குகிறவர்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும், துயரத்திலிருந்து விடுபட வழிகாட்ட வேண்டும், துயரம் நீங்கும் வரை அதைத் தாங்கிக் கொள்ள தைர்யம் ஊட்ட வேண்டும். மொத்தத்தில் அச்சத்தையே தவிர்க்க அதை விரட்டி அடிக்க வேண்டும் மக்களிடமிருந்து.

இவ்வளவையும் செய்ய வேண்டும். அப்போதைக்கப்போது செய்யவேண்டும். செய்யாவிட்டால் தூக்கம் வராது காந்திக்கு. நிம்மதி போய் விடும் அவரிடமிருந்து, தானும் அமைதியாய் இருக்கவேண்டும் மற்றவர்களும் அமைதியாய் இருக்கவேண்டும். இதற்காகவே அவர் நாடு முழுவதையும் சுற்றிச் சுற்றி வந்தார்.

''இந்தியாவில் மகாத்மா காந்தியின் பாதம் படாத இடம் இல்லை. அவர் பாதம் பட்ட எல்லா இடமும் கோவில்கள் ஆகிவிட்டன. மக்கள் வழிபடும் வழிபாட்டுஷ்தலங்கள் ஆகிவிட்டன''.

காந்தியின் புனிதயாத்திரை ஜவஹர்லால் கண்ணுக்கு இப்படித் தெரிந்தது.

மக்களை மக்களாக்குவதற்காகவே காந்தியின் புனித யாத்திரை. இருக்கும். ஆனால் இப்படி நாடு முழுக்கச் சுற்றிவருகிற காந்தி வெறும் கையோடு வரமாட்டார். தங்கம், வெள்ளி, ரத்தினம், பணம் என்று கைநிறையக் கொண்டு வருவார்.

காந்தியைப் பார்க்க ஆண்களும் பெண்களும் ஆயிரக்கணக்கில், ஏன் லட்சக்கணக்கில் வருவார்கள். கையிலும், கழுத்திலும் நகைகள் நிறைய அணிந்து வரும் பெண்களைப் பார்க்கிற மகாத்மா. ஏன் இப்படிக் கஷ்டப்பட்டுச் சுமக்கிறீர்கள். உங்கள் சுமையை என்னிடம் கொடுங்கள் என்று கேட்பார்.

இப்படி ஒரு அருள்வாக்கு எப்பொழுது அவரிடமிருந்து வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள் போல் மளமளவென்று கழற்றிக் கொடுத்துவிடுவார்கள் நகைகளைப் பெண்கள்.

வளையல், சங்கிலி, மோதிரம், தோடு என்று குவிந்துவிடும். கை எழுத்து வேண்டும் என்றால் பணத்தை எடு என்பார் காந்தி அதுவும் (பணமும்) சேர்ந்து குவிந்துவிடும்.

வைர வைடூர்யங்களை வைத்த நகைகள் கூடக் கிடைக்கும்.

பெண்களுக்கு நகை தான் உயிர். அதில் தான் பெண்களே இருக்கிறார்கள். அந்த நகையையே எத்தனை ஆனந்தத்தோடு கழற்றிக் கொடுக்கிறார்கள் காந்தியிடம்.

மணல் மூட்டையை - கழுத்தை நெறிக்கும் மணல் மூட்டையைத் தலை மேல் வைத்துச் சுமந்து கொண்டு போகிறான் ஒருவன். நீண்ட நெடுந்தூரம் நடக்கிறான். மூட்டையை இறக்கிவைக்க வழி இல்லை. தக்க வழி கிடைத்து மூட்டையை இறக்கிய உடன் எப்படி இருக்கும் அவனுக்கு சுகம். அப்படிப்பட்ட சுகம் நகைகளைக் கழற்றிக் காந்தியிடம் கொடுத்த பெண்களுக்கு. உண்மையான விடுதலை கிடைத்த மாதிரி தான்.

பெற்ற நகைகளையும் பணத்தையும் என்ன செய்கிறார் காந்தி. பலநூறு ஆண்டுகளாக உடன்பிறந்த சகோதரர்களை அடக்கியும் ஒடுக்கியும் ஏமாற்றியும் கொடுமைப்படுத்தி இருக்கிறது அறியாமை. பாவத்தில் எல்லாம் மிகப் பெரிய பாவம் அது.

அந்தக் கொடுமையை, பாவத்தைச் சுட்டெரித்து கருணை மழையைப் பொழிந்து அறப்பயிரை வளர்க்கவே அந்தத் தொகையைச் செலவு செய்தார் காந்தி.

மனிதனை மனிதன் வெறுப்பதும், அவமதிப்பதும் கொடுமை. எல்லாப் பாவங்களுக்கும் இந்தக் கொடுமையே வித்து என்கிற உண்மையைக் கண்டவர் காந்தி, அந்த உண்மையையே ஒழுக்கமாகக் கொண்டு வாழவழி காட்டியவர் காந்தி.

அதனால் நகை, பணம் என்று கொடுத்தவர்களுக்கு மிக்க திருப்தி, தேடக் கிடைக்காத செல்வத்தைப் பெற்றது போல திருப்தி.

உயிரற்ற ஜடமாகிய நகையைக் கொடுத்து, அன்பு, உண்மை, எளிமை, தூய்மை, தியாகம் முதலிய ஆன்மீக ஒளியை அல்லவா பெறுகிறோம் என்கிற திருப்தி. அதனால் என்ன நடந்தது. காந்தி கேட்காமலே வலியச் சென்று கொடுத்தனர் பலர்.

★★★★★★★

இனி நம்மில் சில மேதாவிகள் எப்பொழுதும் உண்டு. அவர்கள் சொன்னார்கள் பெண்களிடம், 'காந்தியை ஏன் பார்க்கப் போகிறீர்கள். அவர் உங்கள் நகைகளை அபகரித்துக் கொள்வார்'' என்று. மேதாவிகள் சொல்லச் சொல்ல கூட்டம் பெருகியது. காந்திக்கு. வருமானமும் அதிகரித்தது.

இனி உண்மையான பண்பாளர்கள் சிலர், ''காந்தியையா பார்க்கப் போகிறீர்கள். போங்கள், போங்கள். ஆனால் வளையல் பத்திரம், சங்கிலி ஜாக்கிரதை. இவை பறிபோவதோடு நிற்காது காரியம். உங்களை அறவுணர்வு உள்ளவராக ஆக்கிவிடுவார் காந்தி. தியாக சீலர்களாக்கிவிடுவார். உங்களை அவர் மனுசாள் எல்லோரும் ஒன்று. சாதி மத வேற்றுமை கூடாது என்று உங்களை மாற்றிவிடுவார். ஜாக்கிரதையாகப் போய் வாருங்கள்'' என்று சிரிக்கச் சிரிக்க நகைச்சுவையோடு சொல்வார்கள் அவர்கள். தேனும் பாலும் செவி வழி செல்வது போல ஆனந்தமாக இருக்கும் அந்த ஆன்றோர்களின் நல்லுரை.

அது காரணமாகவும் கொடுக்கிற கூட்டம் பெருகும். தெருவெல்லாம், ஊரெல்லாம் அலைமோதும் கூட்டம்.

தந்திரக்காரர்தான் காந்தி மகான். அழகுக்கு அழகூட்டும் ஆபரணங்களையே, அதை அணிந்து அழகுபார்க்கும் பெண்கள் கையாலாயே ஆர்வம் பொங்கப் பொங்க அள்ளிக் கொடுக்கவைக்கிறார் என்றால் அவரைவிட வேறு யார் தந்திரம் மிக்கவர்.

ஆனாலும் காந்தியையும் மிஞ்சிய தந்திரக் காரர் ஒருவர் இருக்கவே செய்கிறார்.

அவர்தான் கைலாய நாதர். திருக்கயிலாய நாதர், சிவபெருமான்.

அவர் தேரேறி பவனி வருகிறார். தேனடையில் தேனீ மொய்ப்பது போல் பெண்கள் கூட்டம் மொய்க்கிறது. நாலா திசையிலிருந்தும் ஓடி வருகிறார்கள் பெண்கள்.

அவர்களைப் பார்த்து ஞானச் சிரிப்போடு பக்தர் - சேரமான் பெருமானே சொல்கிறார். அப்படித்தான் பார்க்கவேண்டும் பாடலை.

என்ன சொல்கிறார் பக்தர். எடுப்பும் மிடுக்கும் மிக்க இளம் நங்கையரை நோக்கி! ''பவானியைப் பாருங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் விழிப்பாய் இருங்கள். நகை முக்கியம். அதை விட முக்கியம்...

*பெண்ணீர்மை காமின்,*
*பெருந்தோள் அணிகாமின்*
*ஒள்நீர்மை மேகலையும்*
*உள்காமின்; - தெள்நீரக்*
*கார்ஏறு கண்டத்தான்*
*காலாலி கட்டங்கள்*
*ஊர்ஏறு போந்த(து)*
*உலா!* (14)

---

பெண்நீர்மை - பாதிவெட்கம், பாதி பயம். இதுதான் பெண்மை. பக்தி எவ்வளவு தான் இருந்தாலும் ஒரு பெண் நகைகளைக் கழற்றி இன்னொரு ஆணின் கையில் கொடுப்பது பெண்ணீர் மைக்கு அடாத காரியந்தானே. காமின் - காத்துக்கொள்ளுங்கள். ஜாக்கிரதை. பயம், கூச்சம் எல்லாம் போய்விடும் பவனியைப் பார்த்தால். கவனமாய் இருங்கள் அதில். அணி - தோள்வளையம் முதலிய நகை. ஒள்நீர்மை - மிக்க பிரகாசம் உடைய. தெள்நீரகார் - கண்ணாடி போல் தெளிந்த நீர் மேகம். கண்டம் - கழுத்து. காவாலி - கோடரி. கட்டங்கள் - மழுஏந்தியவன்.

குறிப்பு : பெண்ணொ ருத்தியை முன்னிலைப்படுத்திச் சொன்னால், அது உலகம் முழுவதையும் முன்னிலைப்படுத்திச் சொல்கிறதுதான்.

நக்கீர தேவர் உயர்ந்த சிவபக்தர். கடவுள்த் தத்துவத்தோடு ஒன்றித் திளைக்கும் ஞானி. அந்த ஞான ஒளியை, பக்திப் பெருக்கை அவருடைய பாடல்களில் பார்க்கிறோம். ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு விதமாக நம் உள்ளத்தை உருக்கும். களிமண்ணைக் குழைத்தும், பிசைந்தும், உருட்டியும், திரட்டியும் விக்ரகங்களை அதில் எழுந்தருளச் செய்வது போல் நம் உள்ளத்தைப் பிசைந்தும் குழைத்தும் தெய்வ சாநித்தியமாகவே எழுந்தருளச் செய்கிறது நக்கீரதேவரின் பாடல். ஒவ்வொரு பாடலும்.

குறளாசிரியரின் பாடல்களைப் படித்துப் படித்து அனுபவித்த பண்பாளர்கள் அற்புதம் என்றால் குறள்தான் என்கிறார்கள். வேறு அற்புதம் ஒன்றும் இல்லை குறளைத் தவிர என்றே சொல்கிறார்கள்.

*சிந்தைக்(கு) இனிய,*
*செவிக்கினிய, வாய்க்கினிய,*
*வந்த இருவினைக்கு*
*மாமருந்து - முந்திய*
*நன்நெறி நாமறிய*
*நாப்புலமை வள்ளுவனார்*
*பன்னிய இன்குறள்வெண்*
*பா"*

இப்படி எல்லாம் சொல்வது குறளைத் தான் ஆனாலும் அது நக்கீரதேவனார் பாடலுக்கும் உரியது தான்.

நக்கீர தேவர் பாடல்களைப் படிக்கிறபொழுது எல்லோருமே இதை அங்கிகரிப்பார்கள்.

# நக்கீர தேவர் கைலை பாதி காளத்தி பாதி

## மருந்தாவது மாயமாவது அன்புதான் வைத்தியம்

*1) பகலில் சூரியன் தெரிகிறான். சூரியனுடைய ஒளி பூமி முழுவதும் விழுந்து பிரகாசப்படுத்துகிறது. பூமியை மட்டுமா, திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி, சனி முதலிய எண்ணற்ற கிரகங்களையும் ஒளிமயம் ஆக்குகிறது. கிட்டத்தட்ட ஐந்நூறு அறுநூறு கோடி மைல் சுற்றளவுக்கு ஒளி கொடுக்கிறது சூரியன்.*

*இரவில் இந்தச் சூரியன் ஒதுங்குகிறது. வானத்தை அண்ணாந்து பார்த்தால் பிச்சிப் பூ பூத்தது போல் வான்வெளி முழுவதும் நட்சத்திரக் கூட்டம், ஒவ்வொரு நட்சத்திரமும் சூரியன் தான். ஆனால் நம்முடைய சூரியனை விட பதினாயிரம், லட்சம், பத்துலட்சம் மடங்கு பெரியவை, ஒளிமிக்கவை ஒவ்வொரு நட்சத்திரமும்.*

*அப்படிக் கோடான கோடி நட்சத்திரங்கள் அண்டத்தில் பலகோடி அண்டங்களைக் கொண்டது பேரண்டம். அதாவது பிரபஞ்சம்.*

*கடவுள்த் தத்துவம் எங்கும் நிறைந்தது. கடவுள் தத்துவத்துக்கு உருவம் என்று ஒன்று உண்டென்றால் அதுதான் பிரபஞ்சம்.*

*இறைவனின் திருமேனி என்பது பிரபஞ்சந்தான்.*

*கோடான கோடி நட்சத்திரங்கள் (சூரியன்கள்) இறைவனுடைய திருமேனி என்றால் அந்த ஒளியை இப்படி அப்படி என்று சொல்ல முடியுமா.*

*ஒரே ஒளிப்பிழம்பாக இருந்தாலும் நம்மால் பார்க்க முடிகிறதில்லை இறைவனை.*

*நாம் யார் என்னும் உண்மையை உணர முடியாதபடி நம்மை மூடி மறைத்திருக்கிறது ஆணவம். அதுகாரணமாக நம் உள்ளம் (மனம்) குருடாகி இருக்கிறது. பார்வையில் வெளிச்சம் இல்லை கண்ணும் குருடாகிவிட்டது.*

நம் குருட்டை நீக்க ஒரு விளக்கு, திருவிளக்கு வேண்டும். அந்த ஒளியின் மூலந்தான் இறைவனைப் பார்க்க முடியும்.

கவிதான் அதற்குரிய விளக்கு. அது காரணமாகத்தான் கவிக்கு விளக்கு என்று பெயர். கடவுளுக்கும் விளக்கு என்று பெயர். கவியின் மூலம் இறைவனைக் காட்டும் அருளாளருக்கு 'விளக்கை விளக்கும் விளக்கு' என்று பெயர்.

நக்கீர தேவநாயனார் இறைவன் என்னும் ஒளிவளர் விளக்கை தம் கவி என்னும் திருவளர் விளக்கின் மூலம் எப்படிக் காட்டுகிறார் என்று பாருங்கள்.

வீட்டில் தீபம் ஏற்றி வைக்கிறதென்றால் அதற்குத் திரி என்று ஒன்று வேண்டும். நெய் (எண்ணெய்) வேண்டும். எண்ணெயும் திரியும் சேர்ந்து சுடர்விட்டுப் பிரகாசிக்க 'அகல்' (விளக்கு) வேண்டும். அகலுக்கு இடிஞ்சில் என்று பெயர். இவ்வளவும் சேர்ந்தால்தான் விளக்கு (தீபம்)

நக்கீர தேவர் பாடிய வெண்பா ஒவ்வொன்றும் தீபமேதான்.

*சொல்லே திரியாக, த்*
*தூய பொருள் நெய்யாக,*
*நல்லிடிஞ்சில் என்னுடைய*
*நாவாக; - சொல்லரிய*
*வெண்பா விளக்காக*
*வண்கயிலை மேலிருந்த*
*பெண்பாகற்(கு) ஏற்றினேன்*
*பெட்டு.* (1)

2) வீட்டில் ஒரு தென்னை. முற்றி விளைந்த காய் குலை குலையாய்த் தொங்குகின்றன. வீடு நம்மது தான். தென்னையும் அப்படியே. ஆனாலும் மரத்திலேறி காயைப் பறிக்க முடியவில்லை.

காய்பறிக்க ஒருவனை ஏவுகிறோம். விளைந்த நெற்றுக் காய்களைப் பார்த்துப் பறித்துப் போடுகிறான். பதினைந்து ரூபாயை அவன் கையில் கொடுக்கிறோம். ஒரு தேங்காயும் கொடுக்கிறோம்.

வேலைக்கு ஏற்ற கூலி (பலன்) கிடைத்தது என்பதில் அவனுக்கு மகிழ்ச்சிதான்.

நம்பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர். அவர்வீட்டுத் தென்னையிலும் காய்பறித்தான். அவரும் கூலி கொடுத்தார். அதோடு அவனைப் பாராட்டினார். ''நாளைக்கு ஐயப்ப பூஜை. தேங்காய் இல்லையே என்று கவலைப் பட்டேன். நல்ல நேரத்தில் வந்து உதவினாய். பழுதில்லாமல் தேங்காய் பறித்தாய். மட்டைகளை அறக்கிவிட்டாய் தென்னையைத் துப்புரவு செய்தாய். பண்புள்ள, நல்ல மனிதன் நீ'' என்று பலபடப் பாராட்டினார். மறு நாள் ஐயப்ப பூஜைக்கு அவனை வரச்சொன்னார். அடியார். உடனிருந்து சாப்பிடச் சொன்னார். தக்க மரியாதை செய்து அனுப்பினார்.

அப்படியானால் அவனுக்கு எப்படி இருக்கும் ஆனந்தம். 'நாம் மனிதன் என்கிற உணர்ச்சி அவனுக்கு வந்து விடும். நமது செயல் சமுதாயப்பணி என்கிற உண்மையும் தெரிந்துவிடும். நான் என்னும் தனிமை உணர்ச்சியே போய்விடும். சமுதாயத்தோடு சமுதாயமாய் ஒன்றிவிடுவான் அவன்.

நம்மை மற்றவர் அங்கீகறிப்பதிலும் தம்மவராக நம்மை இன்னொருவர் ஏற்றுக் கொள்வதிலும் அப்படி ஒரு சுகம், பிறவிப் பயன் என்னும் திருப்தியே (ஆனந்தமே) அது தான்.

இனி, ஒரு பெண், திருமணம் ஆகிறது பெண்ணுக்கு. திருமணத்தின் லட்சியமே கணவன், குழந்தை, குடும்பம், உற்றார், உறவினர், அன்பு, ஒற்றுமை, பொறுமை, பணிவு, தியாகம் என்னும் சமுதாயப் பண்புதான். அந்த அங்கீகாரமே பெண்ணுக்கு நிம்மதி. அதாவது பிறவிப் பயன்.

வயிரத் தோடு, பட்டுப் புடவை, முதலியன வெல்லாம் இரண்டாம் பட்சந்தான் .பெண்ணுக்கு.

★★★★★★★

இனி, நான் என்னும் தனிமை உணர்ச்சியை, தவிப்பை, வறட்சியைப் போக்கி இறைவனே தன்னுடன் நம்மை ஏற்றுக் கொள்கிறான். அது தானே பிறவிப் பயன் நமக்கு.

இதை மனதில் வைத்துக் கொண்டு நக்கீர தேவரின் பெருமிதத்தை (திருப்தியை)ப் பார்க்கலாம்.

அடடா/காளத்திநாதர் என்னையும் ஒரு மனிதனாக (ஒரு ஆளாக - தன்னவனாக) ஏற்றுக் கொண்டார். வேறு என்ன வேண்டும் எனக்கு''

இப்படி வருகிறது அவரது ஆனந்தம்.

பெற்ற பயன் இதுவே
அன்றோ, பிறந்துயான்;
கற்றவர்கள் ஏத்தும் சீர்க்
காளத்திக் - கொற்றவர்க்குத்
தோளாகத்(து) ஆடரவம்
சூழ்ந்தணிந்த அம்மானுக்(கு)
ஆளாகப் பெற்றேன்
அடைந்து. (2)

3) ஆலமரம் என்று ஒரு தத்துவம். அது தான் எண்ணற்ற ஆலமரங்களாகப் பிறக்கின்றன. வளர்கின்றன. மறைகின்றன. மறுபடி தோன்றுகின்றன.

கடவுள்த் தத்துவமும் அப்படியே. பல்வேறு கோலங்களில் ஆன்மதத்துவமாகப் பரிணமிக்கிறது கடவுள்த் தத்துவம்.

நாம் பிறந்ததாக ஒரு தோற்றம். அதனால் நம் செயல் என்கிற நினைப்பு. அதில் வெற்றி என்றும் தோல்வி என்றும் ஒரு மயக்கம். நன்மை, தீமை, இன்பம், துன்பம் என்றெல்லாம் ஊசலாட்டம்.

மொத்தத்தில் சஞ்சலமும், பயமும், வேதனையுமாகவே போகிறது வாழ்க்கை.

இதில் ஒரு வேடிக்கை.

ரத்தஓட்டமும் கொழுப்பும் இருக்கும் வரை வீரப் பிரதாபங்களே மனதில் நிற்கும். அதைப் பார்த்துப் பார்த்து ஒரு எக்களிப்பு. ரத்த ஓட்டம் குறைந்து கன்னம் ஒட்டி,

யான் பிறந்து பெற்றப் பயன் இது அன்றோ - என்னுடைய பிறவிப் பயன் இதுதான். காளத்திக் கொற்றவன் - காளத்தி நாதன். தோள் ஆகத்து ஆடு அரவம் சூழ்ந்து அணிந்த அம்மான் - பாம்பையே மாலையாகப் போட்டிருக்கும் சிவபெருமாள். ஆளாக - அன்பனாக. பெற்றேன் - பேறு பெற்றேன். அதுதான் ஜன்ம சாபல்யம் எனக்கு.

கண்குழிவிழுந்து தள்ளாடத் தள்ளாட தோல்வியும், அவமானமும், அடாத காரியங்களுமே மனதில் வந்து நிற்கும். அதைப் பார்த்துப் பார்த்து அச்சமும் துயரமும் பெருகும்.

நம்முடைய காரியங்களைச் சுளகில் போட்டு அலசிப், புடைத்து நல்லனவற்றை ஒதுக்கிவிட்டு, மட்டமானவற்றைத் தெளித்தெடுத்து எமனே நமக்கு காட்டுகிறானோ என்று சொல்லத் தோன்றும்.

எமபயம், நரகவேதனை என்பதெல்லாம் இதுதான்.

இந்த அவஷ்தையிலிருந்து விடுபடவேண்டுமே, அதற்கு என்ன வழி.

எல்லாம் ஈசன் செயல். நம்செயல் ஒன்றும் இல்லை. நாமாவது, பிறந்ததாவது, வளர்ந்ததாவது. எல்லாம் அவன் காரியமே. அவன் தான் பிறந்தான், வளர்ந்தான், இன்பம் அடைகிறான், துன்பப்படுகிறான். என்று நம்மை அவனிடம் ஒப்படைத்து விடுவதுதான் வழி.

அதுதானே உண்மை. உண்மையில் தான் ஆறுதல், நிம்மதி, ஆனந்தம்.

நான் என்னும் மயக்க வெறியை உதறி எறிந்தவர் நக்கீரதேவர். அவர் சொல்கிறார் மயக்கத்தில் கிடந்து உழல்பவர்களை நோக்கி.

*அடைந்துய்ம்மின் அம்மானை;*
*உம்ஆவி தன்னை*
*குடைந்துண்ண எண்ணிய வெம்*
*கூற்றம் - கடைந்து*
*கண்ணுளே பார்க்கும்*
*பொழுது கயிலாயத்(து)*
*அண்ணலே கண்டீர்*
*அரண்.* (3)

---

அடைந்து உய்ம்மின் - இப்பொழுதே பாதுகாப்பான இடம் தேடிக் கொள்ளுங்கள். கயிலாயத்து அண்ணலே அரண் - வேறு எங்கே இருக்கிறது பாதுகாப்பான இடம். காளத்தி நாதர், கயிலாய நாதர் திருவடியைத் தவிர்த்து உடனே பற்றுங்கள் அவன் அருளை.

உம் ஆவி தன்னை குடைந்து உண்ண எண்ணிய வெம் கூற்றம் - உங்களை செக்கில் போட்டு அரைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறான் எமன். கூற்றம் - எமன். கடைந்து கண்ணுளே பார்க்கும் பொழுது - உங்களை அவன் வறுத்தெடுப்பதற்கு முன்பே கயிலாயத் தண்ணலை அடைந்துய்ம்மின.

காலம் தாழ்த்த வேண்டாம்.

4) உண்மையான (பக்திமயமான) கவி ஒன்று உதிக்கிறது என்றால் கவிஞரே (பக்தரே) கவியாகப் பிறக்கிறார் என்று தான் பொருள். தெய்வ கடாட்சமே கவியாகிறது கவிஞர் மூலம்.

பக்தியைப் பிரதிஷ்டை பண்ண இடம் கிடைத்து விட்டது கவியில். அதாவது நாமே கவியாகிவிட்டோம், அதாவது பரம்பொருள் கொலு விருக்கும் கோவிலாகிவிட்டோம் என்று அதிசயப்படுகிறார். நக்கீரதேவர் அதன் சிறப்பை என்னென்று சொல்ல என்றெல்லாம் அதிசயப்படுகிறார். கண்ணுக்குத் தெரியாத சின்னஞ்சிறு உள்ளம், பேரண்டத்தையே கொலுவிருக்க இடம் கொடுத்துவிட்டது என்றெல்லாம் வியக்கிறார் நக்கீர தேவர்.

இப்படி ஒரு அதிசயம் ஏற்பட்டால் சும்மா இருக்க முடியுமா? குதிக்க வேண்டியதுதான், ஆடவேண்டியதுதான். கும்மியடித்து விளையாடவேண்டியதுதான். பாருங்கள் பாருங்கள், என் உள்ளத்தின் பெற்றியை (உயர்வை)ப் பாருங்கள், நன்றாகப் பாருங்கள். கண்ணைத் திறந்து பாருங்கள் என்று ஆகாயத்துக்கும் பூமிக்குமாகத் துள்ளிக் குதித்து விளையாடவேண்டியதுதான்.

தன்வசம் இழந்து இறைவன் வசம் ஆகிவிட்டார் நக்கீர தேவர். இறைவனே நக்கீரர் வசந்தான். இதை அனுபவிக்கிறார் நக்கீரர். ஆனந்தபரவசம் துள்ளிப் பாய்கிறது உள்ளத்தில் / செய்யுளிலுந்தான்.

*பெரியவர் காணீர் என்*
*உள்ளத்தின் பெற்றி!*
*தெரிவரிய தேவாதி*
*தேவைப் - பெரிதும்*
*திருத்தக்கோர் ஏத்தும்*
*திருக்கயிலைக் கோவை*
*இருத்தத்தான் போந்த(து)*
*இடம்.* (4)

---

பெரியவர் காணீர் - நான் சாதாரணம். தூசி மாத்திரம். நீங்கள் அருளாளர்கள். நீங்களே பாருங்கள். உள்ளத்தின் பெற்றி - எப்படி விரிந்து பரந்திருக்கிறது என் உள்ளம். திருத்தக்கோர் ஏத்தும் - மெய்ஞ்ஞானிகள் வாழ்த்தி வழிபடும். திருக்கயிலைக் கோவை - சிவபெருமானையே. இருத்தத்தான் போந்தது இடம் - எழுந்தருள இடம் கொடுத்து விட்டது என் மனம்.

பக்தி இருந்தால் மனம் பளிங்குதான். கண்ணாடிதான் கவியே தான்.

5) மருத்துவரிடம் நோயாளி என்ன கேட்கிறான். நோயிலிருந்து விடுபட உதவும் என்கிற ஒன்று தானே கேட்கிறான்.

மாளிகை வேண்டும், எஸ்டேட் வேண்டும், பதவி வேண்டும், பட்டம் வேண்டும், பணம் வேண்டும் என்றா கேட்கிறான்.

உடம்பு இருக்கிறது. கண், மூக்கு என்று உறுப்புகள் இருக்கின்றன. ரத்தம், எலும்பு, நிணம், தசை எல்லாம் இருக்கின்றன. ஆனால் முறை தவறி ஏனோ தானு மாறாக நடக்கின்றன. அதைச் சீர் செய்து ஒழுங்குப்படுத்த வேண்டும் என்பது தான் மருத்துவரிடம் நோயாளி வேண்டும் விண்ணப்பம்.

இறைவனிடம் பக்தர் வேண்டுவதும் அது தான் அன்பு இருக்கிறது. உணர்ச்சி இருக்கிறது. ஈடுபாடு இருக்கிறது. ஆனால் தாறுமாறாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதை ஒழுங்குபடுத்திவைக்க வேண்டும் பெருமாளே! அது ஒன்று போதும் என்று வேண்டுகிறார் நக்கீர தேவர். இறைவனிடமே நேருக்கு நேராக நின்றே முறையிடுகிறார் நக்கீர தேவர்.

*பாசத்தை விட்டு நின்*
*பாதத்தின் கீழே என்*
*நேசத்தை வைக்க*
*நிளைகண்டாய் - பாசத்தை*
*நீக்குமா வல்ல*
*கயிலாயா / நீ என்னைக்*
*காக்குமா இத்தனையே*
*காண்.* (5)

---

பாசம் - மோகம். நேசம் - அன்பு. மனைவி, மக்கள், வீடு, வாசல், உற்றார், உறவினர் எல்லோரிடமும் அன்பு இருக்க வேண்டும். அதே நேரத்தில் எல்லாம், இறைவன் மயம் என்கிற உண்மை உணர்ச்சியும் இருக்க வேண்டும். அது இல்லை என்றால் அன்பு மோகம் ஆகி விடும். அடிமைப்படுத்திவிடும். அந்த மோகம். பிறகு விடுதலை ஏது. ''அடிமைப் பிணியிலிருந்து விடுவித்தால் போதும். இதில் என்ன சிரமம் உமக்கு'' என்று கேட்கிறார் நக்கீர தேவர். கேள்வியின் தொனி பாட்டில் கிடக்கிறது. அதுதான் செய்யுள் உருவம்.

6) ஐந்து ஆறு வயதுக் குழந்தை. கொழு கொழு என்றிருந்தது. அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தது குழந்தை. சிரிப்பும், விளையாட்டும், மகிழ்ச்சியாகவும் வளர்ந்து வந்த குழந்தை திடுதிப்பென்று காய்ச்சலில்ப் படுத்தது. இரண்டு மூன்று நாளில் மளமள என்று ஏறியது காய்ச்சல். ஜன்னிக் கோளாறே வந்து விட்டது குழந்தைக்கு. ஜன்னி உதறலில் என்னென்னவோ சொல்லிப் புலம்புகிறது குழந்தை. குளிர் சுரமோ தூக்கித் தூக்கிப் போடுகிறது குழந்தையை.

நாட்டு வைத்தியர் மருந்து கொடுத்துப் பார்த்தார். ஆயுர்வேத மருத்துவர், ஆஷ்பத்திரி டாக்டர், குழந்தை மருத்துவர் என்ற சிறப்பு நிலை வைத்தியர் என்று சகல வைத்தியமும் நடந்தது. ஆனால் காய்ச்சலோ, குளிர் சுரமோ இறங்கவில்லை.

தாய் தந்தையருக்கு ஒரே வருத்தம். அக்கம்பக்கத்துக் காரர்களும் அப்படியே. ''கல கல என்று எப்படி ஓடியாடி விளையாண்டு கொண்டிருந்த குழந்தை, இப்படிப் படுத்துக் கிடக்கிறதே'' என்று ஆற்றாமைப் பட்டார்கள் பக்கத்து வீட்டுக் காரர், தெருக் காரர் எல்லோருமே.

கோடை வெயிலிலா, இப்படியா வரும் குளிர் சுரம் என்று வியந்தனர் பலர்.

★★★★★★★

குழந்தையின் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் கல்லூரிப் பேராசிரியர். கோடை விடுமுறைக்கு ஊட்டி, கொடைக்கானல், பெங்களூர், மைசூர் என்று குடும்பத்தோடு போனார்கள். ஒரு மாதகாலம் கழித்து வந்தார்கள். பக்கத்து வீட்டுக் குழந்தைக்கு காய்ச்சல், சுரம், என்று தெரியவும் ஓடோடி வந்தார்கள். அவர்களை பார்த்த உடனேயே குழந்தையின் முகத்தில் சோர்வு விலகியது. பிரகாசம் உண்டானது. ஆனந்தம் பொங்கியது. குழந்தையின் முகத்தில் கண்ணில், வாயில், தேகம் முழுவதுமே பரவி ஓடியது ஆனந்தம்.

படிப்படியாகக் காய்ச்சல் இறங்கியது. இரண்டு மூன்று நாட்களில் பூரண நலம் குழந்தைக்கு பழையபடி ஓடி ஆட ஆரம்பித்துவிட்டது குழந்தை.

பக்கத்து வீட்டு அம்மாவும், அவள் பொண்ணும் குழந்தையிடம் அன்பாய் உறவாடியவர்கள். அவர்களிடத்து ஒரே பிரியம் குழந்தைக்கு. உயிருக்குயிரான பிரியம்.

அவர்களோடு குழந்தையும் ஊட்டி முதலிய இடங்களுக்குப் போக ஆசைப்பட்டது. அவர்களும் குழந்தையைக் கூட்டிப்போக விரும்பினார்கள். என்ன சொல்லியும் கேட்கவில்லை பெற்றோர். அதனால் வந்த வினை, இந்தக் காய்ச்சல்.

★★★★★★★

இனி, எல்லாம் இறைவன் செயல் என்கிற உண்மையில் நிற்கிறவர்கள் பக்தர்கள். ஆனந்தமாக இருப்பார்கள் அப்பொழுது. முரண்பட்ட உலகவிவகாரங்கள் வந்து அந்த நிலையைக் கலைப்பதும் உண்டு. அப்பொழுது கலக்கம், சஞ்சலம், மயக்கம், பயம் அடுக்கடுக்காய் வந்து தாக்கும் அவர்களை.

தீராத நோயாகவே இருந்து தொந்தரவு செய்யும் அந்த மறதி.

மயக்கம் விலக உண்மை தரிசனம் கொடுக்க வேண்டும். தரிசனம் கிடைத்ததுமே ஆனந்தந்தான்.

★★★★★★★

இது ஒரு அதிசயந்தானே. இந்த அதிசயத்தைக் காதல் துறையில் வைத்து நாடக இயலில்க் காட்டுகிறார் நக்கீர தேவர்.

ஆறு ஏழு வயதுப் பெண். தினந்தோறும் காலை, மாலை இரண்டு வேளையும் தாயோடு சேர்ந்து கோவிலுக்குப் போவாள் பெண். காளத்தி நாதரைத் தரிசிப்பாள். அவர் அழகிலும், அலங்காரத்திலும் மனதைப் பறிகொடுத்துவிட்டாள் பெண்.

பத்துப் பதினைந்து நாட்களாகத் தொடர்ந்து கோவிலுக்கு போக முடியாத சூழ்நிலை வீட்டில்.

காளத்தி நாதரை மறக்க முடியவில்லை பெண்ணால். கண்முன் வந்து நிற்கிறார் காளத்தி நாதர். கண்ணைத் திறந்தாலும் அவர்தான். மூடினாலும் அவர்தான். அப்படி நெஞ்சம் நிறைந்து நிற்பவரைத் தேடிப் போய்ப் பார்க்க முடியவில்லையே என்று ஏங்குகிறாள் பெண்.

படுத்த படுக்கையாகி விட்டாள் பெண். அனுபவப்பட்ட பக்கத்து வீட்டுப் பெரியம்மா (வயதான பெண்) வந்தாள். நிலைமையைப் பார்த்தாள்.

''சரி, சரி, மற்றவை கிடக்கட்டும். முதலில் இந்த பெண்ணைக் கோவிலுக்குக் கூட்டிப்போங்கள்: காளத்தி நாதரைத் தரிசிக்கட்டும் குழந்தை. பிறகு பார்க்கலாம் மற்றதை'' என்றாள்.

அப்படியே செய்தார்கள். அவ்வளவு தான் காய்ச்சலாவது, மண்டையடியாவது. எல்லாம் பறந்தோடிவிட்டது. ஒரே உல்லாசம் குழந்தைக்கு.

இவளுக்கு நல்லவா (று)
 எண்ணுதிரேல், இன்றே
தவளப் பொடி இவன் மேல்ச்
 சாத்தி - இவளுக்குக்
காட்டுமின்கள் காளத்தி,
 காட்டிக் கமழ் கொன்றை
சூட்டுமின்கள் தீரும்
 துயர். (6)

---

இன்றே - இப்பொழுதே. தவளப் பொடி - வெண்(திரு) நீறு. காளத்தி - காளத்தி நாதரை. கமழ்கொன்றை - மணக்கும் கொன்றைப் பூச்சரத்தை.

குறிப்பு : சோழ மன்னன் பவனி வருகிறாள். மன்னன் அழகில் மயங்கி காதலுக்கு ஆளாகிவிடக் கூடாதே என்று மகளை வீட்டினுள் தள்ளி கதவைச் சாத்தி வெளித் தாழ்ப்பாள் போட்டுவிட்டாள் தாய். பூட்டி விட்டு தெருவில் வந்து சந்தோசமாகப் பவனியைப் பார்த்து அனுபவிக்கிறாள் தாய்.

உள்ளே இருக்கிற பெண்ணுக்கு ஒரே ஆத்திரம் பவனியைப் பார்க்கத். துடிக்கிறாள், கதவை டம், டம் என்று அடிக்கிறாள். தலையால் முட்டவே செய்கிறாள் பெண். யாரோ ஒரு வயதானவர். விஷயம் இன்ன தென்று புரிந்தது அவருக்கு. தாயிடம் வந்து சொல்கிறார். ''முதலில் கதவைத் திறந்துவிடம்மா. மற்றவை கிடக்கட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம் அவற்றை. பெண்பாவம் பொல்லாததம்மா. முன்னைப் பின்னை ஆகிவிட்டால் யார் சுமப்பது பழியை.'' என்று சொல்வதாக முத்தொள்ளாயிரத்தில் ஒரு காட்சி.

*திறந்திடுமின் தீயவை*
*பிற்காண்டும் மாதர்*
*இறந்து படில்ப்பெரிதாம்*
*ஏதம் - உறந்தையர்கோன்*
*தண்ணார மார்பன்*
*தமிழ்நர் பெருமானைக்*
*கண்ணாரக் காணக்*
*கதவு*

முத்தொள்ளாயிரப் பாட்டையும், நக்கீர தேவர் பாட்டையும் மாற்றி மாற்றிப் பார்க்க வேண்டும். உள்ளம் மட்டுமா தேகம் முழுவதுமே தேனாக ஊறும் கல்க்கண்டாய் இனிக்கும்.

வயதான பெண் - செவிலித்தாய் போல ஒரு பெண் சொல்வதாகப்பாட்டு - நாடகத்துறையில் செல்லி கூற்று என்று பெயர்.

# உண்மை, உணர்ச்சி இவைதான் மருந்து என்று எழுதி இருக்கிறது சீட்டில்.

7) காதல் நோய் கிடக்கட்டும். காதலர் ஒருவரை ஒருவர் பார்த்த மாத்திரத்திலேயே ஓடிவிடும் நோய், காதல் நோய். ஆனால் பிறவி நோய்...? பொல்லாத நோய் பார்த்த உடன் விலகுவதில்லை அது.

எல்லாம் இறைவன் திருவிளையாடல் என்னும் உண்மையை (பார்த்த மாத்திரத்தில்) தெரிந்ததும் ''ஆகா, அப்படியா என்று அதிசயம் வரும். அந்த அளவுக்குப் பொய் விலகும். அதாவது மேலெழுந்தவாரியாக ஊசலாடிக் கொண்டிருக்கிற பொய்விலகும். ஆனால் ஆணவம் கரைந்து விடவா செய்யும்.

எத்தனை கோடி பிறவிகளில் ஊடுருவிச் சேர்ந்தே வந்திருக்கிறது அறியாமை. ஆணவம். அது அடை சேர்ந்து அடைசேர்ந்து கல்லாய், கருங்கல்லாய் இறுகிப் போய்த்தானே கிடக்கிறது.

எளிதில்க் கரைந்துவிடுமா அது. பார்த்த உண்மையோடு தோய வேண்டும். அந்த உண்மையிலேயே ஊன்றி, நிற்க வேண்டும். ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு அசைவிலும், ஒவ்வொரு நெளிவிலும் இறைவனுடைய திருவிளையாடலைக் கண்குளிரப் பார்க்க வேண்டும். மனம் குளிர அனுபவிக்க வேண்டும்.

அனுபவம் உணர்ச்சியோடு ஒன்ற ஒன்ற தெளிவு பிறக்கும். உறுதி வரும். அப்படியே கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும் ஆணவம்.

உண்மை உணர்ச்சி மனதில் காலூன்றி உறுதியாய் நின்றுவிட்டால் சிந்தனை, செயல் எல்லாம் திருத்தமாகவே இருக்கும். வாயிலிருந்து வருகிற சொல்லும் அடிப்படையான உண்மையை, கடவுள்த் தத்துவத்தையே சுட்டி நிற்கும். நமசிவாய, நமசிவாய என்னும் மந்திர ஒலியாகவே இருக்கும்.

நான் என்னும் பிறவிக்கு கண்கண்ட மருந்து அதுதான்.

*வாயிலே வைக்கும்*
*அளவில் மருந்தாகி*
*தீய பிறவி நோய்*
*தீர்க்குமே - தூயதொரு.*
*கம்பெருமா தேவியொடு*
*மன்னும் கயிலாயத்(து)*
*எம்பெருமான் ஓர் அஞ்(சு)*
*எழுத்து* (7)

8) கடவுள் ஒருவர்தான். கடவுளைத் தவிர ஒன்றும் இல்லை. பிரபஞ்சம் முழுவதும் கடவுள்தான். கடவுளின் திருமேனி தான் பிரபஞ்சம்.

அன்டம், அகண்டம், பேரண்டம் எல்லாம் கடவுள், புல்லிலிருந்து சூரியன் வரை, எறும்பிலிருந்து மலை வரை, பூமி, வானம், தங்கம், கல், மண், மனிதன் எல்லாம் கடவுள் என்றானபின் நான் கடவுளைப் பார்க்கப்போகிறேன் என்றால் அதுவேடிக்கைதான்.

*******

கன்னியாகுமரி, ராமேஷ்வரம், காசி, குற்றாலம், ஊட்டி, கொடைக்கானல் காஷ்மீர் என்று ஒவ்வொரு இடமாய்ப் போய் வருகிறோம். அதுபோல செவ்வாய், புதன், வெள்ளி, சனி என்று ஒவ்வொரு இடமாய்ப் போய்வர முடியுமா.

---

தூயது ஒரு கம்பெருமாதேவியொடு - தெள்ளத் தெளிந்த நீரோட்டமுடைய கங்காதேவியோடு. மன்னும் - சேர்ந்திருக்கும். வெண்பனி மூடிய கைலாசமலை தனியாகவா இருக்கிறது (ஆகாய) கங்கையோடு சேர்ந்தல்லவா இருக்கிறது, கங்கையே அருவியாக உச்சியிலிருந்து கொட்டினால் எப்படி இருக்கும் கைலாச மலை. அப்படி இருக்கிறது சிவபெருமானுடைய கொலு.

அப்படியே போய்வந்தாலும் சூரியனுக்குப் போய்வர முடியுமா? சூரியனைப் போல் பலகோடி சூரியன்கள் ஓர் அண்டத்தில். ஒவ்வொரு சூரியனாய்ப் போய் ஏறி இறங்க யாரால் முடியும்.

பலகோடி அண்டங்களைக் கொண்டது ஒரு அகண்டம். அப்படிப் பலகோடி அகண்டங்களை உடையது பேரண்டம்.

அந்தப் பேரண்டந்தான் இறைவன். அவனை எப்படி உச்சிமுதல் உள்ளங்கால் வரை ஒரு சேரப் பார்ப்பது.

போகப்போக போய்க்கொண்டே இருக்கிறது கடவுள்த் தத்துவம். எல்லையே இல்லாதது அது. அப்படி ஒரு 'நீளத்தே நின்ற நெறி' அது.

*''யார்க்கும்*
*காண்டற்(கு) அரிதாய்ப் போய்*
*நீளத்தே நின்ற நெறி''*

கடவுள்த்தத்துவம்.

எங்கும் ஒரு தன்மைத் தாய் நிறைந்த பரம்பொருளாகிய கடவுள்த் தத்துவம் சக்திமயமாக - ஒரே சக்திமயமாக இருக்கிறது. அப்படி அரிதினும் அரிதாய் இருப்பதால்தான் எளிதில் காண முடிகிறது கடவுள் தத்துவத்தை. கண்டு உறவாட முடிகிறது. உறவாடிக் கலந்து மருவமுடிகிறது. நான் என்பதை விட்டவர்களால்தான்.

கடவுள்த் தத்துவத்தோடு ஒன்றிக் கலந்தவர்களிடம் சொல்வேறு, செயல்வேறு என்று பேதம் இருக்கவா செய்யும்.

ஒன்றித்திளைத்த ஆனந்தம் நமசிவாய, நமசிவாய் என்ற மந்திரமாக வரும். ஐந்தெழுத்து மந்திரமாக வந்துகொண்டே இருக்கும். ஒன்றித் திளைக்கிறவர்களிலிருந்துதான்.

அதுதான் ஞானம். அதுதான் கடவுளின் கையில் நம் கையைக் கொண்டுப் போய்ச் சேர்க்கும்.

*அஞ்செழுத்தும் கண்டீர்*
*அருமறைகள் ஆவன்அவ்*
*அஞ்செழுத்தும் கற்க*
*அணித்தாகும் - அஞ்சவித்த*
*காளத்தி யான் யார்க்கும்*
*காண்டற்(கு) அரிதாய்ப்போய்*
*நீளத்தே நின்ற*
*நெறி.* (8)

9) இறைவனுடைய நாடகத்தில், ஞானக் கூத்தில் இறைவனுக்கு உகந்த பாத்திரம் மனிதன்தான். மனிதனை அவ்வளவு திருத்தமாய், அவ்வளவு பக்குவமாய், அவ்வளவு அழகாய் வடித்தெடுத்திருக்கிறது விதி (இயற்கை - நியதி)

மனிதனுடைய முகத்தைப் போல அழகான வஷ்துவேறொன்று இருக்கவா செய்கிறது. மனிதனிடந்தானே மனம், (சிந்தனை) என்று ஒன்றிருக்கிறது. அதனுடைய ஆற்றலுக்கு நிகர் உண்டா? அதன் அற்புதத்துக்குத் தான் ஈடு இணை உண்டா?

மனதில் உதித்ததை வார்த்தைகளால் சொல்ல முடிகிறது. மற்றவர் பொருளுணர்ந்து அதை கேட்கவும் முடிகிறது. உணவையும், உடையையும் உற்பத்தி செய்ய முடிகிறது. அதற்கு ஏற்றபடி கையை, விரலை, மூளையை நீட்ட, மடக்க வைத்திருக்கிறது.

---

அஞ்செழுத்தும் - நமசிவாய என்னும் மூலமந்திரம். அருமறை - மெய்ப்பொருள். விஞ்ஞான மயமான மெய்ஞ்ஞானம். கற்க - பெருளுணர்ந்து அதனோடு ஒன்றஒன்ற. அணித்தாகும் - கடவுள்த் தத்துவமே நம் கையில்தான். கடவுள்த் தத்துவம் என்றால் அது நம் திருக்காளத்தியில் எழுந்தருளிய காளத்தி அப்பனேதான். அவனுடைய அருள்நோக்கு இருந்தால் தான் வெளியே ஓடிக்கொண்டிருக்கும் ஐம்புலன்களையும் உள்ளே, மனதுக்குள்ளே திருப்பிவிட முடியும். ஐம்புலன்களும் உள்நோக்கிப் போகப்போக எல்லாம் ஈசன் திருவருள் என்று தெரியும். மனம், வாக்கு, காயம் எல்லாம் ஒன்றாய்விடும். ஆன்மதத்துவமும் கடவுள்த் தத்துவமும் கலந்து ஒன்றாய் நிற்கும். ''அஞ்சு அவித்த காளத்தியான், யார்க்கும் காண்டற்கு அரிதாய்ப் போய் நீளத்தே நின்ற நெறி, அஞ்செழுத்தும் கற்க அணித்தாகும்.

விஞ்ஞானம் என்ன, மெய்ஞ்ஞானம் என்ன, குடும்பம் என்ன, எல்லாம் மனிதனிடந்தான்.

இவ்வளவிருந்தும் கவலையோடிருக்கிறான் மனிதன். கவலை என்றால் மனிதன்தான். மனிதன் என்றால் கவலை தான் என்று சொல்லும்படி இருக்கிறது காரியம்.

எல்லாம் இருக்கிறது. வசதியாகவே இருக்கிறது. ஆனால் ஒன்றையும் வைத்து வாழத் தெரியவில்லை மனிதனுக்கு. எந்தப் பாதையில் போக வேண்டும், எப்படிப் போக வேண்டும், எங்கு போக வேண்டும் என்கிற விபரமே இல்லாதபடி எங்கெங்கோ சுற்றி அலைகிறான் மனிதன்.

இடர்ப்பட்டுக் கலங்கி மறுகும் மனிதமந்தையைப் பார்த்து உள்ளம் உருகுகிறார்கள் அருளாளர்கள். நக்கீர தேவரும் அருளாளர்தானே. எப்படி உருகிக் கரைகிறார் என்று பாருங்கள்

*இடரீர் உமக்கோர்*
*இடம்நாடிக் கொண்டு*
*நடவீரோ காலத்தால்;*
*நாங்கள் - கடல்வாய்க்*
*கருப்பட்டோங்(கு) உள்நீர்*
*முகில்சேர்கா ளத்திகாண*
*ஒருப்பட்டோம் கண்டீர்*
*உணர்ந்து.* (9)

10) மனிதர்களைப் பார்த்து இரக்கப்படுகிறார்கள் பக்தர்கள். உண்மையான பக்தர்கள். "ஏன் இப்படி வேண்டாத

---

இடரீர் - துன்பத்தைச் சுமக்கும் சுமைதாங்கிகளே. கடல் வாய் கருப்பட்டு ஓங்கு ஒள்நீர்முகில் - கடல்நீரை உண்டு அதனால் கருக்கொண்டு வான்நோக்கி எழுந்து செல்லும் மழை மேகம். காளத்தி - காளத்திநாதரே தஞ்சம் என்று. நாங்கள் உணர்ந்து ஒருப்பட்டோம் - அறுபவபூர்வமாகத் தெளிந்து அவரைக் காணவும் கண்டுகளிக்கவும் கிளம்பிவிட்டோம். உமக்கோர் இடம் நாடிக் கொண்டு - உங்களுக்கு ஏற்ற வழியில். நடவீர் நீங்களும் அவனைத் தேடுங்கள். அவனே தஞ்சம் என்று நடங்கள். காலத்தால் - தக்கபருவம் இது. நழுவவிடாதீர்கள் சந்தர்ப்பத்தை.

சாகப் போகிற நேரத்தில் சங்கரா சங்கரா என்றால் பலன் என்ன.

தொல்லைகளை எல்லாம் தலையில் இழுத்துப் போட்டுக் கொண்டு தடுமாறுகிறீர்கள், தத்தளிக்கிறீர்கள்'' என்று பரிவோடு விசாரிக்கிறார்கள். இரக்கப்படுகிறார்கள் அருளாளர்கள். கருணையே உருவான அவர்கள். ''கடவுளை நம்புங்கள் பாரத்தை அவன் தலையில் போடுங்கள் அது தான் வழி. வேறு வழி இல்லை. நாங்கள் போவது அந்த வழிதான். நீங்களும் எங்களுடன் வாருங்கள்'' என்றே உதவ ஓடி வருகிறார்கள்.

அதே தம்மொத்த மனிதர்களைப் பார்த்து உருகும் அருளாளர்கள், பக்தர்கள் கடவுளைப் பார்த்து என்ன சொல்கிறார்கள்.

பெருமானே! நீ நீ அல்ல. நான் நான் அல்ல. ஒன்று தான். ஏகத் தத்துவந்தான். இது உண்மை. இந்த உண்மையோடு தோயத் தோய எப்படி இருக்கிறது தெரியுமா பாலும், அதன் சுவையும் (தேனும்) கமகம என்று மணக்கிறதுபோல் மணக்கிறது.

இனி, நீ எங்கிருக்கிறாய், எப்படி இருக்கிறாய், உன்னைக் கண்டுபிடிப்பது எப்படி என்றெல்லாம் ஆராய்ச்சியில் இறங்கிவிட்டால் ஒழிந்தது காரியம். துருவித் துருவிப் பார்த்தாலும் மாயமாய் மறைந்துகொள்கிறாய்.

என்னை நான்விட்டுவிட்டால் நீ யாகிவிடுகிறேன் நான். அப்படி விடாமல் என்னை நான் இறுகப் பற்றி நின்றால் உன்னைத் தேடித் தேடி அலைவது தான் மிச்சம்.

சரியான ஆசாமி தான் நீ. பெருமானே! பேஷ், பேஷ். வெகுஜோர் உம்முடைய காரியம்.

*''இனியவா காண்நின் இயல்பு''*

*உணருங்கால் உன்னை*
*உருத்தெரியக் காட்டாய்*
*புணருங்கால் பாலொடுதேன்*
*போல்வாய் - இணரில்*
*கனியஆம் சோலைக்*
*கயிலாயம் மேயாய்*
*இனியவா காண்நின்*
*இயல்பு.* (10)

---

இணரில் - பூங்கொத்துப்போல். கனியஆம் சோலை - காயும் பழமும் குலை குலையாகத் தொங்கும் தோட்டங்கள் சூழ்ந்த. கயிலாயம் மேயாய் - திருக்கைலாசலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் பெருமானே. நின் இயல்பு - உன்னுடைய போக்கு. இனிய - ஒருமாதிரிதான். ஆ - அடடா! என்ன சுகம் அதில்!

11) கடவுள்த் தத்துவம் பற்றிய அறிவு என்றால் கடவுள் வேறு(தனி) போலவும். அப்படியே நாமும் வேறு (தனி) போலவும் ஒரு மயக்கம். மயக்கம் மட்டுமா அது. அறியாமை, பேதைமை. இருட்டடிப்பு, குருட்டுத்தனம் எல்லாம் அது தான்.

கடவுளைத் தவிர ஒன்றும் இல்லை. பேரண்டமே கடவுள்தான். பேரண்டத்தில் உள்ள ஒவ்வொன்றும் அவர்தான். அண்டம், பகிரண்டம், நீர், நெருப்பு, மண், பொன் எல்லாம் கடவுள்தான். ஈசன் அருளே தான் என்னும் உணர்வுதான் பக்தி. அதுதான் ஆணவத்தைக் கரைக்கும்.

அணுவிலிருந்து அணுவுக்குள் அணுவுக்குள் அணுவுக்குள் அணுவிலிருந்து பிரபஞ்சமே அவன் தான். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது ஈசன் அருள்.

வார்த்தையில் பொருள் நிறைந்திருப்பது போல், உடம்பில் உயிர்நிறைந்திருப்பது போல், பூவில் மணம் நிறைந்திருப்பது போல் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது ஈசன் அருள். முட்டித் ததும்பியபடி, நிறைந்திருக்கிறது அருள். அப்படி நிறைந்திருப்பது தான் நியதி. அருள். திருவருள், கடவுள்.

*உரையும் பொருளும்*
*உடலும் உயிரும்*
*விரையும் மலரும்போல்*
*விம்மிப் - புரைஇன்றி*
*சென்றவா றன்றே!*
*திருக்கயிலை எம்பெருமான்*
*நின்றவா றெங்கும்*
*நிறைந்து.* (11)

---

உரை - வார்த்தை. விரை - மணம். புரை இன்றி - இடைவெளி (வெற்றிடம்) இல்லாமல். சென்ற ஆறு அன்றே - போகப்போக போய்க் கொண்டே இருக்கிற அதிசயந்தான். எங்கும் நிறைந்து நின்ற ஆறு - எங்கும் ஒரு தன்மைத்தாய் நிறைந்திருக்கிற ஈசன் அருள்.

குறிப்பு : நகைச்சுவையும் நளினமும் சொகுசும் அப்படியே பாட்டில் கிடக்கின்றன. செய்யுளுக்கு உருவம் கொப்பது அது தான். அப்படித்தான்.

*12) சமுத்திரத்தில் அலை உண்டாகிறது. நிமிர்ந்து நிற்கிறது. எழுந்து குதிக்கிறது. ஓ, ஆ, என்னும் இரைச்சலோடு ஆர்ப்பரிக்கிறது அலை. கரையைத் தாக்குகிறது. முட்டுகிறது, மோதுகிறது. பிறகு சமுத்திரத்தோடு சமுத்திரமாய் கலந்து விடுகிறது அந்த அலை.*

*சமுத்திரந்தான் அலையாக எழுந்தது. கரைந்து கலப்பதும் சமுத்திரந்தான்.*

*இறைவனும் அப்படியே. அலைகள் உண்டாவதுபோல சகலதத்துவங்களும் இறைவனிடமிருந்து தோன்றுகின்றன. அப்படியும் இப்படியும் நடமாடுகின்றன. பிறகு இறைவனோடேயே அடங்கி ஒடுங்குகின்றன. எண்ணிறந்த தத்துவங்களாக உண்டாவதும் நடமாடுவதும் மறைவதும் இறைவன்தான்.*

*இறைவனுடைய பேருள்ளத்தில் ஆனந்தக் கனவுகளாய் தோன்றுவதும் மறைவதுமாக இருக்கின்றன பரமாணுவிலிருந்து அண்டம் பேரண்டம் அவ்வளவும்.*

*சிருஷ்டி என்பது அது தான். அந்த சிருஷ்டிதான் இறைவனின் திருமேனி.*

*இதையே திருவிளையாடல் என்கிறோம். இறைவனின் நடனம், ஆனந்தக் கூத்து என்கிறோம். ஈசனின் நாடகம் என்பது இது தான்.*

---

*குறிப்பு : ஒரு புல்லைப் பார்க்கிறோம். அதனுள் நடக்கிற செயல் ஒவ்வொன்றும் கடவுள் செயல் என்றே தெரிகிறோம். மேகத்தைப் பார்க்கிறோம். அதுவும் அப்படியே தெரிகிறது. சூரியன், சந்திரன், நட்சத்திரம், பூமி எல்லாமே அப்படி அப்படியே இருக்கிறது. அருள் மயமாகவே இருக்கிறது. நமது கண்ணின் செயலைப் பார்த்தாலும் கடவுள்தான் தெரிகிறார். இப்படியாக நாம் தான் ஒவ்வொன்றையும் போய்ப் போய் பார்க்கிறோம். பார்த்து எல்லாம் ஈசன் அருள் என்று காண்கிறோம். ஆனால் கடவுள் அங்கே இங்கே என்று போவதில்லை. புல்லிலிருந்து மரத்துக்கு, மரத்திலிருந்து மலைக்கு, மலையிலிருந்து மேகத்துக்கு என்று தாவித் தாவி ஓடுவதில்லை அவர். எங்கும் ஒரு தன்மைத்தாய் நிறைந்திருக்கிறார். நாம் போவது தான் அவர் போவது போல் தெரிகிறது ''சென்ற ஆறன்றே - நின்றவாறெங்கும் நிறைந்து''.*

இதன் அருமை பெருமையை எடுத்துச் சொல்ல வார்த்தைகள் ஏது? வல்லவர் யார்?

இந்த வியப்பை இறைவனிடமே சொல்கிறார் நக்கீர தேவர்.

*நின்இயல்பை யாரே*
*அறிவார் நினையுங்கால்*
*மன்னியசீர்க் காளத்தி*
*மன்னவனே - நின்னில்*
*வெளிப்படுவ(து) ஏழுலகும்*
*மீண்டே ஒருகால்*
*ஒளிப்பதுவும் ஆகும்*
*உரை.* (12)

---

*மன்னிய சீர் - ஏற்றம் இறக்கம் இல்லாமல் ஒரு தன்மைத்தாய் நிறைந்து நிற்கும் அற்புதம். நினையுங்கால் - ஆராய்ந்து பார்க்கின், காலம் காலமாக ஆராய்ந்தாலும். யார் அறிவார் நின் இயல்பை - யாருக்கும் தெரியும் உன் அற்புதம்.*

# குழந்தை மாதிரித் தான் கடவுளும்

*13) மேலும் சொல்கிறார் இறைவனிடம் நக்கீர தேவர்.*

*பெருமானே / என்னோடு தானே நீர் இருக்கிறீர்? நான் உம்மை நம்பித்தானே இருக்கிறேன். நீர்தானே வழிகாட்ட வேண்டும். ஆனாலும் வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்ல மாட்டேன் என்கிறீரே, அது ஏன்? இதைச் செய்! அதைச் செய்யாதே அப்படிச் செய்யாதே இப்படிச் செய் என்று கட்டளை இடவேண்டாமா எனக்கு. ஒன்றுக்கும் மசியாத கல்லுளிமங்கனாக இருக்கிறீரே பெருமானே, ஏன் அப்படி.*

*பணியாயால் என்னோ*
*பரிசு.*

*நீ ஒருவன் தான். பேரண்டம் முழுவதும் நீ தான். எங்கும் பூரணமாய் நிற்கிறாய் • ஆனாலும் உன்னைப் பார்க்க முடியவில்லை. என்னுள் ஒன்றி ஒன்றாய் இருக்கிறாய். அப்படி இருந்து கொண்டே என் கண்ணில்ப் படாமல் மறைந்துகொள்கிறாய்.*

*கண்ணும் நீதான், பார்வையும் நீதான். ஒளியும் நீதான். ஆனாலும் கண்ணுக்கும் புலனாவதில்லை நீ. அப்படியே ஐம்புலன்களுக்கும் பிடிபடாமல் ஒதுங்குகிறாய். சேர்ந்திருந்தே மறைந்துகொள்கிறாய்.*

*இப்படி வெட்கப்பட்டு ஒதுங்குகிற நீ அதைச் செய், இதைச் செய்யாதே என்று எப்படி கட்டளை இடுவாய்.*

*பாவம், பரிதாபப்படவேண்டியது தான்.*

*நிறைந்தெங்கும் நீயேயாய்*
*நின்றாலும் ஒன்றி*
*மறைந்(து)ஐம் புலன்காண*
*வாராய்; - சிறந்த*
*கணியாரும் தண்சாரல்க்*
*காளத்தி ஆள்வாய்*
*பணியாயால் என்னோ*
*பரிசு.* (13)

*கணி - வேங்கை மரம். தண்சாரல் காளத்தி - திருக்காளத்தி மன்லயும். அடிவாரமும். ஆள்வாய் - காடு, மலை எல்லாவற்றையும் கட்டி மேய்க்கிறாய் (ஆள்கிறாய்) ஆனால், பக்தர்களைக் கண்டால் ஏன் இந்தப் பயம்.*

14) இறைவன் என்றால் திருவருள் (நியதி தத்துவம்) தான். திருவருள் என்றால் விளையாட்டுத்தான்.

இறைவனுடைய விளையாட்டை நடனம் என்றும், கனவு என்றும் சொல்கிறோம்.

ஆடிக்கொண்டே இருக்கிறான் இறைவன் என்று சொல்வதைவிட ஆட்டமே (திருவிளையாடலே) இறைவனாக இருக்கிறது என்றே சொல்லலாம்.

அப்படி ஒரு கும்மாளி, உல்லாசம், ஆனந்தம்.

ஆனந்தம் பெருகப்பெருக கையில் இருப்பதை மற்றவர்களுக்குக் கொடுக்கவைக்கும்.

தன்னிடமுள்ள ஒவ்வொன்றையும் மற்றவர்களுக்குக் கொடுக்கவைக்கும் ஆனந்தம்.

தன்னிடம் உள்ளவை மற்றவர்களிடம் இல்லை என்பதால் பரிவு உண்டாகும். பரிவு காரணமாக தன்னிடம் உள்ள ஒவ்வொன்றும் தனக்குச் சுமையாகவே இருக்கும். அதனால் மற்றவர்களுக்கு அவற்றைக் கொடுக்கக் கொடுக்கத் தான் நிம்மதி.

தன்னையே கொடுக்கவைக்கும் பரிவு.

அரச பதவியையே கொடுத்துவிட்டு ஒன்றும் இல்லாத ஆண்டிப் பண்டாரமாகவே இருக்கவைக்கும் பரிவு.

ஆனந்த பரவசத்தின் இயல்பு இது. இனி துன்பத்தின் நிலையோ வேறு எவ்வளவு இருந்தாலும், மிதமிஞ்சி இருந்தாலும் போதாது போதாது என்று மற்றவர்களிடமிருந்து வாங்கவைக்கும் வறுமை என்றால் அதுதான். செல்வம் என்பது ஆனந்தம்.

கொடுப்பதில்தான் ஆனந்தம். குறளாசிரியர் இந்த உண்மையை ''ஈத்துவக்கும் இன்பம்'' என்றல்லவா தெளிவுபடுத்துகிறார்.

★★★★★★★

ஆனந்த சொரூபியாய் இருக்கிறாள் இறைவன் அதனால் கொடுத்துக் கொண்டே இருக்கிறாள். மிச்சம் ஒன்றும் இல்லை என்கிற அளவில் கையில் இருந்த எல்லாவற்றையுமே

கொடுத்துவிட்டான் பெருமான். ஒன்றும் இல்லாத ஏழைப் பரதேசி ஆகிவிட்டான் பெருமான்.

இறைவனிடமிருந்து பெற்றவர்கள் அரச போகத்தில் திளைக்கிறார்கள். கொடுத்தவனோ திருவோடும் கையுமாய் திரிகிறான்.

அதில்தான் எத்தனை சுகம் பெருமானுக்கு! இறைவனுடைய செயல் கோமாளித்தனமாகத் தெரியும் நமக்கு. ஞானிகளுக்கே புரியாத புதிராக வியப்பாக இருக்கிறது அது.

அந்த வியப்பு கவியாக வருகிறது.

*இருந்தவா காணீர்*
*இதுஎன்ன மாயம்!*
*அருந்தண் கயிலாயத்(து)*
*அண்ணல் - வருந்திப்போய்*
*தான் நாளும் பிச்சை*
*புகும்போலும்! தன்னடியார்*
*வாளாள மண்ணாள*
*வைத்து.* (14)

15) கையில் இருப்பதைக் கொடுத்துவிட்டு திருவோடேந்தி சிரித்து மகிழ்ந்து சுற்றிச் சுற்றி வருகிறான் பெருமான். சிவபெருமான்.

கோமாளித் தனமாக இருக்கிறது பெருமானின் காரியம். அதோடு நின்றதா காரியம்.

தன்னைத் தானே கோமாளியாக்கி கொண்டதோடு நிற்கவில்லை. மற்றவர்களையும், கிட்டத்தட்ட

---

இருந்தவா காணீர் - நடந்ததைப் பாருங்கள். இது என்ன மாயம் - இப்படியும் ஒரு கோமாளித்தனம் உண்டா? தண் - குளிர்ச்சி. அண்ணல் - சிவபெருமான்.

குறிப்பு : அரசபதவிகளை எல்லாம் நேரு முதலியவர்களிடம் கொடுத்துவிட்டு நவகாளிநோக்கி நடந்து போகவில்லையா மகாத்மா காந்தி.

எல்லோரையுமே கோமாளிகளாக அலையவிடுகிறான் பெருமான்.

★★★★★★★

எல்லாம் இறைவனுடைய செயல். நாமோ, நம்செயலோ என்று ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்து அறிந்தவர்கள் ஞானிகள். விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்து ஆராய்ந்து மெய்ஞ்ஞானம் பெற்றவர்கள் அவர்கள்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்று ஐந்து புலன்கள். இந்த ஐந்து புலன்கள் தான் ஒரு இடத்திலும் நிற்கவிடாமல், ஒன்றையும் பார்க்கவிடாமல் அங்கே இங்கே என்று நம்மை இழுத்துக் கொணடு ஓடுவது.

நம்மை அவை இழுக்க இடம் கொடுக்கக் கூடாது. அவற்றை நாம் கட்டுப்படுத்த வேண்டும். கட்டுப்படுத்தி உண்மையை, நிலைத்த அடிப்படை உண்மையை பார்க்கவேண்டும். பார்க்கப் பார்க்க இதழ் இதழாக விரியும் கடவுள்த் தத்துவம். இழை இழையாகப் பிரித்து கையில் எடுத்து உண்மையின் ஒவ்வொரு சாயலையும் உதறிப் பார்க்க முடியும். அப்படிப் பார்க்கிற பார்வைக்கு ஞானக் கண் என்று பெயர்.

ஞானக் கண்ணால் கடவுள்த் தத்துவத்தைக் கண்டு அதனோடு திளைத்து சதா உறவாடுகிறவர்கள் ஞானிகள்.

உறவு இறுக இறுக நாம் வேறு, கடவுள் வேறு என்கிற பேதமே இருக்காது ஞானிகளிடம்.

அப்படி எல்லாம் தெளிந்து உறுதிபெற்ற ஞானிகளையே ஏமாற்றிவிடுகிறான் இறைவன். மனைவியைக் காட்டி, மக்களைக் காட்டி, வேண்டியவர், வேண்டாதவர் என்றெல்லாம் காட்டி தன்னை மறைக்கிறான் பெருமான். மற்றவர்களின் கண்ணீரை, புன்முறுவலை, உறவை, பிரிவை இப்படி ஒவ்வொன்றாகக் கொண்டு வந்து முன்னே நிறுத்துகிறான். பார்க்க வைக்கிறான், பரிவை உண்டாக்குகிறான், ஏன், சினத்தையே உண்டாக்கு கிறான். அப்படியே அவன் நழுவுகிறான். ஒதுங்கி மறைகிறான். மறைந்து நின்று நம்முடைய தடுமாற்றத்தைப் பார்த்து சிரிக்கிறான். கள்ளச் சிரிப்பே சிரிக்கிறான். அசைக்க

முடியாதபடி, பிரிக்க முடியாதபடி கடவுள்த் தத்துவத்தோடு ஒன்றி இருந்தவர்களையே எவ்வளவு லாவகமாகப் பிரிக்கிறான் பெருமான். அது இது என்று நம்முன் போட்டு இதைப் பார், 'இதையே பார்த்துக் கொண்டிரு' என்று காட்டி எப்படி நழுவி விடுகிறான்?

நாமும் எப்படியோ ஏமாந்து போகிறோம். பிறகு ''எங்கே கடவுள்'' என்று தேடி அலைகிறோம்.

இப்படி எத்தனையோ கோமாளித் தனங்கள் அவனிடம். அவ்வளவும் சேர்ந்தது தான் திருநடனம். ஆனந்தக் கனவு. அலகிலா விளையாட்டு.

இறைவனுடைய திருவிளையாடலைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்படுகிறார் நக்கீர தேவர். நாமும் பார்த்துப் பரவசப்படவேண்டுமே என்கிற கருணை அவரிடம். அதனால் நாம் பார்க்க வழிவிடுகிறார். அழகிய வெண்பா என்கிற கவி மூலமாகவே வழிவிடுகிறார் நக்கீர தேவர்

*யான் என்று தான் என்(று)*
*இரண்டில்லை என்பதை*
*யான் என்றும் கொண்டிருப்பன்*
*ஆனாலும் - தேன் உண்(டு)*
*அளிகள்தாம் பாடும்*
*அகன்கயிலை மேயான்*
*தெளிகொடான் மாயங்கள்*
*செய்து.* (15)

---

அளிகள் - வண்டுகள். அகன் கயிலைமேயான் - சிவபெருமான் - அகன்ற பெரிய விசாலமான கைலையங்கிரி (இமயமலை)யை ராஜதானிப் பட்டிணமாகக் கொண்டவன். தெளி கொடாள் - எப்படியோ கலைத்துவிடுகிறான காட்சியை. குழப்பிவிடுகிறான். மாயங்கள் செய்து - பொக்கான விஷயங்களை உறுதியானவை என்று நம்பவும் ஏமாறவும் வைத்துக் குழப்பி விடுகிறான்.

குறிப்பு : தாயும் பிள்ளையும் சேர்ந்து ஒன்றாய் இருப்பார்கள். அப்படி இருக்கிற பொழுதே இரண்டு மூன்று பொம்மைகளை குழந்தையின் போடுவாள் தாய். பொம்மையின் நினைப்பிலேயே போகும் குழந்தை. அப்படியே அடுக்களைக்கு ஒதுங்குவாள். தாய் சமையலைக் கவனிப்பாள். ஞானிகள் முன் இறைவனும் அப்படியே போடுகிறான் பொம்மைகளை. கையில் எடுத்து அதைக்காட்டுகிறது பாடலின் கடைசி அடி ''தெளிகொடாள் மாயங்கள் செய்து''.

16) பிடிமானம் என்று ஒன்று உண்டு. கண்ட்ரோல் என்று சொல்லலாம் அதை.

பிடிமானம் கொஞ்சம், (கடுகளவு) விலகினால்ப் போதும். தாறுமாறாகிவிடும் விஷயம்.

கணவனிடத்தில் மனைவிக்கு ஒருபிடிமானம். மனைவியினிடம் கணவனுக்கு ஒருபிடிமானம். அப்படியே குழந்தைகளிடம் பெற்றோர்களுக்கு, பெற்றோர்களிடம் குழந்தைகளுக்கு இப்படி இருக்கிறது பிடிமானம்.

உலகம் முழுவதும், பேரண்டம் முழுவதும் இப்படி ஒரு பிடிமானம் இருக்கிறது. அப்படி இருப்பதனால் தான் ஒழுங்காய் தன் தன் பாதையில் போய்க் கொண்டிருக்கின்றன எல்லாம்.

நாயகன் நாயகியிடம் இருக்கிற பிடிமானந்தான் இறைவன் பக்தர் இவர்களிடமும். அப்படி ஒரு பிடிமானம் இருந்ததால்தான் ஐம்புலன்களும் கட்டுப்பட்டன. சொன்னபடி கேட்டன. வெளியே போகக் கூடாது, உள்ளே (மனதுக்கு உள்ளே) போ, இன்னும் உள்ளே, மேலும் உள்ளே, உள்ளே, உள்ளே போ என்று ஏவ ஏவ ஒழுங்காகப் போனது ஐம்புலன்.

எப்படியோ அந்தப் பிடிமானம் கழன்றது. கடுகளவு கூட இருக்காது கழன்றது. நஞ்சு நால் நாழியா வேண்டும். ஒரு துளி போதாதா? அதனால் ஆணவம் (நஞ்சு) திமிறியது. ஐம்புலனும் ஆவேசம் அடைந்தன. ''அடக்கியா வைத்தாய் எங்களை / பார், பார் என்று கொதித்தெழுந்து குதிக்க ஆரம்பித்துவிட்டன. அதோடு போனதா காரியம்.

உச்சி முதல் உள்ளங்கால்வரை தேகமுழுவதையுமே போதையை ஏற்றிவிட்டது புலனுணர்வு. அவ்வளவு தான் பேயாட்டம் போடுகிறது உடம்பு.

நிலையற்றது தான் உடம்பு. தெரியத் தான் செய்கிறது அது. தெரிந்து என்ன பலன்! பொய்யில் கிடந்து புரளத்தானே வேண்டி இருக்கிறது. மெய்யின் பக்கம் சாய முடியவில்லையே.

பழையபடி இந்தப் பக்கம் வரவேண்டும் என்றால் அவன் (பெருமான்) காலில் தான் விழவேண்டும். வேறு வழி?

*''நின்மலன்தான் கற்பதே கண்டீர் கணக்கு''.*

*மாயங்கள் செய் ஐவர்*
*சொன்ன வழிநின்று*
*காயம்கொண் டாடல்*
*கணக்கன்று - காயமோ*
*நிற்பதன்(று) ஆதலால்க்*
*காளத்தி நின்மலன்தான்*
*கற்பதே கண்டீர்*
*கணக்கு* (16)

*17) எல்லாம் தெரிந்தவன், தெரிகிறவன் தான் மனிதன். அணுவுக்குள், அணுவுக்குள், இன்னும் அணுவுக்குள் என்ன இருக்கிறது, என்ன இருக்கிறது என்பதையே அறிகிறான் மனிதன். ஆனால் தன்னைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை மனிதனுக்கு.*

*நமக்கும் மரணம் உண்டு. எல்லாவற்றையும் இழந்து துணையே இல்லாமல் போய் விடுவோம் நாம். அதற்கு மாற்றுவழி இல்லை என்கிற சிறுவிஷயமாவது தெரிய வேண்டாமா மனிதனுக்கு. தெரியவில்லையே.*

*ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விநாடியும் மரணத்தை நோக்கியே போகிறான் - போய்க்கொண்டிருக்கிறான் மனிதன்.*

*தான் நடந்து போகிறதே தனக்கு (மனிதனுக்கு) தெரியவில்லை. என்ன மனிதன் இவன்.*

*ஆனால் எமனுக்குத் தெரியும் விபரம். அவன் பேரேட்டில் எழுதிவைத்திருக்கிறான் கணக்கை. வாழ்நாள் எத்தனை என்றும் குறித்திருக்கிறது கணக்கில். ஒவ்வொரு நாளையும் அதிலிருந்து உருவி எடுத்துக் கழிக்கிறான்.*

---

*மாய்ங்கள் செய்து - விளையாட்டுக்காட்டி. ஐவர் - ஐம்புலன்கள். காயம் - உடம்பு. ஆடல் கணக்கு அன்று - போடுகிற ஆட்டத்துக்கு அளவே இல்லை. நிற்பது அன்று - நிலைத்து நிற்கமுடியாது உடம்பு. நின்மலன் - இறைவன். தான் - திருவருள். கற்பதே கணக்கு - திருவருளே தஞ்சம் என்று செயல்படுவது தான் முறை. தப்பும்வழி. ஒழுங்கு என்றால் அது ஒன்று தான்.*

*குறிப்பு : விளையாட்டு வினையாகிவிட்டது.*

கடைசிநாளைக்கு முன்னாலேயே கையைக் காலை முடக்குகிறான். கருமுடியை வெண்முடியாக்குகிறான். இப்படி எத்தனையோ அடையாளம் காட்டி எச்சரிக்கிறான் எமன்.

அதைக் கூடத் தெரியமாட்டேன் என்கிறான் மனிதன். அத்தனை கொழுப்பு மனிதனுக்கு. கடைசி நாள், கடைசி நிமிடத்தில் புலிப்பாய்ச்சலில் வந்து மேலேவிழுகிறான் எமன். ஒரே அமுக்காக அமுக்கி, கண்விழி பிதுங்க, தொண்டையை இறுக்கி, நெஞ்சை அடைத்து இழுத்துக் கொண்டே போய்விடுகிறான் எமன். பொல்லாத பயல்தான் அவன்!

என்ன இருந்து என்ன பலன். ஒன்றும் உதவவில்லையே. அக்கம் பக்கம் பார்க்கத்தானே செய்கிறான் இந்தக் கூத்தை மனிதன். பிறகு ஏன் அவன் மண்டையில் ஏறமாட்டேன் என்கிறது உண்மை அவனுக்கு.

அது தான் திருவிளையாடல்.

முன் கூட்டியே உண்மையைத் தெரிந்திருந்தால் நிம்மதியாக இருக்கலாம். எதிர்பார்த்திருக்கலாம். மாப்பிள்ளை அழைப்பில் பவனிவருவது போல சந்தோஷமாகவே போகலாம். இறைவன் திருவடி நிழலுக்கே போகலாம்.

என்ன இருந்தாலும் கொடுத்து வைக்க வேண்டாமா அதற்கு. நக்கீரர் போன்ற பக்தர்கள் கொடுத்துவைத்தவர்கள்

*கணக்கிட்டுக் கொண்டிருக்கும்*
*காலனார் நம்மை*
*வணக்கி வலைப்படா*
*முன்னம் - பிணக்கின்றி*
*காலத்தால் நெஞ்சே*
*கயிலாயம் மேவியநீள்*
*சூலத்தாள் பாதம்*
*தொழு.* (17)

---

வணக்கி - மடக்கி. வலைப்படாமுன்னம் - சிறைவைப்பதற்கு முன் பிணக்கு இன்றி - தெளிவாக. காலத்தால் - தள்ளாடும். பருவதற்கு முன் நீள்குலத்தான் - சிவபெருமான். பாதம் - திருவருள்.

குறிப்பு : நல்லபடியாகத்தான் புத்திமதி சொல்கிறார் நக்கீர தேவர். கேட்க முடிகிறதா, கேட்டு நடக்க முடிகிறதா மனிதனால், அப்படி முண்டும் முடிச்சுமாய் உற்பத்தி ஆகி இருக்கிறான் மனிதன்.

பொதுவாகப் பார்த்தால் மனிதர்கள் எல்லோரும் புத்தி கெட்டு அலைகிறதாகத்தான் தெரியும். எதில் கவனமாக இருக்க வேண்டுமோ அதைப் பற்றிய நினைப்பே இல்லாமல் அலைகிறார்கள் மனிதர்கள்.

இனி நக்கீரதேவர் போன்ற பக்தர்கள், அருளாளர்கள் அப்படி அல்ல. மிக்க கவனமாக, உஜாராகவே இருப்பார்கள்.

பிறப்பு எப்படியோ அப்படித்தான் இறப்பு என்பது அவர்களுக்கு அத்துபடி. அதனால் சந்தோஷமாக இருப்பார்கள். மரணத்தையும் சந்தோஷமாக மதிப்பார்கள். விருந்தினரை எதிர்பார்ப்பது போல் மரணத்தை உத்சாகமாக எதிர்பார்ப்பார்கள்.

மரணம் உறுதி. தப்புவதற்கு வழியே இல்லை என்று உறுதியானவுடன் என்ன தெரியும். பிறந்ததும் நாமல்ல, இறப்பதும் நாமல்ல. எல்லாம் ஈசன் திருவிளையாடல். அவனே பிறக்கிறான் அவனே மறைகிறான். நாம் யார் அதற்கெல்லாம் என்று விளங்கும்.

அது விளங்கவிளங்க மற்றவர்களை மதிக்கிற பண்பு வரும். மற்றவர்களுடன் பழகுகிற பண்பு, உறவாடுகிற பண்பு, வரும். அதனால் அன்பு ஊறும், பொறுமை பூக்கும், இன்சொல் மலரும். பக்தி, நம்பிக்கை, எல்லாம் பூத்துக் குலுங்கும்.

மற்றவர் வேறு நாம் வேறு என்கிற பேத வேறுபாடு மறையும். நம்மவர்கள் என்று தழுவி ஒழுகவைக்கும்.

ஆனந்தமாக இருக்கும் வாழ்க்கை. அச்சம் இருக்காது அதில். கடவுளே உற்றதுணையாக இருப்பார். கூடவே இருப்பார். அவர் சேர்ந்திருப்பது தெளிவாகத் தெரியும்.

வழிக்குத் துணையாக ஒருவர் உடனிருக்கும் போது தைர்யமாகத்தானே இருக்கும். இந்த ஊரை விட்டு எந்த ஊருக்கு வேண்டுமானாலும் தைர்யமாகப் போகலாம்.

மரணம் நிச்சயம் என்பதின் மூலமே தெரியவரும். அதனால் ஆனந்தம் பொங்கும். வரும்போது சிரித்துக் கொண்டு வந்தான். போகும்போது அழுது கொண்டு போகிறான் என்னும் அவ(கதிக்கு) அவப்பேருக்கு ஆளாகவேண்டாம்.

அவனா, சந்தோசமாக வந்தான், சந்தோச மாகவேபோனான். அவன் வந்ததும் தெரியவில்லை. போனதும் தெரியவில்லை என்கிற நல்லபெயர் எடுக்க வேண்டும்.

பக்தியும் ஞானமுமே அதற்கு வழி.

மனிதனாகப் பிறந்தவன் படிக்க வேண்டிய படிப்பு இது தான். நக்கீரதேவர் போன்ற மெய்யடியார்கள், கம்பர், வள்ளுவர் போன்ற ஞானியர் எல்லோரும் கற்ற கல்வி இது தான்.

அவர்கள் கற்றுணர்ந்து அனுபவிக்கும் ஆனந்தத்தை நாடக இயலில், காதல் துறையில் வைத்து அலங்காரம் பண்ணிக் காட்டுகிறார் நக்கீரதேவர்.

★★★★★★★

# நம்பினார் கெடுவதில்லை

*18) ஒரு பெண் பேதைப் பருவத்து இளம் பெண். தாயின் கையைப் பிடித்தபடியே கோவிலுக்குப் போவாள். சுவாமி தரிசனம், அம்பாள் தரிசனம் எல்லாம் செய்வாள்.*

*பெருமான் மேல் ஈடுபாடு உண்டாகிவிட்டது பெண்ணுக்கு. அவன் தான் நாயகன். அவனோடு சேர்ந்து தான் நான் வாழ்வேன் என்கிற அளவுக்கு உச்சிக்கு ஏறிவிட்டது காதல்.*

*தன்னை மறந்து உணர்ச்சிமயமாய் ஒன்றி ஈடுபடுகிறாள் குழந்தைப் பெண். காளத்தி நாதா, காளத்தி நாதா என்று உதடு முணுமுணுக்கிறது. விழுந்து விழுந்து கும்பிடுகிறாள்.*

*வளையல், ஏன், தோள்வளையம் கூட கழன்றோடி விட்டன. எதுவும் தெரியவில்லை பெண்ணுக்கு.*

*சிரமப்பட்டுத்தான் பெண்ணை வீட்டுக்கு அழைத்து வந்தார்கள். தெருவே கூடிவிட்டது வீட்டின் முன். கூட்டத்தை நோக்கிச் செவிலித்தாய் வருகிறார்கள் வந்து அவள் சொல்வதாக விசயம்.*

*''உண்மையான அன்பு (காதல்) வீண்போகுமா? போகாது. ஊரார்காண, உலகோர் காண காளத்தி நாதரே என்மகளை நாடி வருவார். கொன்றை மலர் மாலையும் கையுமாக வருவார்.*

*''ஜாம் ஜாம் என்று நடக்கும் கல்யாணம் எல்லோரும் கண்டு களியுங்கள்''*

*தொழுவாள், மயங்கித்தன்*
*தோள்வளையம் தோற்றாள்,*
*மழுவாளன், காளத்தி*
*வாழ்த்தி - எழுவாள்!*
*நறுமா மலர்க்கொன்றை*
*நம்முன்னே நாளை*
*பெறுமாறு காணீர்' என்*
*பெண்.* (18)

---

*மழுவாளன் காளத்தி - மழு (கோடரி)ப் படையைக் கையாளும் காளத்தி நாதனை. வாழ்த்தி தொழுவாள் - அப்படியும் இப்படியுமாகப் பாராட்டி வாழ்த்துகிறாள், உணர்ச்சிமயமாய் உருகி. தோள்வளையம் தோற்றாள் - வளையம் கழன்றது கூடத் தெரியவில்லை பெண்ணுக்கு. எழுவாள் - ஆனாலும் அவனே நாயகன், நானே பெண் என்று நிமிர்ந்து எழுகிறாள் பெண். இந்த நம்பிக்கை வீண்போகுமா? நறுமாமலர்க்கொன்றை - நறுமணம் கமழும் கொன்றை மலர் மாலையை. நாளை பெறுமாறு காணீர் - நாளையே பெறுவாள். உங்கள் கண்காண. இது நடக்கும்.*

19) எது எது எப்படிப் போனாலும் அன்பு நிலைத்து நிற்கும். வீண்போகாது அன்பு தியாகமும் அப்படியே.

கல்லையும், கல்லில் வடித்த வல்லரக்கன்யையுமே களியவைத்துவிடும் அன்பும் தியாகமும்.

இனி, கருணையே வடிவானவன் இறைவன். பக்தர்களின் அன்பும், தியாகமும் இறைவனைச் சும்மா இருக்கவிடுமா? தூங்கத்தான் முடியுமா இறைவனால். நாயகன் நாயகியைச் சுற்றிச் சுற்றி வருவது போல பக்தர்களைச் சுற்றிச் சுற்றி வருவான் பெருமான். புஷ்பத்தை வண்டு வளைய வளையச் சுற்றும். அடியார்களை இறைவனும் அப்படியே சுற்றுவான்.

இதைவிட வேறு என்ன காப்பு, பாதுகாப்பு (துணை) இருக்கிறது.

*சார்ந்தாரை எவ்விடத்தும்*
*காப்பனவும், சார்ந்தன்பு*
*கூர்ந்தார்க்கு முத்தி*
*கொடுப்பனவும் - கூர்ந்துள்ளே*
*மூளத் தியானிப்பார்*
*முன்வந்து நிற்பனவும்*
*காளத்தி யார்தம்*
*கழல்.* (19)

20) நமசிவாய, நமசிவாய என்று நாவால் சொன்னால் மட்டும் போதுமா அதில் பூரண திருப்தி வந்துவிடாது. நமக்கு உகந்த பெயரை நாம் சொல்வதில் இன்பந்தான். இல்லை என்று சொல்லமுடியாது. ஆனால் அது பூரணதிருப்திதராது.

நமக்கு உகந்தவர் பெயரை மற்றவர்களும் சொல்ல வேண்டும். பாராட்ட வேண்டும். அதை நாம் கேட்க வேண்டும். காதில் விழவிழ அது தேனாக இருக்கும். அதையே மறுபடி மறுபடி சொல்லச் சொல்ல கல்க்கண்டாய் இனிக்கும்.

---

சார்ந்தாரை - திருவருளே துணை, உற்றதுணை என்று ஒட்டுகிறவர்களை, ஒட்டி உறவாடுகிறவர்களை. எவ்விடத்தும் காப்பன - அவர்களைவிடாது பின்பற்றி காத்துக்கொண்டே இருக்கும். எது? இறைவனது அருள். திருவருளுக்கு கழல் (பாதம்) என்று பெயர்.

காதலிலும் அப்படித்தான். நாயகன் பெயர் ஞாபகத்துக்கு வரும்போதெல்லாம் இன்பம். அதைவாய்க்குள் வைத்து மந்திரம்போல் முனகும் போது ஒரு தனி இன்பம்.

இனி மற்றவர்கள் நாயகன் பெயரை உயர்த்தி மதித்துச் சொல்லும் போதோ, அதைக் கேட்கும் போதோ வருகிற இன்பம் இருக்கிறதே அதுதான் பேரின்பம்.

பக்தி மாதிரிதான் காதல். காதல் மாதிரிதான் பக்தி. காளத்தி நாதர்மேல் காதல் கொண்டாள் ஒரு பெண் என்ன செய்தாள் பெண். வீட்டில் வைத்து வளர்க்கும் கிளியை எடுத்து மடியில் வைத்தாள். சுகமாகத் தடவிக்கொடுத்தாள் கிளியை. அதன் நாடியைப் பிடித்துக் கெஞ்சி வேண்டுகிறாள் பெண்.

காளத்தி நாதனின் (காதலின்) சிறப்பை எடுத்துச் சொல் கிளியே! என்று கெஞ்சுகிறாள் பெண்.

---

சார்ந்து அன்பு கூர்ந்தார்க்கு - ஒட்டி உறவாடி அன்பில் திளைக்கிறவர்களுக்கு முத்தி - ஆனந்தம். பேரானந்தம். அதாவது விடுதலை. அச்சத்திலிருந்தும், துன்பத்திலிருந்து விடுதலை. அது தானே வீடுபேறு. கூர்ந்து உள்ளே மூளதியாளிப்பார்க்கு - (சுமைகளை எல்லாம் இறக்கிவைத்துவிட்டு) ஒரே நோக்கில், உள்ளே உள்ளே இறங்கிப் பார்ப்பது போல உண்மையைக் கண்டு அதன் ஒளியில் கரைகிறவர்களுக்கு. முன்வந்து நிற்பன கூடவே இருக்கும். எது? கடவுள்த்தத்துவம்.

குறிப்பு : கருணையே வடிவான இறைவனுடைய திருப்பாதத்தை (திருவருளை) கையில் எடுத்து கண்ணில் ஒற்றுவது போல் தூக்கிக் காட்டுகிறது செய்யுள்.

பக்திக்கு உருவம் கொடுத்துவிட்டது, கவி உருவமே கொடுத்து விட்டது தமிழ்.

காளத்தி யார்தம் கழல்.

*கூறாய்நின் பொன்வாயால்க்*
*கோலச் சிறுகிளியே!*
*வேறாக வந்திருந்து*
*மெல்லவே - நீறாக*
*மஞ்சடையும் நீள்குடுமி*
*வான்அருவிக் காளத்திச்*
*செஞ்சடைஎன் ஈசன்*
*திறம்.* (20)

*21)* அன்பு, காதல், பக்தி என்பதெல்லாம் ஒன்றுதான் இதில் ஒன்றும் ரகசியம் இல்லை. வெளிப்படையான உண்மை இது. ஆனாலும் 'ஆணவமானது (சாஷ்திரம், ஆராய்ச்சி, கல்வி இவை மூலம் வந்த ஆணவமானது) உண்மையைத் தெரியவிடாது மறைத்துவிடுகிறது.

பதி, பசு, பாசம் என்று பிரித்துக் காட்டுவது போல் பிரித்துக் காட்டுகிறது ஆணவம்.

★★★★★★★

அன்பு, இருந்தால் போதும். ஆணவம் கரைந்துவிடும்.

தன்னையே அர்ப்பணிக்கும் அன்பு அர்ப்பணிப்பதில் ஆர்வம் பெருகும். வெறியாகவே வளர்ந்துவிடும் ஆர்வம்.

வெறியில் களவு வரும். கற்பனை வரும், கனவையும், கற்பனையையும் உற்றவரிடம் சொல்வதுபோலத் தோன்றும். அதுவும் ஒரு கனவுதான். பகல்க் கனவு தான்.

தன்னைப் போலவே இன்னொன்றையும் பார்க்கவைக்கும் கனவு. துன்பமோ, இன்பமோ எல்லாவற்றையும் ஒட்டி நின்றே பார்க்கும் கனவு.

★★★★★★★

---

வேறாக வந்திருந்து - தனியாக வந்து. நீறு ஆக - ஆவியாக, நீராவியாகத் திரண்டு. மஞ்சு - மேகம். அடையும் நீள் குடுமி - கூடுகட்டுவது போல் அணைந்து சூழும் சிகரம். வாள் அருவி - மலை உச்சியிலிருந்து விழுகிறது அருவி. அது ஆகாயத்திலிருந்து கொட்டுவது போலிருக்கிறது. திறம் - சிறப்பு.

கைலாச நாதர் மேல் பெண்ணுக்குக் காதல். காதல் முற்ற முற்ற மனம் கைவசம் இல்லை. உடம்பும் கைவசம் இல்லை.

சாப்பாடு இறங்கவில்லை. தூக்கம் போய்விட்டது. உடம்பு இளைத்துவிட்டது. வெளுத்துப் போய்விட்டது தேகம்.

வேதனையில் அடிக்கடி புலம்புகிறாள். வீட்டை ஒட்டி ஒரு நீர்க்குட்டம். அதை ஒட்டி ஒரு கல். கல்லில் வந்து நிற்கிறது நாரை புழுப் பூச்சி என்று இரை பொறுக்கத்தான்.

வெள்ளை வெளேர் என்றிருக்கிறது நாரை. அதை உற்றுப் பார்க்கிறாள். தன்மேனியையும் பார்க்கிறாள். அதுவும் வெள்ளை. இதுவும் வெள்ளை.

ஓகோ, இந்தக் குருகும் கைலாச நாதர் மேல் அன்பு வைத்து நம்மைப் போல் ஏமாந்து போயிருக்கிறது என்று நினைக்கிறாள்.

நாரை (குரு) யிடமே கேட்கிறாள் பெண்.

*ஈசன் திறமே*
*நினைந்துருகும் எம்மைப்போல்*
*மாசில் நிறத்த*
*மடக்குருகே - கூசி*
*இருத்தியாய் நீயும்*
*இருங்கயிலை மேயாற்கு*
*அருத்தியாய்க் காமுற்றா*
*யாம்.* (21)

★★★★★★★

திறம் - சிறப்பு. அருமை - மாசில் நிறத்தமடக் குருகே - தூய வெண்ணிறம் கொண்ட நாரையே! என்னைப் போல் தேகம் மெலிந்து வெறுத்துப் போன நாரையே. நீயும் கூசி இருத்தி - என்னைப் போல் நீயும் திகைத்துப் போய்த் தான் நிற்கிறாய். செயலற்றுக் கிடக்கிறாய் இருங்கயிலை மேயாற்கு - கைலாச நாதரிடத்து. அருத்தியாய் - ஈடுபாட்டோடு. காமுற்றாய் ஆம் - காதல் கொண்டுவிட்டாயா நீயும்.

குறிப்பு : துணை இல்லையே என்று தவித்தேன். துணைக்கு வந்துவிட்டாய் நீ. என்று குருகிடம் ஐக்கியம் ஆகிறாள் பெண்.

ஆற்றாமையை அப்படி ஓவியமாக வரைகிறது தமிழ்.

22) நாரையைப் பார்த்தாள். ''நீயும் என்னைப் போல் தான் ஏமாந்திருக்கிறாய். பாவம்'' என்று ஆற்றாமைப்பட்டாள் பெண். கைலாச நாதர் மேல் காதல் கொண்டபெண்.

இது பகலில், இனி இரவிலோ காதல் முற்ற முற்ற உறக்கம் போய்விட்டது. ஊரெல்லாம், உலகமே அயர்ந்து தூங்கும் நள்ளிரவில் கூடத் தூக்கம் இல்லை பெண்ணுக்கு.

பெண்ணின் வீடு கடற்கரையை ஒட்டி இருக்கிறது. கடலே ஆ, ஓ, என்று ஆர்ப்பரிக்கிறது. இரவு முழுவதும், நடுச்சாமத்திலும் கூட ஒரே ஆரவாரந்தான் கடலிடம்.

தூங்காமல்த் தவிக்கிற பெண்ணின் காதில் கடலின் சத்தம் விழுகிறது. என்ன நினைக்கிறாள் பெண்.

''இந்தக் கடலும் என்னைப் போலவே காளத்தி நாதர் மேல் காதல் கொண்டிருக்கிறது. தவிக்கிறது. தூக்கம் போய்விட்டது கடலுக்கு'' என்று,

கடலிடமே கேட்கிறாள் பெண்.

*காமுற்றா யாம் அன்றே*
*காளத்தி யான்கழற்கே*
*யாம்உற்ற(து) உற்றாய்*
*இருங்கடலே! - யாமத்து*
*ஞாலத்(து) உயிர்எல்லாம்*
*கண்துஞ்சு நள் இருள்கூர்*
*காலத்தும் துஞ்சாதுன்*
*கண்!* (22)

---

காமுற்றாய் ஆம் அன்றே - காதல் கொண்டுவிட்டாயல்லவா. யாம் உற்றது உற்றாய் - அதனால்தான் என்னைப் போல் துன்பப்படுகிறாய். யாமம் - நடு இருள். ஞாலம் - உலகம். கண்துஞ்சு - உறங்கும். நள் இருள் கூர்காலத்தும்- காரிருள் நிறைந்த நடுச்சாம வேளையிலும். துஞ்சாது உன்கண் - தூங்காமல் தவிக்கிறாய். என் கண்போலவே உன் கண்ணும். காதல் வயப்பட்டவர்கண்ணுக்கு அதுதான் கதி!

புன்னைமரச் சோலையோடு கூடிய கடற்கரை. தேரேறி வருவான் இளைஞன். அங்கு தான் பெண்ணும் அவனும் சந்திப்பது காதலன் வந்த தேர்த்தடம் அப்படியே பட்டை பட்டையாக கரையில் (மணலில்) கிடக்கும். தொடர்ந்து இரண்டு மூன்று நாள் காதலன் வரவில்லை. பதறிப்போனாள் பெண். அந்த நேரம் பார்த்து பெரிய அலை ஒன்று வந்தது. தேர்த்தடத்தை அழித்துவிட்டது.

ஓகோ, நம்மைப் போல் கடலும் காதல் கொண்டிருக்கிறது இளைஞனிடம். கடலையும் ஏமாற்றி இருக்கிறான் காதலன். கோபத்தில் அழித்துவிட்டது தேர்த்தடத்தை என்று நினைக்கிறாள். அலையிடமே கேட்கிறாள்.

*"நேர்ந்த நம் காதலர் நேமி நெடுந்திண்டேரர்*
*ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய கடலோதம்*
*ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய் மற்(று) எம்மோடு*
*தீர்ந்தார் போல் திர்ந்திலையால் வாழி கடலோதம்."*

# அவரைப் பற்றியே அவருக்குத் தெரியாது நம்மைப் பற்றியா யோசிப்பார்

23) அன்பு உண்டாகிவிட்டால் பிறகு உயிர் நம் வசம் இல்லை. எதன்மேல் அன்புவைக்கிறோமே அதனிடந்தான் உயிர். அதாவது உயிரின் உறவு.

இறைவன்மேல் அடியார்களுக்கு பக்தி. ஒரே ஈடுபாடு. அப்படி யானால் பக்தர்களுக்கு உயிர் இறைவன்தான்.

கண்ணும் அவன்தான். கருத்தும் அவன்தான். எதைப்பார்த்தாலும் இறைவனாகவே தெரியும் எதையோசித்தாலும் அவன் ஞாபகமே வரும்.

அன்பின் ஆதிக்கம் அப்படி.

இதை ஒரு நாடக இயலில், காதல் துறையில் வைத்துக் காட்டுகிறார் நக்கீரதேவர்.

திருக்கயிலாய நாதராகிய சிவபெருமான்மேல் ஒரு பெண்ணுக்குக் காதல். அவர் நினைப்பிலேயே இருக்கிறாள் பெண். கண்ணைத் திறந்தாலும் அவர் தான் தெரிகிறார். இமைகளை மூடினாலும் கண்ணுக்குள் வந்து இன்னும் ஜெகஜோதியாகத் தெரிகிறார்.

பெண்ணின் நிலை இது.

ஆனால் கைலாச நாதருக்கு இது தெரியவா செய்கிறது. விரத்திக்கு ஆளான பெண் தன் மனசைப் பார்த்தே சொல்கிறாள்.

கண்ணும் கருத்தும்
கயிலாய ரேஎமக்கென்(று)
எண்ணி இருப்பம்யாம்
எப்பொழுதும் - நண்ணும்
பொறிஆ(டு) அரவசைத்த
பூதப் படையார்
அறியார்கொல் நெஞ்சே
அது. (23)

---

பொறி - உச்சியில் புள்ளிகளும், கோடுகளுமாய் இருக்கிற. ஆடு அரவு அசைத்த - படம் எடுத்தாடும் பாம்பையே மாலையாகப் போட்டு அசைய விடுகிற. பூதப்படையார் - பூதங்களையே படைபட்டாள மாகவைத் திருக் கிறவர்கயிலாய நாதர். சிவபெருமான். அது - நாம் வைத்திருக்கும் அன்பு.

குறிப்பு : கவியில் காதல்ச் சுவை ததும்பி நிற்கிறது. கோழியிடம் நாயகன் பற்றி நாயகி சொல்கிறதாக விஷயம். இது முதல்வருகிற பாடல்களை அப்படியே பார்க்க வேண்டும் அப்பொழுது தான் பக்தியின் வேகம் இன்ன தென்று தெரியும்.

24) நம் கண்ணுக்கு தெரிகிற பொருள் ஒன்றா, இரண்டா? எத்தனை என்று கணக்கிட முடியாது. இனி, கண்ணுக்குத் தெரியாதவையோ அதைவிடக் கோடான கோடி மடங்கு.

இவ்வளவும் ஒரே ஒருவஷ்த்துத்தான். அந்த வஷ்துவே கடவுள்த் தத்துவம். பரம்பொருள். இறைவன் திருவருள்.

இறைவனுடைய அருள்தான், ஆனந்தக் கனவுதான் இரும்பு என்றும், தங்கம் என்றும், பூமி என்றும், நட்சத்திரம் என்றும், மனிதன் என்றும், கொசு என்றும் கோடான கோடியாய் விளைகின்றது.

கடலில் அலைகள் உண்டாகி கடலிலேயே அடங்கும். அதுபோலவே இறைவனிடமிருந்தே எல்லாம் பிறக்கின்றன. பல்வேறு கோலங்களில் தோன்றுகின்றன. அந்த இறைவனிடமே ஒடுங்குகின்றன. மறைகின்றன.

இனி, படைப்பதற்கென்று ஒரு தத்துவம் (அதிகாரி). அதாவது பிரமன், அதே போல் காப்பதற்கென்று ஒரு தத்துவம், திருமால், வழி நடத்துவதற்கென்று (ஆட்சிக் கென்று) ஒருத்த்துவம் இப்படி எத்தனையோ தத்துவங்கள். அதிகாரிகள்.

அந்த அதிகாரிகளும் இறைவனுடைய ஆனந்த நடனத்தில், கனவில் உண்டானவர்கள் தான். இனி, அண்டம் பேரண்டம் எல்லாமே கண்ணை மூடி விழிப்பதற்குள் உண்டாகின்றன. மறைகின்றன.

அளவிடமுடியாத இந்த அற்புதத்துக்கு முன் நாம் யார்?

*அலரோன் நெடுமால்*
*அமரர்கோள், மற்றும்*
*பலராய்ப் படைத்துக்காத்(து)*
*ஆண்டு - புலர்காலத்(து)*
*ஒன்றாகி மீண்டு*
*பலவாகி நிற்கின்றாள்*
*குன்றாத சீர்க்கயிலைக்*
*கோ.* (24)

25) நாம் உண்ணும் உணவு எப்படி உயர்ச்சத்தாக மாறுகிறது. அந்த உயிர்ச்சத்து தேகம் முழுவதும் சேர்ந்து பரவுகிறது எப்படி என்பது எளிதில் புலனாவதில்லை. புலனானால் அதிசயமாக

அலரோன் - பிரமன். தாமரை மலரில் இருப்பவன். அவர், மலர்
அமரர்கோள் - ஆட்சிக்கு அதிதேவதை. குன்றாத - தளராத.

இருக்கும். அற்புதமாக இருக்கும். நிலைகொண்டு நிற்க முடியாது. துள்ளுவோம், பாய்வோம் துள்ளிப் பாய்ந்து மேலும் கீழும் குதிப்போம். புலனாகப் புலனாக.

நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் அம்சங்கள், கண்ணுக்குத் தெரியாத தத்துவங்கள் இணங்கி, சேர்ந்து, ஒரு தன்மைத்தாய்ச் செயல்படுகின்றன. ஏன், உணவிலிருந்து உயிர்ச்சத்தைக் கடைந்தெடுக்க, பிறகு அதைத் தேகத்துக்கு ஊட்ட.

இப்படி ஒன்று பட்டு ஒரு தன்மைத் தாய்ச் செயல்படுவது தான் பற்று. அதாவது எல்லா அம்சங்களையும் முறைப்படி வைத்துக் கட்டி இருக்கிறகட்டு. கண்ணுக்குத் தெரியாத பூட்டு.

அந்தப் பூட்டுக் கழன்றுவிட்டால், கட்டு அவிழ்ந்து விட்டால், பற்று என்பது அற்றுப் போனால் மூக்காவது, கண்ணாவது, கையாவது, காலாவது எல்லாம் பிடிசாம்பல்தான்.

★★★★★★★

இனி ஆணவம் அற்றநிலை சாம்பல் (வெண்பொடி) அதற்கு விபூதி நிலை என்று பெயர். இறைவனுடைய அருள்நோக்கு. தெய்வ ஒளியில் தான் இந்த ஆணவப் பூட்டு கழலும். ஞானிகளிடம் அது கழன்றே இருக்கிறது. அனுபூதி பெற்றவர்கள் அவர்கள்.

இந்த ஆனந்த நிலையை ஒரு நாடகத்துறையில் வைத்துப் பார்க்கிறார்கள் ஞானியர்.

சிவபெருமான் திருக்கைலாயத்தில் மோன நிலையில் இருக்கிறார். அவர்மேல் மலரம் புகளைத் தொடுக்கிறாள் மன்மதன். பெருமானின் மோனத்தைக் கலைக்கத் தான்.

பார்த்தார் சிவபெருமான் கோபம் வந்து விட்டது அவருக்கு. கோபம் அக்கினியாகவே வந்தது கொழுந்துவிட்டெரியும் கொடுந்தீயாகவே எழுந்து வந்தது. மன்மதனைச் சுற்றிவளைத்தது. அவ்வளவுதான் பஷ்பமாகி விட்டான் காமன், மன்மதன்.

நான் என்பதும், என் செயல் என்பதும், (விடுகிறேன் பார் சிவபெருமான் மேலேயே அம்பு என்கிற ஆணவமும்) பிடிசாம்பலாய்ப் போய்விட்டன.

இப்படி ஒரு காட்சியை அமைத்து நாடக இயலில் ஞானிகளின் பெரும்பேற்றை அதாவது இறைவனின் அருள் நோக்கைச் சொல்லி இருக்கிறது.

இனிப்பாடல்

*கோத்த மலர்வாளி[1]*
*கொண்(டு)அநங்கன் காளத்திக்*
*கூத்தன்மேல் அன்று*
*குறித்தெய்யப் - பார்த்தலுமே*
*பண்மொழியாக் கோபத்தீச்*
*சுற்றுதலும் பற்றற்று*
*வெண்பொடியாய் வீழ்ந்திலனோ.*
*வெந்து.* (25)

*26)* ஒரு இளம்பெண். பருவமலர் என்றுதான் சொல்ல வேண்டும் பெண்ணை. அவளுக்குக் காளத்தி நாதர்மேல் ஆசை. மோக வெறிஎன்று தான் சொல்ல வேண்டும் பெண்ணின் ஆசையை.

காளத்திநாதரோ பெண்ணின் காதலை அங்கீகரித்ததாகத் தெரியவில்லை. அவர்பாட்டுக்கு ஜாம், ஜாம் என்று இருக்கிறார். பக்தகோடிகளுக்கு பேட்டிதான், கொலுவீற்றிருக்கைதான். திருவிழாத்தான், பவனிதான். ஒரே கொண்டாட்டம்.

அலங்காரம் என்ன, அபிஷேகம், வாழ்த்தென்ன ஒரே முழக்கமாய் இருக்கிறார் பெருமான்.

ஆசை ஏற ஏற அலுத்துப்போனாள் பெண். தூக்கம் இல்லை, சாப்பாடு செல்லவில்லை. உத்சாகம் இல்லை. தேகம் துரும்பாய் இளைத்துவிட்டது பெண்ணுக்கு.

செயலற்றவள் போல் சோர்கிறாள் பெண்.

★★★★★★★

---

வாளி - புஷ்ப்வணம். அநங்கன் - அங்கம் உருவம் இல்லாத காமன். கூத்தன், சிவபெருமான். பார்த்தலும் - கோபத்தோடு பார்த்த பார்வையே அக்னிதான். வீழ்ந்திலனோ என்ன ஆனான் காமன்.

குறிப்பு : செயல் நம் செயல் அல்ல என்ற மாத்திரத்தில் வேகம் அற்றுப் போய்விடுகிறது.

வெள்ளி ரதத்தில் தங்கரிஷபத்தில் ஏறிப் பவனி வருகிறார் பெருமான். பக்கத்துத் தெருவில் வருகிறது பவனி.

மனக்கண்ணால் பவனியைப் பார்க்கிறாள். பெருமானைத் தாங்கிவரும் காளையையும் பார்க்கிறான். காளையிடம் வேண்டுகிறான் பெண். பகல்க் கனவில்தான்.

*செய்ய சடைமுடிஎன்*
*செல்வனையான் கண்டெனது*
*கையறவும் உள்மெலிவும்*
*காட்டிடற்குப் - பையவே*
*காரேறு பூஞ்சோலைக்*
*காளத்தி ஆள்வார்தம்*
*போரேறே இத்தெருவே*
*போது.* (26)

*27)* காதல் வெறியில் என்ன தெரியும். ஒன்றும் தெரியாது. வண்டு, கிளி, மேகம், மயில், குயில் எல்லாம் மனிதர்கள் போன்றே தெரியும். வேண்டியவர்கள்போல, உற்ற நண்பர்கள் போலவே தெரியும்.

நாம் பேசுகிறவார்த்தைகளுக்குப் பொருள் தெரியாது அவைகளுக்கு. வாய்பேசவும் முடியாது அவைகளால். இந்த விபரம் ஒன்றும் தெரியாது காதல் வெறியில். கிட்டத்தட்ட குடிமயக்கம் மாதிரிதான் காதல் மயக்கமும்.

*காதல் என்(று) ஏதும்ஓர்*
*கள்ளில்த் தோன்றிற்றே"*

எப்படி அன்போடு பக்தியோடு ஒட்டி நின்று அனுபவித்துப் பார்க்கிறார் மனுசவாழ்க்கையைக் கம்பர்.

★★★★★★★

---

செய்ய - சிவந்த. செல்வன் - சிபெருமான். கையறவும் - செயற்ற நிலையையும். உள்மெலிவும் - இளைத்துப்போன மேனியையும். காரேறு - மேகம் போர் ஏறே - காளையே. கட்டுறுதி கொண்ட இளங்காளையே. இத்தெருவே - என் தெருவழியாக, என்வீட்டு முன்பாக. பையவே போது - மெள்ள நட. அவசரம் காட்டாதே.

சிவபெருமான் (கயிலாய நாதர்) மேல் ஒரு பெண்ணுக்குக் காதல். வீட்டில் அமைதியாக இருக்க முடியவில்லை. மற்றவர்களோடு பேசிப் பொழுதுபோக்க முடியவில்லை. வேலை சோலி ஒன்றிலும் மனம் செல்லவில்லை.

அந்தப் பாடுபடுத்துகிறது காதல். தோட்டத்துக்கு வருகிறாள் பெண். கிட்டத்தட்ட அது ஒரு பூந்தோட்டந்தான்.

புஷ்பங்களில் விழுந்து தேனுண்ணும் வண்டுகளைப் பார்க்கிறாள்.

தன்கூந்தலில் உள்ள புஷ்பத்தையும் சுற்றிவருகிறது வண்டு. அப்படி வரும் வண்டைநோக்கி பெண் சொல்கிறாள். என்று முதலில் என் நாயகனின் (கயிலாய நாதனின்) தலைமாலையில் தேனுண்டு, அதன்பின் என் தலைமாலைக்குவா வண்டே என்கிறாள் பெண்.

*போதும் நெறியளவே*
*பேசிநின் பொன்வாயால்*
*ஊதத் தகுவண்*
*வரிவண்டே - காதலால்*
*கண்டார் வணங்கும்*
*கயிலாயத்(து) எம்பெருமான்*
*வண்தார்போந்(து) என்குழற்கே*
*வா.* (27)

28) வண்டைப் பார்த்துச் சொன்னதோடு நிற்கவில்லை பெண். மாமரத்தை எட்டிப்பார்க்கிறாள். பொன் வண்ணத் தோடு தளிரெடுத்திருக்கிறது மாமரம். அதன் கிளையில் ஒரு குயில். குஞ்சுக்குயில். மாந்தளிரைக் கோதிக் கோதி மெல்லுகிறது குயில்.

தளிரையே கோதிக் கொண்டிருப்பதால் சத்தம் இல்லை குயிலிடமிருந்து. அதைப் பார்த்துச் சொல்கிறாள் பெண்.

மாந்தோட்டங்களும் பொன் கோட்டைகளுமாய்ச் சுற்றிக் கிடக்கிறது திருக்காளத்தியை.

காளத்தியில் வீற்றிருந்து அருளாட்சி நடத்துகிறான் பெருமான் (நாயகன்)

அவனை இங்கே வரச்சொல்லி கூவு. குயில்ப் பிள்ளையே, அவன் வரும்வரை விடாது தொடர்ந்து கூவு.

மரத்தைவிட்டு இறங்கி என்பக்கம் வா. வந்து கூவு. வா, வா! குயில்ப்பிள்ளையே! வா, கூவ.

*வாவா மணிவாயால்*
*மாவின் தளிர்கோதிக்*
*கூவா திருந்த*
*குயிற்பிள்ளாய் - ஓவாதே*
*பூமாம் பொழில்உடுத்த*
*பொன்மதில்சூழ் காளத்திக்*
*கோமான் வரஒருகாற்*
*கூவு.* (28)

---

மணிவாய் - அழகியவாய். கோமான் வர - நாயகன் என்னைத் தேடி இங்கு வரும்வரை. ஓவாதே - நிறுத்தாமல். ஒரு கால் கூவு - ஒரே மாதிரி கூவி அழை.

குறிப்பு : நான் இங்கே இருக்கிறேன். நாயகன் அங்கே இருக்கிறான். அப்படித் தனித்தனியாக இருப்பது தப்பு. சேர்ந்துதான் இருக்க வேண்டும் என்பது உனக்குத் தெரியாதா? தெரிந்தும் ஏன் சும்மா இருக்கிறாய் என்கிற ஆத்திரம், வேகம் எல்லாம் செய்யுளில்க் கிடக்கின்றன.

# அவன்மேல் பழி போடலாமா

*29) அரசன் என்றால் காவலன் என்று பொருள். நாட்டை, மக்களை, நீதியை, பண்பாட்டைக் காக்கவேண்டும் அவன்.*

*குடிபடைகளைக் காக்கவேண்டிய காவலனே திருடனாக, கொள்ளை அடிக்கிறவனாக, நெறிமுறை காக்காதவனாக இருந்தால். யார் அவனைத் திருத்துவது.*

*''நான் நினைத்ததைச் செய்வேன். என்னை ஒருவரும் தடுத்து நிறுத்தமுடியாது. நான் வைத்தது தான் சட்டம்'' என்று கடித்தனமான கொடுங்கோலன் ·தான் அரசன் என்றால் அவளை யார் தட்டிக்கேட்பது.*

*''சாதாரணமண்ணுலகத்து அரசனையே வழிக்குக் கொண்டுவர முடியவில்லை. அப்படி இருக்க, மண்ணுலகம் மட்டுமல்ல, விண்ணுலகம் முழுவதும், பேரண்ட முழுவதுக்குமே ராஜாதி ராஜனாக இருப்பவன் காளத்தி நாதன்.*

*''காளத்தி நாதனே ஒரு பெண்ணின், விபரம் தெரியாத சின்னஞ்சிறு பெண்ணின் வளையலை அபகரிக்கிறான் என்றால் எங்கு போய் முறையிடுவது. அதுமட்டுமா? அறியாப்பருவத்துப் பேதைப் பெண்ணின் மனசை மாற்றி காதல் போதையை அவள் உள்ளத்தில் ஏற்றிப் பற்றவைக்கிறான் என்றால் நீதிக்கு ஏது இடம்''.*

*இப்படிச் சொல்லி நீதி கேட்கிறாள் ஒரு கொஞ்சவயதுப் பெண்.*

*காளத்தி நாதரின் அழகிலும் அலங்காரத்திலும் மட்டுமல்ல, அவருடைய அருளிலும், அருமையிலும், பெருமையிலும் நெஞ்சைப் பறிகொடுத்தவள்தான் அந்த அபலை.*

*காதல் வெறி ஒரு ஜீவனை என்னபாடு படுத்துகிறது என்று பரிவோடு அதைப் பார்க்கிறார்கள் சான்றோர்கள், கவிஞர்கள், அடியார்கள். அது அவர்கள் உள்ளத்தைப் பிசைகிறது. குழைக்கிறது. அதை எப்படி வாங்கி எப்படி விநியோகம் செய்கிறது தமிழ் என்று பார்க்கலாம்.*

*தானே உலகாள்வான்*
*தான்கண்ட வாவழக்கம்*
*ஆனால்மற் றார்இதனை*
*அன்றென்பார் - வானோர்*
*களைகண்டான் ஆய்நின்ற*
*காளத்தி ஆள்வான்*
*வளைகொண்டான் மால்தந்தாள்*
*வந்து* (29)

அப்படியானால் நீதிக்கு இடம் எங்கே.

தானே உலகு ஆள்வான் - அரசன் ஒருவன். நாட்டுக்குக் காவலனே அவன் தான். தான்கண்டவா வழக்கம் - நான் சொல்வது தான் சட்டம், செய்வது தான் ஞாயம் என்கிறான். வழக்கம் - முறை. ஆனால் - அப்படியானால் ஆர் அதனை அன்று என்பார் - அரசன் சொல்வது, செய்வது சரியில்லை என்று யாராவது சொல்லமுடியுமா?

வானோர்களைகண்டான் - தேவர்களையே பாதுகாக்கிறவன். களைகண்டான் - பகைவர்களாகிய களையைப் பறித்தவன். ஆய்நின்ற காளத்தியான் - அதையே குறியாகக் கொண்டிருக்கிற காளத்தி நாதனே. வளைகொண்டான் - என்வளையவைக்கழற்றி உருவிவிட்டான். மால் தந்தான் - மோக வெறியை ஊட்டிவிட்டான்.

அருமையான ஹாஷ்யம். எளிமையாய் வந்து பேசுகிறது. அதன் தொனி கணகண என்று காதில் ஒலித்துக் கொண்டே இருக்கும். செய்யுளின் உருவமும் பொலிவும் அப்படி வாய்ப்பாய் அமைந்திருக்கின்றன.

யார் தட்டிக் கேட்க அவனை.

தெய்வகடாட்சம் என்றால் அது இது தான். இப்படிவரும் பாடல் தான். இனி பாண்டியன் மேல் காதல் கொண்டு அவஷ்தைக்கு ஆனான பெண் சொல்வதாக முத்தொள்ளாயிரத்தில் ஒரு பாடல்.

*தானேல் தனிக்குடைக்*
*காவலனாம், காபீதுவும்*
*வானேற்ற வையகம்*
*எல்லாமால் - யானோ*
*எளியள் ஓர் பெண்பாலேன்;*
*ஈர்ந்தண்தார் மாறன்*
*அளியானேல் அன்றென்பார்*
*யார்.*

மாறன் - பாண்டியனே. அளியானேல் - இரக்கம் இல்லாதவன் என்றால் அன்றென்பார் யார் - தகாத காரியம் என்று அதை எடுத்துச் சொல்வர் யார். இரண்டு பாடல்களையும் திரும்பத் திரும்ப வாசிக்க வேண்டும். வாசிக்க வாசிக்க மேலேமேலே நாம் உயர்வோம். பாடலும் அப்படியே உயர்ந்து வருவதுபோலிருக்கும்.

*30) இலங்கேஷ்வரனாகிய இராவணன் உயர்ந்த சிவபக்தன். உலகையே ஒரு புரட்டுப் புரட்டித் தலைகுப்புறக் கவிழ்க்கும் அளவுக்கு தோளாற்றல் உடையவன். வாளாற்றலிலும் அவனேவல்லவன்.*

*திருக்கயிலாயம் சென்று நேருக்கு நேர் நின்று சிவபெருமானை வழிபட வேண்டும் என்று இராவணனுக்கு ஒரே ஆசை. அப்படியே வந்தான். கைலையைப் பிரதட்சணமாக வலம்வந்தான். உள்ளம் உருகி உமையொருபாகனை, அம்மையப்பனை வழிபட்டான்.*

*இலங்கைக்குத் திரும்புகிறான். போகிற பொழுது சும்மா இருக்கக்கூடாதோ. விதியாரை விட்டது. கைலயங்கிரியைச் செந்தூக்காகத் தூக்கி ஒரு ஆட்டு ஆட்டினால் என்ன என்று அவன் புத்தியில் புகுந்து வேலை செய்தது விதி.*

*மலையை எடுத்து ஒரு ஆட்டு ஆட்டினால் ''நம்பக்தன், இராவணன், நம்மை எப்படி அருமையாய் ஊஞ்சலாட்டுகிறான்'' என்று அம்மையும் அப்பனும் சேர்ந்து மகிழ்வார்கள் என்றெல்லாம் ஆசைப்பட்டான் இராவணன்.*

*போர் செய்து போர் செய்து காய்த்துப் போன தோள்கள் ராவணன் தோள்கள். அந்த இருபது தோள்களும் தினவெடுத்தன. அதன் தினவையே துணையாகக் கொண்டு வேலை செய்தது விதி.*

*கைலையங்கிரிக்குள் தலையைக் கொடுத்தான் இராவணன். உடம்பு முழுவதையுமே உள்ளே கொடுத்துவிட்டான். முதுகில் மலை. அப்படியே நிமிர்ந்து எழுந்தான் இராவணன். கிடுகிடுவென்று இமயமலையே ஆடிவிட்டது. குலுங்கிய குலுக்கலில் அன்னை உமையாள் பதறிப் போனாள். பதற்றத்தில் பெருமானுடைய தோளை இறுகப்பற்றி அவர் மார்பில் சாய்ந்துவிட்டாள்.*

*புன் முறுவல் பூத்தார் சிவபெருமான் உமையம்மையை வருடியபடியே காலின் கட்டை விரலை ஒரு அழுத்து அழுத்தினார். அவ்வளவுதான் பந்தயத்தில் (பொறியில்) அகப்பட்ட எலிபோலச் சிக்கிவிட்டான் இராவணன்,. கண்விழி பிதுங்கின. எலும்பு நெரிந்தன. பாதாளத்துள் தள்ளப் படுவதுபோல் இருந்தது அழுத்தம்.*

பிறகென்ன.

கெஞ்சினான். கூத்தாடினான். அழுதான், தொழுதான் இராவணன். பிழைத்துப் போகட்டும் என்று விட்டார் பெருமான் தப்பினான் இராவணன்.

ஆனால் அதன் பின் அவனால் தலைநிமிர்ந்து நிற்க முடியவில்லை.

வெறும் தோளாற்றலை (முரட்டுத்தனத்தை) நம்பியதால் வந்த வினை.

*வந்தோர் அரக்கனார்*
*வண்கயிலை மால்வரையைத்*
*தம்தோள் வலியினையே*
*தாம்கருதி - அந்தோ*
*இடந்தார் இடந்திட்(டு)*
*இடார்க்கீழ் எலிபோல்க்*
*கிடந்தார் வலிஎலாம்*
*கெட்டு.* (30)

31) பெண்ணுக்கு லட்சியம் நாயகன் தான். நாயகனின் புகழ்தான்.

நாயகனின் அருமையும் பெருமையும் பரவவேண்டும். மற்றவர்கள் தெரிந்து அதைப் பாராட்ட வேண்டும். இதில் குறியாய் இருப்பாள் பெண்.

---

அந்தோ - அடப்பாலமே, இடந்தார் - தூக்கினார் (மலையை). தூக்கினதும். இடார்க்கீழ் எலிபோல் கிடந்தார் - பந்தயத்தில் விழுந்த எலிபோல அகப்பட்டுக் கொண்டார் இராவணனார். வலிகெட்டு - தேடிச் சேர்த்த பலம் எல்லாம் மாயமாய் ஓடிவிட்டது ராவணனைவிட்டு. அந்தோ பரிதாபம்.

குறிப்பு : நகைச்சுவையில் தான் என்ன நளினம், என்ன சொகுசு. பதம்பட்ட பக்குவம், நகைச்சுவையின் குழைவும் நெளிவும் அப்படியே கிடக்கிறது செய்யுளில். கையால்தொட்டும் பார்க்கலாம். எடுத்தும் காட்டலாம். அத்தனை தெளிவு நகைச்சுவையில். ''இடந்தார் இடந்திட்டு இடார்க்கிழ் எலிபோல். கிடந்தார் வலிவெரிம் கெட்டு!'' சொல்லச் சொல்ல நாவுக்கு ருசி.

கயிலாய நாதர்மேல் காதல் கொண்ட பெண் அவருடைய வல்லமையை அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னாள்.

ஆனானப்பட்ட இராவணனே தூசிமாத்திரம், தூசியின் ஒருமூலைமாத்திரம் பெருமானுக்கு என்று உல்லாசமாகவே சொன்னாள். இனி காளத்திநாதர்மேல் காதல்கொண்டபெண் அவருடைய திருநடனச் சிறப்பை எப்படி விஷ்தாரமாக எடுத்துச் சொல்கிறான்.

''நடனமா அது. அண்ட பிண்ட சராசரம் எல்லாவற்றையும் நடனம் ஆடவைக்கும் சர்வ வியாபாகம் அது'' என்று பெருமிதத்தோடு எடுத்துச் சொல்கிறாள்.

*தாள்ஒன்றால் பாதாளம்*
*ஊடுருவி மற்றைய*
*தாள்ஒன்றால் அண்டம்*
*கடந்தருளி - தோள்ஒன்றால்த்*
*திக்கெல்லாம் போர்த்துத்*
*திகழுமே காளத்தி*
*நக்கன்தான் கண்ட*
*நடம்.* (31)

32) அது இது என்று படித்தவர்கள், புத்திசாலிகள் என்று பெயரெடுத்தவர்கள் எல்லோருமே வெற்றி என்றால் அதுதங்களால் தான் என்பார்கள் தோல்வி என்றால் பிறர்மேல் பழியைப் போட்டுவிடுவார்கள்.

---

தாள் - திருவடி. திருவருள். அதலபாதாளம் எல்லாவற்றையும் ஊடுருவி நிற்கிறது ஈசன் திருவருள். பெருமாளின் ஊன்றிய திருவடி. இனி மேலே மேலே போய் அண்டம் அகண்டம் சகலவற்றையும் ஊடுருவி நிறைந்து நிற்கிறது அதே திருவருள். அதுதான் தூக்கிய திருவடி நடனத்தில் பெருமானின் கைவீச்சோ திசைகளின் - முதுகைத் தடவிக்கொடுக்கிறது. நக்கள் - சிவபெமான். கண்ட நடம் - ஆடும் ஆட்டம்.

குறிப்பு : பாட்டுக்குள்ளேயே நடனம் கிடக்கிறது. எதுகையிலும் மோனையிலும் அதன்பாதச் சிலம்பொலி கேட்கிறது. நடனத்துக்கு அழியாத்தன்மை கொடுத்துவிட்டது தமிழ்.

பாடலைப் பாடப்பாட அது தெரியும்.

ஆன்றோர், சான்றோர் முதலியவர்கள் காரியம் வேறு. வெற்றியை ஆண்டவன் கொடுத்த பிச்சை என்பார்கள். தோல்வியை விதிப்பலன் என்று சொல்வார்கள். இனி ஏழை, எளிய மக்களும் அப்படித்தான். இயல்பாகவே பக்தி இருக்கிறது அவர்களிடம். அவர்களும் ஆன்றோர் மாதிரிதான். சான்றோர் மாதிரிதான்.

இனி மெய்யடியார்கள், அருளாளர்கள், தியாகமூர்த்திகளோ வெற்றியை உடனுக்குடன் இறைவனிடம் அர்ப்பணித்து விடுவார்கள். தோல்வி என்றால் அது என்னுடையது, நான் செய்த தவறு என்பார்கள். பிறர் செய்த தவறைக் கூட, சமுதாயத் தவறைக் கூட தங்கள் தவறு என்று ஏற்றுக்கொள்வார்கள்.

தோல்விகண்ட போதெல்லாம் மகாத்மா காந்தி சொல்வார். ''என்னிடத்தில் ஏதோ ஒரு குறை இருக்கிறது என்று. ''சத்தியம், அஹிம்சை இவற்றை இன்னும் உறுதியாகப் பின்பற்றவேண்டும். அதில் இனி ஈடுபடுவேன்'' என்பார் காந்தி.

''வெள்ளாட்டின் பால், அவித்த நிலக்கடலை, கமலா ஆரஞ்சுப்பழச் சுளை இவற்றை எப்படி எளிய உணவென்று சொல்ல முடியும். இவற்றைச் சேகரிக்க எவ்வளவு சிரமப்படவேண்டி இருக்கிறது என்று ஒரு சமயம் சரோஜனி தேவி காந்தியிடம் கேட்டார். நகைச்சுவையோடு தான் கேட்டார். உடனே காந்தி சொன்னார் ''அப்படியானால் அது என் தவறு தான். கடவுள் என்னை மன்னிப்பாராக'' என்று.

காங்கிரஸ் இயக்கத்தில் தோல்விகள் அங்கங்கே வரும். அப்பொழுதெல்லாம் காந்தி சொல்வார் ''மலைபோல் செய்துவிட்டேன் தவறு. நான் செய்தது இமயமலை போன்ற மாபெரும் தவறு'' என்று.

தியாமூர்த்தி என்றால் அதற்குரிய பொருள் காந்தி தான். மகாத்மா காந்திதான். நக்கீர தேவரும் தியாக மூர்த்திதான்.

''எவ்வளவு பெரிய தவறு செய்விட்டேன். தன்னுணர்வே இல்லாமல், தெய்வசிந்தனையே இல்லாமல் வாழ்நாளை எல்லாம் வீண் நாளாக்கிவிட்டேனே. உய்யும் வழி உண்டா எனக்கு'' என்று சொல்கிறார் நக்கீரதேவர்.

*பணியாதே மன்னவனைப்*
*பாவியா தே வாளாக்*
*கணியாதே காலம்*
*கழித்தேன்; - அணியாம்*
*கருமா மிடற்றுக்*
*கயிலாயத்(து) எங்கள்*
*பெருமான்(து) அல்ல*
*பிழை.* (32)

33) சாதாரண ஏழை எளிய மக்களைப் பார்க்கவேண்டும். அம்மன் கோவில், மாடன் கோவில், கருப்பன் கோவில், முனியன் கோவில் என்று அவர்கள் போய் சாமி கும்பிடுவதைப் பார்க்கவேண்டும். அப்பொழுது தான் பக்தியின் சக்தி தெரியும்.

கோவில் என்றால் சிறுகோவில் தான். ஒரு மண்டபந்தான். அது கூட வேண்டாம். ஒரு பீடம் போதும். அதில் பிரதிஷ்டை பண்ணி இஷ்ட தெய்வத்தை வழிபடுவார்கள்.

ஒரே நினைப்பில், ஒரே ஆர்வத்தில் குளித்து முழுகி பொங்கலிட்டு, குலவைஇட்டு ஆவேசத்தோடு அவர்கள் வழிபடுகிறதைப் பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் பக்தி இன்னதென்று தெரியும். பக்தியின் வேகம், நயம் எல்லாம் தெரியும்.

---

மன்னவன் - நாயகன். சிவபெருமான். பாவியாது - அவனே துணை, வேறு துணை இல்லை என்று உறுதிகொள்ளாமல். கணியாது காலம் கழித்து - இருக்கும் நான் இத்தனை நாள் என்கிற நினைவே இல்லாமல். வாளா காலம் கழித்தேன் - வீண்பொழுதுபோக்கிவிட்டேன். அணியாம் - அழகிய. கருமாமிடறு - நஞ்சுண்ட கண்டம். பெருமானது அல்ல பிழை - எனது இந்த அவலத்துக்கு நானே காரணம். பழியை அவன் தலையில் போடுவது தப்பு.

குறிப்பு : குடும்பம் என்றால் அதில் கஷ்ட நஷ்டம் வரும் எத்தனையோ காரணம் இருக்கலாம் அதற்கு ஆனால் அத்தனைக்கும் தானே பொறுப்பு என்று ஏற்றுக்கொள்வாள் பெண் (நாயகி). அதில் இருக்கிறது தெய்வாம்சம், தியாகம் என்கிற தெய்வாம்சம்.

கல்லும் முள்ளும் நிறைந்த பாழ்ங்காடு. அதில் எங்கோ ஒரு மூலையில் குலதெய்வம் என்று இருக்கும். அதை நாடி ஆணும் பெண்ணும், குழந்தைகளும் கூட்டம் கூட்டமாய் வருவார்கள். பயபக்தியோடு வழிபடுவார்கள். கையில் உள்ளதைஎல்லாம் காணிக்கையாகப் போடுவார்கள்.

துட்டைத் துட்டென்று பார்க்காமட்டார்கள். அப்படி அள்ளிவிடுவார்கள் துட்டை.

---

திருட்டுத்தனமாக சீதாபிராட்டியை எடுத்துப் போய் சிறைவைத்துவிட்டாள் இராவணன். இதற்குக் காரணம் இன்னார் தான் என்று யாரைச் சொல்ல.

ராமனைக் காட்டுக்கு அனுப்பிய கைகேகியைச் சொல்லவா? இதற்கெல்லாம் இடம் கொடுத்த தசரதனைச் சொல்லவா? யாரைச் சொல்ல.

மேலும் காட்டில் சன்னியாசிக் கோலத்திலிருந்த ராமன்மேல் மோகம் கொண்ட சூர்ப்பணகையைச் சொல்லவா? அவள் மூக்கை அரிந்த லட்சுமணனைச் சொல்லவா? மானாக வந்து ஏமாற்றிய மாரீசனைச் சொல்லவா? அதன்பின்னாடியே சென்ற ராமனைச் சொல்லவா? ராவணனைச் சொல்லவா யாரைச் சொல்ல.

எல்லாவற்றையும் திட்டமிட்டுச் செயல்படும் விதியைச் சொல்லவா.

சீதாபிராட்டியோ அப்படி ஒன்றும் குழம்பவில்லை. இந்தத் தீராப்பழிக்கு நானே காரணம் என்று இடிகிறான்.

*எப்பொழு(து) இப்பெரும்*
*பழியின் எய்தினேன்*
*அப்பொழுது தேஉயிர்*
*துறக்கும் ஆணையேன்;*
*ஒப்பரும் பெருமறு*
*உலகம் ஓதயான்*
*துப்பழிந்(து) உய்வது*
*துறக்கம் துள்ளவோ.*

''பெருமை (துப்பு) இழந்தும் உயிரைவிடாமல் கையில்ப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். சுவர்க்கம் கிடைக்கும். அதை இழந்துவிடக் கூடாது என்கிற நினைப்போ அது! அழகு, அழகு. இப்படி இடிகிறார் பிராட்டி.

தவறு ஒன்று நேர்ந்தால் அதற்குக் காரணம் யார் என்று தேடமாட்டார் காந்தி. உடனே உண்ணாவிரதத்தை மேற்கொள்வார்.

பெண்களின் நிலையும் ஞானி (பக்தர்)களின் நிலையும் ஒரே மாதிரிதான். பழியை யார் தலையிலும் போடமாட்டார்கள்

அகடவிகட சாமர்த்தியம் இல்லாத சாதாரண மக்களும் அப்படித்தான்

*''பெருமான(து) அல்ல பழி''*

ஒரு தடவை கோவிலுக்குப் போய்வந்தால்ப் போதும். வருஷம் முழுவதுக்கும் அவர்களிடம் ஊக்கம் இருக்கும். உத்சாகம் பொங்கும்.

பக்தி இருந்தால் போதும். அது ஏழைஎளிய மக்களிடம் இருக்கிறது. நிறையவே இருக்கிறது.

வேதாந்தம், சித்தாந்தம், சாஷ்திரம், ஆகமம், வியாகரணம், தர்க்கம், நிகண்டெல்லாம் அவர்களிடம் இல்லை. தேவைஇல்லை அவர்களுக்கு.

பக்திப் பரவசத்தோடு முருகா, முருகா, என்று அவர்கள் கூப்பிடுவார்கள். ஓடோடி வருவான் முருகன்.

வந்து அவர்களை உத்சாகப்படுத்துவான். நிமிர்ந்து உட்காரவைப்பான். எழுந்து நடமாடவே வைத்துவிடுவான் முருகன்.

அப்பர் சுவாமிகள், காரைக்காலம்மையார், பட்டிணத்தார், மாணிக்க வாசகர், தாயுமானவர், நக்கீர தேவர் முதலிய அருளாளர்கள் சாதாரண ஏழை எளிய இனத்தைச் சேர்ந்தவர்தான். உண்மையான பக்தர்கள் அவர்கள்.

சிவ, சிவ என்றால்ப் போதும். நமசிவாய, நமசிவாய என்று வாய்க்குள் முனகினாலே போதும். அவர்கள் முன் வந்து நிற்பார் ஈசன்.

பிறகு ஏன் அது இது என்று அலட்டிக் கொள்ளவேண்டும்.

விபரம் தெரியாமல் நாம் குழம்புகிறோம் நம்மேல் அருளாளர்களுக்குப் பரிவு வருகிறது. நமக்கு வழி காட்டுகிறார்கள். இதுதான் வழி என்று காட்டுகிறார்கள். அதுவும் தங்களுக்குத் தாங்களே வழிகாட்டுவதுபோல் காட்டுகிறார்கள்.

அப்படி ஒரு கருணை அவர்களிடம்.

நக்கீரதேவர் தம் மனதைப் பார்த்துச் சொல்கிறார். அவருக்காக அல்ல. நமக்காகத்தான்.

*மற்றும் பலபிதற்ற*
*வேண்டாம் மடநெஞ்சே*
*கற்றைச் சடையண்ணல்*
*காளத்தி - நெற்றிக்கண்*
*ஆரா அமுதின்*
*திருநாமம் அஞ்செழுத்தும்*
*சோராமல் எப்பொழுதும்*
*சொல்.* (33)

---

சோராமல் - அரைகுறை நம்பிக்கை உதவாது. முழுநம்பிக்கை வேண்டும். அது இருந்தால் போதும்.

எல்லாம் ஈசன் மயமே என்பது மிச்சம் சொச்சம் இல்லாது மனசோடு மனசாய் இருக்க வேண்டும். இருந்தால் நமசிவாய என்பது ஒளியோடு வரும். அமிர்தமாகத் தித்திக்கும்.

குறிப்பு : அது இது என்று புலம்பிக்கொண்டிருக்கிறீர்களே மடையர்களே என்று நம்மை நோக்கி ஒருவர் சொன்னால் நமக்குக் கோபம் வருத்தானே செய்யும். அவர் யாராக இருந்தால் என்ன? அவர் மேல் கோபம் கொப்பளித்துக் கொண்டு வரும்.

அந்தக் கோபாக்கினியில் அவர் சொல்வது நம் காதில் விழவா செய்யும். விழாது. விழுந்தாலும் மனம் அதை ஏற்றுக் கொள்ளாது.

வீணாய்ப் போய்விடக் கூடாதே விசயம் என்கிற இரக்கத்தில் தம்மையே (தம்நெஞ்சை) நோக்கிச் சொல்கிறார் நக்கீரர்.

*"மற்றும் பலபிதற்ற*
*வேண்டாம் மடநெஞ்சே" என்று.*

★★★★★★★

பக்தியோடு நமசிவாய என்று நினைத்தால் போதும் சொன்னால் போதும். பக்தி தான் முக்கியம்.

அதுவே நமக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு.

*"இல்லக விளக்கது,*
*இருள்கெ டுப்பது,*
*சொல்லக விளக்கது,*
*சோதி உள்ளது,*
*பல்லக விளக்கது*
*பலரும் காண்பது*
*நல்லக விளக்கது*
*நம(ச்)சி வாயவே"* *(அப்பர் சுவாமிகள்)*

# நக்கீர தேவர் திருவலஞ்சுழி மும்மணிக் கோவை

*1) நட்சத்திரங்கள் லட்சக்கணக்கில், ஏன் கோடிக்கணக்கில்க் கூட ஒன்றாய் ஒரு கூட்டமாய்ச் சேர்ந்து வானில் இருக்கும். மிக்க பிரகாசமாக இருக்கும் நட்சத்திரக்கூட்டம்.*

*ஆகாயத்திலிருந்து பூமியைப் பார்த்துத் தொங்குவது போலவே இருக்கும் நட்சத்திரக் கூட்டம்.*

*ஆகாய கங்கை என்று அதற்குப் பெயர். பாலாறு, பால்க்கடல், பால்வெளி என்றெல்லாம் அதற்குப் புனைப் பெயர் உண்டு.*

*இனி கடவுள்த்தத்துவமோ இறுதி இல்லாதபடி எங்கும் ஒரு தன்மைத் தாய் நிறைந்திருக்கிறது.*

*சிவபெருமான் என்று ஒரு பெயர் கடவுள்த் தத்துவத்துக்கு. சடைமுடியோடு கூடியவர் சிவபெருமான்.*

*இறுதி இல்லாதபடி எங்கும் நிறைந்த சிவபெருமானை எப்படிக் காட்டுவது? நட்சத்திரக் கூட்டமாகிய ஆகாய கங்கை அவர் சடையில் இருக்கிறது. மேலும் அவர்கழுத்தில் காதில், கையில் ஆபரணமாக இருப்பதும் அதே நட்சத்திரக் கூட்டந்தான். அதாவது பாலாறுதான். என்று சொல்ல வண்டும். அப்பொழுது தான் சர்வ வியாபகம் ஓரளவாவது புரியும்.*

*சிவபெருமானுக்கு ஆபரணமான நட்சத்திரக் கூட்டத்தையே, பிரகாசமான பாம்பு என்று புனைபெயர் கொடுத்துச் சொல்கிறார்கள்.*

*அவிழந்து தொங்கும் சடையை இறுகக் கட்டி முடிச்சுப்போட ஒரு பூமாலையாக, வயிரமணி மாலையாகவும்*

பயன்படுகிறது பால்வெளி - திருப்பாற்கடல் என்னும் பாம்பு.

*முடிப்போதா*
*வாள்நாகம் சூடும்*
*வலஞ்சுழியாள்.*

அனுவுள் அனுவாய் அண்டத்துள் அண்டமாய் நிறைந்து கிடக்கிறாள் பெருமான். அதனால் மறைந்தும் கிடக்கிறாள். விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் (வானோர் = ஞானியர்) ஒன்றாலும் காணமுடியாது அவனை. அப்படி அருள்மயமாக - நியதி தத்துவமாக இருக்கிறான் பெருமான்.

*முடிப்போதா*
*வாள்நாகம் சூடும்*
*வலஞ்சுழியான் வானோரும்*
*காணாத செம்பொற்*
*கழல்.*

ஆனாலும் கருணையே உருவானபெருமான் அன்பர்கள் கண்டுகளிக்க கோவில் தோறும் எழுந்தருளியிருக்கிறாள். வலஞ்சுழியிலும் அப்படியே காட்சிகொடுக்கிறான் எல்லாம் பக்தர்களுக்காகத்தான்.

உண்மையான பக்தர்கள் என்ன செய்கிறார்கள் அவன் திருவருளை நினைந்து நினைந்து உருகுகிறார்கள். உச்சி மேல் வைத்தே உருகிக்கரைகிறார்கள். அவனருளையே மனம் சுமந்து நிற்க, அதற்கு அடையாளாக மூர்த்தியின் திருவடிகளில் சார்த்த மலர்மாலையைக் கையிலேந்தி வருகிறார்கள்.

புன்முறுவல் பூத்தபடியே வாவா என்று அவர்களை, வரவேற்றுப் பரவசப்படுத்துகிறாள் பெருமான்.

இவ்வளவையும் பார்த்து அனுபவித்து ஆனந்தத்தை நமக்கு வழங்குகிறார் நக்கீரர்.

*அடிப்போது தம்தலைவைத்(து)*
*அவ்வடிகள் உன்னிக்*
*கடிப்போது கைக்கொண்டார்*
*காண்பார்; - முடிப்போதா*
*வாள்நாகம், சூடும்*
*வலஞ்சுழியான் வானோரும்*
*காணாத செம்பொற்*
*கழல்.* (44)

*2) குழந்தைகள், பெரியோர்கள் எல்லோருக்கும் சந்திரன் என்றால் ஒரே கொண்டாட்டந்தான். எத்தனை ஆண்டுகளாய் எத்தனை எத்தனை பேர்களுக்கு ஆனந்தம் கொடுத்துக் கொண்டிருக்கிறது நிலா.''*

வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து பார்த்தாலும் சலிப்புத்தட்டுகிறதா சந்திரனிடம். திகட்டாத தேவாமிர்தம் என்றால் சந்திரன்தான்.

★★★★★★★

சந்திரனை, பிறைச்சந்திரனை முடியில் சொருகி இருக்கிறார் சிவபெருமான். ஒரு மலரைச் சொருகியதைப் போல் சொருகி இருக்கிறார் பெருமான்.

தாயுடன் அடிக்கடி கோவிலுக்குப் போவாள் பெண். குழந்தைப் பருவத்துப் பெண்தான். அங்கு சடைமுடியில் சந்திரனைச் சொருகி கம்பீரமாக நிற்கும் பெருமானைப் பார்த்திருக்கிறாள் பெண்.

---

அடிப்போது - திருவடியாகிய மலர். (இறைவன்) திருவருளை திருவடி என்று சொல்வது மரபு. கடிப்போது - வாசனையோடுகூடிய மலர். கடி - மணம். முடிப்போதா(க) சடைமுடிக்கு மாலையாக. வாள்நாகம் - பிரகாசம் மிக்க பாம்பு. நட்சத்திரக் கூட்டம். வானோர் - ஞானிகள். செம்பொன் கழல் - திருவருள் நடனம். ஆனந்தக் கூத்து. அதாவது கடவுள்த்தத்துவம்.

குறிப்பு : திருவடிக்கு ஆபரணம் அன்பர்களின் ஈடுபாடு. திருமுடிக்கு ஆபரணம் நட்சத்திர மாலை.

இவ்வளவு பக்கத்தில் கைக்கெட்டிய தூரத்தில் தானே இருக்கிறது சந்திரன் என்று வியந்திருக்கிறாள் பெண்.

கையால் தொட்டுப் பார்க்கவும் முயன்றிருக்கிறாள். ஆனால் முடியவில்லை. தாயே அதற்கு இடம் கொடுக்கவில்லை.

எப்படியாவது தொட்டு, தடவி அனுபவிக்க வேண்டும் சந்திரனை என்று ஒரே ஆசை பெண்ணுக்கு.

ஆசை வளர வளரக் கனவிலும் வருகிறான் சந்திரன். சிவபெருமான் சடைமுடியில் நின்றே காட்சி கொடுக்கிறான் சந்திரன்.

பளபளவென்று பட்டுப்போல ஒளிவீசும் சந்திரனைப் பிடித்துவிடவேண்டும் என்று வேகம் வந்துவிட்டது பெண்ணுக்கு. பெண்ணைப் பார்த்து சந்திரனும் கண்சிமிட்டுகிறான். பெருமானும் கண் சிமிட்டுகிறார். வேகமாகவே நெருங்குகிறாள் பெண்.

ஒட்டி நெருங்கிய பெண் பெருமானின் அழகில் ஈடுபடுகிறாள். அவருடைய கண்ணும் அது பொழியும் கருணையும் கோடான கோடி சந்திரர்களாக இருக்கின்றது.

பக்கத்தில் பெருமானின் பக்கத்திலேயே வந்துவிட்டாள் பெண். பெண்ணின் கையைப் பற்றி சந்திரன் மேல் படும்படி பெருமானே எடுத்துவைக்கிறார்.

என்ன ஆனந்தம், என்ன சுகம், என்ன நிம்மதி. அப்படியே பெருமானோடு ஐக்கியம் ஆகிறாள் பெண்.

நறுமணம் கமழும் கொன்றை மலர் அணிந்திருக்கிறார் பெருமான். அம்மலர் மாலையின் மகரந்தமும், மணமும், இதழும் பெண்ணின் மேனி முழுவதும் கமகமக்கிறது.

வெட்கப்படுகிறாள் பெண். உடனே தூக்கம் கலைகிறது. கனவை நினைத்துப் பார்க்கிறாள். வெட்கம் ஒருபக்கம், ஆசை ஒரு பக்கமாய் ஊசலாடுகிறாள் பெண்.

பொல்லாத ஆள் தான் சிவபெருமான் பக்தர்கள் என்றால் போதும். விடமாட்டார். வலையை வீசி எப்படியாவது வளைத்துப் போட்டுக்கொள்வார். இப்படி நினைக்கிறாள் பெண். உள்ளுக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வருகிறது நினைப்பு.

*போதெலாம் பூங்கொன்றை*
*பூண்டிருந்த அக்கொன்றைத்*
*தாதெலாம் தன்மேனி*
*தைவருமால்த் - தீதில்*
*மறைக்கண்டன், வானோன்*
*வலஞ்சுழியாள் சென்னி*
*பிறைக்கண்டம் கண்டணைந்த*
*பெண்.* (45)

*3) காதல்த் துறையில் நின்று கடவுளுடன் ஆட ஆட தமிழுக்கு ஒரே ஆனந்தம். அதை விட ஆனந்தம் கவிக்கு. பக்தர்களின் நிலையைச் சொல்லவா வேண்டும்.*

*ஒரு பெண். பருவமங்கை. வயதுக்கு வந்த அழகு ஓவியம். வீட்டில் உள்க்கட்டில், மெத்தை விரித்த கட்டிலில்ப் படுத்திருக்கிறாள். அரைத்தூக்கம்.*

*தாழ்ப்பாள் போடவில்லை. வெறுமனே சார்த்தி இருக்கிறது கதவு.*

*இது தான் நேரம் என்று பார்த்தார் பெருமான். வலஞ்சுழி நாதர், மளமளவென்று வந்தார். சார்த்திய கதவைத் திறந்தபடியே உள்ளே வந்தார். 'யார் இங்கே' என்று தோரணையோடு கேட்டபடியே வந்தார்.*

---

*போது எலாம்பூங் கொன்றை பூண்டிருந்த வலஞ்சுழியாள் - சிவபெருமாள். காலை, பகல், மாலை, இரவு நாள் முழுவதும் அவருக்குப் பிரியம் கொன்றைப் பூ மாலைதான். கண்டணைந்த பெண் - பெருமானை அணைந்த பெண்ணின். மேனிதை வரும் - உடம்பு முழுவதும் ஒளிவீசும். எது. அக்கொன்றைதாது - கொன்றை மலர்மணம். தீது இல் மறைக்கண்டன் - தீங்கு செய்ய முடியாதபடி நஞ்சை அடக்கிமறைத்த நீலகண்டன். பிறைக் கண்டம் - சந்திரனில் ஒரு பகுதியாகிய பிறைச் சந்திரன். கண்டம் - பகுதி.*

*குறிப்பு : அம்புலியை நாடிப்போன பெண்ணின் கதி இப்படி. மோட்சம் (தேவராஜ்ய பதவி) வேண்டும் என்று போகிறவர்களுக்கும் கதி இதுதான். அப்படியே அவனோடு கலந்துவிட வேண்டியது தான்.*

*பதவியாவது, அதிகாரமாவது. எல்லாவற்றிலிருந்தும் விடுதலை. அது ஒன்றே ஆனந்தம்.*

ஆளைப்பார்த்தால் அப்படி ஒரு கொள்ளை அழகு. ஐந்து லட்ச ரூபாய், பத்து லட்ச ரூபாய் என்றே ஜாமீன் கொடுக்கலாம். அப்படி ஒரு தெய்வக்களை. ஆனாலும் கையில் திருவோடு. பிச்சை எடுக்கிற கோலம்.

பார்த்தாள் பெண். முதலில் பயம். பிறகு, சரி சரி, ஒரு மாதிரிப் பைத்தியந்தான் என்று நினைத்தாள்.

நினைத்தபடியே கேட்கவும் செய்தாள் ''பொருள்த்தக்கீர்'- ஜமீன்தார் மாதிரி இருக்கிறீரே. சில்பலிக்கு என்று இல்புகுந்தீர் '- இப்படி ஒரு தோரணையோடு பிச்சைக்கு வந்திருக்கிறீரே. இல்புகுந்தீர் - திருடன்போல் உள்ளே நுழைகிறீரே. மருள்தக்கீர் - பைத்தியமா என்ன நீர்.''

யாது உம் ஊர்?

இப்படிக்கேட்டாள் பெண்.

என்ன சொன்னார் பெருமான்.

''ஆம். பைத்தியமே தான். எல்லோரையும் பைத்தியம் பிடிக்கவைக்கும் புதுப் பைத்தியம் நான். என் ஊரையா கேட்கிறாய் கவி(மறை) தான் நமது நாடு'3 என்றே சொல்லிவிட்டார்.

என்னடா இது, முழுப்பைத்தியமாகவல்லவா இருக்கிறது. இல்லை என்றால் கவிதான் நாடு என்று சொல்லுமா என்று திகைக்கிறாள் பெண்.

அவள் திகைப்பைக் கண்டு சுதாரித்தார் பெருமான். சட்டென்று சமாளித்தவராய்.

'வலஞ்சுழி நம் வாழ்வென்றார், இதே வலஞ்சுழி தான் நம் ஊர். சொந்த ஊர் என்றார்.

ஆ, நம்ம வலஞ்சுழி நாதரா இவர். அவரிடமா இப்படி நடந்து கொள்வது நான். என்ன இது என்று திகைத்தாள். திகைத்து சிறிது கண்ணை மூடினாள்.

மறுபடி திறந்து பார்ப்பதற்குள் ''தாம் மறைந்தார்''.

ஆளைக்காண வில்லை.

அவ்வளதானா?

கைநிறையப் போட்டிருந்தாள் வளையல், அதில் ஒன்றைக் கூடவிட்டுவைக்காமல் அத்தனை வளையலையும் உருவிப் போய்விட்டார்.

தோழியிடம் இதுபற்றிச் சொல்வதாகப் பகல் கனவு வருகிறது பெண்ணுக்கு.

இனிப் பாடலின் முழுஉருவம்

*"பொருள்த்தக்கீர் சில்பலிக்கென்(று)*
*இல்புகுந்தீ ரேனும்*
*மருள்த்தக்கீர்" யாதும்மூர்"?*
*என்றேன் - மருள்த்தக்க*
*மாமறையம் என்றார்,*
*வலஞ்சுழிநம் வாழ்வென்றார்,*
*தாம் மறைந்தார் காணேன்கைச்*
*சங்கு.!* (46)

*4)* வலஞ்சுழிநாதர்மேல் ஆசைதான் பெண்ணுக்கு. ஆனால் அந்த ஆசையே இல்லாதவள்போல் பேசுகிறாள். அது மட்டுமா? "அவர் யார், நான் யார், அவருக்கும் எனக்கும் என்ன சம்பந்தம். அப்படி இருக்க என்னிடம் ஏன் வம்பு பண்ணுகிறார் அவர்".

"வலஞ்சுழிநாதர் யார் என்றே எனக்குத் தெரியாது. காளை வாகனத்தில் வீதிஉலா வருவாராம் அவர். பார்த்ததே இல்லை நான். கொன்றை மலர் மாலை அணிந்திருப்பாராம். அதுவும் எனக்குத் தெரியாது".

"நான் உண்டு, என்பாடு உண்டு என்றால்லவா இருக்கிறேன். அப்படி இருக்க என்னிடம் ஏன் இந்தக் குறும்பு.

---

பொருள்தக்கீர் - செல்வவான்போல் இருக்கிறீரே. மருள்தி தக்கீர் - பைத்திய மாநீர். மருள்த்தக்க - மயக்கம் கொடுக்கும். மாமறையம் - உண்மையை உணர்ச்சிமயமாக ஒளி பெறச்செய்யும் பாடல். காணேன் கைச்சங்கு - சங்கினால் செய்துபோட்டவளையல். அதில் ஒன்று கூட இல்லை.

குறிப்பு : இவ்வளவும் பெண்ணின் களவில் தான். கண்ட கனவை உற்ற தோழியிடம் உல்லாசமாகச் சொல்வதில் பெண்ணுக்கு எவ்வளவோ திருப்தி.

அப்படி எல்லாம் வலியவந்து ஆட்கொள்கிறவன் தானே பெருமான்.

என்வளையல் கழலும்படி என்னைப் பாடாய்ப்படுத்துகிறார்ரே வலஞ்சுழிநாதர்.''

இப்படிப் பொரிந்து தள்ளுகிறாள் பெண். எல்லாம் பகல் கனவில்தான். ஊர்ச்சபை கூட்டி விவகாரம் பேசுவதெல்லாம் பகல்க்கனவில்தான்.

நாடகம் என்றால் அப்படித்தான். அதில் தான் ரசம்.

இனிப் பாடல்

*தான்ஏறும் ஆனேறு*
*கைதொழேன் - தன்சடைமேல்*
*தேன்ஏறு கொன்றைத்*
*திறம்பேசேன் - வானேறு*
*மையாரும் சோலை*
*வலஞ்சுழியான் என்கொல்என்*
*கையார் வளைகவர்ந்த*
*ஆறு.* (47)

---

ஆனேறு - காளை. ரிஷப வாகனம். கைதொழேன் - ஒரு நாள்கூடக் கை எடுத்துக் கும்பிட்டதில்லை காளையை தேனேறு - தேன்கசியும். திறம்பேசேன் - புகழ்ந்ததும் இல்லை. அப்படி இருக்க. என்கையார் வளைகவர்ந்த ஆறு என்கொல் - கை நிறையப் போட்டிருந்த என் வளையலைப் பறித்தோடவலஞ்சுழி நாதருக்கு என்ன உரிமை!

குறிப்பு : காதல்த் தேனில் பக்தியைப் போட்டுக் குழைக்க குழைக்க அமிர்தந்தான் காதலுக்கு. ஆதரவு பக்தி. பக்திக்கு ஆதரவு காதல். மாப்பிள்ளையும் பெண்ணும் போல காதலும் பக்தியும்.

# நக்கீரதேவர் கார் எட்டு

7) மழைக்காலம் என்றால் நாயகன் நாயகி சேர்ந்திருக்க் வேண்டும் என்பது ஐதீகம். ஐதீகம் என்ன ஐதீகம். அவசியம் அது.

மழைக்காலத்தில் காதலர் பிரிந்திருப்பது வேதனைதான்.

*"அங்கொருவர் இங்கொருவர்*
*ஆனமழைக் காலம்*
*அவர் ஒருவர் நாம் ஒருவர்*
*ஆனகொடுங் காலம். (நந்திக்கலம்பகம்)*

என்று இருவரையுமே தவிக்கவைத்துவிடும் மழைக்காலம்.

ஆனால் ஒன்று. மழைக் காலத்தில் தம்பதியர் பிரிந்திருக்க நேர்ந்தால், ஒருவரை ஒருவர் நினைந்து அன்பு பெருகும். மேலே மேலே உயரும் அன்பு. அதாவது தேட்டம். அப்பொழுது தெரியும் அடடா/அன்பின் அகலந்தான் என்ன, அதன் நீளந்தான் என்ன என்று.

அன்பை அளந்து காட்டும் கருவியாகிவிடுகிறது கார்காலம்.

*ஆவிசோர் நெஞ்சினரை*
*அள்பளக்க உற்றதே*
*காவிசேர் கண்ணாய்அக்*
*கார்.*

மைதீட்டிய கண்ணினாய் என்று தோழியை அழைத்து, அவள் தோள்மேல் கை போட்டபடியே, மேகத்தைக் காட்டுகிறாள் பெண் "அன்பு அளக்க உற்றதே அக்கார்" என்று சொல்லியபடியே கருமேகத்தை - மழைகொட்டும் கருமேகத்தைக் காட்டுகிறாள் பெண்.

பிரிந்திருக்கும் காதலர்களுக்கு மழைத் துளிஒவ் வொன்றும் தீப்பொறியாய்த் தகிக்கும். மின்னலைக் கண்டால் பயம். இடிச்சத்தமோ வயிற்றைப் பிரட்டும். நடுங்கவைக்கும்.

★★★★★★★

இனி, சிவபெருமான் மேலேயே காதல் கொண்டுவிட்டாள் ஒரு பெண். அவள் கண்ணுக்கு மின்னலோ பெருமானின் செஞ்சடைபோல் தீப்பிழம்பாகத் தெரிகிறது. அது நெளிந்து வளைந்து வானில் ஏறுவது போல், இருக்கிறது. செவ்வலரி மலர்களை, ஒரு ஒழுங்கில் உயரே உயரே கட்டித் தொங்கவிட்டால் எப்படி இருக்கும்? அப்படி இருக்கிறது மின்னலின் பாய்ச்சல்.

இத்தனை ஆர்ப்பரிப்போடு வருகிறது மழைமேகம். கார் மேகம். அதை எப்படித் தாங்குவாள் பெண்.

*செழுந்தழல் வண்ணன்*
*செழுஞ்சடைபோல் மின்னி*
*ஒழுங்கின் அலர்போல்*
*உயர - எழுந்தெங்கும்*
*ஆலிசோர் நெஞ்சினரை*
*அன்பளக்க உற்றதே;*
*காவிசேர் கண்ணாய்! அக்*
*கார்!* (48)

---

செழுந்தழல் வண்ணன் - சிவபெருமான். அக்கினி சொரூபியாகிய சிவபெருமான். அலர் - மலர். கார் - மழைமேகம். காவிசேர் கண் - நீலோத்பல மலர் போன்ற கண் கருகரு வெற்றிருக்கும் கண் மைதீட்டப் பெற்ற கண்.

# கண்ணப்பர் திருமறம்

1) கல்லையும் குழைத்துவிடும் அன்பு. கல்லை மட்டுமா! இரும்பையே குழைத்துவிடும் அன்பு. எலும்பையே பூவாய்க் குழைத்துவிடுகிறது அன்பு. அப்படி இருக்க எதைத்தான் குழைக்காது அன்பு.

குழைப்பது மட்டுமா கல்லையே உயிர் பெற்றெழச் செய்யும் அன்பு. இரும்பைப் பொன்னாக்கிவிடும் அன்பு.

அன்புக்கு அவ்வளவு வல்லமை.

★★★★★★★

இனி முரட்டு இனத்தில் போர்க்குணம் மிக்க வேட்டுவ இனத்தில் பிறந்தவன் தின்னன் குன்றுகளும் காடுகளும் நிறைந்த கரடு முரடான பொத்தப் பி தான் அவன் பிறந்த நாடு. ஊரோ சாதாரண ஊர். உடும்பு, முயல் பன்றி என்று வேட்டை ஆடுகிறவர்கள் வாழும் உடுப்பி (உடுப்பூர்) என்பது தான் அந்த ஊர். அவன் அம்மா பெயர் தத்தை (கிளி) அப்பா பெயர் நாகன் (பாம்பன்) அதிலேயே ஒரு முரண், போராட்டம்.

பொத்தம்பி நாட்டில் வேட்டுவர் குலத்தில் பிறந்த திண்ணன் காளத்தி மாநகர்க்கே கண்ணன் ஆகி விட்டான் மூன்று கண்களை உடைய காளத்தி நாதனுக்கே. கண்ணப்பன் ஆகி விட்டாள்.

அன்பின் அந்தரங்கம் இதுதான்.

தந்தையாம் தாய், தந்தை
நாகனாம், தன்பிறப்பும்
பொத்தப்பி நாட்டுடுப்பூர்
வேடுவளாம் - கொத்தைய
திண்ணப்பன் ஆம்உறுபேர்
செய்தவத்தால்க் காளத்தி
கண்ணப்பன் ஆய் நின்றாள்
காண் (39)

---

கொத்தைய திண்ணப்பன் - மொத்தத்தில் திண்ணன் தான். செய் தவத்தால் - பக்தியால், தொண்டால் கண்ணப்பன் - உண்மைக்கே ஒளி கொடுக்கிற கண்ணப்பன்தான்.

# அதிரா அடிகள்

## மூத்த பிள்ளையார் மும்மணிக்கோவை

1) கோபத்தில் ஒரு குழந்தை அடம்பிடித்து ஆட ஆரம்பித்துவிட்டால் அடக்குவது ரொம்பச் சிரமம். வீடே அல்லோலகல்லோலப்பட்டுப் போகும். தாயும் ஆடுவாள். தந்தையும் ஆடுவார்.

ஒரு பெண் நடனம் ஆடுகிறாள். மூவாயிரம் நான்காயிரம் பேர் கொண்ட அரங்கம் அது.

அவள் ஆட ஆட அத்தனை பேரும் ஆடுவார்கள். அரங்கமே ஆடுவது போல இருக்கும்.

வெற்றி வாகை சூடிய வீரன் ஒருவன் போர்க்களத்தில் ஆரவாரித்து ஆடுகிறான் என்றால் அதைக் கேட்டு நாடே ஆடும்.

★★★★★★★

இனி மூத்த நாயனாராகிய விநாயகப் பெருமானோ சகல சக்திகளையும் அடக்கி ஆளும் மழ களிறு. ஆனை. பேரானை அந்த மழகளிறே பிள்ளையாரே தாளம்போட்டு திம், திம் என்று ஆடுகிறார் என்றால் எப்படி இருக்கும்.

இப்படி அப்படி என்று விதந்து சொல்ல முடியுமா அதை.

கவிதான் சொல்ல வேண்டும் அதை.

*நிலம்துளங்க, மேருத்*
*துளங்க, நெடுவான்*
*தலம் துளங்கச் சப்பாணி*
*கொட்டும்; - கலந்துளங்கொள்*
*காமாரி ஈன்ற*
*கருங்கைக் கடதடத்து*
*மாமாரி ஈன்ற*
*மணி.* (1)

---

நிலம் - பூமி. துளங்க - அதிர. வாள்தலம் - ஆகாயம். காமாரி - காமனைத் தகனம் செய்த சிவபெருமான். கருங்கை - யானைக்கை. கடதடத்து மாமாரி ஈன்ற மணி - மத நீரை மழை போல் கொட்டுகிற மாணிக்கம். அன்பர்களின் உள்ளத்தோடு கலந்து உறவாடும் மாமணி.

குறிப்பு : பார்க்கிறவர் கேட்கிறவர்களை எல்லாம் கிடுகிடு என்று ஆட, அதிரவே வைக்கிறது. பிள்ளையார் ஆடும் ஆட்டம். ஆனாலும் அதிராமல் பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறார் ஆட்டத்தை பக்தர். ஆனந்த பரவசத்தோடு அனுபவிக்கிறார் பக்தர். அனுபவத்தையும் ஆனந்தத்தையும் நமக்கு வழங்கவும் செய்கிறார். அதிராஅடிகள்தான் பக்தர்.

# பட்டிணத்துப் பிள்ளையார் கோயில் நாள்மணி மாலை

## அன்புதான் தியாகம். அதுதான் வீரம்.

*1) கடவுளைத் தவிர வேறொன்றும் இல்லை. அது ஒன்றுதான் உண்டு என்றால் அதை அளக்கிறதாவது ஒன்றாவது. எதைக் கொண்டு அளப்பது, யார் அளப்பது.*

*கடவுளின் உள்ளத்தில் உதிக்கும் கனவுகள் தான் உலகங்கள். அங்கேயே உண்டாகி அங்கேயே கரைகின்றன உலகங்கள்.*

*கணந்தோறும் உண்டாகின்றன. ஒரே தொடர்ச்சியாய் உண்டாகின்றன உலகங்கள். அந்தக் கனவுதான் ஆனந்தக் கனவுதான் சிருஷ்டி.*

*சிருஷ்டி என்பதும் ஒரு தத்துவந்தானே. அந்தத் தத்துவத்துக்கு அதிதேவதை பிரம்மா என்று வைத்திருக்கிறது.*

*சகல புவனங்களையும் படைக்கும் பிரம்மாவே, சிருஷ்டியின் அதிதேவதையே கடவுளைப் பார்க்க முடிய வில்லை.*

*ஒருதடவை கடவுளின் (சிவபெருமானின்) திருமுடியைத் தேடி பிரமன் மேலே மேலே போயிருக்கிறான். அன்னப் பறவை உருவெடுத்தே உயர உயரப் பறந்து பேயிருக்கிறான். ஊழி ஊழி காலம் பறந்து போயிருக்கிறான். திருமுடி தென்படவில்லை. இது போல இன்னும் கோடி கோடி மடங்கு பறந்து போனாலும் பார்க்க முடியாது திருமுடியை என்பது தெரிந்தது. அப்படியே இறங்கிவந்துவிட்டான் பிரமன்.*

*பிரம்மாவாலேயே காணமுடியாத முடியை வேறு யார் காணமுடியும்.*

*இனி இறைவனுடைய திருமுடிக்கு மேல் ஒரு குடை. வெண்பட்டுக் குடை. பேரண்டம் முழுவதையும் அரசாளும் அரசாட்சிக்கு சின்னம் அந்தக் குடை. அதற்குக் கொற்றக்குடை என்று பெயர்.*

★★★★★★★

தேரேறி பவனி வருகிறார் சிவபெருமான். திருவாரூர் வீதிவழிதான். மேளதாள முழக்கத்தோடு வருகிறது பவனி. ரிஷப வாகனத்தில் எழுந்தருளப் பண்ணி இருக்கிறது மூர்த்தியை. கொற்றக் குடை நிழலில் அமர்ந்தபடி வருகிறார் பவனி.

திருவாரூர்த் தியாகேசர் தான்.

பிரமா முதலியதேவ தேவர்களாலும் அளக்கமுடியாத பரம்பொருளல்லவா நம் கண்காண நமக்காக, நாம் நடமாடும் இடம் வந்து காட்சி கொடுக்கிறது என்று வியக்கிறார்கள் அடியார்கள்.

*பூமேல் அயன் அறியா*
*மோலிப் புறத்ததால்*
*நாமோ அளந்தளவை*
*நாட்டுவோம் - பாமேவும்*
*ஏத்துகந்தான் தில்லை*
*இடத்துகந்தான் அம்பலத்தே*
*கூத்துகந்தான் கொற்றக்*
*குடை* (1)

2) புழுப்பூச்சியிலிருந்து மனிதர்கள் வரை எல்லாவற்றையும் ஊட்டி வளர்க்கும் தத்துவந்தான் திருமால்.

அந்தத் திருமாலே ஊழி ஊழிகாலமாத் தேடியும் சிவபெருமானுடைய திருவடிகளை அதாவது திருவருளைப் பார்க்க முடியவில்லை.

இது எனக்கு நன்கு தெரியும். தெளிவாகத் தெரிந்திருந்தும் தேடி அலைகிறேன் அவன் திருவடிகளை. செம்பொன் கழல் அணிந்த திருப்பாதங்களை.

---

பூமேல் அயன் அறியா - வெண்தாமரை மலரில் இருக்கும் பிரமனாலும் அறியமுடியாதது. மோலி - தலை. சிவபெருமானின் முடி. புறத்தது - அதற்கும் மேல் உள்ளது. எது. கொற்றக்குடை. பாமேவு ஏத்துகந்தான் - பக்திமயமான பாசுரங்களில் ஊஞ்சலாடும் தாளத்தில் நின்று ஆடுகிறவன்.

தில்லை - சிதம்பரம், பொன்னம்பலம். கூத்து உகந்தான் - நடராஜ மூர்த்தி.

குறிப்பு : பவனி வருகிற மூர்த்தியின் மூலம் பரம்பொருளைப் பார்க்கிறார்கள் பக்தர்கள்.

*ஆதரித்த மாலும்*
*அறிந்திலன் என்றறிந்தும்*
*காதலித்த நாயேற்குக்*
*காட்டுமே - போதகத்தோல்க்*
*கம்பலத்தாள், நீள்நாகக்*
*கங்கணத்தான், தென்புலியூர்*
*அம்பலத்தான் செம்பொற்*
*கழல்.* (2)

ஒன்றே ஒன்று. வேறொன்றும் இல்லை என்றால் அதை அளக்கவும் வழி இல்லை. அப்படி இருக்கும் இப்படி இருக்கும் என்று அதுபற்றிச் சொல்லவும் வழி இல்லை.

ஆனாலும் பக்தர்கள், பட்டிணத்தார் போன்ற பக்தர்கள் சொல்லி விடுகிறார்கள். கொஞ்சம் விபரமாகவே சொல்லி விடுகிறார்கள். நம் மனதில் நிற்கும்படியாகவே சொல்லி விடுகிறார்கள்.

எப்படி என்று பாருங்கள்

*அடிஒன்று பாதவம்*
*ஏழிற்கும் அப்புறம்*
*பட்ட(து)*

ஒன்றல்ல இரண்டல்ல பாதாள உலகங்கள். எண்ணிறந்தன. அவ்வளவையும் ஊடுருவிப் போய்க் கொண்டிருக்கிறது இறைவனின் அருள். அதாவது திருப்பாதம்.

---

மால் - திருமால். நாயேற்கு - நாயினும் கீழ்ப்பட்டவன் நான். என்னுடைய செயல்களையும், நடவடிக்கைகளையும் பார்த்தே சொல்கிறேன். என்னைவிட எவ்வளவோ மேல் நாய். காக்கும் கடவுளே காணமுடியாத ஒன்றை அதற்கு நேர்மாறான நான் காணமுடியுமா? முடியும், காரணம் என்ன? நான் தேடவில்லை. அதுதான் தஞ்சம் என்று நம்புகிறேன். என்னையே அதற்கு அர்ப்பணிக்கிறேன். (காதலிக்கிறேன்)

போதகம் - யானை. கம்பலம் - போர்வை. கம்பளி என்று திரிந்து வருகிறது கம்பலம். மதயானையின் (ஆணவத்தின்) தோலை உரித்து அதையே போர்வையாகப் போர்த்திக்கொண்டார் சிவபெருமான். நீள நாககங்கணத்தான் - நட்சத்திர மண்டலந்தான் அவன்கை விரலை அலங்கரிக்கும் மோதிரம். கங்கணம் - மோதிரம். நட்சத்திர மண்டலத்துக்கு பாம்பு என்பது அடையாளப் பெயர் புலியூர் - சிதம்பரம்.

இப்பால்

*முடிஒன்(று)அவ் அண்டங்கள்*
*எல்லாம் கடந்தது*

முடியோ, அண்டம், அகண்டம், பேரண்டம் என்று எல்லாவற்றையும் தாண்டிப் போகிறது.

இனி முழுக்க முழுக்க வெண்ணீறு பூசிய கையோ (நடன வீச்சில்) திசைகளுக்கும் அப்பால் நின்று அசைகின்றாள்.

*முற்றும் வெள்ளைப்*
*பொடி ஒன்று தோள் எட்டும்*
*திக்கின் புறத்தன*

சித்தாகாம் என்னும் சிதம்பரத்தில் ஆனந்த நடனம் ஆடும் நடராஜ மூர்த்தியின் காட்சி இப்படி.

கரும்புத்தோட்டங்கள் சூழ்ந்த வளமான பிரதேசந்தான் சிதம்பரம்.

இனிப் பாடலின் முழுஉருவம்

*அடி ஒன்று பாதவம்*
*- ஏழிற்கும் அப்புறம்*
*பட்ட(து)இப் பால்*
*முடிஒன்றவ் அண்டங்கள்*
*- எல்லாம் கடந்தது,*
*முற்றும்வெள் ளைப்*
*பொடிஒன்று தோள் எட்டும்*
*- திக்கின் புறத்தன*
*பூங்கரும் பின்*
*செடி ஒன்று தில்லைச்சிற்*
*- றம்பலத் தான்தன்*
*திருநட மே.* (3)

---

★ஏழ் என்பது எண்ணிறந்தன என்பதைக் குறிக்கும் சொல். வெள்ளைப் பொடி - திருநீறு. ஒரு கரும்பில் மூவாயிரம் நாலாயிரம் என்று பூ பூக்கும். வெள்ளை வெளேரென்று ஒரு கொத்தாக இருக்கும் அத்தனை பூவும். வேறு எந்த ஒரு செடியிலும் இத்தனை பூக்கள் இல்லை. அதனால் கரும்பு வெறும் கரும்பு அல்ல. பூங்கரும்பு.

*(4) டெல்லியிலோ, பம்பாயிலோ போய் இறங்குவதற்காகத் தானே சென்னையிலோ, திருவனந்தபுரத்திலோ ரயில் ஏறுகிறோம்.*

தேய்வதற்காகத் தான் வளர்க்கிறோம். உண்மையில் இவ்வளவும் நாம் அல்ல. நம் செயல் அல்ல. பிறப்பு, இறப்பு, வளர்ச்சி, தேய்வு எல்லாம் இறைவனுடைய செயல்தான். அவனுடைய லீலா விநோதந்தான்.

இது தெரிந்தவுடன் எப்படி இருக்கும் மனதுக்கு. கையில் பிடிக்க முடியுமா மனதை.

நமசிவாயா, நமசிவாயா என்று சொல்லிச் சொல்லி மணக்கும் வாய்.

அப்படி உண்மையைக் கண்டு ஆடிப் பாடுகிறவர் பட்டிணத்தார் இதோ.

*வாயினால் இப்போதே*
*மன்றில் நடமாடும்*
*நாயனார் என்றுரைத்தோம்*
*நாம்.*

ஏன், கரும்பு தேய்ந்து கட்டெறும்பு ஆவது போல் இளமை ஓய்ந்து முதுமையில் உழல்வது உண்மை. அந்த அவஸ்தைக்கு ஆளாகாமல் தப்பத்தான்.

---

குறிப்பு : குழைத்துப் பிசைந்த களிமண்ணை உருட்டித் திரட்டி வைக்கிறோம். அதில் என்ன இருக்கும். ஒன்றும் இருக்காது. உருட்டித் திரட்டி வைத்த களிமண்ணில் தலை என்று, கை என்றும், காலென்றும் வைத்து விட்டால் அளவிட முடியாத சக்தியே அதிலிருந்து தாண்டவம் ஆடும். விஷ்வரூப தரிசனந்தான். செய்யுளில் விஷ்வ ரூபமும், அதன் தாண்டவமும் கிடக்கின்றன.

*கிழவருமாய் நோய்முப்புக்*
*கீழ்பட்டுக் காமத்(து)*
*உழவரும்நோய் ஓயுமா*
*கண்டோம் - மொழிதெரிய*
*வாயினால் இப்போதே*
*மன்றில் நடமாடும்*
*நாயனார்'' என்றுரைத்தோம்*
*நாம்.* (4)

5) இனி, காதல் துறையில் வைத்து பக்திப் பரவசத்துக்கு உருவம் கொடுக்கிறது தமிழ்.

நடராஜமூர்த்தி தேரேறி வீதி உலா வருகிறார். தெருவெல்லாம் கூட்டம். ஆடவர், பெண்டிர் என்று ஒரே கூட்டம். வயதானவர், சிறுவர் என்றெல்லாம் வித்தியாசம் இல்லை. எல்லோருக்கும் ஒரே ஆனந்தம். ஒரே எக்களிப்பு.

தெரு முனையில் வருகிறது பவனி. ஒவ்வொரு வீட்டாரும் நான் முந்தி நீ முந்தி என்று முற்றத்துக்கு ஓடி வருகிறார்கள். குழந்தைகளும் ஓடி வருகிறார்கள். ஏழு, எட்டு வயதுப் பெண் குழந்தை. அது எல்லோரையும் விலக்கித் தள்ளியபடி, ஏதோ துளைத்துக் கொண்டு வருவது போல் நுழைந்து வருகிறது. முண்டி அடித்துக் கொண்டு தெருமுற்றத்துக்கு வருகிறது.

குழந்தையின் ஆத்திரத்தைப் பார்த்து செவிலித் தாய்க்கு ஒரே ஆனந்தம். ஆனந்தம் எப்படி வருகிறது.

''என் பெண் கை நிறையப் போட்டிருக்கிறாள் வளையல். பவனி நெருங்க நெருங்க வளையல் ஒவ்வொன்றாகக் கழன்றோடி விடும். கையில் வளையல் நிற்க வேண்டும் என்றால் பவனி வேறு தெருவழிதான் போக வேண்டும். வருஷம் முழுவதும் இந்தக் கூத்துத்தான்''.

---

கீழ்ப்பட்டு - கூனி, குறுகி. காமத்து உழவரும் நோய் - ஆசை உழ உழ அதற்கு இடம் கொடுத்ததால் பயிராகி விட்டது நோய். அதுஓய வேண்டுமானால் ''நடராஜ மூர்த்தி தான், துணை.

குறிப்பு : பிறப்பு போலத்தான் இறப்பு. வளர்ச்சி போலத்தான் தேய்வு. இன்னும் கொஞ்சம் தெளிவாய் சொல்லைப் போனால் பிறப்பதனால்தான் இறப்பு. வளர்வதனால் தான் தேய்வு.

கூத்தப்பெருமான் (நடராஜப் பெருமான்) நடத்தும் கூத்து இது.

*செய்ய திருமேனிச்*
*சிற்றம் பலவருக்கெள்*
*தையல் வளைகொடுத்தல்*
*சாலுமே - ஐயன்தோ*
*சேயே வரும்அளவில்ச்*
*சிந்தாத மாத்திரமே*
*தாயே நமது கையில்ச்*
*சங்கு* (5)

6) நமது தேகதத்துவத்தை எடுத்துக் கொண்டால் அதில் எண்ணிறந்த அம்சங்கள் இருக்கின்றன. அத்தனையும் ஒன்றாய் இணைந்து செயல்படுகின்றன.

நடக்கிறோம் அந்த நடைக்கு எத்தனை அம்சங்கள் சேர்ந்து செயல்பட வேண்டி இருக்கிறது. கால், இடுப்பு, எலும்பு, நரம்பு, மூட்டு, என்று பல அம்சங்கள். அத்தனையும் சேர்நது செயல்பட வேண்டும்.

ஒவ்வொரு அம்சமும் ஒவ்வொரு விதமாக இருக்கலாம். ஆனால் எது எது எவ்வளவு எவ்வளவு இருக்க வேண்டும். அவ்வளவுதான் இருக்க வேண்டும். எலும்பு ஒரு விதமாக இருக்கும். நரம்பு இன்னொரு விதமாக இருக்கும். அப்படி முரண்பட்டவை எல்லாம் ஒரு தன்மைத்தாய் இணைந்து செயல்படுவதில் தான் இருக்கிறது பொருத்தம்.

அளவு என்று சொல்வது இந்தப் பொருத்தத்தையே.

இனி, ஆன்மதத்துவத்திலும் எத்தனையோ முரண்பட்ட அம்சங்கள். இன்பம், துன்பம், குழப்பம், அமைதி, இகழ்ச்சி, உயர்ச்சி என்று பல பண்புகள். அவ்வளவும் வேண்டும். ஒவ்வொன்றுக்கும் அளவு என்று உண்டு. அந்தந்த அளவில்தான் நிற்க வேண்டும். அப்படி அளவுபட்டு நின்றால் ஒன்றுபட்டு ஒரு தன்மைத்தாய் செயல்பட முடியும்.

---

*செய்ய - சிவந்த. தையல் - பெண். சாலும் - போதும். சேயே வரும் அளவில் - தூரத்தே வரும் வரைதான். நமது கையில் சங்கு - நம் பெண்ணின் கை வளையல் மட்டுமா, நம் கை வளையலும் சிந்தாது இருக்கும். சங்கு - வளையல்

இனி, வாழ்க்கையும் அப்படியே. மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர், என்று சேர்ந்து வாழ்வதுதான் வாழ்க்கை. ஒருவரை ஒருவர் மதித்து, உபசரித்து பேணி வாழ வேண்டும். ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்க வேண்டும். ஒருவர் மேல் ஒருவருக்கு நம்பிக்கை வேண்டும். அன்பு வேண்டும்.

அன்போடும், ஆசையோடும் வாழ்ந்து கொண்டே இவ்வளவும் நம் செயல் அல்ல. கடவுளின் செயல். திருவருளின் ஆனந்த விளையாட்டு என்னும் உண்மை உணர்ச்சியும் வேண்டும். அதில் திளைக்கவும் வேண்டும்.

உண்மை உணர்ச்சியும், அதன்மேல் நம்பிக்கையும், மரியாதையும் சேர்ந்து ஒன்றாய்ப் பரிணமிப்பதுதான் பக்தி.

பக்தி இருந்தால் குடும்பம், வாழ்க்கை எல்லாம் மணக்கும். பக்தி இல்லாமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று ஓடி அலைவது பிரயோசனப்படாது.

பக்தியோடு பார்க்கிற பொழுது தான் மனைவி, மக்கள், குடும்பம், எல்லாம் தெய்வாம்சம் பொருந்தியது என்று தெரியும். வாழ்க்கையில் நிம்மதியும் அமைதியும் அப்பொழுதுதான்.

பக்தி உணர்ச்சியோடு வாழ்கிற குடும்பம் மோட்ச சாம்ராஜ்யம். பக்தி உணர்ச்சி இல்லாது வாழும் குடும்ப வாழ்க்கை நரக வாழ்க்கை.

காதல், பக்தி இரண்டும் இணைந்து நிற்கிற ஒழுங்குதான் அளவு.

இந்த உண்மை தமிழில், அலை அலையாய் மிதந்து வருகிறது. இசையும், தாளமும் எதுகை மோனையாய் வந்து தாண்டவம் ஆட வைக்கிறது உண்மையை.

எப்படி என்று பார்க்கலாம். கருமணல் தான் இவள் கூந்தல், வெண்மதிதான் முகம், வெண் நிலவினும் பளபளப்பு இவள் முறுவல், தங்கக் கலசந்தான் மார்பகம், நூலினும் நண்ணிது சிற்றிடை, தாமரைப் பூவினும் மெத்தென்றிருக்கும் இவள் பாதம் என்றெல்லாம் புலம்பி மயங்குகிறவர்கள் ஒன்று தெரிய வேண்டும். அது என்ன?

ஆம், அழகானவள்தான் பெண், அந்த அழகு உத்சாகம் கொடுக்கக்கூடியதுதான். ஆனால் அழகுள்ள பெண் மட்டும் போதுமா வாழ்க்கைக்கு, அமைதிக்கு என்று பார்க்க வேண்டும்.

பார்த்தால் பெண்மையை, அழகை மதிக்கத் தோன்றும். அடிமைப்பட இடம் கொடுக்காது.

இனிப்பாடல்

*நெறிதரு குழலை*
*அறல்என் பர்கள்;*
*நிழல்எழு மதியம்*
*முகம்ஏன் பர்கள்;*
*நிலவினும் வெளிது*
*நகை என் பர்கள்;*
*நிறம் வரு கவசம்*
*முலைஎன் பர்கள்;*
*அறிகுவ(து) அரிது*
*இடைஎன் பர்கள்;*
*அடிஇணை கமல*
*மலர்என் பர்கள்;*
*அவயவம் இனைய*
*மடமங் கையர்*
*அழகியர் அமையும்*
*இவைஎன் செய!* (6)

*நெறிதரு குழல் - நீண்டு சுருண்டு கரு கரு என்றிருக்கிற கூந்தலைப் பார்த்து மயங்கி. அறல் - மாவாய்ப் படிந்து கிடக்கும் கரு மணல் தான் என்பார்கள். குழல் - கூந்தல். அறல் - கருமணல். நகை - முறுவல். முறுவலில் ஒளிரும் பல். நிறம் வரு - பொன்னொளிமிக்க. அறிகுவது அரிது - கண்ணால் பார்க்க முடியாதது. அவ்வளவு நுண்ணியது. கமல மலர் - தாமரைப்பூ. அவயவம் - கூந்தல், முகம் என்னும் அங்கலட்சணம். அமையும் - ஆணென்றால் பெண் (மனைவி) உண்டுதான். பெண்ணென்றால் (கணவன்) உண்டுதான். என்செய - ஆணும் பெண்ணும் கணவன் மனைவி ஆனால் மட்டும் போதுமா? நிம்மதி வந்து விடுமா அதில்

*(7) நிம்மதி என்றால் அது உண்மையோடு ஒட்டிய உணர்ச்சியில்தான். எல்லாம் இறைவனின் திருவிளையாடல் என்னும் அமைதியில்தான்.*

*சாதாரண விஷயந்தானே இது. ஏன் பலரும் இது தெரியாமல் ஏமாந்து போகிறார்கள். உண்மையை உணராத காரணமாகத்தான்.*

*"மறிமழு உடைய*
*கரன்என் கிலர்*
*மறலியை முனியும்*
*அரன்என் கிலர்*
*மதிபொதி சடில*
*தரன்என் கிலர்*
*மலைமகள் மருவு*
*புயன்என் கிலர்*
*செறிபொழில் நிலவு*
*தி(ல்) லை என் கிலர்*
*திருநடம் நவிலும்*
*இறைஎன் கிலர்*
*சிவகதி அருளும்*
*அரசென் கிலர்*
*சிலர் நர(கு) உறு வ(து)*
*அறிவின் றியே!* (7)

★★★★★★★

மறிமழு உடையகரள் - மானையும் மழுவையும் ஏந்திய சிவனே (இறைவனே) எல்லாம் உன் செயல் என்று சொல்ல முடியவில்லையே இவர்களால். மறலி - எமன். முனியும் - எம பயத்தையே அடித்து விரட்டும். மலை மகள் - பார்வதிதேவி. செறிபொழில் நிலவுதில்லை. இருண்ட சோலை சூழ்ந்ததில்லை (சிதம்பரம்) பொன்னம்பலம். நடம் நவிலும் - ஆனந்தக் கூத்தாடும். சிவகதி - பேரானந்தம், விடுதலை. நரகு - குழப்பம், துன்பம், வேதனை. வேண்டும் என்றே தொல்லைக்கு ஆளாகுகிறார்களே மனிதர்கள் என்கிற பரிவுதான். செய்யுளின் உருவம். அருமையான இசைப்பாடல். இறைவனே (சிவபெருமானே) பெரிய குடும்பிதான். மனைவி, மக்கள், உற்றார், உறவினர் என்று ஒரே தடபுடல்தான். நமக்கும் வேண்டும் குடும்பம். ஆனால் அதை தெய்வகடாட்சமாக பக்தியோடு பார்த்து மதிக்க வேண்டும்.

8) பாகம் பிரியாளாகிய பார்வதி தான் மனையாள். அண்ட, பிண்ட சராசரம் எல்லாம் அவருடைய குழந்தைகள்தான்.

சிருஷ்டிக்கு அதிதேவதை பிரமா. அந்தப் பிரமாவுக்கு தந்தை திருமால். அந்தத் திருமாலே சிவபெருமானின் அம்சந்தான்.

அப்படியானால் திருமாலே சிவபெருமானுடைய அருமை மகள் தான்.

திருமால், பிரமா, பிரபஞ்சம் எல்லாம் இறைவனின் குழந்தைகள்.

குடும்பம் பெரிய குடும்பந்தான். மனைவி, மக்கள், பேரன், பேத்தி, உற்றார், உறவினர், அடியார் என்று கூட்டம் அதிகம். அத்தனை பேரிடமும். எல்லாவற்றிடமும் பெருமானுக்கு ஒரே அன்பு. தீராக் காதல்.

பெருமானுக்கு அவருடைய வாரிசுகள் மேல் அன்பு (காதல்) என்றால், வாரிசுகளுக்கும் அவர் மேல் அன்பு (காதல்) தானே.

அண்ட பிண்ட சராசரம் முழுவதும் இறைவன் மேல் காதல் வைக்கிறது என்று மொட்டையாகச் சொன்னால் அதில் வேகம் என்ன இருக்கும்? ஒரு பெண், பருவ மங்கை காதல் வயப்பட்டு பெருமானை எதிர்பார்த்துத் தவிக்கிறாள் என்றால் காதலுக்கு வேகம் வரும்.

அப்படியே சொல்கிறார் பட்டிணத்தார்.

சிவபெருமான் மேல் ஒரு பெண்ணுக்குக் காதல். வெறி கொண்ட காதலாகி விட்டது பெண்ணுக்கு. காதல் வெறியில் உடம்பு துரும்பாய் இளைத்து விட்டது. மெலிந்து வெளுத்துப் போய் விட்டது தேகம்.

பைத்தியம் பிடித்தது போலாகி விட்டாள் பெண். அதே நினைப்பில் இருந்தால் அப்படித்தானே. பைத்தியத்தில் புலம்ப ஆரம்பித்து விட்டாள். கன்னாபின்னா என்றே புலம்புகிறாள்.

ஜன்னிக் கோளாறு என்றே சொல்லத் தோன்றுகிறது பெண்ணின் நிலை.

காதல் வெறியில் மனம் தத்தளிக்கும். ஏங்கும், தவிக்கும். காதலர் ஒருவரை ஒருவர் சந்தித்தால் போதும். எல்லாம் சரியாகி விடும். நேரில் சந்திக்க வசதிப்படா விட்டால் அடையாளத்துக்கு ஒரு பொருளை, முக்கியமான பொருளை அனுப்பி வைத்தாலும் போதும். ஓரளவுக்கு ஆறுதல்தான் அது.

நாயகனானவன் பிரியப்பட்டு மகிழ்ந்து சூடும் பூமாலை ஒன்றை அனுப்பினால் போதும். அதைப் பார்த்து ஆறுதலடைவாள் பெண்.

''ஏதோ அவசர காரியம். வர முடியவில்லை. வந்து விடுவார். வீணாக அலட்டிக் கொள்ள வேண்டாம் என்கிற தெளிவு வந்து விடும் அந்தப் பொருளைப் பார்த்தவுடன்.

★★★★★★★

சிவபெருமான் மேல் காதல் கொண்டு தவிக்கிற பெண்ணுக்கும் அப்படியே கொன்றை மலர் கொண்டு கட்டிய சிறு மாலை ஒன்றை அனுப்பினால் போதும். அவரைப் பார்க்கிற மாதிரியே இருக்கும் அந்த மாலை.

அதுகூட அனுப்பவில்லை அவர். அதனால் மேல் மூச்சு கீழ் மூச்சு வருகிறது பெண்ணுக்கு. பெண்ணின் நிலை பார்ப்பவர்களை மனம் கசிய வைக்கிறது.

செவிலித் தாய் (வளர்ப்புதாய்) மற்றைய செவிலியரிடம் சொல்கிறாள். ''சரி சரி, அவர் வரப்போவதில்லை. மாலையைக் கூடக் கொடுத்தனுப்ப மனம் இல்லை அவருக்கு. இனி அவ்வளவுதான். மழைக்கும், தூறலுக்கும், வாடைக் காற்றுக்கும் இது போதாதா? எப்படியாவது இப்பெண்ணைத் தீர்த்துக் கட்டி விட வேண்டும் என்று முடிவு செய்து விட்டது விதி. அதற்காகவே சாரலையும் தூறலையும் துணைக்கு வைத்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வருகிறது விதி. அவளால் எப்படிச் சமாளிக்க முடியும் இவ்வளவையும்?

*பேதைஎங் கேஇனித்*
*தேறிஉய் வாள்பிர*
*மன்தனக் குத்*

*தாதைதணன் தாதை என்(று)*
*ஏத்தும் பிரான்தண்*
*புலிசைப் பிரான்*

*கோதையம் தாமத்தண்*
*கொன்றை கொடான்என்(று)*
*கொல்லஎண் ணி*

*ஊதையும் காரும்*
*துளியொடும் கூடி*
*உலாவிய தே* (8)

★பேதை - விபரம் தெரியாத சிறு பெண். எங்கே இனித் தேறி உய்வாள் - எப்படித் தப்புவாள். தண் - குளிர்ந்த நீர்வளமும் நிலவளமும் நிறைந்த. புலிசைப் பிரான் - பெரும்பற்றப் புலியூர் (சிதம்பர) நாதன். கோதை அம்தா மம் தண் கொன்றை - கோத்துத் தொடுத்த மாலை. குளிர்ந்த கொன்றை மலர்கள் வைத்துக் கட்டிய மாலை.

ஊதை - ஊ என்ற இரைச்சலோடு வரும் வாடை (ஊதை)க் காற்று. கார் மழை - கருமேகக்கூட்டம். துளி - மழைத்துளி.

# என்னையும் ஒரு பொருளாக்கினாள்

9) நீர் என்கிற தத்துவம் ஒன்று. அது கடல், மழை, ஆறு, ஏரி, என்று எத்தனையோ உருவங்களில் காட்சி அளிக்கிறது.

கடல் நீர்தான் மேகமாய்த் திரள்கிறது. துளிதுளியாய் மழை என்று பெய்கிறது. அருவியாய்க் குதித்து விளையாடுகிறது. ஆறாய் பெருக்கெடுத்து ஓடுகிறது. பழையபடி கடலாகிறது.

பரம்பொரு (கடவு)ளும் அப்படியே; அது ஒன்றே அணுவிலிருந்து அண்டம், பேரண்டம் என்று கோடான கோடி வஷ்த்துக்களாய் உருவெடுக்கிறது. அப்படியே அத்தனையும் கடவுள் தத்துவத்தோடேயே கலக்கிறது.

இறைவனோ பிறப்பு இறப்பு இரண்டும் இல்லாதவன். பல படியாகத் தோன்றுவது, மறைவது எல்லாம். லீலைதான். விநோதந்தான். தண்ணீர் பட்ட பாடுதான். அதுதான் பிரபஞ்சம். அதுதான் திருவிளையாடல்.

*வரையில்ச் சீகர*
*வாரியாய், ஆறாய்ப்*
*பெருத்தும் சிறுத்தும்*
*பிறங்குவ தோன்றி;*
*எண்இல வாக*
*இருங்கடல் அடங்கும்*
*தன்மை போலச்*
*சராசரம் அனைத்தும்*
*நின்னிடைத் தோன்றி*
*நின்னிடை அடங்கும், நீ*

---

வரை - மலை. சீகரவாரி - அருவி. நீர்த்துளியாகிய அருவி, ஆறாய்ப் பருத்தும் சிறுத்தும் காவிரி போலக் கடைசியில் கடலில் அடங்கும். எண் இலவாக - பல இல்லை ஒன்றுகூட இல்லை. எண் - ஒன்று பல என்னும் கணக்கு.

*ஒன்றினும் தோன்றாய்*
*ஒன்றினும் அடங்காய்*
*வானோர்க்(கு) அரியாய்-*
*மறைகளுக்(கு) எட்டாய்*
*நான்மறை யாளர்*
*நடுவுபுக்(கு) அடங்கிச்*
*செம்பொற் தில்லை*
*மூதூர்*
*அம்பலத் தாடும்*
*உம்பர் கோனே.* (9)

10) சிதம்பரத்தில் நடராஜப் பெருமான் தேரேறி பவனி வருகிறார். பவனி வரும் வீதி பெரிய வீதிதான். ராஜவீதி (கோமறுகு) தான். குதிரை பூட்டிய தேர்தான். இரவு பத்தரை பதினோரு மணிக்கு மேல் தான் பவனிக்குப் பொருத்தமான நேரம்.

ஆணும் பெண்ணும் அலைகடலாய் திரண்டு அலை மோதுகிறது.

பெற்ற தாய், வளர்ப்புத்தாய் இவர்களுடன் ஆறு, ஏழு வயதுப் பேதைப் பெண்களும் வந்து பவனியைப் பார்க்கிறார்கள்.

நடராஜப் பெருமானின் அழகில் ஈடுபட்ட பெண் குழந்தைகள் தேரின் பின்னாலேயே போகிறார்கள். தாயொரு பக்கம், செவிலி ஒரு பக்கம் என்று ஓடுகிறார்கள். சிறுமிகளைப் பிடிக்கத்தான் ஓட்டமும் நடையுமாக இருக்கிறது அவர்கள் கூட்டம்.

பவனி அலங்காரம் கூடத் தோற்றுப் போகும். இந்தப் பேதையர் ஓட்டப் பந்தயத்தில்.

---

வானோர் - ஞானியர். நான்மறை - நானாவிதமான, வெண்பா, விருத்தம், கட்டளைக் கலித்துறை, தாழிசை என்ற பாடஙல்கள். நான்மறையாளர் - பாடல் பாடிப் பரவும் பக்தர்கள்.

*பெற்றோர் பிடிக்கப்*
*பிழைத்துச் செவிலியர்கள்*
*சுற்றோட ஓடித்*
*தொழா நிற்கும் - ஒற்றைக் கை*
*மாமறுகச் சீறிய சிற்*
*றம்பலத் தான் மான்தேர் போம்*
*கோமறுகில்ப் பேதைக்*
*குழாம்.* (10)

*11)* கன்றின் வாயில் மடியைக் கொண்டு போய்க் கொடுக்கிறது பசு. காம்பைக் கொடுக்கிறது. பசி ஆற அமுதத்தை ஊட்டுகிறது.

கடவுளும் அப்படியே சகல கோடி உயிர்களின் பசியையும் ஆற்றி அமுதூட்டி வளர்க்கிறது கடவுள் தத்துவம்.

*"எவ்வுயிர்க்கும்*
*முந்தி மடுஉதவும்*
*மூலமாய்"*

அல்லவா இருக்கிறான் இறைவன்.

தாயும் அவன்தான். தந்தையும் அவன்தான்.

இனி, திருமால் என்ன, பிரமா என்ன இவர்கள் ஊழி ஊழி காலமாகத் தேடி அலைகிறார்கள் இறைவனைக் காண. அவர்களால் பார்க்க முடியவில்லை. ஆனால் அன்பர்களின் மனம் என்னும் சித்தாகாசத்தில், விஸ்வப் பெருவெளியில் ஆனந்த நடனம் ஆடிக் கொண்டிருக்கிறான் பெருமான்.

அப்படி இருந்தும் அன்பே இல்லாத என்னைத் தேடி வந்தான். அணையடைச் சேலையிலிருந்து குழந்தையை

---

★பெற்றோர் பிடிக்கப் பிழைத்து - தாய் தந்தையர் ஓடிப் பிடிக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் பிடியை உதறி ஓடுகிறார்கள் குழந்தைகள். செவிலியர்க்ள் சுற்(றி) ஓட - உடனே செவலியர் விரட்டி மடக்குகிறார்கள். வளைக்கிறார்கள். ஓடி - ஆனாலும் அந்த வளையத்தையும் துளைத்தபடியே ஓடி வணங்கி வழிபடுகிறார்கள் பேதைப் பெண்கள். ஒற்றைக் கைமா - யானை, மறுக - அது பதறும் படி. மான்தேர் - குதிரை பூட்டிய தேர். பேதைக்குழாம் - சின்னஞ்சிறு பேதைப் பருவத்துப் பெண்களின் இந்தக் கூத்து.

எடுக்கும் தாய் போல என்னை எடுத்தாள். சாக்கடையில் கிடந்த என்னையே எடுத்தாள். குளிப்பாட்டித் துவட்டினான்.

தாயாய் அருள் புரிந்தாள்

*நாயனைய என்னைப்*
*பொருட்படுத்தி, நன்களித்துத்,*
*தாய் அனையன் ஆய் அருளும்*
*தம்பிரான்; - தூயவிரை*
*மென்துழாய் மாலொடயன்*
*தேட வியன்தில்லை*
*மன்றுளே ஆடும்*
*மணி.* (11)

12) சாமிதரிசனம் பண்ணக் கோவிலுக்குப் போனால் எல்லோருக்கும் பிரசாதம் கிடைக்கும். விபூதி, குங்குமம், சந்தனம், புஷ்பம் என்று கிடைக்கும். இனி சப்பரம் ஏறி சுவாமி பவனி வருகிறார். தரிசனம் செய்கிறார்கள் பலர். அவர்களுக்கும் கிடைக்கும் பிரசாதம்.

பிரசாதம் எல்லோருக்கும் பொது. இனி, ஒரு பெண் நடராஜமூர்த்தியினிடத்துக் காதல் கொள்கிறாள். அவளுக்கு நாயகன் அருள் கிடைக்கிறது. பிரசாதம் போலக் பொதுவாகி விடுமா காதலும் அருளும். அது அந்த இரண்டு பேருக்குமே சொந்தம்.

நடராஜமூர்த்தி அணிந்த கொன்றை மலர் மாலையோ அவர் அருளுக்கு அடையாளம்.

குழந்தைப் பெண் நடராஜமூர்த்தியின் மேல் காதல் வைத்திருக்கிறதைப் பார்த்து அனுப்விக்கிறாள் செவிலி. மற்றையச் செவிலியரிடம் வின்னியாசமாகச் சொல்கிறாள் அதுபற்றி.

---

★தாய் அனையன் ஆய் - தாய் போலும் தயாளப் பிரபுவாய், தூயவிரை - தூய்மையும் நறுமணமும் நிறைந்த. விரை - மணம், துழாய் - துழாய் மாலை. வியன் தில்லை - பெருமைமிக்க தில்லை (மனவெளி) மன்று - நடன சபை. மணி - நடராஜமூர்த்தி.

இன்றில்லாவிட்டாலும் நாளைக்கு. அவன் அணிந்த கொன்றைமலர் மாலையை அனுப்புவான். அது கோவில் பிரசாதம். அல்ல. நாயகன் அருள்ப்பிரசாதம். என்மகள் பெறுவாள் அவள் அருளை

*நினையார் மெலியார்*
*நிறையழியார், வாளா*
*புனைவார்க்குக் கொன்றை*
*பொதுவோ - அனைவரும்*
*மெச்சியே காண*
*வியந்தில்லை யான் அருள் என்*
*பிச்சியே நாளை*
*பெறும்.* (12)

*13)* ஒரு சிறு நகரம். அந்நகரத்துக்கு ஒரு நகர் மன்றம். அந்த நகர் மன்றத்துக்குத் தேர்தல் நடக்கிறது. சாதாரண உறுப்பினர் பதவிக்கே எத்தனை அடிபிடி, எத்தனை வெட்டுக் குத்து, எத்தனை எத்தனை தில்லுமுல்லு.

நகர்மன்ற உறுப்பினர் பதவி என்றாலும் அதில் ஏதோ பசை இருக்கிறது. அப்படி இருக்க மாபெரும் நாடாகிய இந்தியாவின் பிரதம மந்திரி, ஜனாதிபதி பதவி என்றால் அதன் தோரணை என்ன, அலங்காரம் என்ன, பெருமை என்ன, அதிகாரம் தான் என்ன.

ஆளுநர்கள், மாநில முதல்வர்கள், அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள், தளகர்த்தர்கள், உயர் அதிகாரிகள், தூதர்கள், தொழிலதிபர்கள், பெருந்தனக்காரர்கள் எல்லோருமே

---

நினையார் - நடராஜமூர்த்தியே துணை என்று நினைத்திருந்தானே என்மகள். அப்படி நினைந்திருந்தார்களா மற்றவர்கள்? மெலியார் - காதல் நினைப்பிலேயே உண்ணாமல் உறங்காமல் மெலிகிறானே என்பெண் அப்படி மெலிந்தார்களா அவர்கள். நிறை அழியார் - என்னநேர்ந்தாலும் சரி இவன் தான் என் நாயகன் என்று இறங்கினாளே செயலில், அப்படி இறங்கினவர் உண்டா. அப்படி இருக்க வாளாபுனைவார்க்கு - பேருக்குச் சும்மா சூடுகிறவர்களுக்கெல்லாம் கிடைக்குமா கொன்றை மலர் மாலை. பொதுவோ கொன்றை. அனைவரும் மெச்சியேகான - நீங்கள் எல்லோரும் வியந்து பார்க்கும்படி. பிச்சி - மகள்.

பேட்டிக்காக முற்றத்தில் காத்துக்கிடப்பார்கள். அப்படிப்பட்ட ஒய்யாரமான பதவியை எனக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டார் மகாத்மா காந்தி. ஏன்? "நான் வெளியிலிருந்து அதைச் செய், இதைச் செய் என்று அதர்மம் செய்ய ஏவுவேன். சொன்ன படி செய்ய வேண்டும். இல்லை என்றால் கவிழ்த்துவிடுவேன் என்கிற கொடுங்கோன்மைக்கா கவர வேண்டாம் என்றார்.

"தர்மவழியை வெளியிலிருந்து காட்டுகிறேன். நீங்கள் செயல்படுங்கள். அதில் பயிற்சி பெறுங்கள் என்னும் அருள் நோக்கில் தான் மற்றவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்தார்.

காந்தி ஒரு பக்தர். பரம பக்தர். அரசியல் வாதி அல்ல. அதனால் தான் முடிந்தது.

பக்தர் என்றால் அவர் காரியம் அப்படித் தான் இருக்கும்.

*வானோர் வணங்க*
*மணியா சனத்திருக்கும்*
*ஆனாதே செல்வத்(து)*
*அரசன்றே - மாநாகம்*
*பந்திப்பார் நின்றாடும்*
*பைம்பொன்னின் அம்பலத்தே*
*வந்திப்பார் வேண்டாத*
*வாழ்வு.* (13)

*14)* பக்தி இல்லை என்றால் ஒன்றா இரண்டா கவலை சோற்றுக் கவலை, துணிக்கவலை என்று ஆயிரம் ஆயிரம் கவலைகள்.

ஒரு கவனம் பருக்கை (சோறு) என்றாலும், அது கிடைக்கிறது இனாமாக என்றால் பூவுக்கு நூறு கோட்டை நெல் அறுவடை செய்கிறவனும் முண்டி அடித்து ஓடுவான். புலிப்பாய்ச்சலில் ஓடுவான். அது அவன் தலை எழுத்து.

---

மணி ஆசனத்து இருக்கும் - நவரத்ன கசிதமான சிம்மாசனத் திருந்து ஆளும். ஆனாத செல்வம் அன்றே - குறையாத பெருஞ்செல்வந்தான். வந்திப்பார் வேண்டாத வாழ்வு - வணங்கி வழிபடுகிறவர்கள் வேண்டாம் என்று ஒதுக்கியது. மாநாகம் - பெரிய சர்ப்பத்தையே. பந்திப்பார் - கச்சையாக்கட்டி இருக்கிற பெருமான். நின்றாரும் அம்பலத்து வந்திப் பார் - ஆனந்த நடனம் ஆடும் பொன்னம்பலத்தை வணங்கி வழிபடும் பக்தர்.

பக்தர்களுக்கோ எது பற்றியும் கவலை இல்லை. மனிதர்கள் தான் அவர்கள் தேடும் பொருள். பக்தர்கள் (தொண்டர்கள்) தான் அவர்களுக்குக் கண்கண்ட தெய்வம்.

அவர்கள் இருக்கும் வரை இவர்களுக்கு ஏது கவலை.

ஞானியர் அனுபவம் இது.

பட்டிணத்தார் அனுபவம் எப்படிப் பாய்ந்தோடி வந்து விழுகிறது தமிழில் என்று பார்க்கலாம்

*கொண்டல்வண் ணத்தவன்,*
*நான்முகன், இந்திரன்,*
*கோமகு டத்(து)*
*அண்டர்மிண் டித்தொழும்*
*அம்பலக் கூத்தனுக்(கு)*
*அன்புசெய் யா*
*மிண்டர்மிண் டித்திரி*
*வார்; எனக் கென்இனி-;*
*நானவன் தன்*
*தொண்டர்தொண் டர்க்குத்*
*தொழும்பாய்த் திரியத்*
*தொடங்கின னே.* (14)

*15)* காளை வாகன மூர்த்தியாய் தேரேறி பவனி வருகிறார் நடராஜ மூர்த்தி. அவர் அழகில் மயங்கி ஈடுபட்டாள் ஒரு பெண்.

காதல் வெறியில் சொல்கிறாள் பெண். 'யாரிடமோ சண்டைபோடுவது போலவே சொல்கிறாள் பெண் 'பக்கத்துத் தெருவழி பவனி போகத் தெரிகிறது. காளை மேல் ஏறி

---

கொண்டல் வண்ணத்தவன் - திருமால். மழைமேகம் போல் நிறமுடையவன். கொண்டல் - மேகம். நான்முகன் - பிரமன். கோமகுடத்து அண்டர் - அரசகிரீடம் புனைந்த அதிபதிகள். மிண்டித் தொழும் அம்பலக் கூத்தன் - இவர்கள் எல்லோரு முண்டி அடித்துக் கொண்டு போய் வணங்குவார்கள் நடராஜப் பெருமானை. அவனிடம் அன்பு செய்யாதவர் மிண்டர். அதாவது விருதாத்தடியர். அவர்கள் அலைந்து திரிபட்டும். நானோ பெருமானின் அடியார்கு அடியாரை வழிபட்டுத் திருப்பணி செய்ய ஆரம்பித்து விட்டேன். எனக் கேள் அலைச்சல்.

உல்லாசமாக நடத்திக் கொண்டு போகத் தெரிகிறது. ஏங்கி எதிர்பார்த்திருக்கும் ஒரு அபலையின் தெருவழியாக வர அவருக்கு முடியவில்லை. அவரை அழைத்து வர மற்றவர் களுக்கும் முடியவில்லை.

''மகிழ்ச்சியாக நான் இருந்தால் அவர்களுக்கு என்ன கேடோ.''

இப்படி அங்கே இங்கே என்று முட்டி மோதுகிறது பெண்ணின் ஆத்திரம். காதலின் வேகம்.

*ஆனேறு போந்தால்*
*அழிவுண்டோ; அன்புடைய*
*நானேதான் வாழ்ந்திடினும்*
*நன்றன்றோ - வானோங்கு*
*வாம்மாண் பொழில்த்தில்லை*
*மன்றைப் பொலிவித்த*
*கோமானை இத்தெருவே*
*கொண்டு.* (15)

16) கம்பர், குறளாசிரியர், மாணிக்கவாசகர் இவர்கள் பாடலை பாடவேண்டும். அனுபவிக்க வேண்டும். ஆனந்தம் பெற வேண்டும். அதுதான் முறை. அதை விட்டுவிட்டு அவர்களுக்கு சான்றிதழ் வழங்குவது முறையாகாது.

---

இத்தெருவே கொண்டு - நான் வாழும் இந்தத் தெருவழியாக. ஆனேறு - காளை மேல். போந்தால் - பவனி வந்தால். அழிவு உண்டோ - என்ன கேடு வரும். நானே வாழ்ந்திடின் நன்று அன்றோ - நான் வாழ்வதில் மற்றவர்களுக்கு ஏன் விருப்பம் இல்லை. வான் ஓங்கு - வானாவிய. வாம் மாண் பொழில் - வாளில் தாவி ஏறுவது போல் உயரும் சோலை சூழ்ந்த. மன்றைப் பொலிவித்த கோமானை - நடன சபையையே அழகுபடுத்துகிற நடராஜ மூர்த்தியைத் தானே. ''இத்தெருவே ஆனேறு கொண்டு வந்தால் அழிவுண்டோ''

குறிப்பு : அருமையான பாடல். அரிய உண்மையை தவிப்பின் துடிப்பையே பளிங்கில் வைத்துக் காட்டுவதுபோல் எளிமையாய், இனிமையாய் வைத்துக் காட்டுகிறது தமிழ்.

சான்றிதழ் வழங்குவதற்குப் பதில் பாராட்டுரை வழங்குகிறேன். வாழ்த்துப் பத்திரம் வாசிக்கிறேன் என்பதும் அப்படித்தான்.

படித்து அனுபவித்து ஆனந்தித்தால் போதும்.

அதற்கு மாறாக. என் அங்கிகாரம் இது என்று காட்டுவது தேவைஇல்லாதது. அதிகப் பிரசங்கித்தனம்.

கவிபோலத் தான் கடவுளும். கடவுளின் திருவிளையாடலை ஒவ்வொன்றாகப் பார்க்க வேண்டும். அனுபவிக்க வேண்டும். அனுபவத்தில் கிடைக்கிற ஆனந்தம் இருக்கிறதே அதுபோதும்.

பார்க்காமலே அனுபவிக்காமலே வாழ்த்துவது, போற்றுவது நம்மை நாம் உயர்த்திக் கொள்கிற காரியந்தான்.

*******

பட்டிணத்தார் சொல்கிறார். இறைவா! உன்னைப் போற்றுவதற்கும், வணங்குவதற்கும் என்ன தகுதி இருக்கிறது என்னிடம். ஒன்றும் இல்லையே.

''ஒன்றும் இல்லை என்னிடம் என்பதைக் காட்டவே போற்றுகிறேன் உன்னை'' என்று.

உன் சடையை, சாவவ்யாபகத்தை, வாமபாகத்தை, விஸ்வப் பெருவெளியை, பொன்னம்பலத்தை, ஆனந்த நடனத்தை என்று ஒவ்வொன்றையும் போற்றுகிறேன். ஏன், இவற்றில் எது பற்றியும் எதுவும் தெரியாது எனக்கு. அதனால் துணிச்சலோடு போற்றுகிறேன். உன் திருவளே தஞ்சம்.

*கங்கையும் கடுக்கையும்*
*கலந்துழி ஒருபால்*
*திங்கள் சூடிய*
*செஞ்சடை போற்றி!*
*கடவுள் இருவர்*
*அடியும் முடியும்*
*காண்டல் வேண்ட*
*கனல்ப்பிழம் பாகி*

*நீண்டு நின்ற*
*நீளம் போற்றி!*
*ஏக வெற்பன்*
*மகிழும் மகள்க்கிடப்*
*பாகம் கொடுத்த*
*பண்பு போற்றி!*
*தில்லை மாநகர்*
*போற்றி; தில்லையுள்ச்*
*செம்பொன் அம்பலம்*
*போற்றி, அம்பலத்(து)*
*ஆடும் நாடகம்*
*போற்றி போற்றி;*
*என்று போற்றிடும்*
*என்தனக்(கு) இறைவா!*
*ஆற்றல் இல்லை*
*ஆயி னும்*
*போற்றி போற்றிநின்*
*பொலன்பூ அடியே* (16)

---

கடுக்கை - கொன்றை மலர். சடையோமிகப்பெரியசடை. ஆகாயகங்கை, சந்திரன் எல்லாம் அடக்கம் சடையில். கடவுள் இருவர் - திருமால், பிரமன். கனல்ப்பிழம்பு - சோதி மலை. அண்ணாமலை ஏகவெற்பன் - இமயமலை. பொலன்பூ - தங்கத் தாமரை. அடி - திருவடி, அதாவது திருவருள்.

குறிப்பு : 1942ம் வருடம் சிறைவைக்கப்பட்ட காந்திஜி 44-45ல் வெளி வந்தார். புனாவில் உள்ள இயற்கை மருத்துவமனைக்குப் போனார். ராஜாஜி காந்திஜியைப் பார்க்கப் புனா செல்வதாக ரசிகமணி டி.கே. சிக்கு கடிதம் எழுதி இருந்தார். டி.கே.சி. ராஜாஜிக்கு எழுதியபதிலில் ''மகாத்மாஜியை எட்ட நின்று வணங்குவதற்குக் கூட அருகதை இல்லாதவன் நான். ஆனாலும் நீங்கள் இருக்கிறீர்கள். எனக்காக இருக்கிறீர்கள். உங்களை முன்வைத்து என் பணிவையும் வணக்கத்தையும் அண்ணலுக்குச் சமர்ப்பிக்கிறேன். காந்திஜியிடம் என்னை அர்ப்பணிப்பதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும் என்னால்'' இப்படிக் குறிப்பிடுகிறார்கள்.

குறிப்பு : பட்டிணத்தார் பாடலுக்கு ரசிகமணி கடிதந்தான் விளக்கம். அதுபோல் வேறு எது வெளிச்சம் தரும்.

# திருக்கழுமலமும் மணிக்கோவை

## எளிமையும் அவள்தான் இனிமையும் அவள்தான்.

1) ரசிகமணி போன்றவர்களிடம் இயல்பாகவே அமைந்திருக்கிறது பணிவு, அடக்கம், மரியாதை, எளிமை, உண்மை எல்லாம் ஒன்றுசேர்ந்த சான்றாண்மை.

சமுதாயத்தில் அந்தச் சான்றாண்மை மலரவேண்டும். பண்பாடாக மணம் கமழவேண்டும் அது.

அதற்குத்தான் கல்வி. ஆனால் அதை விட்டு விட்டு எதன் எதன் பின்னாடியோ ஓடுகிறது கல்வி.

இனி, பண்பாடுமிக்கவர்கள், சான்றாண்மை மிக்க சான்றோர்களுக்கு தேவர் என்று பெயர். வானவர் என்று அவர்களைக் குறிப்பிடுவது மரபு.

வானவர்களை அண்டத்தார் என்று பட்டிணத்தார் சொல்கிறார்.

அண்டத்தாராகிய பக்தர்களுக்குத்தான் கடவுள்த் தத்துவம் தெரியும். சிருஷ்டியின் அற்புதம் இன்னதென்று தெரியும். அண்டபிண்ட சராசரம் அத்தனையும் ஒன்றுக்கு ஒன்று ஆதரவாய் இருக்கிற ஏகதத்துவத்தின் அந்தரங்கம் புரியும். அதிசயம் அதிசயமாக உருவெடுத்து வருகிற இறைவனின் ஞான நாடகம் விளங்கும்.

கண்குளிர மனம்குளிர அவர்கள் கண்டுகளிப்பார்கள். அந்தக் களிப்பில் ''நீலகண்டம், நீலகண்டம்'' என்று அழைப்பார்கள். எல்லாம் உன்மயம் என்று ஒப்படைப்பார்கள் தங்களை. நம்மால் முடியுமா அது.

*"அருளாம் கடலே,*
*அன்பென்னும் ஆறே,*
*பொருளாய்ப் புகலிவரும்*
*பொன்னே - இருள்புகுதும்*
*கண்டத்தோய்" என்றுன்னைக்*
*காதலித்துக் கைதொழுவார்*
*அண்டத்தார்; - நாமார்*
*அதற்கு!* (17)

2) சமயப் பண்பாடு என்று ஒன்று. கோவில், மூர்த்தி, வழிபாடு, திருவிழா எல்லாம் சேர்ந்தது தான் சமயப் பண்பாடு. பக்தி, ஞானம், முக்திஎன்றெல்லாம் சொல்வது அதைத்தான்.

ஆனந்தத்திலிருந்து வருகிறது சமயப்பண்பு. பயத்திலிருந்தோ, கவலையிலிருந்தோ வருவதில்லை சமய வழிபாடு.

கடவுளே ஆனந்தமயந்தான். ஆனந்தத்தின் உருவந்தான் கடவுள்த் தத்துவம். பாற்கடலிலிருந்து அமிர்தம் வந்தது போல் ஆனந்தப் பெருக்கிலிருந்து எழுந்து வந்தார் கடவுள் என்று சொல்வதுண்டு.

ஆனந்த

வெள்ளத்தே தோன்றி.

எங்கும் ஒரே ஆனந்தம். சக்திமயமாக இருக்கிறது ஆனந்தம். அதிலிருந்து தான் பரமாணுவிலிருந்து போண்டம் முடிய பிரபஞ்சமே தோன்றுவது. விஷ்வப் பெருவெளி என்பது அந்த ஆனந்தந்தான்.

ஒவ்வொரு அனுவிலும் அந்த விஷ்வப் பெருவெளிதான். ஆன்மதத்துவம், ஜடதத்துவம் போல மனமும் விஷ்வப் பெருவெளிதான்.

---

*இருள் புகுதும் - இருள் தான் உள்ளே நுழைந்து ஒளிந்திருக்கிறதோ என்று சொல்லும்படி வெளியே நீலம் படர்ந்து தெரிகிறது நஞ்சை அடக்கிய பெருமாளின் கண்டம் (கழுத்து) எல்லாம் அந்த நீலகண்டன் திருவிளையாடல்தான் என்று தெளிந்து சொல்கிறவர்கள் அண்டத்தார். (ஞானியர்) அவர்கள்தான் அருள்க்கடலே, அன்புப் பெருக்கே, தங்கச் சுரங்கமே என்றெல்லாம் சொல்லிச் சொல்லி உருகுவார்கள்.*

பக்தியோடு, பார்க்கிறவர்கள் உள்ளத்தில் ஒரே ஒளிமயமாக ஜொலிக்கும் உண்மை. ஆனந்த சொரூபமான கடவுள்த்தத்துவம்.

*என்*
*உள்ளத்தே நின்ற*
*ஒளி.*

ஆனந்த வெள்ளமாய் ஜெகஜோதியாய்ப் பிரகாசிக்கும் பெருமான் பக்தர்களுக்காக சீர்காழியில் (திருக்கழுமலத்தில்) கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கிறாள்.

''கழுமலத்தே வீற்றிருந்து''

எப்படி வீற்றிருக்கிறான் பெருமான் திருக்கழுமலத்தில் (சீர்காழியில்)

ஒரு கையில் மான், மற்றொரு கையில் மழு (ஆயுதம்) நஞ்சடக்கிய கண்டத்தில் இருள். ஒரே காரிருள். சடையிலோ இருட்டை விரட்டும் சந்திரன் இப்படி ஒரு அலங்கார தோரணையில் கொலுவீற்றிருக்கிறான்.

அடியார்களின் கண்குளிர, மனம் குளிர ஆனந்த சொரூபியாய், ஒளிமயமாய்க் காட்சிகொடுக்கிறான்.

*மானும், மழுவும்,*
*திருமிடற்றில் வாழும் இருள்*
*தானும், பிறையும்,*
*தரித்திருக்கும் - ஆனந்த*
*வெள்ளத்தே தோன்றிக்,*
*கழுமலத்தே வீற்றிருந்தென்,*
*உள்ளத்தே நின்ற*
*ஒளி.* (18)

பாடலைப் பாடப்பாட இசைக்கே ஒரு தெளிவு பிறக்கும். நம் உள்ளத்துள் ஒளிவீசும்.

---

மிடறு - கழுத்து. நஞ்சுண்டு கருத்தகழுத்து.

குறிப்பு : என் உள்ளத்தில் ஒளிமயமாக இருக்கிற ஆனந்த பரவசந்தான் திருக்கழுமலத்தில் (சீர்காழியில்) கோயில்கொண்டு கொலுவீற்றிருக்கிறது என்று அடித்துச் சொல்கிறது பக்தி. வெறும் அறிவுபூர்வமான விஞ்ஞானத்தால் அப்படிச் சொல்லமுடியாது. பக்திக்கண்ணுக்குத்தான் அது தெரியும். பக்தியும் ஆனந்தமும் உருண்டு திரண்டு ஒன்றாய் நிற்கிறது செய்யுளில்.

3) அறிவுதான் கண். ஒளியும் அறிவுதான். கிருஷ்டிதத்துவமே அறிவின் பரிமாணந்தான். ஒரு புல்லுக்குள் நடக்கிற காரியத்திலிருந்து நட்சத்திரத்தில் நடக்கும் காரியம் வரை எல்லாவற்றையும் கணக்குப் போட்டுப் பார்க்கிறது. அறிவு ஆனாலும் அறிவு ஆணவத்தோடு ஒட்டியே இருக்கிறது. 'ஆணவத்தை உதறிஎறிய முடியவில்லை அறிவால். ஆணவத்தோடு சேர்ந்து செயல்படுவதால் ஒரு எல்லை வரை தான் அறிவு செல்ல முடியும். அதற்கு மேல் போக முடியாது. அதனால் உண்மை, நிரந்தரமான அடிப்படை உண்மை அறிவுக்குப் புலனாவதில்லை.

அடிப்படையான நிரந்தர உண்மையை பூரணம், அல்லது கடவுள்த்தத்துவம் என்று சொல்கிறோம்.

கடவுள்த்தத்துவத்தைக் கண்டு களிக்க வேண்டும் என்றால் ஆணவத்தைவிட்டுக் கழலவேண்டும் அறிவு.

சாமான்யப்பட்ட நம்போலியர்களிடமிருந்து எளிதில்க் கழலவா செய்யும் ஆணவம். பக்தியில்க் கரைந்து, உருகி, திருவருளோடு தோய்ந்தால் அல்லவா கழலும் ஆணவம்.

ஆணவம் கழவாதவரை எந்த விஞ்ஞான அறிவாலும் (வேத சாஷ்திரத்தாலும்) பார்க்க முடியாது இறைவனை.

*ஆரணம் நான்கிற்கும்*
*அப்பா லவன்;*

வேதங்களுக்கெல்லாம் அதிபதி பிர்மா. பிர்மாவின் தந்தை திருமால். உலகம், பிரபஞ்சமே அவர்கள் கையில்தான். அப்பேர்ப்பட்ட இருவராலுமே இறைவனின் பூரணத்தைப் பார்க்க முடியவில்லை. காரணம் நான் படைக்கிறேன், நான் காக்கிறேன் என்னும் ஆணவம் அவர்களைவிட்டு அகலவில்லை.

*அறியத் துணிந்த*
*நாரணன் நான்முக*
*னுக்கரி யான்*

ஆனாலும் ஒவ்வொரு வஷ்துவும் இறைவன்தான். எல்லாவற்றிலும் நிறைந்திருப்பது கடவுள்த் தத்துவம் ஒன்றே நடுவாய்நிறைந்த

*'பூரணன்'. இறைவன்*

பிரபஞ்சத்துக்கே, தத்துவங்கள் அத்தனைக்குமே அடிப்படை யான மூலகாரணமே இறைவன் தான். எல்லாம் அவன்தான். எல்லாவற்றிலும் அவன் ஒருவனேதான். ஆனாலும் ஒன்றுக்கும் சிக்குவதில்லை. எல்லாவற்றையும் கடந்து நிற்கிறான்.

இனிப் பாடலின் முழுஉருவம்.

*ஆரணம் நான்கிற்கும்*
*அப்பா. லவன், அறி*
*யத்துணிந் த*
*நாரணன் நான்முக*
*னுக்கரி யான், நடு*
*வாய்நிறைந் த*
*பூரணன், எந்தை*
*புகலிப் பிரான்பொழில்*
*அத்தனைக் கும்*
*காரணன்; - அந்தக்*
*கரணம் கடந்த*
*கருப்பொரு ளே.* (19)

---

ஆரணம் நான்கிற்கும் - நானாவிதமான விஞ்ஞான ஆராய்ச்சிக்கும், ஆரணம் - சயன்ஸ் (வேதம்) நாரணன் - திருமால். நான்முகன் - பிரமன். நடுவாய் நிறைந்த பூரணன் - எல்லாவற்றிலும் பூரணமாய் நிறைந்தவன். புகலிப்பிரான் - சீர்காழி நாதன். பொழில் - உலகம். அந்தக் கரணம் கடந்த கருப் பொருள் - மனம், வாக்கு, காயம் எல்லாவற்றையும் கடந்தவன். மூலதத்துவமாகிய பரம்பொருள்.

குறிப்பு - சகலதத்துவங்களும் இறைவன்தான். அப்படி இருக்க அத்தனைக்கும் அப்பால்ப்பட்டிருக்கிறான் என்று எப்படிச் சொல்வது. எந்த ஒரு வஷ்துக்கும் அப்பால்ப்பட்டவன் அல்ல இறைவன். ஒவ்வொரு வஷ்துவையும் 'நான், நான் என்று ஆட்டுகிறதே ஆணவம். அந்த ஆணவத்துக்குத்தான் அப்பால்பட்டவன் இறைவன். இது சம்பந்தமாக ரசிகமணி டி.கே.சி. விளக்கம் கொடுக்கிறபொழுது நம் வாழ்க்கையிலிருந்து பல அம்சங்களை எடுத்துக்காட்டுவார்கள். காட்டிக் கொண்டே இது சம்பந்தமாக மேல்நாட்டு அறிஞர்களும், உண்மையை

*"God has his centre every where but his circumference nowhere".*
அனுபவித்துச் சொல்லி இருப்பதாக குறிப்பிடுவார்கள்.

4) பக்தி இருந்தால்போதும். அது இல்லையே இது இல்லையே என்கிற கவலைக்கு இடம் இல்லை அங்கு.

காதலியின் நினைப்பு ஒன்று போதாதா. அன்பான நினைப்பு ஒன்று போதுமே, காதலியை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்திவிடும் அவளுடைய அருள்முறுவலே கண்முன் வந்து நிற்கும். அழைத்துவர தேர்ப்படை, யானைப் படை, குதிரைப் படை காலாட்படை என்று எதுவும் தேவை இல்லை.

சகாரா பாலைவனத்திலிருந்து நினைத்தாலும் ஊட்டி, கொடைக்கானலில் இருக்கிற காதலி கண்முன்வந்து நிற்பாள்.

மனசோடு நினைத்தால் போதும். கடவுளையும் அப்படித்தான். மனசோடு, பக்தியோடு நினைத்தால் போதும். அப்படியே கண்முன் வந்து நிற்பார்.

காட்டுவழி போகும்போது நினைத்தாலும் எதிரில் வருவார். கூடவே வருவார். அவரை நினைக்க ஏதாவது வேண்டும் என்றால் இரண்டு மூன்று காட்டு மலருக்கா பஞ்சம். மலரில்லை என்றால் பச்சிலை இருக்கத்தானே செய்யும்.

தண்ணீரும் தாராளமாகக் கிடைக்கும் கிடைக்கவில்லை என்றால் குற்றம் ஒன்றும் இல்லை. கைவசந்தானே இருக்கிறது மனம். அதுபோதும்.

*போதும் பெறாவிடில்*
*பச்சிலை உண்டு,*
*புனல் உண்டெங் கும்,*
*ஏதும் பெறாவிடில்*
*நெஞ்சுண்டால்த் தோணி*
*புரேசர், அரி*
*தாதும் பெறாத*
*அடித்தா மரை சென்று*
*சார்வதற் கே.* (20)

போது - புஷ்பம். புனல் - நீர். தோணிபுரம் - சீர்காழி. அரி - திருமால். தாதும் பெறாத அடித்தாமரை - நான் தான் காக்கும் கடவுள் என்கிற ஆணவத்தோடு தேடிய திருமாலுக்கு அணுவளவு கூட காட்சி கிடைக்கவில்லை இறைவனின் திருவருள் - அதாவது பாதகமலம். ஆனால் பக்தி போதும். அதைத் தேடிவரும் இறைவன் அருள்.

5) அற்புத ஒளிவீசும் அரியரத்தினம் மனம். ஆனால் அந்த ரத்தினத்தைப் பிரகாசிக்க எங்கே இடம் கொடுக்கிறது ஆணவம். சேறையும் சகதியையும் அந்தரத்தினத்தின் மேல் சதா அபிஷேகம் பண்ணிக் கொண்டிருக்கிறது ஆணவம். எதையும் நேராகப்பார்க்க முடியவில்லை மனதால். குருட்டுப் பார்வைதான். தலைகீழாகவே தெரிகிறது எல்லாம். அதனால் குழப்பம், பயம், என்று கலங்கியபடி இருக்கிறது மனம்.

எதை எடுத்தாலும் வெறுப்பு, கசப்புத்தான். இந்த மனம் அமைதி பெறவேண்டுமானால் ஆனந்தம் பெற வேண்டும் என்றால் ஆணவம் ஒழிய வேண்டும். அப்பொழுது தான் மனம் தகதக என்று ஒளிவீசும்.

★★★★★★★

கழுமலநாதர் (இறைவனின்) அருள் பெற்ற உடன் ஆணவம் ஓடிவிடும். உண்மை இன்னதென்று தெரியும். தெளிவு உண்டாகும். ஒரே ஆனந்தந்தான்.

எப்பொழுது கிடைக்கும் இறைவன் அருள் என்று சொல்லமுடியாது. நிச்சயம் கிடைக்கும். கிடைக்கும் வரை பொறுமையாக இருக்க வேண்டும். அடக்கமாக இருக்க வேண்டும். எல்லாம் இறைவன் செயல் என்கிற உண்மையை உணர்ச்சியைவிடக் கூடாது.

ஆணவம் நீங்க ஒளிபெற்றவர் பட்டிணத்தார் அவருடைய அனுபவம் இதோ

*ஒளிவந்த வாபொய்*
*மனத்திருள் நீங்க; என்*
*உள்ள வெள் ளம்*
*தெளிவந்த வா, வந்து*
*தித்தித்த வா, சிந்தி*
*யாததொ ரு*

ஒளிவந்தவா - அடடா/எப்படிக் கிடைத்தது இந்த அற்புத ஒளி. உள்ளவெள்ளம் - மனம் என்னும் ஆனந்தக் கடல். தெளிவந்தவா - தெளிந்து அமைதியாக இருக்கிறது. தித்தித்தவா - வெறுப்பு நீங்கிவிட்டது. விருப்பந்தான். கசப்பு இல்லை. ஒரே தித்திப்பு.

*களிவந்த வா, அன்பு*
*கைவந்த வா, கடை*
*சார்அமை யத்(து)*
*எளிவந்த வா,நம்*
*கழுமல வாணர்தம்*
*இன்அரு ளே.* (21)

---

களி - களிப்பு, பேருவகை. எளிவந்தவா - இவ்வளவும் தாமாகவே வந்தன. ஒன்றையும் தேடி அலையவில்லை. திடுதிப்பென்று குதித்துக் கொண்டு வந்து விட்டன. கழுமலவாணர்தம் இன்னருள் - (சீர்காழியில் எழுந்தருளியிருக்கும்) இறைவனின் திருவருள் என்றால் அப்படித்தான்.

குறிப்பு - குடும்பத்தோடு சாமி தரிசனம் செய்யப்போகிறோம். திருவண்ணாமலைக்கு. நம்முடன் வந்த பெண்டிரில் ஒரு பெண்ணை நம்மனையாளையே வாலிபன் ஒருவன் சுற்றிச் சுற்றி வந்தான். அவள் எங்கு போனாலும் அவளை அவன் பின்தொடர்வான். பளிச்சென்று அவள் முன் வருவான். அவள் முகத்தைப் பார்ப்பான். இது விபரம் தெரிந்தது

ஆவேசம் வந்தது நம்மிடம். ஒரு உருட்டுக் கட்டையை எடுத்துக் கொண்டு அவன் மண்டையைப் பிளக்க ஓடுகிறோம்.

வயதான பெரியவர் ஒருவர் அந்த வாலிபன் கையைப் பிடித்துக் கொண்டு எதிரே வருகிறார். பெரியவர் நமது உறவினர் தான். வேகமாக வந்த அந்தப் பெரியவர் "தம்பீ! இவன் உன்மைத்துனன். உன் மனைவி கூடப் பிறந்தவன் பர்மாவிலிருந்து அகதியாக வந்த பொழுது இவன் எப்படியோ தப்பிவிட்டான். எங்கெங்கோ போய் விட்டு இப்பொழுது இங்கே வந்தான். நம் ஊருக்கே போய் நம்பக்கத்து வீட்டில் விசாரித்துவிட்டு இங்கு வந்திருக்கிறான். எங்கெங்கோ உங்களைத் தேடி இருக்கிறான். அடையாளம் தெரியவில்லை. ஆனாலும் தன் தங்கையை, உன் மனைவியை ஒருவாறு தெரிந்து அடிக்கடி பார்த்திருக்கிறான். எப்படி விசாரிக்கிறது என்று தெரியாமல் வளைய வளைய வந்திருக்கிறான்." என்று பெரியவர் சொல்லச் சொல்ல உருட்டுக்கட்டை கையில் இருக்குமா? மனதில் தான் வெறுப்போ, கசப்போ இருக்குமா? அவனைக் கட்டி அணைத்து ஆனந்தக் கண்ணீரைக் கொட்டவைக்காதா அன்பு.

எதிர்பாராதவிதமாகப் பெரியவர் வந்து ஒளி கொடுத்தது போலவே இறைவனும் வந்து அருள் பாலிப்பான்.

*"கடை சார்அமையத்(து)*
*எளிவந்த வாநம்*
*கழுமல வாணர்தம்*
*இன்அரு ளே"*

அற்புதமான பாட்டு. இறைவனின் இன்னருள் தான் பாடலாக வந்திருக்கிறது.

# திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

1) தொல்லையிலிருந்து விடுபடவேண்டும் என்றால் அதற்குரிய வழி ஒன்றுதான். மாற்றுவழி என்று ஒன்று இல்லை.

நம் செயல் என்று எதுவும் இல்லை. எல்லாம் இறைவன் செயலே என்று நம்மை அவனிடம் அர்ப்பணிக்கிறது தான் அந்தவழி.

மிச்சம் கிச்சம் வைக்காமல் துப்புரவாக நம்மையே ஒப்படைத்துவிடவேண்டும்.

*"கண்என்றும், நம் தமக்கோர்*
*காப்பென்னும், கற்றிருக்கும்*
*எண்என்றும், மூல*
*எழுத்தென்றும், - ஒண்ணை*
*மருதவப்பா" என்றும்*
*வாழ்த்தாரேல் மற்றுக்*
*கருதஅப்பால் உண்டோ*
*கதி.* (22)

2) எல்லாம் இறைவன் செயல் என்பது தான் உண்மை. உண்மை என்று தெரிந்தால் அதன்படி நடக்க வேண்டியதுதானே.

தெரிந்துகொள்வதற்குத்தான் உண்மை. பின்பற்றுவதற்கு அல்ல என்றால் அது பித்தலாட்டம்.

---

கண் என்றும் - கண்ணும் அவன் தான். ஒளியும் அவன்தான். பார்க்கிறதே அவன் தான். காப்பென்றும் - நம்மை நாமா பாதுகாக்கிறோம். அதுவும் அவன் தான். எண் - கணக்கு. மூல எழுத்து - கலை, இலக்கியம், பண்பாடு. மொத்தத்தில் அறிவுத்தத்துவமே அவன்தான். மிச்சம் பூஜ்யந்தான். இப்படித் தெளிந்து நீயே (மருதஅப்பா) துணை என்று ஒப்படைத்துவிட வேண்டும் இறைவனிடம். ஒப்படைக்காதபட்சத்தில் வேறு கதி என்ன இருக்கிறது.

ஒண்ணை - பிரகாசமான, ஒளிமயமான.

பித்தலாட்டம் இருக்கும் வரை தொல்லை இருக்கும்.

பட்டிணத்தார் உண்மையைக் கண்டவர். அதன் வழிநடப்பவர். மருதவாணனிடம் தன்னை முழுக்க முழுக்க ஒப்படைத்துவிட்டார். பிறகு தொல்லைக்கு ஏது இடம்.

*பிறிந்தேன் நரகம்;*
*பிறவாத வண்ணம்*
*அறிந்தேன், அநங்கவேள்*
*அம்பில்ச் - செறிந்து*
*பொருதவட்ட விற்பிழைத்துப்*
*போந்தேன்; புராணன்*
*மருதவட்டம் தன்னுளே*
*வந்து.* (23)

3) ''எல்லாம் இறைவன் செயல். நம் செயல் என்று ஒன்றும் இல்லை'' இது தான் உண்மை. இந்த உண்மை உணர்ச்சியாக விளையவேண்டும். விளைய விளைய ஆடலரசே, அம்பலத்தரசே, அம்மையப்பா என்று சொற்களாக வாயிலிருந்து வரும். உரத்த குரலிலேயே வரும்.

ஆனால் ஒன்று. அப்படி எல்லாம் சத்தம் போட்டு உரத்த குரலில் வரவேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. எல்லாம் ஈசன் செயல் என்று சத்தம் போட்டுச் சொல்வதுதான் உண்மை யான பக்தி, ஞானம் என்று இல்லை.

உணர்ச்சியோடு நினைத்தாலே போதும். மனதுக்குள் நினைத்தாலே போதும்.

பாவங்கள் அத்தனையும் சுக்கல் சுக்கலாய் நொறுங்கிவிடும். பிறவிப் பிணியே அறுபட்டுப் போகும்.

---

அநங்கவேள் அம்பில் செறிந்து - மன்மதபாணத்தைக் கோத்து நிறைத்து. பொருத வட்டவில் பிழைத்து போதேன் - குறிபார்த்து அடிக்க வில்லை வளைத்து வீசும் காமபாணத்திலிருந்து தப்பினேன். எப்படி? புராணன் - எல்லாவற்றுக்கும் ஆதிநாதனாகிய மருதவாணனின். வட்டம் தன்னுள் வந்து - அருள் மயத்தில் கலந்து தான்.

*வழிபிழைத்து நாம் எலாம்*
*வந்தவா செய்து*
*பழி இழைத்த பாவங்கள்*
*எல்லாம் - பொழில்சூழ்*
*மருதிடத்தாள் என்றொருகால்*
*வாய்திறக்க வேண்டா, -*
*கருதிடத்தாம் நில்லா*
*கரந்து.* (24)

*4)* நினைத்தால் போதும், - ஒருமை உணர்ச்சியோடு நினைத்தாலே போதும் என்று சொல்வது எளிதாகத் தோன்றும். ஆனால் அப்படி எல்லாம் நினைக்க முடிகிறதா நம்மால். நினைக்க விடுகிறதா ஆணவம். உச்சி முதல் உள்ளங்கால் வரை பொன்விலங்கிட்டல்லவா பூட்டி இருக்கிறது ஆணவம் நம்மை.

சாக்கடையில் விழுந்து விழுந்து எழுவதையே ஆனந்தமாக - வாழ்க்கையாகக் கொண்டிருக்கிறோம் நாம். அப்படி இருக்க நம்மால் முடிகிற காரியமா அது.

முதலில் ஆணவத்தை அறுத்தெறிய வேண்டும். அதற்கு அவன் அருளை நாடவேண்டும்.

*இன்றிருந்து நாளை*
*இறக்கும் தொழில்உடைய*
*புன்தலைய மாக்கள்*
*புகழ்வரோற - வென்றிமழு*
*வாளுடையாள், தெய்வ*
*மருதுடையாள், - நாயேனை*
*ஆளுடையான் செம்பொன்*
*அடி.* (25)

---

வழிபிழைத்து - நெறிமுறைதவறி. வந்தவா செய்து - மனம் போனபடி செயல்பட்டு. பழி இழைத்த - பழியை உண்டாக்கிய. கரு திடத்தாம் நில்லா கரந்து - நினைத்தால் போதும். இறைவனை உள்ளுணர்வோடு நினைத்தமாத்திரத்தில் பறந்து ஓடிவிடும் பாவம்.

புன்தலையமாக்கள் - இழிவான அற்பப் பிராணிகள் போன்றவர்கள். செம்பொன் அடி - திருவடி நிழலாகிய திருவருளை.

5) நான் என்பதை அறவே ஒழித்துக் கட்டி உண்மையோடு ஒன்றி நிற்கிறவர்களுக்கல்லவா திருவருள் இன்னதென்று தெரியும். இந்த உண்மையை அருமையாய் விளக்குகிறது தமிழ். விஷயம் பெரிய விஷயம். அது உணர்ச்சியோடு வெளிப்படுகிற பொழுது எந்த மொழியானாலும் அதை அலங்காரப்படுத்தவே செய்யும்.

*Those who are one with the infinite.*

இங்கிலீஷ்தான். ஆனாலும் சொல்லச் சொல்ல ரசமாகத் தானே இருக்கிறது. ஆனாலும் பாட்டாகுமா அது''. இன்றிருந்து நாளை'' என்னும் பட்டிணத்தார் பாட்டாகுமா அது.

எதற்கு எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டும். பசித்தால் சாப்பிடவேண்டும். சாப்பிடுவதைச் செய்யாமல் சந்தனம் பூசுகிறேன், பன்னீரில் குளிக்கிறேன் என்றால் பசி தீராது. உணவருந்தினால்தான் தீரும்பசி. அதைவிட்டுவிட்டு, பசியின்பிடியிலிருந்து விடுபட விமானம் ஏறி டெல்லி போகிறேன், லண்டன் போகிறேன் என்று பறந்து சென்றாலும் விடுமா பசி.

இரண்டுகவளப் பருக்கை போதும் பசியாற. எவ்வளவு எளிது அது. அதைச் செய்வது தான் வழி. புறம்பாக எது எது செய்தாலும் உதவாது.

*******

இனி, தொல்லைகளிலிருந்து விடுபடவேண்டும். நிம்மதி வேண்டும் என்றால் ஆணவத்தை அதன் வேகத்தை அகற்றவேண்டும். அதற்கு வழி பக்தி தான். கடவுளை நம்புவது தான். நம்பிவழிபடுவது தான்.

எல்லோருக்கும் உகந்த காரியந்தான், லகுவானது தான் வழிபாடு. அதைச் செய்யாமல் வேறு எதைச் செய்தாலும் பிரயோசனம் இல்லை.

சமய வழிபாடு எத்தனை எளிது, எத்தனை இனிது என்பதை உணர்ந்து அனுபவித்துச் சொல்கிறார் பட்டிணத்தார்.

*காணீர் கதிஒன்றும்,*
*கல்லீர் எழுத்தஞ்சும்,*
*வல்லவண் ணம்*
*பேணீர் திருப்பணி,*
*பேசீர் அவள்புகழ்,*
*ஆசைப்பட் டுப்*
*பூணீர் திருக்கண்*
*மணிவடம், வெண்ணீறு*
*புசுகில் லீர்;*
*வீணீர் எளிதோ*
*மருதப் பிரன்கழல்*
*மேவுதற் கே.* (26)

6) தமிழ்நாடு சட்டமன்றத்துக்குத் தேர்தல் வருகிறது. மொத்தம் இருநூற்று முப்பது தொகுதிகள் என்று வைத்துக் கொள்வோம். அதில் குறிப்பிட்ட ஒரு தொகுதியில் வேட்பாளராக நிற்கிறோம் நாம். நம்மை எதிர்த்து எட்டு ஒன்பது பேர் போட்டி இடுகிறார்கள்.

எல்லோரும் பிரச்சாரம் செய்கிறார்கள். நாமும் பிரச்சாரம் செய்கிறோம். ஒவ்வொருவரும் தாங்களே சிறந்தவர்கள் என்கிறார்கள். உண்மையானவர்கள் என்கிறார்கள். மற்றவர்களை மட்டமானவர்கள் என்கிறார்கள். பொய்யர்கள், திருடர்கள் என்று கூட சொல்கிறார்கள்.

நாமும் அப்படியே சொல்கிறோம். நம்மைப் பற்றிப் பிறரும் அப்ப்டியே சொல்கிறார்கள்.

---

*காணீர் கதி ஒன்றும் - வழி தெரியாமல் அலைகிறீர்களே. அஞ்செழுத்து - நமசிவாய. கல்லீர் - சொல்லமாட்டேன் என்று சாதிக்கிறீர்களே. திருக்கண் மணி வடம் - உருத்திராட்சம். வீணீர் - விருதாவாய்ச்சுற்றி அலைகிறீர்களே. எளிதோ மருதப் பிரான்கழல் - செய்ய வேண்டியதைச் செய்யாமல் வீண் பொழுது போக்கினால் ஆணவம் கரையுமா? அவன் அருள் கிடைக்குமா? யோசித்துப் பாருங்கள்.*

*குறிப்பு : எளிமையும் தூய்மையும் கைகோர்த்து விளையாடுகின்றன் செய்யுளில்.*

ஆனால் ஒருவரும் சட்டமன்ற உறுப்பினர் பதவியை, குறைத்தோ, தாழ்த்தியோ பேசுவதில்லை. அதை உயர்த்தியே, வானளாவப் புகழ்ந்தே பேசுகிறார்கள் அத்தனை பேரும். நாமும் அப்படியே.

★★★★★★★

பக்தி என்று ஒன்று. கடவுள் நம்பிக்கை தான் பக்தி. கடவுள் நம்பிக்கை என்கிற பக்தி ஒன்றை வைத்து மதம் வருகிறது. அது ஒன்று, இரண்டு, பல என்று பெருகுகுகிறது. அப்படிப் பெருகிய மதம் ஒவ்வொன்றும் மற்ற மதத்தைத் தாக்குகிறது. நான் பின்பற்றும் மதமே உண்மையானது, சிறந்தது. மற்ற மதம் எல்லாம் பித்தலாட்டம், ஏமாற்றுக் கச்சவடம் என்று இழித்தும் பழித்தும் பேசுகிறது.

கடவுளைப் பற்றி ஒரு மதமும் குறை கூறுவதில்லை. கடவுள் பெயரைச் சொல்லிக் களத்தில் இறங்குகிற மதங்கள் தான் ஒன்றை ஒன்று தாக்குகின்றன. கடித்துக் குதறிகின்றன.

மதம் எத்தனை யோஇருக்கலாம். ஆனால் கடவுள் ஒருவர் தான். அவர் பல்வேறு வடிவங்களில், அவரவர் விரும்பிய வடிவங்களில் தோற்றம் அளிப்பார். ஆனாலும் கடவுள் ஒருவர்தான்.

திருவிடை மருதூரில் கோயில் கொண்டிருக்கும் மகாலிங்கப் பெருமானை வழிபடுகிறார் பட்டிணத்தார்.

மகாலிங்கப் பெருமானே முழுமுதல்க் கடவுள் என்று வழிபடுகிறார் பட்டினத்தார். மதங்களைப் பற்றிக் கவலைப் படவில்லை பட்டிணத்தார். தெளிந்த மனதோடு உறுதியாகவே வழிபடுகிறார். கடவுள் ஒருவரே; அவரே மகாலிங்கப் பெருமான் என்று வழிபடுகிறார்.

அவர் வழிபாடு வீண்போகவில்லை. எங்கும் நிறைந்த பரம்பொருளே மகாலிங்கப் பெருமானாகக் காட்சிகொடுக்கிறது பட்டிணத்தாருக்கு.

அமைதியாக, நிம்மதியாக இருக்கிறது பட்டினத்தாருக்கு.

*அன்றென்றும் ஆம்என்றும்,*
*ஆறு சமயங்கள்*
*ஒன்றொன்றோ(டு) ஒவ்வா(து)*
*உணர்த்தாலும் - என்றும்*
*ஒருதனையே நோக்குவார்*
*உள்ளத்(து) இருக்கும்*
*மருதனையே நோக்கி*
*வரும்.* (27)

7) சொக்கலிங்க மூர்த்தி, நடராஜ மூர்த்தி, மகாலிங்கம், ராமலிங்கம், அண்ணாமலையார், கைலாய நாதர் எல்லாம் பரம்பொருளின் அடையாளந்தான். அடையாளத்தைப் பரம்பொருள் என்று பாவிக்கப் பாவிக்கம் அடையாளமே பரம்பொருளாகிவிடுகிறது.

இறைவ (சிவபெருமா)னுடைய காரியம் ஒவ்வொன்றும் விசித்திரமாக இருக்கும். எல்லோரும் பூமாலை, பொன்மாலை என்று போட்டுக்கொள்வார்கள். எலும்பை மாலையாக யாராவது கழுத்தில் போட்டு மார்பில் தொங்கவிடுவார்களா? யாரும் விரும்ப மாட்டார்கள் (ஒருவர் கருதா) எலும்பு மாலையை. ஆனால் அவர் போட்டு ஆடுவார். அதுமட்டுமா நஞ்சையே அள்ளி வாயில் போடுவார். பிறகு அதுகண்டத்துக்குக் கீழே இறங்கிவிடாதபடி கழுத்தில் வைத்து அடக்கி கொள்வார்.

இப்படி எல்லாம் கூத்தடிக்கிற பெருமாள் திருவிடை மருதூரில் எழுந்தருளி இருக்கிற மகாலிங்க மூர்த்திதான்.

மகாலிங்க மூர்த்தியே உண்மை. நாமாவது, ஒன்றாவது. எல்லாம் அவன் அருளே என்று உணர்ந்து ஒன்றுகிறவர்களுக்கு ஒரு குறையும் இல்லை.

தேவையானதெல்லாம் அவர்களைத் தேடிவரும்.

ஒருவர்

*கருதா என்(பு) ஆர்க்கும்*
*கறைமிடற்றாய்! தொல்லை*
*மருதா! என்பார்க்கு*
*வரும்.*

எதுஎது தேவையோ, அது அது எல்லாம் அவர்களைத் தேடிவரும்

*பொருளும் குலனும்*
*புகழும் திறனும்*
*அருளும் அறிவும்*
*அனைத்தும் - ஒருவர்*
*கருதாஎன்(பு) ஆர்க்கும்*
*கறைமிடற்றாய் தொல்லை*
*மருதாஎன் பார்க்கு*
*வம்.* (28)

---

குலன் - ஒழுக்கம். திறன் - வெற்றி. அருள் - அருள் வாக்கு. அறிவு - மெய்ஞ்ஞானம், பக்தி. ஒருவர் கருதா என்பு ஆர்க்கும் - ஒருவரும் விரும்பாத எலும்பை மாலை கட்டிக் கழுத்தில் போட்டுக் கொள்ளும் பெருமானே. கறை மிடற்றாய் - நஞ்சுண்ட கண்டனே. தொல்லை மருதா - மகாலிங்கப்பெருமானே, என்று பக்தியில் தோய்பவர்களுக்கு எல்லாம் உண்டு. ஒரு குறையும் இல்லை.

# பட்டினத்துப் பிள்ளையார் ஏகம்பம் உடையார் திருவந்தாதி

1) மனிதனாகப் பிறந்தாலே பிரச்சனைதான். பிரச்சனைகளில் எல்லாம் பெரிய பிரச்சனை பிழப்புத்தான். பிழைப்பை நாடித்தான் ஒவ்வொரு காயையும் (செஷ் ஆட்டத்தில் நகர்த்துவதுபோல்) நகர்த்துகிறான் மனிதன். சோறு, துணி, வீடுவாசல் குடும்பம், இதை நாடியே ஓடுகிறான். அதற்காக எத்தனையோ வேஷம் போடுகிறான் மனிதன்.

சோதிடன், வைத்தியன், பொறியாளன், வழக்கறிஞன், கணக்குத் தணிக்கையாளன் அமைச்சர், அதிகாரி, வணிகன், உழவன், ஆசிரியன், தொழிலாளி, முதலாளி என்று எத்தனை எத்தனை வேஷம். பக்தனாகவும், இறைத்தொண்டாற்றும் தொண்டனாகவும் கூட வேஷம்போடுகிறான்.

எல்லாம் பிழைப்புக்காகப் போடுகிற வேஷந்தான்.

உண்மையை உணர்ந்து அதில் ஒன்றித்திளைக்க வேண்டும் என்கிற எண்ணம் துளிக்கூட இல்லை மனிதனிடம்.

ஏதோ லட்சத்தில் ஒருவர், பத்துலட்சத்தில் ஒருவர் மெய்த்தொண்டராக இருக்கலாம். அதாவது எல்லாம் ஈசன் செயல் என்கிற உண்மையான பக்தியில் தோய்பவராக இருக்கலாம். இன்னும் ஒன்றிரண்டு பேர் கோவில், குளம் (தீர்த்தம்) மூர்த்தி என்று வழிபாட்டில் திளைப்பவராக இருக்கலாம்.

மற்றவர்கள் தொண்டெல்லாம் பொய்த்தொண்டாகவே இருக்கிறது. சோற்றுக்கும், துணிக்கும் சலாம் போடுகிற தொண்டாகவே இருக்கிறது.

மற்றவர் காரியத்தைத் தன் காரியமாகப் பாவித்துச் சொல்கிறார் பட்டிணத்தார்.

*மெய்த்தொண்டர் செல்லும்*
*நெறியறி யேன்மிக*
*நற்பணி செய்*
*கைத்தொண்டர் தம்திரு*
*நல்த்தொண்(டு) உவந்திலன் -*
*உண்பதற் காம்*
*பொய்த்தொண்ட னேன்பணி*
*சொள்ளுதி யோகச்சி*
*போந்தவ னே.* (29)

2) சுற்றி உள்ள மனிதர்களைப் பார்க்கிறார் பட்டிணத்தார். அவர்களுடைய தவறை தன்தவறாக ஏற்று கச்சி ஏகம்பநாதரிடமே பொறுத்தருள வேண்டுகிறார். அவ்வளவு பரிவு மக்களிடம் பட்டிணத்துப் பிள்ளையாருக்கு. அதுதானே பக்தி.

முதலில் தன்னை வைத்து மற்றவர்களைப் பார்த்தார் பட்டிணத்தார். பரிதாபமாக இருந்தது அவர்களின் நிலை. அதைத் தன்னுடைய நிலையாக ஏற்று இறைவனிடம் முறையிட்டார் பட்டிணத்தார்.

அப்படி முறையிட்டபட்டிணத்தாரே மற்றவர்களை வைத்துத் தன்னைப்பார்த்தார், பெருமிதம் உண்டாகிவிட்டது பட்டிணத்தாருக்கு, பெருமிதத்தில் எக்களிப்பே வந்தது அவருக்கு.

எக்களிப்பில் இறைவனிடம், கச்சிஏம்பம் உடையாரிடமே சொல்கிறார்.

பெருமானே, எனக்கு என்ன குறைவைத்திருக்கிறீர். ஆனந்தமாய் இருக்கிறேன் நான். அப்படி வைத்திருக்கிறீர் என்னை.

உம்முடைய அடியார்களுக்கு அடிமை செய்ய எனக்கு வழிகாட்டிவிட்டீர். இப்படி ஒரு வாய்ப்புப் பெறவழி இருந்தும் அது பற்றிய நினைப்பே இல்லாமல் திரிகிறவர்களை நினைத்தால் சிரிப்பாய் வருகிறது எனக்கு.

---

மெய்த்தொண்டு - எல்லாம் இறைவன் செயல் என்று அர்ப்பணித்தல்.
கைத்தொண்டு - வழிபாடு.

உம்மை நினைக்க நினைக்க மனதுக்கு எவ்வளவு சுகம். பாச பந்தங்களை எல்லாம் கணுக்கணுவாக முறித்தெறிந்துவிடுகிறது உம்முடைய திருநாமம்

*தரித்தேன் மனத்துன்*
*திகழ்தரு நாமம்,*
*தடம்பொழில் வாய்*
*வரித்தேன் முரல்கச்சி*
*ஏகம்ப னே! என்தன்*
*வல்வினை யை*
*அரித்தேன், நினைப்பணி*
*யாதவர் ஏழ்மை*
*கண்(டு)அவ ரைச்*
*சிரித்தேன், உளக்கடி*
*யார்அடி பூணத்*
*தெளிந்தன னே.* (30)

3) மேலும் மேலும் பொங்குகிறது ஆனந்தம் பட்டிணத் தாருக்கு. உள்ளம், ஊன் எல்லாம் பூவாய்க் குழைகிறது. ஆனந்தக்கண்ணீராய்க் கரைகிறது. உணர்ச்சிமயமாகக் கொட்டு கிறார் மேலும் மேலும் ஆனந்தத்தை.

கச்சி ஏகம்பம் உடையாரிடந்தான். நேருக்கு நேராக அவன் முன்நின்றுதான்.

''மன்பதைக்கூட்டத்தின் ஆணவவெறிச் செயல் என்கிற நஞ்சையே ஏற்று அருள்பாவிக்கிற அண்ணலே! ஆயிரம் தலைகளோடு கூடிய ஆதிசேசன் என்னும் பெரும்பாம்பையே கச்சாக இறுகக் கட்டுகிறவனே, சகலசக்திகளுக்கும் ஆதாரமாகிய காளை (மால்விடை)யையே வாகனமாகக் கொண்டு ஏறிவருபவனே, கச்சி ஏகம்பனே! வேறு என்ன வேண்டும் எனக்கு.

---

தடம் பொழில்வாய் - விசாலமான தோட்டங்களில், பூந்தோட்டங்களில் வரித்தேன் - வண்டு. முரல் - இசைபாடும். அரித்தேன் - தேய்த்துத் தேய்த்து அழித்துவிட்டேன். ஏழ்மை - அறியாமை.

உன் திருவருளையே (திருவடி நிழலையே) வழிபடப் பெற்றுவிட்டேன் இனிக்க இனிக்க உன் திருப்புகழையே சொல்லிச் சொல்லி மகிழ்கிறேன். கச்சியம்பதியையே வாழ்விடமாகப் பெற்றுவிட்டேன். வேறு என்ன குறை எனக்கு.

*பெற்றுகந் தேன்என்றும்*
*அர்ச்சனை செய்ய;*
*பெருகு நின்சீர்*
*கற்றுகந் தேன்; என்*
*கருத்தினி தாக்கச்சி*
*ஏகம்பத் தின்*
*பற்றுகந் தேன்; நஞ்(சு)*
*உகந்தவ னேபட*
*நாகக்கச் சின்*
*சுற்றுகந் தேவிடை*
*மேல்வரும் நின்தன்*
*துணையடி யே,-* (31)

4) அதில் வழிபாட்டில் தான் எவ்வளவோ இன்பம் பட்டிணத்தாருக்கு. பேரின்பம் எனறே சொல்லலாம் அவர் பெற்ற இன்பத்தை.

இனி, ஆனந்தப் பெருக்கில் தம்மைப் பார்த்தே தமக்குத் தாமே சொல்லி இன்புறுகிறார் பட்டிணத்துப் பிள்ளையார்.

*******

என்றும் அர்ச்சனை செய்ய பெற்று உகந்தேன் - வணங்கி வழிபட கிடைத்தது யோகம் எனக்கு. உகந்தேன் - இன்புற்றேன். ஏகம்பத்தின் பற்று - ஏகம்பமுடையார்மேல் கொண்ட காதல், பக்தி. நாகக் கச்சின் சுற்று உகந்து - உடையை இறுக்கிக் கட்டும் கச்சையாக பெரிய பாம்பை, நட்சத்திரக் கூட்டமாகிய அரவையே சுற்றிக் கட்டும் பெருமானே. அதைப் பார்த்து மகிழ்ந்து காளை மேல் உல்லாசமாக ஏறிவரும் பெருமானே. துணையடி - திருப்பாதம் இரண்டும்

ஏகம் பநாதரின் எதிரில் நின்று, நேருக்கு நேராக நின்றே பட்டினத்தார் அர்ச்சனை செய்தார். ஏகம்பம் உடையாரின் கொடை, வள்ளள்மை, கருணை, அன்பு இவற்றை மந்திரங்களாகச் சொல்லி அர்ச்சித்தார். கேட்கக் கேட்க ஏகம்பம் உடையார் உச்சி குளிர்ந்தது. தலையை ஆட்டினார். புன்முறுவல் பூத்தார்.

எங்கும் ஒரு தன்மைத் தாய் ஒரே சக்திமயமாய் இருந்தது பாவெளி. அதுவே பரம்பொருள்.

எல்லா உலகுமாக உருவெடுத்தது அப்பரம்பொருள். ஆன்மதத்துவம், ஜடதத்துவம், உணர்ச்சி தத்துவம் எல்லாம் அது தான். புல்லிலிருந்து மனிதர் வரை எல்லாம் பரம்பொருளின் தோற்றந்தான்.

மனிதர்களாகிய நாம் எல்லோரும் பரம்பொருளின் தோற்றம்தான். நாம் எல்லோரும் கண்டுகளிக்க மூர்த்தியாக அங்கங்கே எழுந்தருளி இருப்பதும் அதே பரம்பொருள் தான். மூர்த்தியாக எழுந்தருளியது இறைவனின் அவதாரந்தான். நமக்காக எடுத்த திருஅவதாரந்தான்.

*காட்டிவைத் தார்தமை*
*யாம்கடிப் பூப்பெய்ய,-*

மூர்தியாக அவர் எழுந்தருளிக் காட்டியதால் நமக்கு ஈடுபாடு வந்தது. நம்மிடம் அன்பு ஊறியது.

*காதல் வெள்ளம்*
*ஈட்டிவைத் தார்.*

அதுமட்டுமா? பரவெளியாக இருக்கிற பொழுது நாம் இல்லை. நம்மிடம் ஒன்றும் இல்லை. ஒன்றும் இல்லாத நம்மை கண்எண்றும், மூக்கென்றும், காலென்றும், கையென்றும் சேர்த்து உருப்படியாக்கியது பரம் பொருள். அந்தப் பரம் பொருள் தான் கச்சியம் பதியில் ஏகம்பம் உடையாராக எழுந்தருளி இருக்கிறார். மூர்த்தியாய் எழுந்தருளி இருக்கிறார். மலர்தூவி நாம் வழிபடவும், நம் உள்ளம் பக்தியாய் மலரவும் எழுந்தருளி இருக்கிறார்.

*ஈட்டிவைத் தார்கச்சி*
*ஏகம்பர் ஏதும்*
*இலாதஎம் மைப்*
*பூடிவைத். தார்*

தேகம், ஆன்மா, உணர்ச்சி என்று பூட்டி வைத்ததோடு விட்டாரா நம்மை.

நீ தான் எனக்கேற்ற தோழன். பாடு என் மீது. ஒன்றல்ல இரண்டல்ல. நூறு பாட்டு (பதிற்றுப் பத்து) பாடு என்று முடுக்கிவிட்டார்.

இவ்வளவும் செய்த பெருமானை மறக்கமுடியுமா? நினைந்து நினைந்து உருக வேண்டும். வாழ்த்த வேண்டும், வணங்கவேண்டும்.

*காட்டிவைத் தார்தம்மை*
*யாம்கடிப் பூப்பெய்ய, -*
*காதல்வெள் ளம்*
*ஈட்டிவைத் தார்,கச்சி*
*ஏகம்பர் ஏதும்*
*இலாதஎம் மைப்*
*பூட்டிவைத் தார்தமக்(கு)*
*ஆம் அன்பன் என்று,*
*பதிற்றுப் பத்தும்*
*பாட்டிவைத் தார், பர*
*வித்தொழு வாம் அவர்*
*பாதங்க ளே.* (32)

பரவெளியாயுள்ளது மூர்த்தியாய் வந்தது. மூர்த்தியாய் வந்த பரவெளி தன்னை இனம் காட்ட என்னை உருவாக்கியது.

'தன்னைத் தானே அர்ச்சனை செய்து கொள்ள அத்தனை விருப்பம். அதற்காக எத்தனை நாடகம்' என்பது விசயம்.

---

கடி - மணம். ஈட்டி - பெருக்கி. பதிற்றுப்பத்து - பத்துப்பத்து. பாட்டிவைத்தார் - பாடும்படி செய்தார். பாதம் - திருவடி நிழல் அதாவது திருவருள்.

# திருஒற்றியூர் ஒருபா ஒருபது

1) எங்கும் நிறைந்த பரம்பொருளின் அடையாளந்தான் மூர்த்தி. அடையாளம் மனதோடு ஒட்ட ஒட்ட, அடையாளத்தின் ஆதிக்கம் பெருகப் பெருக அடையாளம் என்பது போய் (மறைந்து) விடுகிறது. உண்மையாகிவிடுகிறது அடையாளம்.

மூர்த்தியே பரம்பொருளாகிறது. இனி நடராஜப் பெருமானாகிய மூர்த்தி - பரம் பொருளின் அடையாளம்.

பரம்பொருளின் வியாபகத்தைக் சுட்டிக்காட்ட நட்சத்திரக் குவியலையே கொன்றை மலர் மாலையாகவும் அரவாபரணமாகவும் காட்டி இருக்கிறது. அப்படியே மேகமும், மின்னலும் அவருக்குச் சடை என்றும், அண்டமுகடே அவருக்குத் தலை என்றும் அடையாளமாகக் காட்டி இருக்கிறது.

பரம்பொருளின் வியாபகத்தைக் காட்டும் அடையாளமே சடை, மாலை முதலியன. பாம்பு, மேகம் என்பன. ஆனாலும் அடையாளத்தின் ஆதிக்கம் கூடக்கூட அடையாளமே நிலைத்து நிற்கின்றது. சடை, மாலை, பாம்பு, மேகம் என்பவையே நம் மனதில் நிற்கின்றன.

இனி, பூமாதேவியின் மேகலாபரண்ம் கடல். மேகலாபரணத்தின் முகப்பு திருவுற்றியூர். கடலுக்குள்ளிருந்து முளைத்து வந்த இடம் போல இருக்கிறது திருஒற்றியூர். ஒற்றியூர் தியாகேசப் பெருமானிடம் பட்டிணத்தார் இது விபரம் முழுவதையும் சொல்கிறார்.

*இருநில மடந்தை*
*இயல்பினில் உடுத்த*
*பொருகடல் மேகலை*
*முகம்எனப் பொலிந்த*
*ஒற்றி மாநகர்*
*உடையோய்! உருவினை,*

---

இருநீலமடந்தை - பூ-மகள், பூமாதேவி. இயல்பினில் உடுத்த பொருகடல் மேகலை - உடுத்த உடை கடல். அலைவீசும் கடல் தான் பூமகளின் ஆடை. அந்த ஆடையை அவள் வரிந்து வரிந்து கட்டிய முறைதான் மேகலை.

*பெற்றி ஒன்றாப்*
*பெற்றோர் யாரே!*
*மின்னின் பிறக்கம்*
*துன்னும்நின் சடையே;*
*மன்னிய அண்டம்நின்*
*சென்னியின் பொலிவே*
*தண்ணொளி ஆரம்*
*தாரா கணமே;*
*வானவர் முதலா*
*மன்னுயிர் பரந்த*
*ஊனம்இல் ஞானத்*
*தொகுநின் உணர்வே. (33)*

*நீ தான் ஆன்மதத்துவம். நீ தான் உணர்ச்சி.*
*நீ தான் பிரபஞ்சம்.*

உன்னைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

---

மேகலையின் (முகம்) முகப்பு திருவுற்றியூர். கடலை ஒட்டிய தோணித்துறைபோல் இருக்கிறது ஊரும் கோவிலும். உடையோய் - ஒற்றியூர் நாயகனே. உருவிளை - உன் திருமேனியை என்னென்று சொல்ல. பெற்றி ஒன்றாகப் பெற்றோர் யார் - உன் உருவம் போல பெருமைமிக்க உருவம் யாருக்கும் இல்லை மின்னின் பிறக்கம் - மேகம். துன்னும் - பொருந்தும். சென்னி - தலை. ஆரம் - மாலை. தாரா கணம் - நட்சத்திரக் கூட்டம். வாளவர் முதலா - ஞானியர் முதல். மன்னுயிர் பரந்த - உயிரினம் முழுவதும் நிறைந்திருக்கிற. ஊனம் இல் ஞானத் தொகுதி - பழுதில்லாத அறிவுத்தத்துவம் முழுவதும். நின் உணர்வு - உன்னுடைய மெய்யறிவின் மயந்தான்.

குறிப்பு : பரம்பொருள் அதாவது கடவுள்த்தத்துவம் மனதில் நிற்கவேண்டும் என்றால் தலை, மார்பு, முடி (சடை) கால், கை என்று உருவம் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கிற அவயவம் ஒவ்வொன்றும் சர்வ வியாபகத்தைக் காட்ட வேண்டும். அண்டமுகடு, ஆகாய கங்கை, நட்சத்திரக்கடல் என்றெல்லாம் இணைத்துச் சொல்லவேண்டும். அரவம், கொன்றை மலர், மேகம், பிறைச் சந்திரன் என்பதெல்லாம் சர்வ வியாபகத்தைச் சுட்டிக்காட்டுகிற அடையாளங்கள்தான். பரம்பொருளுக்கு எப்படி மூர்த்தி அடையாளமோ அப்படியே வியாபகத்துக்கு நட்சத்திக்கடல் பாம்பு முதலியன அடையாளம். உண்மையை விட அடையாளத்துக்கு அதிகாரம் கூடுதலாகவே இருக்கிறது.

# நம்பியாண்டார் நம்பி கோயில்த்திருப்பண்ணியர் விருத்தம்

கயிறு சுற்றிய பம்பரத்தைச் சுழற்றி லாவகமாக வீசிகிறான் பையன். கிறுகிறு என்று பம்பரம் தரையில் சுழல்கிறது. வட்டமடிக்கிறது. 'பம்' என்று இரைகிறது. இரைந்து கொண்டே சுற்றிச் சுற்றி வருகிறது. பார்ப்பதற்கு வியப்பாகத்தானே இருக்கும்.

குழந்தை ஒன்று பார்க்கிறது பம்பரத்தின் ஆட்டத்தை. வட்டத்தைப் பெருக்கியபடியே வலசாரி, இடசாரி என்று சுற்றிச் சுற்றி ஆடுகிற பம்பரத்தையே பார்க்கிறது குழந்தை. தன்னை மறந்தே பார்க்கிறது குழந்தை. பார்க்கிறோம் என்னும் நினைப்பே இல்லாமல் பார்க்கிறது குழந்தை. தன்னை மறந்து, ஏன், தன்னையே இழந்து பம்பரத்தோடு பம்பரமாக ஒன்றுகிறது குழந்தை. ஒன்றிவிட்டது என்றே சொல்லலாம் குழந்தையை.

நான் என்கிற (ஆணவ) நினைப்பில்லாமல் இன்னொன்றோடு கலந்து மருவி ஒன்ற வேண்டும். அப்படி ஒன்றுவது தான் இறைவன் சந்நிதானம். ஞானம், பக்தி, உண்மை என்பதெல்லாம் அதுதான்.

★★★★★★★

இனி, திடுதிப் பெள்றுவிருந்தினர்கள். வருகிறார்கள் அதுவும் பகல்பதினோரு மணிக்கு மேல். விருந்தினர்கள் முக்கியமானவர்கள்.

ஒக்கலில் இருக்கிற குழந்தையை இறக்கி பக்கத்து வீட்டில் கொண்டு போய் விடுகிறாள் பெண். அவசரம் அவசரமாக வீட்டிற்கு வருகிறாள். அடுப்பைப் பற்ற வைக்கிறாள். உலையை ஏற்றுகிறாள். காய்களை நறுக்குகிறாள், புளியைக் கரைக்கிறாள். எண்ணெய்ச் சட்டியைக் காயவைக்கிறாள். சாதம், குழம்பு, பருப்பு, தொடுகறி, அப்பளம் எல்லாம் தயார்.

அடுப்பு, புளி, காய், பொடி, பருப்பு, நெய், ரசம், சாம்பார், சாதம், தயிர் என்று உணவோடு ஒன்றிவிடுகிறாள் பெண். விருந்தினர், அவர்கள் பசி, அமுது படைத்தல், அவர்கள் திருப்தி

இவையே பெண்ணின் கண்முன் நிற்கின்றன. மனதின் முன் நிற்கின்றன. அப்படியே அவற்றோடு ஒன்றிவிடுகிறாள். தன்னை மறந்து ஒன்றிவிடுகிறாள் பெண். அதுவும் இறைவனின் சந்நிதானந்தான்.

★★★★★★★

மும்பை நோக்கிச் செல்கிறது ரெயில் துரிதவண்டி. ஏறி உட்காருகிறோம். நம்மைப் போலவே பலநூறு பேர் ரெயில் வண்டியில் பெட்டி தோறும் இருக்கிறார்கள். தேனடையில் வண்டு (தேனீ) மொய்ப்பதுபோல மொய்த்திருக்கிறார்கள்.

எதை எதையோ பேசிக்கொண்டிருக்கிறார்கள் விஞ்ஞானம், ஆன்மீகம், பள்ளிக் கூடம், சினிமா, கட்சிகள், ஒழுக்கம், பண்பாடு, சமூகம், மழை, வேளாண்மை, பஞ்சம், வெள்ளம் என்று எது எது பற்றியோ ஓடுகிறது பேச்சு. விவாதங்களும் நடக்கின்றன. காரசாரமாகவே நடக்கின்றன விவாதம்.

ஆனால் ரயில் ஓட்டி, அதாவது டிரைவர் அப்படி எல்லாம் தர்க்கம், நியாயம், மேற்கோள், ஆராய்ச்சி, ஆதாரம் என்று எதிலும் சிக்கவில்லை.

தண்டவாளம், பாதை, கைகாட்டி, வேகம், நேரம், தூரம், இவையே அவர் கண்முன் நிற்கின்றன. அதாவது அவர் உள்ளத்தில், உணர்ச்சியில் நிற்பவை அவை தாம்.

பயணிகள், அவர்களுடைய பாதுகாப்பு, இவற்றையே அவர் பார்க்கிறார். தன்னைமறந்து, அப்படியே ஒன்றி நிற்கிறார் பயணிகளோடு. அப்படி ஒன்றி நிற்பதில் தன்னையே இழந்துவிடுகிறார்.

இறைவனுடைய சந்நிதானம் என்றால் அதுவுந்தான். ரயிலோட்டியின் காரிய முந்தான். புத்தகமோ, ஆராய்ச்சியோ, புள்ளிவிபரமோ, மேற்கோளோ குறுக்கேவந்தால் உருப்படுமா காரியம். அவை விலகி இருந்தால்தான் உண்மையோடு ஒட்ட முடியும். உணர்ச்சியோடு தோயும் உள்ளம்.

★★★★★★★

மனம் தான் உணர்ச்சி தான் சந்நிதானம். அதில் இறைவனை பிரதிஷ்டை பண்ணவேண்டும். அப்படிப் பண்ணினால் தான் இறைவனின் திருவருள், ஆனந்த நடனம், திருவிளையாடல் தெரியும். உண்மையானது மண்ணுக்கும் விண்ணுக்குமாய் ஒரே ஜோதிமயமாய் ஒளிரும்.

வெறும் புத்தகப்படிப்பு, அதில் ஆராய்ச்சி, அதை வைத்து தர்க்கம் வியாகரணம் என்று தறிகெட்டு அலைந்தால் இறைவன்வேறு, நாம் வேறு தான்.

நம் முன்னோர் கண்ட உண்மை இது.

நம்பியாண்டார் நம்பிகள் கண்ட உண்மையும் இதுவே

வித்தகச் செஞ்சடை
மேயானைச், சிற்றம்
பலவன்தன் னை
சித்தகக் கோயில்
இருத்தும் திறத்துமிக்
கார்க்கேயல் லால்ப்
புத்தகப் பேய்களுக்(கு)
எங்கித்த தோஅரன்
பொன்அடி யே

---

வித்தகச் செஞ்சடை - விரிந்து பரந்த பெருமைமிக்க சடை. சித்தகக் கோயில் - மனமாகிய (சித்தம் என்றும்) கருவறை. எங்கித்தல் - எட்டுதல். நிமிர்ந்து நிற்றல்.

குறிப்பு : புத்தகப் பேய் என்று உண்மையை எப்படி அழுத்தி எளிமைப்படுத்துகிறது தமிழ்.